மரபிலக்கிய மொழியும் இலக்கண உருவாக்கமும்

ரா. செயராமன்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தொல்காப்பியர் ஆய்வு இருக்கை தமிழக அரசு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 2013ஆம் ஆண்டு ஐம்பது இலட்சம் ரூபாயினை வைப்பு நிதியாக வைத்து, தொல்காப்பியர் ஆய்வு இருக்கையினை ஏற்படுத்தியுள்ளது. 2014 ஆகஸ்டு முதல் செயல்படத் தொடங்கியுள்ள இவ்விருக்கையின் மூலமாகத் தொல்காப்பியம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல், தொல்காப்பியத்திற்கும் அதன் உரைகளுக்கும் ஆய்வுப் பதிப்பினை உருவாக்குதல், உரைவளப் பதிப்பினை விரிவாக்குதல், ஆண்டுதோறும் கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள் நடத்துதல், சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தி நூலாக்குதல், தொல்காப்பியம் தொடர்பாகப் பல்வேறு ஆய்விதழ்களில் வெளியான கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்குதல் ஆகிய பணிகள் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொல்காப்பியர் ஆய்வு இருக்கை வெளியீடு: 9

மரபிலக்கிய மொழியும் இலக்கண உருவாக்கமும்

ரா. செயராமன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113
2016

நூல் விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	:	மரபிலக்கிய மொழியும் இலக்கண உருவாக்கமும்
ஆசிரியர்	:	ரா. செயராமன்
வெளியீட்டாளரும் பதிப்புரிமையும்	:	தொல்காப்பியர் ஆய்வு இருக்கை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை - 600 113.
தொலைபேசி எண்	:	044 - 2254 2992
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2016 முதல் பதிப்பு
பயன்படுத்திய தாள்	:	16 கிகி டி.என்.பி.எல். வெள்ளை
நூலின் அளவு	:	1/8 டெம்மி
எழுத்தின் அளவு	:	11.5 புள்ளி
பக்க எண்ணிக்கை	:	x + 136
அச்சுப் படிகளின் எண்ணிக்கை	:	1200
விலை	:	₹110/ (ரூபாய் நூற்றி பத்து மட்டும்)
ISBN no.	:	978-93-85165-19-1
பொருண்மை	:	இலக்கணம்
அச்சகம்	:	ரியல் இம்பேக்ட் சொல்யூஷன்ஸ், சென்னை.

மரபு நிலை திரிதல் செய்யுட்கு இல்லை
மரபு வழிப்பட்ட சொல்லி னானே

- (தொல். மரபியல். 92)

முனைவர் கோ. விசயராகவன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 113.

அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பியர் ஆய்வு இருக்கையின் நூல் வெளியீட்டு வரிசையில் எட்டாவதாக வெளிவரும் மரபிலக்கிய மொழியும் இலக்கண உருவாக்கமும் என்னும் இந்நூல் இலக்கண உருவாக்கத்தின் பின்புலங்களையும் அதன் அடிப்படையான தரவாக மரபிலக்கியங்கள் கொள்ளப்பட்ட முறையையும் விரிவான ஆதாரங்களுடன் முன்வைக்கின்றது.

பேராசிரியர் ரா. செயராமன் அவர்கள் மரபிலக்கணத்திலும் மொழியியலிலும் ஆழமான ஆய்வுகளைச் செய்துவருபவர். தொல்காப்பிய இலக்கண மரபையும் மரபிலக்கியங்களையும் கொண்டு நவீன இலக்கியக் கோட்பாட்டை வளர்த்தெடுக்கும் முயற்சியில் தொடர்ந்து பயணிப்பவர். இந்நூலில் இடம்பெற்றுள்ள 13 கட்டுரைகளும் புதிய கோட்பாடுகளை உருவாக்குவதற்கான தளங்களை வலுவாகக் கட்டி எழுப்புகின்றன. அதேசமயம் தேவைப்படும் இடங்களில் மரபிலக்கணங்களின் போதாமை களையும் சுட்டிக்காட்டுகின்றன.

தொல்காப்பியத்தின் வேற்றுமை இலக்கணம் மற்றும் முன்னம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சூழல் கோட்பாட்டினை உருவாக்கும் முதல் கட்டுரை தொடங்கி மொழிக்கூறுகளை அடைவு படுத்தும் முறையியலை விளக்கும் இறுதிக் கட்டுரை வரை வெவ்வேறு புலம் சார்ந்த அறிவுமரபுகளை இணைத்துப் புதிய பொருள்கோடலை நிகழ்த்துகின்றார்.

இவரது மற்றொரு நூலான ''அமைப்புப் பொருண்மையியலும் தொல்காப்பிய இலக்கணமரபும்'' என்னும் நூலையும் இந்த நூலையும்

இணைத்து வாசிக்கும் பொழுது மொழியியல் வளர்ச்சியின் அண்மைக் கால நிலையினையும் மரபிலக்கண இலக்கிய ஆய்வுகளின் நுட்பமான வளர்ச்சியினையும் உள்வாங்க முடிகிறது. இவ்விரு நூலையும் தொல்காப்பியர் ஆய்வு இருக்கைக்கு வெளியிட அளித்த பேராசிரியர் ரா. செயராமன் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தொல்காப்பியர் ஆய்வு இருக்கையினை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார்கள். அதன் காரணமாகவே இத்தகைய நூல்களை வெளியிட முடிகின்றது. அதற்காக அவருக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபடும் தமிழ்வளர்ச்சித்துறைச் செயலாளர் முனைவர் த. உதயச்சந்திரன் இ.ஆ.ப. அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நூலினைத் தேர்வு செய்து வெளியிடும் ஆய்வு இருக்கையின் பொறுப்பாளர் மற்றும் நிறுவனப் பணியாளர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

இயக்குநர்

புற உரை

இலக்கியத்தின் எண்ணற்ற கூறுகளுள் ஒன்று அதன் மொழி. புற உலகப் பொருண்மையுடன் இலக்கியப் பொருண்மை தொடர்பு கொண்டிருப்பதால் எல்லையில்லாமல் அது விரிந்து செல்லக் கூடியது. மொழியும் புற உலக மொழியுடன் தொடர்பு கொண்டிருப்பதால் அதன் தொடர்பும் திறந்த நிலையில் இருக்கிறது.ஒரு இலக்கியத்தின் மொழி சொற்களாலும் வாக்கியங்களாலும் கூற்று, உரையாடல்களாலும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருக்கும் என்றாலும் அவை தேர்ந் தெடுக்கப்பட அடிப்படையாக இருந்த மொழிக் களம் பரந்து இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்பாக இருந்த மொழி நிகழ்தகவுகளுக்கு உட்பட்டது. ஒரு இலக்கியத்தின் கூறுகளுள் எது முதன்மையான கூறு என்பதில் ஆய்வாளர்களுக்கு இடையில் வேறுபாடுகள் இருக்கலாம். உள்ளடக்கம், இலக்கிய அமைப்பு, மொழி, இலக்கியப் பின்புலம், இலக்கிய வகைமை என்று எதுவுமாகவும் தேர்ந்தெடுப்பு இருக்கலாம். ஆனால், எந்த ஒன்று ஆராயப்படும் என்றாலும் இலக்கியத்தைப் புரிந்துகொள்ள அதன் மொழிதான் வாயிலாக இருக்கிறது. மொழித் திறனுடன் செய்யப்படும்போதுதான் மற்ற ஆய்வுகள் சிறப்பாக அமையமுடியும். எந்த ஒரு ஆய்விலும் இலக்கியத்திலிருந்து எடுக்கப்படும் தரவுகள் மொழிவழித் தரவுகளாக உள்ளன.

ஒரு இலக்கியத்தின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கும் ஒரு அணுகுமுறை தேவையாக இருக்கிறது. தொல்காப்பிய, தமிழ் இலக்கண மரபிலிருந்து உருவாக்கப்பட்ட சூழல்முறை ஒரு பொருத்தமான ஆய்வுமுறையாகத் தெரிகிறது. இலக்கியத்தின் சூழல், இலக்கியத்தில் சூழல் என்ற இரு வகைமையில் அது பிரிகிறது. புறச் சூழல், அகச் சூழல் என்று ஒரு இலக்கியத்தை இரண்டாகப் பகுத்துக்கொண்டு விளக்கும் முறையாகும் இது. இது வேற்றுமை இலக்கணத்திலிருந்து வருவிக்கப்பட்ட ஒன்று. முன்னம் முதலான மரபிலக்கண விளக்கங்கள் மேலும் இதன் அடிப்படையாகும். பேச்சுச் செயல் சூழல், பேசப்படும் செயல் சூழல் என்ற வகைப்பாட்டின் விரிவாக்கம்தான் இலக்கியத்தின் சூழல்,

இலக்கியத்தில் சூழல் என்ற இரண்டுமாகும். ஒரு இலக்கியத்திற்குத் தற்கிழமை என்ற அக உறவுகளும் பிறிதின் கிழமை என்ற புற உறவுகளும் உள்ளன. இலக்கியத்தின் மையம் ஒரு இலக்கியப் பாத்திரமாகவோ, ஒரு பொதுக்கருத்தாகவோ இருக்கலாம். மையத்தைத் தெரிந்துகொண்டு அதன்பிறகு அதன் தற்கிழமை, பிறிதின் கிழமை உறவுகளைப் பிரித்து வகைப்படுத்தலாம்.

மரபு இலக்கியம் செய்யுளாகவும் இருப்பதால் அதில் யாப்பு இலக்கணமும் இசைக் கூறுகளும் தொடர்புபடுகின்றன. உரைநடையில் சொல் தேர்வுகள் செய்யுளின் சொல் தேர்வுகளிலிருந்து வேறுபடுகின்றன. யாப்புக் கட்டமைப்பு இசைக் கட்டமைப்புக்கு எதிரானதாக இருக்கிறது. குறில், நெடில், மெய் என்ற அலகுகளைக் கொண்டு கட்டமைக்கப்படும் யாப்பு, இசைக்காக 12 மாத்திரை வரை நீட்டிக்கொள்ளலாம் என்று தளர்த்திக்கொள்ளும்போது தகர்ந்துபோய்விடுகிறது. செய்யுளியல் அடிப்படையிலான ஆய்வுகள் வரவேண்டும். தற்போதைய இலக்கிய யாப்பியல் ஆய்வுகள் வெறும் எலும்புக்கூடு ஆய்வுகளாக உள்ளன. உயிருள்ள உடல் பற்றிய ஆய்வு செய்யுளியல் ஆய்வாகும். இலக்கிய ஆய்வுகளைக் கணினிவழி செய்வதற்குப் பயிற்சிகளும் புரிதல்களும் தேவைப்படும் சூழல் உள்ளது. தொல்காப்பியத்தின் மொழிபற்றிய, இலக்கியம் பற்றிய கருத்தியல்களை மீள்பார்வைக்கும் மேலும் புரிதலுக்கும் உட்படுத்தும்போது, இந்திய இலக்கிய, மொழி, இலக்கணக் கொள்கைகளைக் கட்டமைத்து எழுப்பமுடியும். இறக்குமதி செய்யப் பட்ட சரக்குகளை வைத்து விளக்கிக்கொண்டிருப்பது அறிவார்ந்த ஒரு செயலாகக் கருதப்பட்டுவருகிறது.

இந்த நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பியர் ஆய்வு இருக்கை வழி வெளியிடும் நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களுக்கும் ஆய்வு இருக்கையின் பொறுப்பாளர் முனைவர் அ. சதீஷ் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரா. செயராமன்

உள்ளடக்கம்

புறவுரை

1 இலக்கியத்தின் சூழலும் இலக்கியத்தில் சூழலும் 1

2 வாக்கியத்தில் பகுப்பும் பிறழ் பகுப்பும் 10

3 இலக்கிய மொழியாக்கமும் பொருண்மையாக்கமும் 16

4 படிமம்: மொழியும் உணர்வும் 29

5 சிலப்பதிகாரத்தில் கூற்றும் உரையாடலும் 44

6 தொல்காப்பியம்: சங்க இலக்கியம் - புணரியல் நோக்கு 54

7 பழந்தமிழில் தொடரமைப்பு விரிவாக்க, குறுக்க உத்திகள் 64

8 திணையியல் கூற்று மரபும் சிலப்பதிகாரக் கதையாக்கமும் 74

9 இலக்கிய மொழியில் மகளிர் மெய்ப்பாடுகள் 81

10 அல்லகூற்று மொழியும் அல்லபொருள் மொழியும் 87

11 இலக்கிய மையப்பொருளும் இலக்கியக் கூறுகளும் 94

12 செய்யுளில் முரணாகும் இசையும் யாப்பும் 108

13 இலக்கிய ஆய்வில் மொழிக்கூறு அடைவுகள் 118

1

இலக்கியத்தின் சூழலும் இலக்கியத்தில் சூழலும்

ஒரு பொருள் என்பது பல்வேறு உறுப்புகளைக் கொண்டதாக இருக்கிறது. இரு வேறு பொருள்கள் ஒரே இனமா, வேறு வகையா என்பது அந்தப் பொருள்களின் உறுப்புகளுக்கும் பண்புகளுக்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை அடிப்படையாக வைத்துத் தீர்மானிக்கப்பட வேண்டியவைகளாக உள்ளன. ஒரு பொருள் தன் உறுப்புகளைக் கொண்டிருப்பதில் அதன் கட்டமைப்புப் புலப்படுகிறது. உள்ளுறுப்புகளின் அளவும் தன்மையும் ஒரு பொருளின் உருவாக்கத்தைத் தீர்மானிக்கின்றன. ஒரு பொருளின் இயல்பை அறிதல் என்பது மற்றொரு பொருளுடன் அதை ஒப்பிடுவதன்மூலம், உறவுகளை அறிவதன் மூலம் நிறைவேறுகிறது. இரு வேறு பொருள்களை ஒப்பிடுதல் என்பது படர்க்கையில் நிகழ்கிறது. தொடக்கத்தில் இது தன்மைக்கும் முன்னிலைக்கும் இடையிலான ஒப்பீடாகத்தான் இருந்து பிறகு முன்னிலை-படர்க்கை, தன்மை-படர்க்கை, படர்க்கை-படர்க்கை என்று விரிவடைகிறது. ஒரு இலக்கியம் என்பது படர்க்கைப் பொருளாக இருக்கிறது. இரு வேறு இலக்கியங்களை ஒப்பிடுதல் என்பது இருவேறு படர்க்கைப் பொருள்களை ஒப்பிடுதலாக இருக்கின்றது.

இலக்கியம் என்பது மொழியினால் ஆன ஒரு பொருள். மொழியை உருவாக்குவதிலும் பிறர் உருவாக்கும் மொழியைப் புரிந்துகொள்வதிலும் உள்ள நுணுக்கங்கள் ஒருவருக்கு இலக்கியத்தைப் புரிந்துகொள்ளப் பயன்படும். இலக்கிய உறுப்புகளின் எண்ணிக்கைகளும் வரையறைகளும் இருந்தால் அதற்குப் பிறகு இலக்கியத்தை அவற்றின் அடிப்படையில் விளக்கமுடியும். இலக்கிய உறுப்புகள் முழுமையும் பின்னத்தன்மையும் கொண்டவை. பின்னமாக இருக்கும் ஒரு இலக்கிய உறுப்பு வேறு ஒரு

இலக்கியமாக இருக்கலாம். அதாவது தனி இலக்கியமாக இருக்கலாம். பின்னமாக இருக்கும் உறுப்புத் தனக்குள் உள்ள உறுப்புகளுக்கு முழுமையான ஒன்றாக இருக்கலாம். சிறுகதைக்குள் கவிதையும் புதினத் திற்குள் சிறுகதைகளும் கட்டுரைகளும் இருக்கலாம். இலக்கியத்தின் அடிப்படை அலகைத் தேடிக்கொண்டு சென்றால் மொழியைப் பொருத்தவரையில் சொல், உருபன் என்று முடியலாம். ஆனால் செய்யுள் இலக்கியத்தில் எழுத்து, இசை என்ற பொருண்மையற்ற கூறுகளும் இலக்கிய உறுப்புகளாக உள்ளன. உரைநடைக்கும் எழுத்து உறுப்பு இல்லை என்று சொல்ல முடியாது. மொழி எழுத்தினால் ஆனது.

ஒரு இலக்கியத்தை விளக்கும்போது, சிற்றலகிலிருந்து பேரலகிற்குச் செல்லலாம். பேரலகிலிருந்து சிற்றலகிற்குச் செல்லலாம். பேரலகு என்பது ஒரு இலக்கியத்தைப் பொருத்தவரையில் அந்த இலக்கியமாக மட்டுமே இருக்கமுடியும். பழமொழி, மரபுத்தொடர், விடுகதை, குறள் வெண்பா முதலான வடிவங்கள் முழு அலகுகளே ஆகும். காவியங்கள், இதிகாசங்கள், புராணங்கள், புதினத் தொகுதிகள் முதலானவை பேரலகுகளே ஆகும். வடிவங்களில் சிறிதும் பெரிதும் ஆக அவை வேறுபடுகின்றன. பேரலகு என்பது முழுமையான வடிவத்தைக் குறித்து வருவதாகக் கொள்ளவேண்டும். எழுத்து, சொல், தொடர், வாக்கியம், கூற்று, மாந்தர் உரையாடல், ஆசிரியர்கூற்று-மாந்தர்கூற்று, கதை என்று சிற்றலகிலிருந்து பேரலகை நோக்கி ஒரு இலக்கியம் விரிவடைகிறது. இலக்கியத்தைப் படிப்பவர் பேரிலக்கியத்தை மொத்தமாக எதிர்கொண்டாலும் எழுத்து, சொல் என்று தொடங்கித்தான் கற்கவேண்டியிருக்கும்.

ஒரு இலக்கியத்தை எவ்வாறு உட்கூறுகளாகப் பகுத்துக்கொண்டு கற்பது என்பது ஒரு நுகர்வாக இலக்கியம் இருக்கும்போதும் தோன்றவே செய்யும். எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, களன், காலம், கூற்று, மெய்ப்பாடு, பொருள், வண்ணம் என்று தொல்காப்பியம் ஒரு இலக்கிய உறுப்புகளின் பட்டியலை அளித்துச் சென்றுள்ளது. ஒரு இலக்கியத்தை முழுமையாக எடுத்துக்கொண்டு கற்கும் வழிமுறையை அது கூறிச் சென்றுள்ளது. ஒவ்வொரு உறுப்பாக எடுத்துக்கொண்டு அகப்பொருள், புறப்பொருள், யாப்பு, அணி என்று விரிவாகக் கற்கும்போது ஒட்டு மொத்த இலக்கிய அமைப்பின் கூறுகளை எடுத்துக்கொள்ளும் மரபு விடுபட்டுவிட்டிருக்கிறது. தொல்காப்பியத்தை முன்மாதிரியாகக் கொண்டோ, இலக்கியத்திற்கான ஒரு இலக்கணமாகக் கொண்டோ ஒப்பு நோக்கிலான ஒரு புதிய இலக்கிய ஆராய்ச்சி மாதிரியை வடிவமைக்க முடியும்.

ஒரு இலக்கியத்தின் இரு வேறு முதன்மையான கூறுபாடுகள் எனக்கொள்ளத்தக்கவை இலக்கியத்தின் சூழல், இலக்கியத்தில் சூழல் என்பனவாகும். இலக்கியத்தின் சூழல் என்பது இலக்கியத்தை உருவாக்கும் ஆசிரியனது சூழலும் அந்த இலக்கியத்தைப் படிப்பவர் சூழலும் ஆகும். இரண்டும் ஒரே இடம், காலம் என்ற ஒற்றுமையிலிருந்து வேறு வேறு இடம், காலம் என்ற வேறுபாடுகளை நோக்கி விரிந்து கொண்டு செல்லலாம். மொழி பெயர்ப்புகளையும் கருத்தில் கொண்டால் இலக்கியத்தின் சூழல் பரப்பு விரிவானது. சூழல் என்பதில் புறச் சூழல், அகச் சூழல் என்ற இரண்டும் அடங்கும். மனச் சூழல் மொழியாக்குபவர், பொருண்மையாக்குபவர் என்ற இருவருக்கும் உண்டு. அதே போலப் பொருள் சூழல் அல்லது இட, காலச் சூழல் இருவருக்கும் புறச்சூழலாக அமையும். புறச் சூழலிலும் இயற்கைச் சூழலும் மக்கள் சூழலும் அடங்கும். மக்கள் சூழல் என்பது சமூகம், அரசியல், பொருளியல், பண்பாடு என்று விரிந்து செல்லும். புறச் சூழலில் உள்ளன எல்லாம் அவரவர் நுண் உணர்வுக்குத் தகுந்த அளவு அகச் சூழலிலும் இருக்கும்.

மொழியால் ஆன இலக்கியத்தில் மொழி என்பது இலக்கியத்தின் சூழல் சார்ந்ததாக இருக்கும். இலக்கிய மாந்தர்கள் கூற்று நிகழ்த்தவும் உரையாடவும் செய்தால் அந்தக் கூற்றும் உரையாடலும் இலக்கியத்தின் சூழலில் அமையமுடியாது. இலக்கியத்தில் சூழலில்தான் அமைய முடியும். இலக்கியத்தில் சூழல் என்பது இலக்கியத்தின் மொழியால் குறிக்கப்படும் மக்கள், இயற்கை என்பனவாகும். இலக்கியத்தில் சூழலில் இடம்பெறும் மக்களின் மொழி அந்த மக்கள் உள்ள இடம், காலத்திற்குரிய மொழியில் உள்ள கூற்றாகவும் உரையாடலாகவும் இருக்கும். பொருள், வெளி, காலச் சூழலில் மொழிச் சூழலும் உள்ளடங்குவதாக இருக்கும். இலக்கிய ஆசிரியன் பொருள்களையும் செயல்களையும் வருணிப்பதுபோல மாந்தர்களின் மொழியையும் வருணிக்கிறான். அந்த வருணனை மாந்தர்களின் மொழியாக இருப்பதால் ஆசிரியன் கூற்றுக்குள் இடம்பெறும் மொழியாகவே புலப்படுத்தப்படவேண்டியதாகிறது. மொழியே ஒரு பொருளாக இருக்கிறது. இலக்கிய ஆசிரியன் காலத்தைச் சேர்ந்த மொழி மாந்தர்களின் காலத்தைச் சேர்ந்த பொருள்களையும் செயல்களையும் குறித்துவருகிறது. இந்தப் பிளவுபட்ட தன்மை இலக்கிய மொழியை பேச்சுச் செயல் சூழல் என்றும் பேசப்படும் செயல் சூழல் என்றும் பிரித்துவிடுகிறது.

பேச்சுச் செயல் சூழல் என்பது இலக்கியத்தின் சூழலாகவும் பேசப்படும் செயல் சூழல் என்பது இலக்கியத்தில் சூழலாகவும் விரிவுபெற்றிருக்கிறது.

பேச்சுச் செயல் சூழல், பேசப்படும் செயல் சூழல் என்ற இரு வகைச் சூழல்கள் ஒவ்வொரு வாக்கியத்திற்கும் பொருந்திவரக்கூடியவை. பேசப்படும் செயல் என்பது ஒரு எளிய வாக்கியத்தின் முற்றுச் சொல்லால் குறிக்கப்படுவது. கலப்பு வாக்கியங்களில் முற்று, எச்சம் முதலான வினைகளால் குறிக்கப்படுவது. பேசப்படும் பொருள்கள் முற்று, எச்சம் முதலான வினைகளால் உறவுபடும் பொருள்களாகும். பேசும் காலம் நிகழ்காலமாகும். பேச்சுச் செயல் நிகழும் காலமாக அது உள்ளது. பேசப்படும் காலம் என்பது முற்று, எச்சங்களால் குறிக்கப்படும் காலமாகும். பேசப்படும் செயலின் காலம் நிகழ்காலமாகவோ, இறந்த காலமாகவோ, எதிர்காலமாகவோ அமையும். கதைகள் நிகழ்காலத்தில் அமையுமானால் பேச்சுச் செயலும் பேசப்படும் செயலும் ஒரே காலத்தில் நிகழ்ந்தன என்றாகும். கதைகள் இறந்த காலத்தில் அமையுமானால் பேசப்படும் செயலுக்குப் பிறகு பேசும் செயல் நிகழ்ந்துள்ளது என்றாகும். எதிர்காலத்தில் பொதுவாகக் கதைகள் அமைவதில்லை. இலக்கிய மாந்தர்களின் உரையாடலில் மூன்று காலங்களும் கலந்து அமையலாம். இலக்கிய ஆசிரியனின் மொழியில் மூன்று காலங்களும் கலந்து அமைய வாய்ப்பில்லை. கதை நிகழ்காலத்தில் அமையுமானால் அவ்வாறு அமைய வாய்ப்பு உள்ளது.

இலக்கியமாக மொழி எவ்வாறு மாறுகிறது என்பதைப் பேச்சுச் செயல் சூழல், பேசப்படும் செயல் சூழல் என்ற வகைமையை வைத்து விளக்கமுடியும். கம்பராமாயணமும், வில்லி பாரதமும் ஒரு கூற்றுத்தான். கம்பர், வில்லிபுத்தூரார் என்பவர்களின் கூற்றாக அவை அமையும். ஒரு கூற்றுக்குள் அமையும் கதைகள், நிகழ்வுகள் முதலானவற்றுள் கதை நிகழ்வுகளின் மாந்தர்களின் மொழியும் கதைச் சூழலிலுள்ளதாக எடுத்துக்காட்டப்படுகிறது. அதாவது பேசப்படும் செயல் சூழலுக்குள் பேச்சுச் செயல் சூழல்களாக அமையும். விக்கிரமாதித்தன் கதையில் பதுமை, தலையணை, திரைச்சீலை, விளக்கு முதலான பொருள்கள் ஒன்று மற்றொன்றின் கதையைச் சொல்வதாக முறையே அமையும். வட்டத்திற்குள் வட்டம் என்று கூற்றுகள் வழிக் கதைகள் சொல்லப் படுகின்றன. எது கதையில் பேசப்படும் பொருளாக இருக்கிறதோ, அது பேசும்பொருளாக மாறிவிடுகிறது. அந்தப் பேசும் பொருள் தன்னால் பேசப்படும் பொருளால் வெளியேற்றப்படுகிறது. திறந்து கொண்டு சென்ற உள் வட்டங்களை ஒவ்வொன்றாக மூடிக்கொண்டு வருவதன் மூலம் பேசும் பொருள்கள் பேசப்படும் பொருள்களாகிவிடுகின்றன.

பேசப்படும் பொருள் பேசும் பொருளாக இருந்தால் அது தன்மை நோக்குநிலை. கேட்கும் பொருள் பேசப்படும் பொருளாக இருந்தால் அது

முன்னிலை நோக்கு நிலை. பேசப்படும் பொருள் பேசும்பொருளாகவோ, கேட்கும் பொருளாகவோ இல்லாமலிருந்தால் அது படர்க்கை நோக்கு நிலை. ஒரு கதையில் தன்மை, படர்க்கை நோக்கு நிலைகள் இருக்கலாம். முன்னிலை நோக்கு நிலை அரிது. படிப்பவரைக் குறிப்பிட்டுக் கதை எழுத முடியாது. கவிதையில் முன்னிலை நோக்கு நிலை மோலோங்கி உள்ளது. பேசப்படும் செயல் சூழல் என்ற வகைக்குள் பேசப்படும் பொருள் உள்ளடங்கும். இந்த விளக்கங்கள் சங்க இலக்கியம் முதலான இலக்கிய வகைமையுடன் நெருங்கிய தொடர்புடையன. தலைவி, தலைவன், தோழி முதலான மாந்தர்கள் தங்களைப் பற்றிப் பேசிக்கொள்வது அக இலக்கியமாகிறது. பேசப்படும் செயல், பேச்சுச் செயல் என்ற இரண்டும் இணைந்துவிடுகின்றன. பேசப்படும் பொருளும் பேசும் பொருளும் இணைந்துவிடுகின்றன. பேசும் காலமும் பேசப்படும் காலமும் தொடர்புடையனவாகின்றன. ஆனால், சிலப்பதிகாரக் கதையில் இளங்கோவின் காலமும் கதை நிகழ்வின் காலமும் வேறுபட்டுவிடுகின்றன.

ஒரு இலக்கியம் என்பது இருவகையான பேச்சுச் சூழல்களாலும் இரு வகையான இலக்கியச் சூழல்களாலும் கட்டமைக்கப்படுகின்றது. பேச்சுச் சூழல் என்பது இலக்கியச் சூழலாவது மொழி என்ற எல்லைக்குள் நிகழ்வதாகவே கொள்ளவேண்டும். பொருண்மைப்படுத்திக் கொள்ளும் முறையில் மொழிச் சூழல் பங்குபெறலாம். அதாவது பொருண்மைக் குரிய மொழிக் கூறுகள் நேரடியாக இல்லாமல் இருக்கலாம். ஒவ்வொரு வாக்கியமும் ஒரு பேசப்படும் செயல் சூழலாக இருக்கிறது. அடுத் தடுத்துவரும் வாக்கியங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்த செயல்களின் பதிவு களாகும். தொடர்ச்சிகளாகும். பேசப்படும் செயல் சூழல்களாகும். பேசப்படும் செயல் சூழலில் பேசப்படும் பொருள்கள் உள்ளடங்கும். பொருள் சூழல் என்பது வெளி சார்ந்தது. கிடை மட்ட நிலையில் இருப்பது. செயல் சூழல் என்பது காலம் சார்ந்தது. குறுக்கு நிலையில் இருப்பது. வெளியில் உள்ள பொருள்களை செயல் ஒருங்கிணைக்கிறது. ஒரு வாக்கியத்தில் உள்ள வெவ்வேறு வேற்றுமை உருபு ஏற்ற பெயர்களால் குறிக்கப்பட்ட பெயர்கள் இவ்வாறு வெளியிலிருந்து ஒருங்கிணைக்கப்பட்ட பொருள்களாகும். ஒருங்கிணைப்பது அந்த வாக்கியத்தில் உள்ள முற்றுவினையாகும். அடுத்தடுத்து வரும் வெவ்வேறு வாக்கியங்கள் பொருண்மைத் தொடர்ச்சிபட அமைவதில் இலக்கிய மொழி ஆக்கமுறையும் இலக்கியப் பொருண்மை ஆக்கமுறை யும் தொடர்புடையன. சொற்களும் தொடர்களும் நிகழ்வுகளும் தொடரும்போது, அவை தம்முள் கொள்ளும் உறவு அடுக்கியல்,

தொடரியல் என்ற இரு உறவுகளுக்குரியன. இந்த இரு உறவுகளும் ஒன்றை ஒன்று சார்ந்து அமைவன. நீரால் நனை என்ற இரு சொற்கள் தொடரும்போது ஒவ்வொரு சொல்லின் பொருண்மைக் கூறுகள் தனித் தனியே உறவுகொள்ளத் தக்கவைகளாக இருப்பதால் அந்த இரு பொருள் களும் உறவு கொள்கின்றன. அதனால் அந்த இரு பொருள்களைக் குறிக்கும் சொற்களும் உறவுகொள்வதற்குத் தக்கனவாகின்றன. நேரடிப் பொருண்மை, மறைமுகப் பொருண்மை என்று மொழியாக்கமும் பொருண்மையாக்கமும் வேறுபடலாம்.

இலக்கிய உள்ளடக்கத்தில் இடம்பெறும் இயைபுகளும் மயக்கங்களும் புற உலகப் பொருளில் நிகழும் இயைபுகளையும் மயக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டவை. மொழி அமைப்பில் நிகழும் மயக்கங்கள் அல்ல இவை. உவமை, உள்ளுறை, இறைச்சி, அங்கதம், படிமம், குறியீடு முதலானவை இரு வேறு பொருள்களுக்கு, இருவேறு தளங்களுக்கு, இரு வேறு நிகழ்வுகளுக்கு இடையிலான உறவால் உருவாகின்றன. இரு வேறானவற்றிற்கு இடையில் இடையே நிகழும் இந்த ஒப்புமை உறவு மொழியில் வெளிப்படும்போது, அவை இலக்கியத்திற்கும் உரியனவாகின்றன. இவை பொருள் மயக்கங்கள்தான். வேறுபட்ட இரண்டுக்கு இடையில் நிகழும் மயக்கங்கள் அந்த இரண்டுக்கும் இடையில் முழுதாக நிகழ்வதில்லை. இரண்டும் வேறுபட இருந்தால் மட்டுமே ஒன்றுபடவும் தோன்ற முடியும். ஒப்பிடப்பட முடியும். இரண்டு என்றாலே வேறு வேறு என்று பெறப்பட்டுவிடுகிறது. இரண்டும் ஒப்புமைக்குரியனவாகும்போது, அவற்றின் உள்ளுறுப்புகளில் ஒற்றுமை இருந்தாக வேண்டும். உள்ளுறுப்புகள் என்று வருகிறபோது, உள்ளுறுப்புகளுக்கும் மையத்திற்கும் இடையில் உள்ள உறவு முதன்மை பெற்றுவிடுகிறது. இயைபு, மயக்கம் என்பது இரு வேறு பொருள்களின் உள்ளுறுப்புகளுக்கு இடையிலான ஒப்புமை ஆகி விடுகிறது. உள்ளுறுப்பு என்பது அந்தப் பொருள்களின் பண்பாகவும் செயலாகவும் இருக்கலாம். செயல் என்பது பொருளுக்குப் புறமாக இருக்கும் என்றாலும் அந்தப் பொருளைத் தவிர்த்துவிட்டு அந்தப் பொருளின் செயலைப் பார்க்கமுடியாது என்பதால் அந்தப் பொருளின் அங்கமாகவே இருக்கும்.

இலக்கியத்தை ஒரு பொருளாகப் பார்க்கவேண்டியிருக்கிறது. இலக்கியத்தின் கூறுகள் எல்லாம் அந்தப் பொருளின் உட்கூறுகள் ஆகும். ஒரு இலக்கியத்திற்குள் அதன் உட்கூறுகள் அடங்கியிருப்பது என்பது ஒரு இலக்கணத்திற்கு உட்பட்டு நிகழ்கிறது. இலக்கிய வகைமை பற்றிய பொது இலக்கணமும் குறிப்பிட்ட இலக்கியம்

பற்றிய சிறப்பிலக்கணமும் ஒரு இலக்கியத்தில் இருக்கும். பொது இலக்கணக் கூறுகள் ஒரு இலக்கியத்திற்குள் இருப்பது இயைபு என்றும் சிறப்பு இலக்கணக் கூறுகள் அந்த இலக்கியத்திற்குள் இருப்பது மயக்கம் என்றும் கொள்ளப்படும். பொது இலக்கணக் கூறுகள், சிறப்பு இலக்கணக் கூறுகள் எவை என்ற வரையறை நிலையில்லாதவை. கட்டுரை-சிறுகதை, உண்மை-புனைவு என்று இது மயங்கும். சங்க இலக்கியத்தில் வரும் திணைமயக்கம் முதல் தற்கால இலக்கியத்தில் வரும் அர்த்த மயக்கங்கள் வரை எல்லாம் இதில் சேரும். மயக்கம் காப்பியமா-புராணமா, அகமா-புறமா, சிற்றிலக்கியமா-பக்தி இலக்கியமா, அறமா-நீதியா என்று விரிவடைந்துகொண்டு செல்கிறது.

இரு முழுமைகளைப் பகுக்காமல் ஒருபோதும் ஒப்பிடமுடியாது. உள்ளுறை, இறைச்சி என்பன நிகழ்வுகளுக்கு இடையிலான ஒப்புமை யால் தோன்றுகிறன்றன. நிகழ்வு ஒரு முழுமையாக இருக்கிறது. நிகழ்வில் தொடர்புபடும் பொருள்கள் அந்த நிகழ்வின் உள்ளுறுப்புகள் ஆகின்றன. முதல்-சினை, தொகுதி-பகுதி என்பன சூழலுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. ஒவ்வொரு பகுதியும் மேலும் உள்ளுறுப்புகளாகப் பிரியும்போது, பகுதி தொகுதியாகும். ஏதோ சில ஒற்றுமைகளின் காரணமாக உள்ளுறுப்புகள் ஒரு தொகுதிக்குள் இருக்கின்றன. உள்ளுறுப்புகளுக்கு இடையில் வேறுபாடு கூடும்போது, அவை மையத்துடன் கொள்ளும் உறவில் இயைபு இல்லாமல் போகலாம். தொகுதியிலிருந்து விலகிவிட நேரலாம். அப்போது அது ஒரு தனி அமைப்பாக, தனி அலகாக, வேறு ஒன்றின் உறுப்பாக மாறிவிடலாம். காப்பியங்களிலிருந்து தோன்றிய சிற்றிலக்கியங்கள், பேரரசிலிருந்து தோன்றும் சிற்றரசுகள், அமைப்பின் சிதைவுகள் இந்த வகையில் சேரலாம். தழுவல்கள், திருட்டுகள், தாக்கங்கள், மீட்டுருவாக்கங்கள், மீள்படைப்புகள், மொழிபெயர்ப்புகள் என்று ஒப்பியலில் பேசப் படும் இலக்கிய, இலக்கண ஆக்கங்களில் இந்த இயைபு, மயக்க உறவுகள் விரிவாக இடம்பெறுகின்றன. சிலப்பதிகாரக் கதைகள், பாரதக் கதைகள், ராமாயணக் கதைகள் என்று நாட்டுப் புற மரபிலும் செவ்வியல் மரபிலும் நிகழ்ந்த இலக்கிய ஆக்கங்களில் இயைபு, மயக்கக்கூறுகள் மிகுதியாக உள்ளன. தொடர்புடைய இரு பண்பாடு களை, அரசியல்களை, கலைகளை இயைபுபடுத்தி விளக்க முடியும். பொருளுக்கும் பொருளைப் பற்றிய மொழியிலாலான வருணனை களுக்கும் பொருளின் ஓவிய வடிவிற்கும் சிற்ப வடிவிற்கும் இடையே உள்ள உறவுகளும் இயைபு, மயக்க உறவுக்கு உரியனவாக இருக் கின்றன. நாட்டுப் புறக் கதைகளில் உள்ள மாற்று வடிவங்களை இயைபு, மயக்க உறவில் வைத்து விளக்கமுடியும். மாந்தர், மாந்தர் சார்ந்த

நிறுவனங்கள், மொழி, காலம், வெளி, உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்கள், நூலாக்கம் என்று எல்லாக் கூறுகளிலும் இயைபு, மயக்க உறவுகள் அமையும்.

இயைபு, மயக்க வரையறை, விதிகளை உருவாக்கிக் கொள்வதன் மூலம் பலதுறைகளுக்கும் இதை எடுத்துச் செல்லமுடியும். உப்பு, மண், அமிலம் முதலான சேர்மங்களில் அடங்கியுள்ள தனிமங்கள் தம்மில் அடங்கியுள்ள சில கூறுகளின் வழியேதான் உறவுகொள்கின்றன. எல்லாக் கூறுகளாலும் உறவு கொள்வதில்லை. அதே போலத்தான் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையிலான உறவிலும் இலக்கணக் கூறுகளுக்கு இடையிலான உறவுகள் வேறுபடவும் ஒன்றுபடவும் செய்கின்றன. ஒரு சேர்மம் என்பது ஒரு வாக்கிய அமைப்புப் போல உருவாகிறது. ஒரு பொருள் என்பது வாக்கியங்களின் தொகுதியினாலான படைப்புப் போல இருந்துகொண்டிருக்கிறது.

புற உலகில் தோன்றும் பொருள்கள் மயக்கத்திற்குரியவை. வேதாந்தம் கூறும் மாயை, அத்வைதம் கூறும் பரமாத்மா ஒன்று மற்றொன்றாகத் தோன்றும் காட்சிகள் என்று மயக்கங்கள் எண்ணற்றவை. வாலைத் தொட்டுக் கயிறு போலவும் வயிற்றைத் தடவிச் சுவர் போலவும் காதைப் பிடித்து முறம் போலவும் காலைச் சுற்றித் தூண் போலவும் இருக்கிறது என்று யானையைப் பலவேறுபட்ட வடிவங்களில் உணர்த்துகிறவர்களின் கூற்றில் தவறு எதுவுமில்லை. எல்லாம் சரியாக இருக்கிறது. ஆனால் முழுமை இல்லை. முதலுக்கும் சினைக்கும் இடையிலான மயக்கம் இது. மாயை, அத்வைத மயக்கங்கள் முதலானவை முழுமைக்கும் அதன் விதிகளுக்கும் இடையிலான மயக்கமாக இருக்கின்றன. விதியை அறியமுயலும் முயற்சியாக அறிவியல் முடிவுகள் இருக்கின்றன. அது தொடர்பான மயக்கங்கள், இயைபுகள் உறவுபடுத்தி அறிய வேண்டியவை.

உறவுக்கு உரிய ஒருவர் அந்த உறவுக்கு உரியவர்தானா என்று ஏற்படும் மயக்கங்கள் சராசரி மனிதர்களுக்கு நேர்ந்துகொண்டிருக்கும் ஒன்றாக இருக்கிறது. குடும்ப உறவுகள், நட்பு உறவுகள், அயல் உறவுகள், முறைகேடான உறவுகள் இவை எல்லாவற்றிலும் இருந்துகொண்டிருக்கும் மயக்கங்கள் குறிப்பிடத்தக்கவை. புலன் விசாரணையில், ஒற்றறிதலில் நேரும் மயக்கங்கள், அவை தெளியப்படும் முறைகள் ஏதேனும் விதிக்கு உட்பட்டு இருக்கவே செய்கின்றன. ஆணா, பெண்ணா என்றும் விலங்கா, மனிதரா என்றும் நேரும் மயக்கம் மொழியாக்கத்திலும், கதையாக்கத்திலும், இலக்கிய ஆக்கத்திலும் நேர்கிறது. பாம்பு, கயிறு என்று வரும் மயக்கத்தின் முடிவு பாம்பு, கயிறு

என்ற இரண்டுமாகவும் இல்லாமல் போகலாம். தெரியாத ஒன்றின்மீது மயக்கம் நிகழ வாய்ப்பில்லை. இயைபு நிகழவும் வாய்ப்பு இல்லை.

குறிப்புப் பொருள்கள் பற்றிய விளக்கங்கள் எல்லாம் மயக்கங்கள் பற்றியதாகவே அமைகின்றன.நேரடியாக இல்லாதது எல்லாம் மயக்கங்கள், அவை மறைமுகமாக இருக்கின்றன. நேரடியாக இருப்பதற்கும் மறைமுகமாக இருப்பதற்கும் இடையில் ஏதேனும் ஒரு உறவு இருந்தால் மட்டுமே மயக்கம் நிகழமுடியும். நேரடிப் பொருளுக்கும் மறைமுகப் பொருளுக்கும் இடையில் ஒப்புமை உறவு, காரண காரிய விளைவு உறவு, முரண் உறவு, முதல் சினை உறவு என்று எந்த ஒரு உறவும் அமையலாம். இடுகுறித் தன்மையில் மயக்கம் நிகழ வாய்ப்பு இல்லை.

பொதுமைப்படுத்தியும் வகைப்படுத்தியும் எண்ணிப் பார்க்கும் வழக்கம் இயைபுபடுத்திப் பார்ப்பதால் தோன்றுகிறது. கோட்பாடுகள், விதிகள் முதலானவும் ஒப்புமைப்படுத்திப் பார்ப்பதால்தான் தோன்றுகின்றன. ஒருங்கிணைப்பு என்பது ஏதேனும் ஒரு பண்பிலாவது ஒத்த கூறுகளைத் தொகுப்பது என்ற அடிப்படையில்தான் நிகழ்கிறது. இல்லையென்றால் அந்தக் கூறுகள் ஒரு பொருளின், ஒரு அமைப்பின் கூறாக அமைய வாய்ப்பு இருக்கப்போவதில்லை. எழுத்து வகை, சொல் வகையிலிருந்து இலக்கிய வகை வரைக்கும் இந்தப் பொது விதி பொருந்தும்.

2

வாக்கியத்தில் பகுப்பும் பிறழ் பகுப்பும்

ஒரு வாக்கியம் உணர்த்தும் பொருண்மைக் கூறு ஒவ்வொன்றும் அவ்வாக்கியத்தில் உள்ள ஒவ்வொரு மொழிக் கூறால் உணர்த்தப் படுமானால் அவ்வாக்கியம் இயல்பு வாக்கியம் ஆகும். பொருண்மைக் கூறுகளுக்குக் கூடுதலாகவோ, குறைவாகவோ மொழிக் கூறுகள் ஒரு வாக்கியத்தில் இருக்குமானால் அவ்வாக்கியம் திரிபு வாக்கியம் ஆகும். பெயர், வினை, வேற்றுமை உருபு, ஏ, ஓ, கால இடைநிலை, பாலறி கிளவி முதலானவை மொழிக் கூறுகள் ஆகும். ஒவ்வொரு மொழிக் கூறும் உணர்த்தும் ஒவ்வொரு பொருண்மையும் ஒவ்வொரு பொருண்மைக் கூறு ஆகும். ஒரு வாக்கியத்தை மேலும் மொழிக்கூறுகளைக் கொடுத்து விரிவுபடுத்த முடியும். எந்த ஒரு வாக்கியமும் அதில் உள்ள மொழிக்கூறு களுக்கு மேல் கொடுத்து விரிவுபடுத்தமுடியாத வாக்கியமாக இருக்க முடியாது என்று சொல்லமுடியாததால் வாக்கிய அமைப்பின் விரிவை ஒரு எல்லைக்குள் வரையறுத்து நிறுத்தமுடியாது. ஆனால் ஒரு வாக்கியம் எவ்வாறெல்லாம் விரிவடையும் என்று வரையறைசெய்யமுடியும். இந்த முறை வாக்கியத்தைப்பொருண்மை அமைப்பு அடிப்படையில் விளக்கும் முறையாகும்.

ஒரு வாக்கியம் உணர்த்தும் பொருண்மைக் கூறுகளுக்குக் குறைவான மொழிக் கூறுகள் அவ்வாக்கியத்தில் இருக்குமானால் அவ்வாக்கியத்தை இரு முறைகளில் விளக்கலாம். வாக்கியத்தில் விடுபட்ட மொழிக் கூறுகளை உரிய இடங்களில் வெளிப்படுத்தி, நிறைவு வாக்கியமாக்கி விளக்குவது ஒரு முறை. எந்த ஒரு வாக்கியமும் நிறைவுபெற்ற வாக்கியமல்ல. ஆனால் அந்த வாக்கியத்தில் உள்ள மொழிக் கூறுகளுக்குள் இடையே உள்ள உறவு இலக்கண விதி

களுக்குள் அடங்கி இருக்குமானால் தன்னளவில் அந்த வாக்கியம் முற்றுப்பெற்ற வாக்கியம் ஆகும். மொழிக்கூறுகள் முற்றுப்பெறுதல் என்பது சொல் அளவு, தொடர் அளவு, வாக்கிய அளவு, கூற்று அளவு, உரையாடல் அளவு என்று எல்லைகள் மேலும் மேலும் விரிந்துகொண்டு செல்வதாக இருக்கும். ஒரு சொல்லுக்கான விதிகள் அந்த சொல்லுக்குள் இருக்குமானால் அந்தச் சொல் முற்றுப்பெற்ற இலக்கணத்தை உடையதாகும். தொடருக்குரிய இலக்கண விதிகளைப் பெற்றிருக்கிற ஒரு தொடர் நிறைவுபெற்ற தொடராகும். வாக்கியம் இருக்கின்ற நிலையில் அவ்வாறே எடுத்துக்கொள்ளப்பட்டு விளக்கப் படுவது இந்த முறையாகும். இந்த முறை வாக்கியத்தை மொழி அமைப்பு அடிப்படையில் விளக்கும் விளக்கமாகும்.

மாற்றிலக்கண மொழியில் வாக்கியங்களை அக அமைப்பு, புற அமைப்பு என்ற பகுப்பு அடிப்படையில் விளங்குகிறது. தொல்காப்பியம் பொருண்மை அமைப்பு, மொழி அமைப்பு என்ற அடிப்படையில் விளக்குகிறது. இந்த இரண்டிற்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. இயல்பு வாக்கியங்களில் அக அமைப்பு, புற அமைப்பு என்ற இரண்டும் வேறுபடுவதில்லை. திரிபு வாக்கியங்களில் வேறுபடுகின்றன. மாற்றிலக்கண மொழியியல் அக அமைப்பை விளக்கிவிட்டுத் திரிபுபட்ட புற அமைப்பை நீக்கல் விதி, இடப்பெயர்ச்சி விதி முதலானவற்றால் விளக்குகிறது. தொல்காப்பியம் பொருண்மை அமைப்பு, மொழி அமைப்பு என்ற இரண்டையும் வேறு வேறு வாக்கியங்களாக விளக்குகிறது. அந்த இரு வாக்கியங்களை ஒரே வாக்கியங்கள் என்று தொடர்பு படுத்துவதும் இல்லை. அக அமைப்பு, புற அமைப்பு என்ற இரண்டையும் மாற்றிலக்கண மொழியியல் அக அமைப்பில் ஒரே வாக்கியமாகவே கருதுகிறது.

1. (அ) சிவன் பார்வதிக்குச் சேலை வாங்கினான்
(ஆ) சிவன் பார்வதி உடுத்துவதற்குச் சேலை வாங்கினான்.

என்ற இரு வாக்கியங்களும் புற அமைப்பு (1அ), அக அமைப்பு (1ஆ) என்ற வேறுபாடுகளே ஆகும். "பார்வதி உடுத்துவதற்கு" என்ற தொடர்மொழிக் குறுக்கமாகி "பார்வதிக்கு" என்று வந்துள்ளது. கு என்ற வடிவம் "பார்வதி உடுத்துவது" என்ற பெயர்த் தொடருடன் வரும்போது அது வினையெச்ச இலக்கணத்திலும் "பார்வதி" என்ற பெயருடன் வரும்போது அது வேற்றுமை இலக்கணத்திலும் தொல்காப்பியத்தில் பேசப்படுகின்றது. குறைந்த மொழிக் கூறுகளைக் கொண்ட புற அமைப்பைப் பகுக்கும்போது அக அமைப்பின் பொருண்மைக் கூறுகளுள் சில தாம் உணர்த்தப்படுவதற்கான மொழிக் கூறுகள் இன்றி எஞ்சி

விடுகின்றன. எஞ்சி நிற்கும் பொருண்மைக் கூறுகளையும் வெளிப்பட்டு நிற்கும் மொழிக் கூறுகளே உணர்த்திவிடுவதாகத் தொல்காப்பியம் விளக்குகிறது. கு உருபுக்கு அதன் பொருட்டு, இன்னதற்கு, இது பயனாக என்ற பொருண்மைகள் (தொல் -2; 74, 108) சொல்லப் படுகின்றன.

2. (அ) மழையால் குளம் நிறைந்தது.
   (ஆ) மழை பெய்ததால் குளம் நிறைந்தது.

என்ற இரு வாக்கியங்களும் புற அமைப்பு (2அ), அக அமைப்பு (2ஆ) என்ற வேறுபாடுகளே ஆகும். இவ்விரு வாக்கியங்களும் வேற்றுமை, வினையெச்சம் என்ற இருவேறு இலக்கணங்களுக்கு உரியனவாகின்றன. வினையெச்சத்தில் விளக்கப்பட வேண்டிய ஒன்றை (அக அமைப்பு) வேற்றுமை இலக்கணத்திலும் விளக்கும் போது (புற அமைப்பு) மொழிக் கூறுகள், பொருண்மைக் கூறுகள் என்ற இரண்டிற்கும் இடையில் பிறழ்பகுப்புகள் தோன்றுகின்றன.

தொல்காப்பியத்தில் தொகைநிலை, தொகாநிலை என்ற இரண்டையும் பற்றிய வெளிப்படையான கருத்துக்கள் உள்ளன. தொகைநிலை உள்ள வாக்கியத்தைப் புற அமைப்பு என்றும், தொகாநிலை உள்ள வாக்கியத்தை அக அமைப்பு என்றும் கொள்ளலாம். ஆகுபெயர்களை வேற்றுமை இலக்கணத்தில் வைத்து எண்ணுவது சிறப்பானது (தொல் - 2; 112) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. "ஆகு பெயர்களை மொழிக் குறுக்கம்தான் உருவாக்குகிறது" என்று செ. சண்முகம் (1989;274) குறிப்பிடுகிறார். மொழிக் குறுக்கத்தைத் தொகைநிலை எனலாம். அன்மொழித் தொகை ஆகுபெயரில் உள்ளடங்குவதாக உள்ளது. தெங்கினது காய் என்ற தொடரில் உள்ள, தெங்கு என்ற தொடரில் இல்லாத மொழிக்கூறுகள் தொகைநிலை ஆகும். "பார்வதி உடுத்துவதற்கு" என்ற தொடரில் உள்ள "பார்வதி" என்ற தொடரில் இல்லாத மொழிக் கூறுகளை தொகைநிலை என்று தொல்காப்பியம் கொள்ளவில்லை. பெயர்ச்சொல்லில் இருந்து உருபைப் பிரிப்பதையோ, இடையில் பிற சொல் கொடுப்பதையோ தொல்காப்பியம் போற்ற வில்லை.

ஒரு வாக்கியத்திற்குள் ஒரு முற்று வடிவம்தான் இருக்க வேண்டும். அது பயனிலையாக இருக்க வேண்டும் என்பது பொதுவான விதியாகும். இவ்விதிக்குள் எல்லா வாக்கியங்களையும் அடக்கும் முயற்சியினால் பிறழ்பகுப்புகள் தோன்றுகின்றன.

3. (அ) கண்ணியன் வில்லன் வரும் (தெய்- 2; 47)

கண்ணியன், வில்லன் என்ற இரு சொற்களும் உம்மைப்பொருண்மை யில் அல்லது இணைநிலை அமைப்பில் (coordinate construction) வந்துள்ளன. ஒரு பொருளைக் குறித்து வேறு வேறு பெயர்கள் அடுக்கி வரலாம் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல் - 2; 42). முற்றுகள் அடுக்கி வருவதைப் பற்றியும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

4. *(அ) கண்ணி அணிந்து வில்லை ஏந்தி வரும் (தெய் - 2; 447)*

என்ற குறிப்பு வினையெச்சங்கள் அடுக்கி வந்தனவாக விளக்கப் படுகின்றன.

5. *பிணையல் மோயினள் உயர்ந்த காலை (அகம்.5)*

என்ற வாக்கியத்தில் "மோயினள்" என்ற முற்று "மோந்து" என்ற வினையெச்சப் பொருண்மையில் வந்துள்ளதாக விளக்கப்படுகின்றது. பால், எண், திணை, இடம் என்ற இலக்கணப் பொருண்மைகளுடன் வரும் ஒரு முற்று வடிவத்தை எச்சப் பொருண்மையில் வந்துள்ளதாக விளக்குவது பொருந்தாது. சங்க இலக்கிய மொழியைப் பொருத்த வரையில் முடிக்கப்படும் சொல் முற்றாகவும் இருக்கலாம். அதாவது, முற்றுகள் அடுக்கி வரலாம். பிற்கால மொழி அமைப்புக்கும் இலக்கணத் திற்கும் ஏற்பச் சங்க இலக்கிய மொழி அமைப்பைத் திரிவுபடுத்துவது பொருத்தமில்லை. சங்க இலக்கிய மொழியில் அவ்வாறான அமைப்பு இருப்பதற்கான காரணத்தை ஆராய்வது தான் பொருத்தமானது. காலப்பொருண்மை திரிபு அடைந்துவிடும் என்பதற்காக ஒரு வினைப் பொருண்மை முடிக்கப்படும் சொல்லுக்குரிய இடத்திலும் முற்று வடிவிலேயே வெளிப்பட்டுள்ளது.

செய்வினை வாக்கியம், செயப்பாட்டுவினை வாக்கியம் என்ற இரண்டையும் மாற்றிலக்கண மொழியியல் ஒரே அக அமைப்பு உடை யனவாக விளக்குகிறது. தொல்காப்பியம் வேறு வேறு வாக்கியங்களாக விளக்குகிறது.

6. (அ) மாணவன் ஆசிரியரோடு வந்தான் - அக அமைப்பு

(ஆ) ஆசிரியரோடு மாணவன் வந்தான் - புற அமைப்பு

என்று வாக்கியங்களை விளக்க முடியும்; பொருண்மை வேறுபாடு உடைய வாக்கியங்கள் வேறு வேறு வாக்கியங்களே ஆகும். வாக்கியம் உணர்த்தும் பொருண்மை என்பது வாக்கியத்தைக் கூறுகிறவர் கருதும் பொருண்மையுமாகும். கூறுகிறவரின் கருத்துக்கு ஏற்ப வாக்கியத்தில் சொற்களின் வரிசை அமையும். இவற்றை (6அ, ஆ) நடையியல்

மாற்றம் என்று விளக்குவது என்பது இவற்றில் (6அ, ஆ) உள்ள பொருண்மை வேறுபாட்டைப் புறக்கணிப்பதே ஆகும்.

7. (அ) ஊர் வந்தது - புற அமைப்பு
(ஆ) நான் ஊருக்கு வந்தேன் - அக அமைப்பு

என்ற வாக்கியங்களை மொழி என்ற எல்லைக்குள் நின்று விளக்குவது பொருத்த மில்லை. மாற்றிலக்கண மொழியியல் அவ்வாறு விளக்குகிறது. புற உலக நிகழ்ச்சி, உணரப்படும் முறையில் உள்ள வேறுபாடுதான் இவ்வாக்கியங்களின் (7அ, ஆ) வேறுபாட்டுக்குக் காரணமாகிறது. பேச்சுச் செயல் சூழல் பேசப்படும் செயல் சூழலுக்குள் ஐக்கியமாகி விட்டது.

“மழை பெய்ததால்” என்பது மட்டும் அக அமைப்பாக (2ஆ) இருக்க முடியாது. மழை பெய்து ஓடையில் நீர் வந்ததால், பெரிய மழை பெய்ததால், மழை பெய்து ஏற்கனவே பாதிநீர் குளத்தில் இருந்தால் என்றெல்லாம் அக அமைப்பு வரன்முறை இன்றி விரிந்து கொண்டே செல்லும். அக அமைப்பு என்பது புற உலக நிகழ்ச்சி அது மனதில் பொருண்மையாக உணரப்பட்ட நிலை என்ற இரண்டுமாக இருக்க முடியாது. வேறு பல சிக்கல்களும் இதில் உள்ளன. அக அமைப்பை விளக்குவது என்பது மொழியை விளக்குவது என்பதிலிருந்து விலகிச் செல்வதாகவும் கூட உள்ளது. ஒரு வாக்கியம் எந்த வடிவில் பேசப் படுகிறதோ, அல்லது எழுதப்படுகிறதோ அந்த வடிவத்தைத் தொல் காப்பியம் இலக்கணம் கூற எடுத்துக் கொள்கிறது. அக அமைப்பு என்பது வேறு சூழல்களில் புற அமைப்பே ஆகும். ஒரு மொழியில் புற அமைப்பாக இல்லாத ஒரு வாக்கியம் அம்மொழியில் அக அமைப்பாக இருக்க முடியாது. எல்லா வாக்கியங்களும் இலக்கணம் கூறப்பட எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் எல்லா அக அமைப்புகளும் இலக்கணம் கூற எடுத்துக்கொள்ளப்பட்டு விடும். புற அமைப்புடன் வேறுபட்ட அக அமைப்பை விளக்குவது என்பது தொல்காப்பியத்தைப் பொருத்தவரையில் வேறு வாக்கியத்தை விளக்குவதே ஆகும். திரிபு வாக்கியங்கள் வழக்குப் பெற்றுவிட்ட பிறகு அவ்வாக்கியங்களாகவே எடுத்துக்கொள்கிறது (இதில் வேறு வரன் முறைகள் உள்ளன). எனவே, அக அமைப்பு, புற அமைப்பு என்ற இரண்டும் வேறு வேறு வாக்கிய அமைப்புகளாகக் கருதப்படுவதற்கு உரியனவாகின்றன.

ஆகுபெயர் என்பது மொழிக் குறுக்கமாகக் கருதப்படுகிறது. ஆகுபெயரை அடிப்படையாகக் கொண்டு அமையும் அன்மொழித்

தொகையும் மொழிக் குறுக்கமாகும். இலக்கண நூலானாலும் இலக்கிய நூலானாலும் உரைகளில் சொற்பெய்து உரைத்தல், சொல் வெளிப் படுத்தல் முதலான முறைகளில் உரை எழுதிச் செல்லும் மரபு உள்ளது. இவ்வாறான மொழிப் பயன்பாடுகள் மொழிப் பகுப்பின்போது மூலத்தை மட்டும் வைத்துப் பிரித்துப்பார்க்க முடியாததாக இருக்கும்.

துணை நூல்கள்

1. பதிப்புக்குழு, அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, பதி.2, *1981.*
2. சண்முகம் செ., *1989*, பொருண்மையியல், அனைத்திந்திய தமிழ் மொழியியல்கழகம், அண்ணாமலை நகர்.
3. சுந்தரமூர்த்தி கு., (விளக்கவுரை), தொல்காப்பியம் - சொல்லதி காரம், தெய்வச்சிலையார் உரை, கழக வெளியீடு, சென்னை, பதி. *2, 1979.*
4. சுந்தரமூர்த்தி கு., (விளக்கவுரை), தொல்காப்பியம் - சொல்லதி காரம், இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை, பதி. *2, 1987.*

3

இலக்கிய மொழியாக்கமும் பொருண்மையாக்கமும்

பாத்திரங்களின் கூற்றுகளைத் தந்துவிட்டு, அவற்றிற்கு இடையிடையே ஆசிரியன் தனது கூற்றுகளைத் தருவது என்பது இலக்கியங்களின் பொதுப்பண்புகளுள் ஒன்றாக உள்ளது. கூற எடுத்துக்கொண்ட கருத்தைப் பாத்திரங்களின் உரையாடல்களோடு தனது கூற்றின் வாயிலாகவும் ஓர் ஆசிரியன் நிறைவு செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியன் கூற்று இலக்கியத்தைப் படிப்பவர்களை நோக்கியதாக இருக்கிறது. பாத்திரங்களின் கூற்றுப் பாத்திரங்கள் தம்முள் ஒன்றை ஒன்று நோக்கியதன் அடிப்படையில் அமைகின்றது. இலக்கியம் என்பது இந்த இருவகைக் கூற்றுக்களால் அமைந்ததாக இருக்கிறது. இரு வகைக் கூற்றுகளும் தொடர்புபடுத்தி விளக்கப்படுவதற்குரியவை என்றாலும் சூழல்களால் வேறுவேறாக உள்ளன. பாத்திரங்கள் இயங்கும் சூழலை "இலக்கியத்தில் சூழல்" எனலாம். ஆசிரியன் இலக்கியத்திற்குள் இயங்கும் சூழலை "இலக்கியத்தின் சூழல்" எனலாம்.

பாத்திரங்களுக்கு இடையிலான உரையாடல் மட்டுமே "இலக்கியத் தில் சூழல்" எனக் கருதத்தக்கது. உரையாடலில் இடம் பெறாத, சூழலின் காரணமாகத் தம்முள் பாத்திரங்கள் உணர்ந்து கொள்ளும் கருத்துக்கள் ஆசிரியன் கூற்றால் படிப்பவர்களை நோக்கி விளக்கப்படுகின்றன. குறைந்தது இரு எதிர்க்கூற்றுக்களைக் கொண்டதாக ஒரு உரையாடல் அமையும். ஒவ்வொரு கூற்றும் இலக்கியத்தில் சூழலில் அடிப்படை அலகாகும். ஒவ்வொரு கூற்றும் நிகழும்போது, அந்தக் கூற்றுக்கான பேசுபவர், கேட்பவர், பேசப்படும், கேட்கப்படும் செய்தி முதலான சூழல்கள் வேறுபடுகின்றன.

இலக்கியம் படைக்கப்பட்ட பிறகு "இலக்கியத்தின் சூழலில்'' ஆசிரியனுக்கான பங்கு நிறைவு பெற்ற ஒன்று; படிப்பவர்களுக்கான பங்கு நிறைவு செய்யப்படாதது. இலக்கிய ஆக்கமுறை என்பது உள்ளடக்கம், இலக்கிய மொழி, இலக்கிய அமைப்பு முதலான மேலும் வரை யறைகள் தேவைப்படக்கூடிய கூறுகளைக் கொண்டது. இலக்கியத்தின் பொருளைப் புரிந்துகொள்வதற்கு இலக்கிய ஆக்கமுறைத் தடத்தின் வழியே செல்லவேண்டியுள்ளது. மொழியையும் இலக்கியத்தையும் ஆக்கம் செய்யவும் அவற்றிலிருந்து பொருண்மையாக்கம் செய்யவும் தொல்காப்பியம் அளித்த விளக்கங்களை வளர்த்தெடுத்ததன் அடிப் படையில் இந்த இரு சூழல் குறித்த விளக்கம் அமைகிறது.









இலக்கியத்தில் சூழல், இலக்கியத்தின் சூழல் என்ற இரண்டும் மேல் வந்த பகுதியில் பிரித்துக்காட்டப்பட்டுள்ளன.

ராமன் வீட்டுக்குத் திரும்பினான். அங்கு சீதை அவனிடம் *(1212)* "நீ காட்டுக்கு வருகிறாயா" *(1111)* என்று கேட்டாள். "ராமன் *(1212)* என்னால் காட்டுக்கு உன்னோடு வரமுடியாது. நீயும் காட்டுக்குப் போகக்கூடாது" *(1111)* என்று கோபத்தோடு சொன்னான். சீதை விழுந்து விழுந்து சிரித்தாள்*(1212)*.

கூற்றுச் செயல் சூழலில் பாத்திரங்களாக ராமனும்*(1121)* சீதையும் *(1122)* உள்ளனர். "வருகிறாயா" என்று கூறப்படும் செயலில் ராமன் (நீ), காடு என்ற இரண்டும் வெளிப்பட்ட சூழல்களாகும் *(1111)*. "வரமுடியாது" என்று கூறப்படும் செயலில் ராமன் (என்), சீதை (உன்),

காடு என்ற மூன்றும் வெளிப்பட்ட சூழல்களாகும். இலக்கிய ஆக்கச் சூழலுக்கு *(12)* இலக்கியத்தில் சூழல்*(11)* கடந்த காலமாக உள்ளது.

சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இலக்கியமாகவும் இருக்கின்றன. பாத்திரக் கூற்றுகளாக *(11122)* அமையும் பாடல்களின் துறைக்குறிப்புகள்*(1212)* கூற்றுச் செயல் சூழலை *(112)* விளக்குவனவாக உள்ளன. புலவர் கூற்றாக அமையும் பாடல்களுக்கான கூற்றுச் செயல் சூழல்*(112)* என்பது ஆசிரியர் கூற்றால் படிப்பவர்கள் உணர்ந்து கொள்ளத் தக்கதே தவிர, படிக்கின்ற சூழலில்*(122)* படிப்பவர்களுக்கு நேரடியாக அறிமுகமாகாதது. இதன் காரணமாகவும் பொருண்மை மயக்கம் நிகழ்கிறது.

"இலன்" *(111)* என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன் உடையார் கண்ணே உள *(1212)* - (குறள். *223*)

என்ற குறளின் பல பொருண்மைகளுக்கும் கூற்றுச்செயல் சூழலில் *(112)* உள்ள வேறுபாடுகள் காரணமாக இருக்கின்றன. கொடுப்பவன், இரப்பவன், அயலான் என்ற மூன்றுபேர்களுக்கு இடையில் யார், யாரிடம், யாரைப்பற்றி இல்லாதவன் என்று குறிப்பிடுகிறார்கள் என்பதைப் பொருத்து இக்குறளுக்குக் குறைந்தது 12 பொருன்மைகள் நமக்குக்*(1222)* கிடைக்கின்றன.

கூறுகின்ற கருத்தைப் பொருண்மை மயக்கம் தராதவாறு உரிய சொற்களால் வெளிப்படுத்திக் கூறிவிட வேண்டும்(தொல் - *2; 56*) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது; பிறழ்ந்து பொருள் கொள் வதற்குள்ள வாய்ப்புகளையும் மயக்கம் நீக்கிப் பொருள் கொள் வதற்கான வழிமுறைகளோடு குறிப்பிட்டுவிடுகிறது. "யாப்பு என்பது எழுத்து, அசை முதலான அடிகள் வரையிலான எல்லைக்குள் கருதிய பொருண்மையை முழுமையாக நிலைநாட்டுவது" (தொல் - *3; 383*) என்று இலக்கிய ஆக்கத்தைப் பற்றியும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின் (தொல்-*2; 386*)
உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே (தொல் - *2; 387*)

மொழி, இலக்கியத்தின் வழிக் கருத்துப் பரிமாற்றம் செம்மையாக நடை பெறுவதில் உணர்த்துபவர், உணர்பவர் இருவருக்கும் பங்கு இருக்கிறது.

வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் கொள்ளுதல் என்ற இரு பொருள்கோள் முறைகள் உள்ளன(தொல்- *2; 154*). வெண்பா யாப்பின் உள் வகைகளுள் ஒன்றாக அங்கதச் செய்யுள் குறிப்பிடப் படுகிறது (தொல்- *3; 423*). மொழியை மறைத்துச் சொல்லப்படும் பழிகரப்பு

அங்கதம் (தொல்- 3; 431) குறிப்புப் பொருண்மைக்கு உரியது ஆகும். பொருள்கோள் முறை இலக்கிய வகையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழு கலான் (குறள். 1072)

மனிதர்களின் செயலை ஒக்காத செயல்களைச் செய்வதில் கயவர்கள் தேவர்களைப் போலவே இருப்பார்கள் என்ற ஒற்றுமை கூறப் பட்டுள்ளது. தேவர்களின் உயர்செயலும் கயவர்களின் இழி செயலும் மறைக்கப்பட்டுள்ளன.

...நின் கண்டனென் வருவல்
அறுமருப்பு எழிற்கலை புலிப்பால்

பட்டெனச் சிறுமறி தழீஇய தெறிநடை
மடப்பிணைபூளை நீடிய வெருவரு பறந்தலை
ஆள் இல் அத்தம் ஆகிய காடே (புறம். 23)

என்ற பாடல் கல்லாடனார் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை நோக்கிக் கூறியதாக அமைந்துள்ளது. அரசனின் கொடுமையை நேரடியாக எடுத்துக் கூற முடியாததால் உள்ளுறை உவமையைப் புலவன் பயன்படுத்தியிருக்கிறான். உள்ளுறை உவமை யில் புலி- செழியன், கலை- பகைவர், கலை புலிப்பால் படுதல்- பகைவர் செழியனால் போரில் கொல்லப்படுதல், பிணை- பகைவரின் விதவை மனைவி, மறி- விதவையால் தழுவப்பட்ட குழந்தை என்று மறைத்துச் சொல்லப்பட்ட பொருண்மை வெளிப்படும். "பாம்பின்கால் பாம்பறியும்" என்ற பழமொழி புலவனைப் புலவன் அறிவான். கழுதையைக் கழுதை அறியும் என்று எண்ணற்ற பொருண்மைகளை உணர்த்துவதற்கான வாய்பாடாக நிற்கிறது. மொழியும் இலக்கியமும் குறிப்புப் பொருண்மையை உணர்த்தும்போது, வெளிப்பட்டுள்ள மொழியின் பொருண்மைக்கும் வெளிப்பட்டிருக்க வேண்டிய மொழியின் பொருண்மைக்கும் இடையில் அண்மைத் தன்மை அல்லது ஒப்புமைத் தன்மை அடிப்படையிலான உறவு இருக்கும். வெளிப்பட்டுள்ள மொழிக்கும் வெளிப்பட்டிருக்க வேண்டிய மொழிக்கும் இடையில் எந்த உறவும் இல்லை. இவ்விதிக்கு உட்பட்டே இறைச்சி(தொல்- 2; 225-27), ஆகுபெயர்(தொல்- 2; 110-113), இடக்கரடக்கல் (தொல்-2; 436, தொல்-3; 240) மங்கல வழக்கு(தொல்- 3, 240) என்பனவும் அமையும். செய்யுள் உறுப்புகளைச் சேர்ப்பது இலக்கிய ஆக்கமாகும். பிரிப்பது பொருண்மையாக்கம் ஆகும். செய்யுளின் உறுப்புகள் 34 என்று தொல்காப்பியம் குறிப்பிட்டிருந்தாலும் (தொல்- 3;310) உறுப்புகள் எனத்

தக்க வேறு பலவும் பொருளதிகாரம் முழுமையிலும் விரவப்பட்டுள்ளன. அவற்றைத் தொகுத்துப் பின்வரும் 4 வகைகளுக்குள் அடக்கலாம்.

1. உள்ளடக்கக் கூறுகள் (அ) பொருள் கூறுகள்: (கைக்கோள், திணை, முதல், கரு, உரிப்பொருள்கள், பாத்திரங்கள்)
2. சூழல் கூறுகள்: (பேசுவோர், கேட்போர், இடம், காலம்)
3. மொழிக்கூறுகள்(அ) பொருண்மைக் கூறுகள்(சொல் முதல் உரையாடல் வரை; செய்யுள் வழக்கு, உயர்பேச்சு வழக்கு, பொது வழக்கு மரபு)
4. ஒலிக்கூறுகள்
   யாப்பு (அசை, சீர், தளை, அடி, பா, தூக்கு)
   மொழி இசை (தொடை, வண்ணம்)
   இசை (பண்)

தூக்கு என்பது பா வகையில் இசைப்பண்பாகும். இது பாவின் தளை, சீர் அமைப்பில் உள்ள வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டது. தொடை என்பது சொற்களுக்கோ, அடிகளுக்கோ இடையில் அமையும் சொற்களின் ஒத்திசைவை அடிப்படையாகக் கொண்டது. வண்ணம் என்பது சொற்களுக்குள் உள்ள எழுத்துகளின் ஒத்திசைவை அடிப்படையாகக் கொண்டது. தொடை, வண்ணம் என்ற இரண்டும் பேச்சு வடிவ ஒலியன்களின் ஓசைப்பண்பிலிருந்து வேறானவைகளல்ல. இசை என்பது மொழிக்குப் புறத்தே இருந்து மொழியின் ஓசையைத் தன் வாய்ப்பாட்டுக்குள் கொண்டுவருவது. பண் வகுக்கப்பட்ட பரிபாடல் பாடல்களை மற்ற இலக்கியங்களைப்போல இசையின்றிப் படிக்க முடிகிறது. பரிபாடல் வெண்பாவின் வகைகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் (தொல்-3; 425) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே பண் இசை யாப்பின் இசையை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக வந்து நின்று கொள்கிறது.

உள்ளடக்கம், யாப்பு, மொழி, மொழி வகை என்ற கூறுகளிலும் அவற்றின் சேர்க்கைகளிலும் உள்ள வேறுபாடுகள்தான் வனப்புகளின் வகைகளுக்குக் காரணம். தொன்மை என்ற வகையில் கடந்த காலத்தில் எழுதப்பட்டது. உரையில் எழுதப்பட்டது என்ற இரு பண்புகள் சிறப்பனவை (தொல் - 3; 538). விருந்து என்ற வகையில் யாப்பும் உள்ளடக்கமும் புதியனவாக இருக்கும் (தொல் - 3; 539). இயைபு என்ற வகை இயைபுத் தொடையே ஆகும்(தொல் - 3; 541). இலக்கிய ஆக்க முறைகளில் உள்ள வேறுபாடுகளே வனப்புகள் என்று கருதப் பட்டுள்ளன. காலத்திற்கு ஏற்ப உள்ளடக்கமும் இலக்கிய ஆக்கமுறையும் மாறுபடும் என்பதை வனப்புகள் உணர்த்துகின்றன.

இலக்கிய ஆக்கமுறையை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய வகைப்பாட்டில் (தொல்-3;384) சொல்லப்பட்ட அங்கதம், வாய்மொழி (நாட்டுப்புறக்கதை) என்ற இரண்டும் இலக்கிய அடிவரையறையை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாட்டில் (தொல்-3; 467) விடப் பட்டு, மந்திரம் (மறைமொழியால் சொல்லப்பட்டது), குறிப்பு (கூற்றுக்கு இடையில் வருவது) என்ற இரண்டும் புதியதாகச் சேர்க்கப் பட்டுள்ளன. இரு வகைப்பாட்டிற்கும் பொதுவாகப் பாட்டு, நூல், உரை, பிசி, முதுமொழி என்ற ஐந்தும் உள்ளன. வெளிப்படையாகப் பொருண்மை தருமாறு இயற்றப்படாதது என்பதால் இலக்கிய ஆக்க முறையில் அங்கதம் சிறப்புப் பெறுகிறது. எழுத்து வடிவம் பெறாதது என்றாலும் கதையாக்கமாக இருப்பதால் வாய்மொழி சிறப்புப் பெற்றிருக்கிறது. அடிவரையறை அடிப்படையிலான வகைப்பாட்டில் பொருண்மையாக்கம் சிறப்பை இழக்கிறது. ஏட்டில் எழுதப்படாததால் வாய்மொழி தவிர்க்கப்பட வேண்டியதாகிவிட்டது. மந்திரம் வாய் மொழியாக இருந்தாலும் யாப்பு இசைகளுக்கு உட்பட்டிருப்பதால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பு (கூற்றிடையில் வருவது) எழுத்து வடிவம் பெற்றிருப்பதால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இலக்கிய வகைப்பாட்டை உள்ளடக்கம், பாவகை என்று ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் செய்தால் தொடர்பில்லாதனவும் ஒரு வகைக்குள் வந்து அடங்கும். வரலாற்று நாவல் சமூக நாவலாகவும் இருந்துவிடலாம். அங்கதம் என்ற பாட்டு அல்லாத இலக்கிய வகை, அங்கதச் செய்யுள் என்ற வெண்பா யாப்பின் உள்வகை என்ற இரண்டும் வேறு வேறானவையாகத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலக்கிய ஆக்கத்தில் செய்யுள் உறுப்புகள் தம்முள் இணைந்து வருவதில் கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளன. சங்க இலக்கியம் பெரும்பாலும் ஆசிரியப்பாவில் அமைந்தது என்றாலும் கலிப்பா, பரிபாடல் யாப்புகளில் அகப்பொருள் பாடப்படும் (தொல்-3; 56) என்றும் வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலந்த மருட்பாவில் கைக்கிளை பாடப்படும் (தொல் - 3;424) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. நீதிக் கருத்து வெண்பா யாப்பில் பின்பு பாடப்பட்டுள்ள மரபு, உள்ளடக்கத்திற்கும் யாப்புக்கும் உள்ள உறவை வலியுறுத்துவதாகவே உள்ளது. சொல் முரண், பொருள் முரண்(தொல் - 3; 400) என்ற இரு தொடைகளும் பொருண்மை, ஓசை இயைபுக்குரிய இடம் என்ற இரண்டிற்குமிடையில் உள்ள உறவை வைத்துச் சொல்லப்பட்டவை. தொடைகளின் வருகைக்குரிய இடங்களில் எதிர்ச்சொற்கள் வந்தால் அது பொருள் முரண்; வேறுபட்ட பொருண்மைச் சொற்கள் வந்தால் அது பொருள் முரண். நிரல் நிறை என்பது மொழிபுணரியல்பே ஆகும்.

அம்மொழிபுணரியல்பு தொடை, அணி, உவமை இலக்கணங்களிலும் விளக்கப்பட்டுள்ளது.

ஒரு பாடலில் முதல், கரு, உரி என்ற மூன்று பொருள்களையும் தனித் தனியே பிரித்தோ, இணைத்தோ பார்ப்பது என்பது அப்பாடலில் உள்ளடக்க கூறுகளின் தொடரியல் உறவை (Syntagmatic relation) விளங்கிக் கொண்டால்தான் முடியும். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்றும் முன்பனி, பின்பனி, இளவேனில் என்றும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்றும் உள்ளடக்கக் கூறுகளைத் தொகுத்துப் பார்ப்பது என்பது உள்ளடக்க உறுப்புகளுக்கு இடையிலான அடுக்கியல் உறவை (Paradigmatic relation) விளங்கிக்கொண்டால்தான் முடியும். இது ஒரு பொருண்மை கொண்டவற்றை எல்லாம் தொகுத்துப் பார்க்கும் நிகண்டின் அணுகுமுறையைப் போன்றதும் ஆகும். திசைப் பெயர், மரப்பெயர், அளவுப் பெயர்களின் புணர்ச்சிகள் என்றும் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், வேற்றுமை உருபுகள் என்றும் தொடரியல், அடுக்கியல் என்ற இருவகை உறவுகளின் அடிப்படையில் உள்ளுறுப்புகளை ஆராயும்போக்குத் தொல்காப்பியத்தில் சிறப்பானதாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. புணர்தல் - குறிஞ்சி நிலம் - கூதிர்காலம் என்று *1:1:1* என்ற தேர்வுக் கட்டுப்பாட்டில் (Selectional restriction) முதல், கரு, உரிப்பொருள்கள் இணைவதை அடுக்கியல் கூறுகளின் தொடரியல் உறவு எனலாம். கருப்பொருள்களை நிலையானவை. (ஆறு, குன்று, பொழில், அருவி), இடம்பெயர்பவை (பறவை, விலங்கு, பரவுபவை (மரம், செடி, கொடி) என்று மூன்றாகப் பிரிக்கலாம். நிலையாக இல்லாத கருப்பொருள்கள் வேறு நிலங்களிலும் உள்ள நிலை கருதி, இலக்கியத்தில் கருப்பொருள்கள் மயக்கம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. முதற்பொருள்களுள் நிலம் மயங்காது, காலம் மயங்கும் என்று தொல்காப்பியம்(தொல்-*3;14-5*) குறிப்பிடுகிறது. ஒன்று ஒன்றுக்கு மேற்பட்டனவற்றிற்கும் பொதுவாக இருப்பதே மயக்கம் எனப்படும். பாலை என்று ஒரு நில வகையைத் தொல்காப்பியம் தனியே வகுக்கவில்லை. கால வேறுபாட்டில் தோன்றும் வேறு நிலத்தின் தற்காலிகத் திரிபே பாலை என்று தொல்காப்பியம் கருதியிருப்பதாகத் தெரிகிறது. குறிப்பிட்ட உள்ளுறுப்புகள் அல்லது அடுக்கியல் கூறுகள் செயல்படும்போது அல்லது தொடரியல் உறவு கொள்ளும்போது, ஒன்றுக்கு மேற்பட்ட தொடரியல் உறவில் உறுப்பாகித் தாம் பொது வாக நிற்கின்றன. அதாவது, மயங்குவனவாக வருகின்றன. வேனில் காலமும் வேறு நிலமும் இணைவதால் பாலை தோன்றுகிறது. நிலம் மயங்கும், காலம் மயங்காது என்று தொல்காப்பியம் சொல்லியிருக்க வேண்டும். நிலத்தை நிலையானதாகவும் கால வந்துபோய்க் கொண்டி

ருப்பதாகவும் கருதப்பட்டதால் காலம் மயங்கும் என்று சொல்லப் பட்டுவிட்டது.

ஒரு இலக்கியத்தின் தொடரியல் உறவு என்பதில் இலக்கியத்தில் சூழலில் உள்ள உள்ளுறுப்புகளுக்கு இடையிலான உறவு என்பதோடு, இலக்கியத்தின் சூழலில் உள்ள உள்ளுறுப்புகளுக்கு உள்ள உறவும் அடங்கும். சங்க இலக்கியத்தின் கூற்றின் சூழலில் வரும் கூறுவோரும், கேட்போரும் இலக்கிய ஆக்கச் சூழலில் வரும் எழுதியவரும் படிப்பவரும் தொடரியல் உறவுக்கு உரியவர்களாவர். கூறுவோர், கேட்போர், பாத்திரங்கள் கூற்று நிகழ்த்துவதற்கான சூழல்கள் முதலானவற்றைத் தொல்காப்பியம் தொகுத்து உரைப்பது என்பது அடுக்கியல் கூறு களைத் தொகுத்து உரைப்பதே ஆகும். தேர்வுக்கட்டுப்பாடு வாக்கியத்தின் சொற்களுக்கு இடையில் இருப்பது போலவே கூறுவோர், கேட்போர், கூற்றுச் சூழல், கூறப்படும் செய்தி ஆகியவற்றுக்கு இடையிலும் உள்ளது.

இவ்விடத்து இம்மொழி இவர் இவர்க்கு என்று
அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம் (தொல் - *3; 508*)

உள்ளுறை உவமையின் பொருண்மையை விளங்கிக்கொள்வதற்கு முன்னம் என்ற சூழல் பயன்படும்(தொல்-*3; 294*). அதாவது அடுக்கியல் கூறு ஒன்றின் பொருண்மை அல்லது மயக்கம் தொடரியல் கூறால்தான் தெளிவுபடும் என்கிறது தொல்காப்பியம். பாத்திரம், பாத்திரத்தின் மெய்ப்பாடு என்ற இரண்டிற்கும் இடையில்கூட இந்தத் தேர்வுக் கட்டுப்பாடு உண்டு. பண்புகளும் மெய்ப்பாடுகளும் பாத்திரங்களிலிருந்து தனியே பிரித்துத் தொகுத்து உரைக்கப்படுவதுகூட அடுக்கியல் கூறுகளின் தொகுப்பே ஆகும்.

புலவன் கூற்றாக அமையும் பாடல்களில் புலவன் தன் அறிவுக்கு ஏற்பச் செய்திகளைக் கூறிச்சென்றால் அது தவறானது. பாத்திரக் கூற்றாக அமையும் அகத்திணைப்பாடல்களில், நடைமுறையில் பாத்திரத்தின் அறிவுக்கு ஏற்ற செய்திகளையே கூறிச் செல்லவேண்டும்; புலவன் தன் அறிவுக்கு ஏற்ற செய்திகளைப் பாத்திரத்தின் கூற்றில் ஏற்றிச் செல்ல முடியாது. தான் கூறும் உள்ளுறை உவமையில் அறியாத கருப்பொருள்களை ஒரு பாத்திரம் உவமைப் பொருள்களாகப் பயன்படுத்தக் கூடாது (தொல்-*3; 297-300*) என்று தொல்காப்பியம் கூறுகிறது. தான் வாழும் நிலப்பகுதியில் உள்ள பொருள்களை எல்லாம் அறியும் அளவுக்குத் தலைவி இயங்க உரிமை இல்லாதவள். தோழி தலைவியைவிடச் சுதந்திரம் உடையவள் ஆதலின், அவள் வாழும் நிலத்தில் உள்ள கருப்பொருள்களை எல்லாம் அறிந்தவளாக இருக்கிறாள். தலைவன் ஆண்மகன் என்பதால் அறிவு நிலையில்

எல்லாவற்றையும் அறிந்திருப்பான். புலவன், கண்டோர் முதலானோர் எந்தப் பொருள்களை அறிந்திருப்பார்கள் என்பதற்கு வரையறை இல்லை. பாடலில் நிலப்பின்புலத்தில் வரும் கருப்பொருள் தொடரியல் உறவு அடிப்படையில் அமைவது இயல்பானது. உள்ளுறை உவமையில் வரும் கருப்பொருள் தொடரியல் உறவுக்கு உரியது அன்று என்றாலும் பாத்திரத்தின் உலகியல் அறிவு என்ற சூழலுக்கு ஏற்பவே அமையவேண்டும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுவது இலக்கியத்தில் நடப்பியல் தன்மையைப் பேண வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டதாக இருக்கிறது. காரணம் கருதி, மரபு மீறலாக அமையும் பாடல்களும் சங்க இலக்கியத்தில் உள்ளன. தோழி தலைவனுக்கு வாயில் மறுக்கும்போது, "பரத்தையோடு தலைவன் நீராடினான் என்ற ஊர் அலர் பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்தில் இருபெரும் சோழ மன்னர்களைப் புறமுதுகு கண்டபோது படையில் எழுந்த ஆரவாரத்தை மிக்கதாக இருந்தது" *(அகம், 116)* என்று கூறுகிறாள். இங்கு, பரணர் மருத ஒழுக்கமான ஊடலும் ஊடல் நிமித்தமும் பற்றிப் பாடவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறார். பட்டினப்பாலையில் உருத்திரங்கண்ணனார் சோழன் திருமாவளவனைப் பாடவேண்டும் என்பதற்காக அக இலக்கிய மரபை எடுத்துக்கொண்டு சிதைக்கிறார். "திருமாவளவனின் வேலினும் வெய்ய கானத்தில் அவன் கோலினும் தண்ணிய தடமென் தோளையுடைய தலைவியை விட்டுப் பிரிந்து வரமாட்டேன்'' என்று தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறுவதாக அப்பாடல் அமைந்துள்ளது. இதன் காரணமாகப் பாட்டுடைத் தலைவன், கிழவித் தலைவன் என்று இருவர் ஒரு பாடலுக்குள் தோற்றம் பெறுகின்றனர்.

பாத்திரம், உள்ளடக்கம், மொழி என்ற கூறுகள் இலக்கிய ஆக்கத்தின் போது, உலகியல் நடைமுறையிலிருந்து இலக்கிய மரபு என்ற நிலைக்கு ஏற்ப வேறுபடுவதைத் தொல்காப்பியம் விளக்கியுள்ளது. ஆயரும் வேட்டுவரும் உயர்வான அன்பின் ஐந்திணைகளில் அரிதாகவும் *(தொல்-3; 23)* அடியவரும் வினைவலரும் கைக்கிளை, பெருந்திணை என்ற இழிவுத் திணைகளில் அரிதாகவும்*(தொல்-3; 25)* தலைமை மாந்தர்களாக வருவார்கள் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. உலக நடைமுறையில் இருந்தாலும் இழிவான ஒழுக்கத்தை உலக வழக்கு என்று இலக்கிய உள்ளடக்கமாக எடுத்தாள்வது பழிக்கப்பட வேண்டிய ஒன்று*(தொல்-3; 214)* என்று தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. உயர்ந்தோர் மொழி வழக்கு, பேச்சு வழக்காக இருப்பதால் இலக்கிய மொழி வழக்கு, பேச்சு வழக்கோடு ஒத்துப்போகிறது *(தொல்- 3;213)* என்றும் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது.

இலக்கியம்	பாத்திரம்	உள்ளடக்கம்	மொழி
உயர்வு	சரி	சரி	சரி
இழிவு	தவறு	சரி	தவறு

உயர்வான மாந்தர்கள் உயர்பண்பாட்டுச் செயல்பாடுகளையும் உயர்மொழி வழக்கையும் உடையவர்களாக இருப்பார்கள் என்றும் இழிவான மாந்தர்கள் இழிவான செயல்பாடுகளையும் இழிமொழி வழக்கையும் உடையவர்களாக இருப்பார்கள் என்றும் ஒரு பொதுவான கருத்து நிலவுகின்ற சூழலில் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் எழுதப்பட்டுள்ளன. இந்த உலகியல் நடைமுறை இலக்கியத்தில் பின்பற்றப்படவில்லை. இலக்கியப் படைப்பு என்பது உயர்வானது என்பதால் அதில் வரும் இழிவான ஒழுக்கம் என்ற உள்ளடக்கம் உயர்வான பாத்திரங்களையும் உயர்வான மொழியையும் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறது.

எண் வகை மெய்ப்பாடுகளும் *(தொல்-3; 247-55)* இலக்கிய மரபை அடிப்படையாகக் கொண்டவைகளல்ல; மெய்ப்பாட்டியலில் சொல்லப்பட்ட ஏனைய மெய்ப்பாடுகளும் உயர்மாந்தர்களின் உலக நடைமுறையில் உள்ள மெய்ப்பாடுகளை விளக்க வேண்டும் என்ற நோக்கில் சொல்லப்பட்டன ஆகும். இந்த மெய்ப்பாடுகளுக்கு வேறான வகையில் இழிவானவை எனக் கருதத்தக்க வகையில் இலக்கிய மாந்தர் களின் மெய்ப்பாடுகள் அமைந்துவிடக்கூடாது என்ற உள்நோக்கம் தொல்காப்பியத்திற்கு உள்ளது. தலைவியின் காதலை அவளது கண், மனக்குறிப்புகளால் தலைவன் உணர்ந்து கொள்வான் *(தொல்- 3; 106-7)* என்றும் அவள் தன் வேட்கை உணர்வை மொழியால் கூறாதபோதும் அது தானாகவே மெய்ப்பாடுகளால் வெளிப்பட்டுவிடும் *(தொல்-3; 116)* என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. களவில் தலைவியின் கூற்றுகளில்,

> மறைந்து அவன் காண்டல், தற் காட்டுறுதல்
> நிறைந்த காதலில் சொல் எதிர் மழுங்கல்
> ....
> பழிதீர் முறுவல் சிறிதே தேற்றல் *(தொல் - 3;109)*

என்ற அல்ல கூற்றுமொழி(மெய்ப்பாடு)களையும் சேர்த்தே தொல் காப்பியம் வரிசைப்படுத்துகிறது. மெய்ப்படுகளைப் பாராட்டு எடுத்தல், மடம் தப உரைத்தல் *(தொல்- 3; 260)* என்றெல்லாம் கூற்றுகளையும் சே ர்த்தே வரிசைப்படுத்துகிறது. பாத்திரங்களுக்கு இடையிலான கருத்துப் பரிமாற்றத்தில் மொழியும் மெய்ப்பாடும் முழுமையாகத் தனித்தனியே பிரித்துப் பார்க்க முடியாதனவாக இருப்பதைத் தொல்காப்பியம் உணர்ந்து கொண்டுள்ளது.

தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃது ஆண்டு அவள் செய்தது (குறள். 1279)

என்ற குறளில் மெய்ப்பாட்டுக் குறிப்புப் பாத்திரங்களுக்கு இடையிலான கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்பட்டுள்ளது சொல்லப்பட்டுள்ளது. இதில் குறிப்புப் பொருண்மை இல்லை. இலக்கியத்தில் வாசகர்களுக்கு வெளிப்படும் மெய்ப்பாடு என்று எதுவுமில்லை.

அகத்திணைப் பாடல்களைப் பொருத்தவரையில் கூற்றைப் புரிந்து கொள்ளவேண்டிய சூழலில் கேட்பவர் இருப்பர். கேட்பவருக்கான இடத்தில் படிப்பவரை வைத்துத் தொல்காப்பியம் இலக்கியத்தை விளக்கிச் சென்றுள்ளது. தலைவியைக் காண வரவேண்டாம் என்றோ, வேறு, வேறு நேரங்களில் வரச்சொல்லியோ தோழி தலைவனை அலைக் கழிப்பது என்பது தலைவி தலைவன் மேல் கொண்ட விருப்பின்மையால் நிகழ்கிறது என்று கருதாது, வரைதல் வேட்கையால் நிகழ்கிறது என்று கருதவேண்டும் (தொல்-3; 2007) என்ற விளக்கம் தலைவன் என்ற பாத்திரத்தைவிடப் படிப்பவர்கள் பொருள்கொள்வதற்குத் துணை செய்யக்கூடிய விளக்கமாகும். இதே போல, "கூறப்படும் செய்தி (111), கூறும் சூழல் (112, 121), படிக்கும் சூழல் (122) என்ற மூன்றையும் இணைத்து, இலக்கிய உள்ளடக்கமாக வரும் நிகழ்ச்சியின் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்று காலங்களையும் ஆராய்ந்து படிப்பவர்கள் உணருமாறு உரைப்பது காலம்" (தொல்- 3; 503) என்ற செய்யுள் உறுப்பாகும் என்று தொல்காப்பியம் குறிப் பிட்டுள்ளது.

உலக நடைமுறையை முழுமையாக இலக்கியத்தின் வழி விளக்க முடியாதிருக்கிறக்கிறது என்று உணர்ந்துகொண்டதால் கற்பு வாழ்வின் இறுதி நிலையில் துறவு மேற்கொள்ள வேண்டும் என்ற செய்தி வரையிலான, இலக்கியத்தில் சொல்லப்படாத பல செய்திகளைத் தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் விளக்கிச் சென்றுள்ளது. புனைவியல் தன்மை கொண்ட இலக்கிய மரபுகளை உடைத்து, தன் நடப்பியல் தன்மையை உலக நடைமுறை நிலைநாட்டிக் கொள்ளவும் செய்வதைத் தொல்காப்பியம் பதிவு செய்துள்ளது. புணர்தல் ஒழுக்கம் குறிஞ்சி நிலத்திற்குரியது என்பது இலக்கிய மரபாக இருந்தாலும் அந்த ஒழுக்கம் ஐந்து நிலங்களிலும் நிகழ்வதாகவும் பாடல்கள் எழுதப்படலாம் (தொல்- 3; 104). நெய்தல், பாலை நிலங்களில் புணர்தல் ஒழுக்கம் நிகழ்வதாகச் சங்க இலக்கியத்திலேயே பல பாடல்கள் உள்ளன. உடன்போக்குப் பாலைத் திணைக்கு உரியதாகும் (தொல்-3; 17, 141) செய்யுள் உறுப்புகளுள் ஒன்றான பொருள் என்பது புணர்தல், பிரிதல், இருத்தல் முதலான இலக்கிய வகைப்பாட்டுக்கு உரிய மரபுகளை எல்லாம்

கடந்து பொதுவாக நிற்பது(தொல்- 3; 509) என்று விளக்கப்படுகிறது. இது திணை, துறை என்ற வகைப்பாடுகள் தோன்றுவதற்கு முன்பிருந்த இலக்கிய நிலை போன்றதுமாகும்.

சமூகக்கட்டுப்பாட்டுக்கு எதிரான காதலை அறிவுப் பூர்வமாக நின்று ஆதரிப்பதும், அச்சமூகக் கட்டுப்பாட்டுக்கு ஆதரவாகக் காதலர்களை இல்லற வாழ்வில் புகச் சொல்வதும் சங்க இலக்கியத்தின் இரு சமூக நோக்கங்களாகும். தனித்தனியே உள்ள சங்க இலக்கியப் பாடல்களுக்கு இடையில் எந்தவித வாழ்க்கைத் தொடர்ச்சியும், காதல் தொடர்ச்சியும் இல்லை. ஒரே இலக்கிய வகைக்குள் இருக்கும் பொதுவான கூறுகள்தான் அவற்றில் உள்ளன. சங்க இலக்கியப் பாடல்களின் ஆக்கத்தில் உள்ள களவுக்கு ஆதரவு தெரிவித்து அதை கற்பாக்குவது என்ற உள்நோக்கத்தைத் தொல்காப்பியம் எதிரொலிக்கிறது. இதற்காக ஒரே பாத்திரத்தின் வாழ்க்கையில் அடுத்தடுத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எனக் கருதத்தக்க வகையில் ஒவ்வொரு கூற்றுக்கான சூழலையும் பாத்திரங்களின் அடிப்படையில் பிரித்து, அவற்றைக் கால வரிசைப்படி பட்டியலிடுகிறது. களவு, கற்பு என்ற பெரும்பாகுபாடுகள்கூட ஒருவரது வாழ்க்கையில் அமையும் இரு காலகட்டங்கள் எனக் கருதத்தக்க வகையில் அமைந்துவிட்டிருக்கின்றன. களவு என்பது காமப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கொடு தழாஅல், தோழியிற் புணர்வு (தொல்- 3; 487) என்று நான்காகப் பிரிக்கப்பட்டுக் கால வரிசையில் கூறப்பட்டுள்ளது. இது போலவே புறத்திணைகளின் வைப்புமுறை சமூக, அரசியல் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. துறைகளின் வரிசை, நிகழ்ச்சிகளின் கால வரிசையாக உள்ளது. தொகை, வகை, விரி என்றும் முதல், சினை என்றும் தொல்காப்பியம் மொழிக்கும் இலக்கியத்திற்கும் அளிக்கும் விளக்கங்கள் அமைப்புப் பற்றிய புரிதலை அடிப்படையாகக் கொண்டவை.

துணை நூல்கள்

1. சுந்தரமூர்த்தி கு, விளக்கவுரை, 1987,தொல்காப்பியம் - சொல்லதிகாரம்: இளம்பூரணர் உரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பதி -2

2. சுந்தரமூர்த்தி கு, விளக்கவுரை, 1953, தொல்காப்பியம் - சொல்லதிகாரம்: இளம்பூரணர் உரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை,

4

படிமம்: மொழியும் உணர்வும்

ஒரு படிமப் பொருளை உணர்தல் என்பது அதன் பண்புகளை உணர்தலே ஆகும். ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையில் ஒற்றுமைகளை உணர்தல் என்பது அப்பொருள்களின் பண்புகளுக்கு இடையில் உள்ள ஒற்றுமையை உணர்தலே ஆகும். இதனால் இரு பொருள்கள் ஒரு பண்பில் ஒத்திருப்பதை உணரும்போது அந்த நொடியில் அவ்விரு பொருள்களும் ஒரு பொருள் என்றே தோன்றும். இவ்வாறு தோன்றும் உணர்வே படிம உணர்வு என்று இங்கு கொள்ளப்படுகிறது. இரு பொருள்கள் ஒன்றாகவோ, ஒன்று மற்றொன்றாகவோ தோன்றுவது உண்மைக்குப் புறம்பானது. இரண்டும் வேறு, வேறு பொருள்களே என்ற உண்மையைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கம் உவமை, உருவக உத்திகளில் புலப்படுகிறது. தொடக்க கால இலக்கிய உள்ளடக்கங்களில் உண்மைக்குக் கொடுத்த சிறப்பு இலக்கிய உத்தி களையும் பாதித்திருக்கிறது. பிற்காலத்தில் கற்பனை, அற்புத நவிற்சி முதலானவை இலக்கிய உள்ளடக்கங்களைப் பாதித்தபோது அவை இலக்கிய உத்திகளையும் பாதிக்கவே செய்தன. இந்தக் காலகட்டத்தில் படிமமும் சிறப்பாக இடம்பெறத் தொடங்குகிறது. படிமம் என்பது ஒப்புமைப்படுத்தப்படும் பொருளை ஒப்புமைப் பொருளாக மாற்றிச் சொல்லும் பொய் ஆகும். உவமை, உருவகம், படிமம் ஆகியன அடுத் தடுத்த காலகட்டங்களில் சிறப்புப் பெற்றன என்றாலும் பொருள்களை ஒத்தனவாக உணர்வது என்ற அடிப்படைக்குப் படிமம்தான் நெருக்க மானதாக இருக்கிறது. உவமையிலிருந்து உருவகமும் உருவகத்திலிருந்து படிமமும் தோன்றுகின்றன என்று வருவித்து விளக்குவது பிறழ்வானது; மூன்றும் ஒரே பொது மூலத்திலிருந்து தோன்றுகின்றன. உவமை, உருவகங்களை உத்திகளாக ஏற்றுக்கொண்டுவிட்டால் அவற்றைப் படிமம் என்ற உத்தியில் அடக்கமுடியாது. இருள் துன்பத்திற்கும் அறியாமைக்கும் ஒளி இன்பத்திற்கும் அறிவுக்கும் படிமங்களாக

வருகின்றன என்றாலும் அவை குறியீட்டுத் தன்மையை அடைந்து விட்டவை. குறியீடுகளில் ஒரு வகை படிமப் பண்பின் அடிப்படையில் தோன்றுகிறது. ஒப்புமைப் பொருள் என்ற தளம் ஒப்புமைப்படுத்தப்படும் பொருள் என்ற தளத்தில் வந்து ஏதேனும் ஒரு பொதுப் பண்பின் காரணமாக ஒன்றுதல் என்ற இருவேறு தளங்களுக்கு இடையிலான உறவாகப் படிமம் அமைகிறது.

படிமத்திற்கு இதுவரை மொழி என்ற ஊடகத்தை அடிப்படையாகக் கொண்டு அளிக்கப்பட்டுள்ள வரையறைகள், சான்றுகள், விளக்கங்கள் ஆகியவற்றைத் தொகுத்து இருவேறு வரையறைகளைத் தரலாம்.

(அ) ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களோ, செயல்களோ, நிகழ்வு களோ ஒத்திருப்பவை என்பதன் காரணமாக ஒன்றுக்குரிய இடத்தில் மற்றொன்று இடம் பெறுவது.

(ஆ) ஒரு பொருளோ, செயலோ, நிகழ்வோ மனித மனதில் ஏதேனும் ஒரு புலன் உணர்வு வழியே பதிவது மற்றும் வெளிப்படுவது

மனித மனதில் பதிவது என்ற வரையறை (ஆ) பிற்காலத்தில் எழுந்துள்ளது. தொடக்கத்தில் சிற்பம், ஓவியம் முதலானவற்றில் உண்மைப் பொருளும், அது பற்றிய தனிப்பட்டவரின் எண்ணமும் இடம்பெற்ற தன்மையைப் படிமம் என்ற சொல் குறித்து வந்துள்ளது. பிறகு, மொழிக்கும் உரியதாகப் படிம உத்தி விரிவடையும்போது மனித மனதில் பதிவு பெறுவது என்று விளக்கம் பெறுகிறது.

இரு வரையறைகளிலும் சொல்லப்பட்டுள்ள பொருள், செயல், நிகழ்வு என்பன மொழியின் பொருண்மையை அடிப்படையாகக் கொண்ட சொல்லாக்கங்கள். மொழியை அடிப்படையாகக் கொள்ளும்போது, இவை முறையே பெயர், வினை, தொடர்/வாக்கியம் என்று சொல் லாக்கம் பெறும். இவை மூன்றும் படிமத்தின் வகைகள் எனலாம்.

உரிய பெயர்ச்சொல் நிற்க வேண்டிய இடத்தில் வேறு பெயர்ச் சொல் பதிலீடாக வந்து நிற்கும். அவ்விரு பெயர்ச்சொற்கள் குறிக்கும் பொருள்களுக்கு இடையில் பண்பு நிலையிலோ, செயல் நிலையிலோ ஒப்புமை இருக்கும். இது பெயர்ப்படிமம் எனப்படும்.

1. அ. வால் முளைத்த மண்ணே (கறுப்பு மலர்கள். 1)
   ஆ. தொலையாக் கற்ப (பதிற்றுப்பத்து. 43, 80)

நீண்ட வடிவத்திலும் அசைந்துகொண்டே இருக்கும் செயலிலும் உள்ள ஒப்புமையால் புல் என்ற பெயர்ச் சொல்லுக்குரிய இடத்தில் வால் பதிலீடாக வந்து நிற்கிறது (1அ). பெண்களுக்கு இலக்கணம்

கற்பு. கற்பு என்பது உள்ளத்தாலோ உடலாலோ பிற ஆடவராலோ ஒரு பெண் நிறை அழியாமல் ஒழுக்கமாக இருத்தல் ஆகும். ஆணுக்கு இலக்கணம் பிறரால் வெல்லப்படாமல் வலுவாக இருத்தல். இது பெண்ணின் இலக்கணமான கற்பால் படிமப்படுத்தப்படுகிறது(1ஆ).

ஒரு பொருளின் வினைச் சொல்லுக்கான இடத்தில் வேறு ஒரு பொருளுக்குரிய சிறப்புவினை பதிலீடாக வந்து நிற்கும். அந்தச் சிறப்பு வினை மூலம் அந்த வேறு பொருள்களும் பெறப்படும்.

2. அ. நாணற் கிழங்கு மணற்கு ஈன்றமுளை
ஆ. உளையவிர் கழிமாப் பொழிந்தவை எண்ணின்
இ. மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே
ஈ. ஆறு மணிக்குள்ளே வரலைன்னா எம்பெண்டாட்டி கடிப்பா(ள்)

ஈன்ற என்ற வினை நாணற்கிழங்கு-மனைவி, மணல்-கணவன், முளை-குழந்தை என்றும் (2அ), பொழிந்தவை என்ற வினை சேரன்-மேகம், குதிரைகளின் எண்ணிக்கை-மழைத் துளிகளின் எண்ணிக்கை என்றும் (2ஆ), தூங்கும் என்ற வினை மூங்கில் இலை-படுக்கை, பனி நீர்- உயிரி என்றும் (2இ), கடிப்பாள் என்றவினை மனைவி- விலங்கு என்றும் (2ஈ) படிமப் பொருள் கிடைக்கக் காரணமாக நிற்கின்றன. துளிர்த்த, ஈந்தவை, இருக்கும், திட்டுவாள் என்று உரிய வினைகள் முறையே வாக்கியங்களில் இருந்திருந்தால் படிமங்கள் கிடைத்திருக்கா.

பெயர், வினைப் படிமங்களுள் ஏதேனும் ஒன்றோ, இரண்டும் கலந்தோ ஒன்றுக்கு மேற்பட்டவையாக ஒரே வாக்கியத்தில் அமைய வருவது தொடர்ப்படிமம் எனப்படும்.

3. நானிலம் வாய்க்கொண்டு நன்னீர்அறமென்று கோதுகொண்ட
வேனிலம் செல்வன் சுவைத்துஉமிழ்பாலை... (திருவிருத்தம் - 26)

என்ற அடிகளில் வினை, பெயர்ப் படிமங்கள் கலந்தே வந்துள்ளன. *என்ற குறி படிமத்தின் மூலம் பெறப்படும் பொருண்மையைக் குறிக்கும்.

3. அ. பெயர்ப்படிமம்

அ1. வேனிலம் செல்வன்	-	*தின்பவன்
அ2. *கதிர்	-	வாய்
அ3. நானிலம்	-	*தின்பொருள்
அ4. நீர்	-	*சத்து
அ5. பாலை	-	*சக்கை

3. ஆ. வினைப்படிமம்

ஆ1. (வாய்க்கொண்டு)	-	*கதிர்ப்பட்டு

ஆ2. அறமென்று - *தீர ஆவியாக்கு
ஆ3. சுவைத்து - *ஈர்த்து
ஆ4. உமிழ் - *வறட்சி

வினைப்படிமமாக வரும் வினைச் சொற்களின் பொருண்மைகளைத் தெளிவு படுத்துவதற்காக வாய் என்ற பெயர்ப்படிமம் (அ2) மாறுதலாகி வந்துள்ளது. ஏனைய பெயர்கள் எல்லாம் (3, அ1, அ3, அ4, அ5) படிமப்படுத்தப்பட்ட பொருளுக்கு உரியவைகளே. பெயர்ப்படிமத்தின் மூலம் வினைப் பொருண்மைகளும் வினைப் படிமத்தின் மூலம் பெயர்ப் பொருண்மைகளும் பெறப்படும் என்று பொதுவாகச் சொல்லலாம்.

வடிவத்திலோ, நிறத்திலோ, செயலிலோ ஒத்த பொருளே படிமமாக வரும் என்ற வரையறையில் ஏதேனும் ஒரு புலன் வழியாக அமைகிறது. வாய்க்குரிய இடத்தில் பவளம் படிமமாக வருவதற்குக் கண் மட்டும்தான் அடிப்படை.

4. அ) செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே (பாரதியார் கவிதைகள்)

4. ஆ) மாசறு பொன்னே ; வலம்புரி முத்தே
காசறு விரையே; கரும்பே; தேனே
....
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ (சிலப்பதிகாரம் 2; 73-80)

என்ற படிமங்களில் ஒப்புமைப்படுத்தப்படும் பொருள்களான தமிழ் செவிப்புலனுக்கும் பெண் மெய்ப்புலனுக்கும் உரியவை; இவை பிற புலன்களால் உணரப்படும் பொருள்களைப் படிமமாகக் கொண்டு வெளிப்பட்டுள்ளன. இவ்வாறான படிமங்கள் வரையறை (ஆ) - வின் படி அமையும் மனப்பதிவுகள் அல்ல.

அடைமொழி, வருணனை, உவமை, உருவகம் முதலானவற்றின் மூலமாக மனதில் புலன் உணர்வு வடிவில் பதிவது படிமம் ஆகும் என்று மேலும் வரையறை (ஆ) விளக்கப்படுவதற்கு உரியதாக இருந்து வந்திருக்கிறது. அவ்வையின் பாடல்களிலிருந்து அதியமானைப் பற்றிய கருத்துக்களை தோற்றுவித்துக் கொள்ள முடியும். இந்திரா பார்த்தசாரதி, வாஸந்தி, ஆதவன் முதலானவர்களின் எழுத்துக்களைப் படிப்பவர்களுக்கு டில்லி பற்றி ஒரு கருத்துத் தோன்றவே செய்யும். ஒவ்வொரு சொல்லும் பொருண்மை உடையது.

5. அ. முனிவர் கருக்கலில் ஆற்றுக்குப் போனார்
   ஆ. நேற்றுப் பிற்பகல் இடியுடன் மழை பெய்தது.

என்ற வாக்கியங்களில் பொருள், செயல், நிறம், ஒலி, நேரம் முதலான வற்றைக் குறித்து வரும் சொற்கள் உள்ளன. இவ்விரு வாக்கியங்களும் தம்மைப் படிப்பவர் மனதில் கருத்துருவங்களை ஏற்படுத்தவே செய்யும். இவ்வாறு ஒரு கருத்துத் தோன்றுவதை உத்தி என்று வரையறை செய்ய முடியாது. இக்கருத்து உள்ளடக்கமே ஆகும். உள்ளடக்கம் உத்தியாக இருக்க முடியாது. ஐந்து புலன்கள் வழி மனதில் வரையப்படும் சொல்லோவியம் என்றெல்லாம் படிமத்தை வரையறுப்பது Impression-ismத்தின் வெளிப்பாடு. மனப்பதிவுதான் படிமம் என்றால் அது ஆள், இடம், காலம், வயது, பால் முதலான சூழல்களுக்கு ஏற்ப வேறுபட்டுக் கொண்டே இருக்கும். சாணும் முழமும் ஆளுக்கு ஆள் வேறுபடும். உத்தி என்பது வரையறுக்க முடிந்த, சூழலால் வேறுபடாதிருக்கிற ஒரு அளவுகோலாக இருக்க வேண்டும். வரைபறை (ஆ) வின் படி அமைந்த வரையறை, சான்று, விளக்கங்களை படிமத்திற்குரியனவாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

மனப்பதிவுதான் படிமம் என்றால் அப்பதிவைக் கற்பனை ஓவியம், படம், உரையாடல், கேள்விப்படுதல் முதலானவற்றின் மூலமாக உருவாக்கிக் கொள்ள வாய்ப்புகள் உள்ளன. நேரில் பழகும்போது கூட ஒன்றைப்பற்றி உருவாகும் மனப்பதிவு மேலும் முழுமையை நோக்கியும் தவறாகவும் அமைந்துவிடுகிறது. வரையறை(ஆ)வின்படி விளக்கப்பட்டவற்றை குறிப்புப் பொருள், உய்த்துணர வைத்தல் அல்லது வந்தது கொண்டு வராதது முடித்தல் முதலான இலக்கண மரபுகளாலும் சொல்லாடல் (Discourse) முதலான மொழியியல் மரபுகளாலும் விளக்க முடியும். வரையறை(அ) வின் படி சொல்லப்பட்டவைகளை மட்டும் படிமமாகக் கொள்ள வேண்டும். படிம உணர்வும் எண்ணமும் பின்வரும் காரணங்களுக்காகத் தோன்றி வெளிப்படுகின்றன.

1. கண்டுபிடித்தல்
2. மிகுவித்தல், சிறப்பித்தல், உயர்த்தல், இழிவுபடுத்தல், தாழ்த்தல், எள்ளுதல்
3. உயர்வானவற்றைத் தொகுத்தல்
4. சொல்லவோ, செய்யவோ தடுக்கப்பட்டவைகளையும் முடியாதவை களையும் வேறு ஒன்றின் மூலமாக வெளிப்படுத்தல்
5. அருவப் பொருளை உருவப்படுத்தல்

ஒரு படிமம் ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டும் தோன்றலாம்.

அறிவு வளர்ச்சியின் படிநிலைகளுள் தொகுத்து, வகுத்து ஆராய்வது முதன்மையானது. தொகுத்தலும் வகுத்தலும் பொருள், பண்பு, செயல் முதலானவற்றில் ஒன்றுக்கு மேற்பட்டனவற்றிற்கு இடையே முறையே ஒற்றுமை, வேற்றுமை காண்பதை அடிப்படையாகக் கொண்டவை. ஒரு பொருளோடு ஒத்த மற்றொரு பொருளை அறிதல் என்பது ஒரு கண்டுபிடிப்பாகும். பொருத்தமற்ற பொருள்களிலும் பொருத்தத்தைக் காண்பதுதான் கவிதை மரபு. பொருத்தமற்றவற்றிற்கிடையே காணும் பொருத்தம் நல்ல படிமத்திற்கு வழி வகுக்கிறது (C.Lowis Day, 1961; 72). நல்ல படிமத்திற்கு மட்டுமன்று; அறிவுக்கும் அது வழி வகுக்கிறது. பனைமரம் புல்வகையையும் வாழை மரம் செடி வகையையும் சேர்ந்தது என்று அறியும்போது வியப்பு ஏற்படுகிறது. பெரிதாகச் சிந்திக்கத் தெரியாத பாமரர்களுக்கு உவமை, உருவகம் என்பன அறிவின் வெளிப்பாடுகளாகத் தெரிகின்றன. தங்களை அறிவாளியாக, கண்டுபிடிப்பாளராக காட்டிக் கொள்கிறவர்கள் உவமை, உருவகம், படிமம் முதலான உத்திகளின் வாயிலாகத் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவே செய்வார்கள். இலக்கியப் புலவனிடமிருந்து அரசியல்வாதிவரை எல்லாரும் இதில் அடக்கம்.

ஒருவரின் பதில் கண்டுபிடிக்கும் திறனை அறியப் பயன்படும் விடுகதைகள் பெரும்பாலும் படிம உத்தியைக் கொண்டு கட்டமைக்கப்படுபவை. நாட்டுப்புறத் தன்மைக்கே உரிய கொச்சைத் தன்மை இவ்விடுகதைகளில் சேர்ந்திருக்கும். சூரியன் என்ற பதிலைக் கொண்டது பின்வரும் விடுகதை:

6. ஏற ஏற நல்லா இருக்கும்; ஏறிவிட்டால் எறியும்;போகப் போக நல்லா இருக்கும்; போய்விட்டால் பயமா இருக்கும்; அது எது?

கொச்சை வழக்குச் சொற்களால் கட்டமைக்கப்பட்ட விடுகதைகளின் பதில்கள் தகுதி வழக்குச் சொற்களாக இருக்கும். தகுதி வழக்குச் சொற்களால் கட்டமைக்கப்பட்ட விடுகதைகளின் பதில்கள் கொச்சை வழக்குச் சொற்களாக இருக்கும். இந்த முரண்கள் இன்றி அமைவனவும் உள்ளன. இந்த விடுகதையின் பதிலான சூரியன் தோன்றி, உயர்ந்து, தாழ்ந்து, மறைவது பாலுறவு நிகழ்ச்சியைக் கொண்டு படிமப்படுத்தப் பட்டிருக்கிறது.

ஒருவரது அறியாமை, மடமைகள் பொதுவாகப் பிறருக்கு நகைச் சுவையை வரவழைக்கக் கூடியனவாக இருக்கும். ஒரு மொழியைக்

குழந்தைகளும் பிற மொழியினரும் பேசும்போது நிகழும் மொழித் தவறுகள் தாய்மொழி பேசுபவருக்கு நகைச்சுவையை வரவழைக்கும். வேண்டுமென்றே மொழித் தவறுகள் செய்யப்பட்டு நகைச்சுவை உண்டாக்கப்படுகிறது.

7. அ. ஆட்டுக்குட்டி முட்டையிட்டு
ஆ. யானைக் குஞ்சு சொல்லக்கேட்டு

குட்டி போடுவதும் முட்டையிடுவதும் ஒன்று மற்றொன்றாக மாற்றிச் சொல்லிப் படிமப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தப் படிமங்கள் மரபு வழுக்கள் ஆகும். பொருத்தமான பொருள்களைக் கண்டுபிடித்து, ஒப்பிட்டுப் படிமப்படுத்துவது அறிவுத் திறனுக்குரிய செயல் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் படிந்து போயிருப்பதால்தான் மரபு வழுவான இந்தப் படிமங்கள் நகைச் சுவைக்குக் காரணமாகி விட்டிருக் கின்றன.

சொல்ல எடுத்துக்கொண்ட ஒன்றைப் படிமத்தின் மூலமாக உணர்த்தும்போது, அந்த ஒன்று சொல்கின்றவரின் நோக்கத்திற்கும் படிமத்திற்கும் ஏற்பச் சிறப்போ, உயர்வோ அடைகிறது. இழிவோ, தாழ்வோ அடைகிறது.

8. அ.என் கண்ணு வந்துருச்சு
ஆ. என் தங்கம் இங்கே வாடி

என்று மிகவும் நெருக்கத்திற்குரிய ஒருவரை உயிர், கண், தங்கம், மாணிக்கம், மயில் என்று வேறு உயர்வான, மதிப்பு மிகுந்த, நயமான பொருள்களைக் கொண்டு படிமப்படுத்துவதன் மூலம் அவர் சிறப்பும் உயர்வும் பெறுகிறார். நாகரிகத் தொட்டில், கோடை வாழிடங்களின் அரசி என்பன இவ்வாறான படிமங்களே.

9. அ. எத்தனை தடவை கத்துனாலும் இந்த வெங்காயத்துக்குக் காது கேட்காது
ஆ. நீ பார்த்து எழுதிக் கொடுத்ததை நான் என்னா மயித்துக்குத் திருத்தணும்.

அழைக்கப்பட்டவரும் தேர்வுத்தாளைத் திருத்துவதற்கான காரணமும் இழிவுபடுத்தப்படுவதற்காக வெங்காயமும், மயிரும் முறையே படிமங் களாக வந்துள்ளன.

பேதைமை, மடமை போல எள்ளலும் நகைச்சுவைக்கான காரணங் களுள் ஒன்றாகக் கொள்ளப்பட்டுள்ளது(தொல்.மெய்ப்.4)

10. ரேஷன் கடைக்காரருக்குக் குழந்தை பிறந்தது எடை குறைவாக ரேஷன் கடை ஊழியர் எப்போதும் உரிய எடையைவிடக் குறைவான எடையிலேயே பொருள்களை மக்களுக்கு வழங்குவார் என்ற கருத்து எள்ளலுக்கு உள்ளாகிறது. அவரால் வழங்கப்படும் எடை குறைவான பொருளின் பண்பு அவர் குழந்தையின் எடைக் குறைவின் மூலம் படிமமாக்கப்பட்டுக் கேலி செய்யப்பட்டுள்ளது. குழந்தை எடை குறைவாகப் பிறந்தது இயல்பாகவும் இருந்திருக்கலாம். ஆனால், அவர் செய்த பாவத்திற்குத் தண்டனையாக அவருக்கு எடை குறைவான குழந்தை பிறந்தது என்ற கருத்தே இங்கு கிடைக்கிறது.

படிமமாக வரும் பொருள், செயல், பண்பு எல்லாம் படிமப் படுத்தப்படும் பொருள், செயல், பண்பு முதலானவற்றைவிட ஒப்புமைப் பண்பின் உயர்வானதாகவே பெரும்பாலும் இருக்கும். அவ்வாறு உயர்வானதாக இருப்பதன் காரணமாகவே அது உவமை, உருவகம், படிமம், குறியீடுகளில் எடுத்தாளப்படுகிறது. உவமிக்கப்படும் பொருள் முதலானவை உயர்வு இல்லாததன் காரணமாகவே நீக்கப்படுகின்றன. கடந்து சென்ற தந்தையும், மகளும் திரும்பி வரும்பொழுதுதான் மகள் அணிந்திருந்ததாகக் கருதிக் கொள்ளப்பட்ட அழகான பனியன் உண்மையில் தந்தையால் அணியப்பட்டிருக்கிறது என்பது மனதில் உறைத்தது. மகளுக்குச் சிறப்புக் கொடுத்துப் பார்த்ததால் பனியனையும் அவளே அணிந்திருப்பதாகக் கருத்துத் தோன்றிவிட்டது. சிறந்த ஆடை என்ற கூறு சிறந்தவராகக் கருதப்பட்ட மகளுடன் இணைத்துப் பார்க்கப்பட்டுவிட்டது. அவர் அணிந்திருந்த ஆடை சிறப்பில்லாததால் அது உணரப்படாமல் நீக்கிவிடப்பட்டிருக்கிறது. இவ்வாறான கூறுகளின் இணைப்பைப் பின்வரும் அட்டவணை மூலம் மேலும் வேறு சான்று களைக் கொண்டு விளக்க முடியும்.

	ஆள்1	ஆள்2	ஆள்3	ஆள்4	ஆள்5
எ	எ1	எ2	எ3	எ4	எ5
பி	பி1	பி2	பி3	பி4	பி5
சி	சி1	சி2	சி3	சி4	சி5
டீ	டீ1	டீ2	டீ3	டீ4	டீ5

ஏ- அழகு, பி-நடத்தை, சி-அறிவு, டீ-வளம் என்ற ஒவ்வொன்றும் குறிக்கோள் மனிதரின் பண்பு என்றும் எ1. எ2..... பி1, பி2 என்பன நடைமுறையில் உள்ள மனிதரின் பண்புகள் என்றும் கொண்டால் ஒவ்வொரு ஆளும் ஒன்றிலோ, மேற்பட்டவற்றிலோ, உயர்ந்தோ,

தாழ்ந்தோ இருக்கலாம். இவர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டியில் மக்கள் அழகானவரைத் தேர்ந்தெடுப்பார்கள் என்ற சூழலில் ஆள் *3* அழகானவர் என்றால் அவரே எ*3*, பி, சி, டீக்களின் இணைப்பாகக் கருதப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார். பி*3*, சி*3*, டீ*3* என்பன எ*3*யின் தொகுப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கும். அழகானவர்களும் திரைப்பட நடிகர்களும் எளிதில் அமைச்சர் களாகவும் அரசியல்வாதிகளாகவும் ஆக, மக்களின் இந்த இயல்பான அணுகுமுறைதான் காரணம். அகல்விளக்கு நாவலில் அழகான சந்திரனுக்கு பெரிய நல்ல நெல்லிக்காய்கள் கேட்காமலேயே கிடைக்கின்றன. வேலன் விரும்பியும் கிடைக்கவில்லை. அழகானவன் ரூ.50 கொடுத்திருந்தாலும் ரூ.100 க்கான மீதியைக் கொடுக்கும் பிறழ்வு நேர்கிறது. அழகானவன் பணக்காரனாகவும் உயர்வான நடத்தையுள்ளவனாகவும் தூயவனாகவும் இருப்பான் என்று மக்களால் கருதிக் கொள்ளப்படுகிறான். பலரது வாழ்வில் நடந்த சிறந்த நிகழ்ச்சிகளின் தொகுப்பாக ஒருவரது வாழ்க்கையை அமைத்துக் கூறுவது இலக்கிய, நாடக மரபுகளில் பின்பற்றி வரப்பட்டிருக்கிறது. இது "சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல்" (தொல்.அகத்.இளம்.56) என்று ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. அட்டவணையில் ஆள்*1*, ஆள்*2*, ஆள்*3* முதலானவற்றை நீக்கிவிட்டு எ மகன், பி தந்தை, சி தாய், டீ குடும்ப நிதிநிலை என்று வைத்துக் கொண்டால் சி*2* என்ற மனைவி தன் குடும்பத்தை எ*1*, பி*3*, சி*2*, டீ*1* என்று கூடக் கற்பனையில் கட்டமைத்துப் பார்க்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட தளங்களில் உள்ள உறுப்புகள் ஒப்பிடப்பட்டு அவற்றுள் உயர்வானவை மட்டும் இணைத்து ஒரு புதிய தளம் ஏற்படுகிறது. எ*1*, பி*1*, சி*2*, சி*3* என்றோ எ*2*, பி*3*, டீ*2*, டீ*3* என்றோ ஒரு பண்பையுடைய இரு வேறு பொருள்கள் கட்டமைப்பில் இடம்பெற முடியாது. படிமம் என்பதே ஒன்றுக்குரிய இடத்தில் மற்றொன்று இடம் பெறுவதுதான்.

சொல், செயல் என்ற இரண்டிலும் பல தடைகள் உள்ளன. அவை வேறு வடிவில் வெளிப்படுத்தப்படப் படிமம் துணை செய்கிறது. பொது இடத்தில் கொடூரமானவர்களாகத் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளப் பெரும்பாலும் பலர் விரும்புவதில்லை. எதிரிகள் உருவாகத் தொடங்கும்போது அவர்களை அழித்துவிட வேண்டும் என்று நேரடியாகச் சொல்வதில் உள்ள கொடூரம்.

11. இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து (குறள் *879*)

என்று பிறிது மொழிதல் அணி என்ற படிமத்தைப் பயன்படுத்தும்போது

மறைக்கப்படுகிறது. எதிரிகளிடம் முரண்பாட்டை,

12. உங்கள் குரள் வளையை விட
என் கோரைப் பற்கள் நீளமானவை
உங்கள் குருதி
என் தாகம் தீர்க்கப் போதுமானதன்று
உங்கள் இதயம்
எனக்குப் பிடித்தமான தின்பண்டம்

என்று படிமத்தின் மூலம் வெளிப்படுத்தும் போது, அது மேலும் கொடூரத்தை அளிக்கிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போரிட்டால் பகை அரசர்கள் இறந்து, அவர்களது குழந்தையையுடைய மனைவியர் விதவையராகிவிட்டனர். இதை நேரடியாகச் சொல்வதில் உள்ள அச்சம், நாகரிகம் கருதிப் படிமத்தின் மூலம்

ஆலம் கானத்து அமர் கடந்து அட்ட
கால முன்ப நின் கண்டனென் வருவல்
அறுமருப்பு எழிற்கலை புலிப்பால் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கும்
ஆளில் அத்தம் ஆகிய காடே (புறம். 23)

என்று கல்லாடனார் சொல்கிறார். கலை, பிணை, மறி, புலி என்ற படிமங்கள் இதற்காகப் பயன்பட்டுள்ளன.

அவையல் கிளவியாகவும், மங்கல வழக்காகவும் வரும் தகுதி வழக்குகள் படிமங்களாக உள்ளன. மது, விந்து என்ற இரண்டையும் குறிக்கத் தண்ணி என்ற சொல் படிமமாக வழங்கப்படுகிறது. சாப்பாடு என்ற சொல் பாலுறவைக் குறிக்கப் படிமமாக வருகிறது.

14. பெண்: வீட்டுக்கு வரவே மாட்டேங்கறீங்க

ஆண்: வந்தாச் சாப்பாடு கிடைக்குமா

பெண்: வீட்டுக்கு வந்தா வேணும்கிற சாப்பாடு கிடைக்கும்

கேட்கப்படுகிற பெண்ணுக்கு பாலுறவில் விருப்பமில்லாத சூழலில், தன்மேல் வர வாய்ப்புள்ள குற்றச்சாட்டிலிருந்து கேட்பவர் தப்பித்துக் கொள்ள, சாப்பாடு என்ற வேற்றுச் சொல்லைப் பயன்படுத்துகிறார். மனிதரின் இழிவான நடத்தைகளை மறைமுகமாகக் குறிக்கும்

சொற்களால் பேசுவதே நாகரிகமாகக் கருதப்படுகிறது. பல பெண்களுடன் தன் கணவன் வைத்துள்ள உறவைப்பற்றி ஒரு பெண் சொன்னது:

15. பெப்ஸி, மிரிண்டா, பார்னர், கோகோ கோலா, டொரினோ என்று எத்தனையோ எல்லாவற்றையும் குடித்து ஏன் உடம்பைக் கெடுத்துக் கொள்ளவேண்டும். எல்லாம் குளிர்பானம் என்ற நிலையில் ஒண்ணுதானே, ஒண்ணு பத்தாதா.

இதே உத்திமுறையில் பேசவேண்டிய நிலையில் சங்க இலக்கியப் புலவனுக்கு மட்டுமில்லை; சங்க கால மகளிரிருக்கும் நேர்ந்துதான் இருந்திருக்கிறது. "உள்ளுறை தலைவனுடைய தீங்குகளை மங்கல மொழியால் கூறவும் தலைவனைத் திட்டிக் கூறவும் தலைவனின் ஆண்மைத் தன்மையில் பழிபடக் கூறவும் பயன்படுவது" (தமிழண்ணல், *1986; 87*). பரத்தை கூடத் தலைவனின் கூடா ஒழுக்கத்தை,

கழனி மாத்து விளைந்து உகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன் (குறுந்தொகை.*8*)

என்று வேற்றுவடிவத்தில்தான் வெளிப்படுத்துகிறாள். உயர் கட்டு மானத்தைச் சேர்ந்த இலக்கியமும் இழிவான ஒழுக்கங்களை நேரடியான மொழியால் சொல்ல இடம் தராதிருந்திருக்கும்.

மிகுதியாகத் தடை செய்யப்பட்டுள்ள பாலுணர்வு தொடர்பான வெளிப்பாடுகளில் இப்படிமம் மிகுந்துள்ளது. எட்டாம் வகுப்புப் படிக்கும் மாணவி மற்றொரு குச்சியைத் தன்னுடன் படிக்கிறவனிடம் வலிந்து கொடுத்துவிட்டு, அவனைத் தன்னிடம் இருக்கும் குச்சியால் ஒரு அடி அடித்துவிட்டு நிறுத்திக் கொள்கிறாள். அவன் திருப்பிப் பலமுறை அடிப்பதை எதிர்ப்புக் காட்டாமல் வாங்கிக் கொள்கிறாள். அவன் நிறுத் தினால் அவனை மீண்டும் அடித்துத் தன்னை திருப்பி அடிக்குமாறு வேண்டிக் கொள்கிறாள். இங்கு அந்த மாணவிக்கு இருக்கும் விருப்ப உணர்வே சண்டை என்ற வன்முறை உறவாக மாற்றம் பெறுகிறது. பால் உணர்வுக்குரிய இடத்தில் வலி உணர்வு வந்து இடம் பெறுகிறது. சினம், வலி முதலான உணர்வுகளை உடலில் கூட்டி, அந்த உணர்வுகளுக்குரிய இடத்தில் விருப்பத்தைப் பதிலீடு செய்து மிகுவிப்பதற்காகப் பாலுறவின் போது ஒருவரை ஒருவர் அறைந்து கொள்வது, சிகரெட்டால் சுட்டுக் கொள்வது, உருகிய மெழுகை உடலில் ஊற்றி விடுவது முதலான செயல்களில் ஈடுபடுகிறார்கள். புலித்தோலைப் போர்த்திக் கொண்டு, தன் மனைவியால் சவுக்கடி பெறும்போது, விலங்கான புலிக்குரிய வலுவையும் சினத்தையும் தான் பெற்றுவிட்டதாகக் கருதி ஒருவன் பாலுறவுக்குப் பாய்கிறான். இது போன்ற கருத்துக்கள் உயர்கட்டுமான

இலக்கியங்களிலும் வெளிப்படவே செய்கின்றன. சிவபெருமானுக்குக் களிறும் பார்வதிக்குப் பிடியும் படிமங்களாக வந்துள்ளன.

17. அ. போர்க் களிற்றைப் புணர்ந்து

ஆ. செழும்பிடி பயந்தளித்த (முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் *- 1*)

"முலை இரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று" என்கிறது குறள் (குறள் *402*). உடல் பருமனும் நல்ல எடையும் உள்ளவர்களே பாலுணர்வை நிறைவாக அனுபவிக்க முடியும் என்ற நம்பிக்கை இன்றும் பாமரர்களிடம் தொடர்ந்து நீடித்து வருகிறது. சிவனும் பார்வதியும் பாலுணர்வை நிறைவாக அனுபவித்தார்கள் என்று காட்டுவதற்காக உடல் பருமனும் நல்ல எடையும் கொண்ட யானை இங்கு அவர் களுக்குப் படிமமாக ஆளப்பட்டுள்ளது. பாலுறவு கொள்வதற்காக யானைகளாக மாறியிருந்தார்கள் என்றாலும் அது படிம உணர்வால் வருவதுதான்.

மற்றவரைக் குறை சொல்வது சான்றோர்க்கு அழகு அன்று; தன் குறைகளை வெளிப்படுத்திக் கொள்ளாமலிருப்பதும் அவ்வாறானதே. நன்றாக இல்லாத உணவும் நலமின்மையும் அவற்றிற்கு எதிரான பொருண்மை மூலம் படிமப்படுத்தப்படுகின்றன.

18. அ. உன் சமையல் இன்னைக்கி நல்லா இருந்துச்சும்மா

ஆ. எனக்கு யாருப்பா இருக்காங்க, நல்ல இருக்கேன்

ஒப்புமைப் பண்பை அடிப்படையாகக் கொண்டுதான் படிமம் அமையும். ஒன்றுக்கு ஒன்று எதிராக இருத்தல் என்ற அடிப்படையில் இவை ஒப்புமை உடையனவாகும். ஒருவரிடத்தில் பிறரைப் பாதிக்கத் தோன்றும் உணர்வு தன்னைத்தானே பாதித்துக் கொள்வதாக மாறிவிடுவதன் மூலம் இவ்வாறான படிமங்கள் தோன்றுகின்றன. முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரைப் போலி வேடம் அணிந்து சென்று வெட்ட அதைச் சேக்கிழார் "நான் முன் நினைந்த அப்பரிசே செய்ய" (மெய்ப்பொருள் நாயனார் புராணம். *15*) என்று முரணாகக் குறிப்பிடுகிறார். பரிசு செய்தல் எனபது துரோகமாகக் கொல்லுதல் என்பதாக இருக்கிறது. புகழ்தல், பழித்தல் என்ற இரண்டுள் ஒன்று மற்றொன்றின் மூலமாக உணர்த்தப்படுவதும் இவ்வாறானதுதான்.

திருச்சி தொழில் அதிபர் ஸ்ரீதர் தன் செல்வ மகளைக் காப்பாற்று வதற்காகப் புட்டபர்த்தி மருத்துவமனைக்குக் குடும்பத்தோடு செல் கிறார். அங்கு மகள் இறந்துவிடுகிறாள். சாய்பாபா தன் மகளைக் காப்பாற்றாதது தன் குடும்பத்திற்குச் செய்த கெடுதல் என்று

அவர் எடுத்துக் கொள்கிறார். பாபாவுக்குச் சொத்தை எழுதி வைத்து விட்டுக் குடும்பத்துடன் அங்கேயே தற்கொலை செய்து கொள்கிறார். தன் அன்புக்குரிய, தன்னை கட்டுப்படுத்துவதற்குரிய, நம்பப்படும் ஒருவர் தனக்குச் சிறு கெடுதல்பண்ணும் போது, அல்லது நன்மை செய்யவில்லை என்று கருதும்போது, அதைப் பொறுக்க முடியாமல் மிகப் பெரிய கெடுதலைத் தானே வலிந்து வரவழைத்துக் கொள்வது படிம உணர்வின் காரணமாகவே நிகழ்கிறது. அதாவது அந்த மேலானவரை எதிரியின் இடத்தில் பதிலீடு செய்வதில்லை. எதிரி செய்வதையே அவர் செய்தாலும் அவருக்கும் தனக்கும் உள்ள உறவு காப்பாற்றப்படுவதோடு கூடவும் செய்கிறது என்று காட்டுவதற்காகவே தனக்குத்தானே கெடுதலை வரவழைத்துக் கொள்கிறார்கள். தாயிடம் அடிபடும் குழந்தை நெருங்கிச் சென்று அவளின் கால்களைக் கட்டிப்பிடித்துக் கொள்கிறது. தொடர்ந்து அடிவிழ உள்ள வாய்ப்புக் கருதி அது விலகிச் செல்வதில்லை. அடி கொடுத்தாலும் அவளைக் குழந்தை வேறு ஒருத்தியாகப் படிமப்படுத்திப் பார்க்கவில்லை. பார்க்க முடியவில்லை. அடி கொடுத்தல் என்ற எதிர்ச்செயல்உறவு அன்பாக இருத்தல் என்ற நல்லுறவின்மீது பதிலீடு செய்யப்பட்டதாகிறது.

தெரியாததைத் தெரிந்ததுடன் ஒப்பிட்டு விளக்குவதால் புலன் அல்லாதனவும் புலன் ஆகும். உருவ நிலையில் உள்ளவற்றால் பதிலீடு செய்து சொல்லப்படும்போது அருவ நிலையில் உள்ளவை எளிதாக விளங்கும். கல்லூரி முதல்வர், ஆசிரியர் இருவருள் ஒருவருக்கு மற்றொருவர் தொந்தரவு தந்து கொண்டிருப்பதாக இருவரும் வெளிப் படுத்திக் கொண்டிருக்கும் சூழலில் முதல்வரைத்தான் பொதுவாகத் தொந்தரவு தருகிறவராக எல்லோரும் கருதுவார்கள். இந்த உறவை லாரியில் சைக்கிள் மோதினாலும் லாரி சைக்கிளை மோதி விட்டதாகத் தான் கருதுவார்கள் என்ற பருப்பொருள் உறவாகச் சொல்லும்போது அது எளிதாக விளங்கிவிடும். உணர்வு நிலைகளும் படிமப்படுத்தும்போது எளிதில் விளங்கும்.

19. நான் சாம்பலாகாது
யாரையும் நெருங்கிவிடாது
எனக்குள் நிகழும்
பற்றி எரிதல்கள் எண்ணற்றவை

இப்படிமத்தின் மூலம் பிறர் தன்னுடன் உறவுகொண்டுவிடாதபடிக்கு ஒருவருக்கொருவர் வேற்றுமை உணர்வுகள் உள்ளன. அந்த உணர்வால் அவர் பாதிக்கப்படாதவராகவும் இருக்கிறார் என்ற கருத்துக்கள் உணர்த்தப்படுகின்றன.

பொருளை ஐயப்படும் முறையிலும் படிமம் அமைகிறது. ஒரு பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களாக ஐயப்படப்படும் நிலையிலேயே இருந்தால் அது படிமம் ஆவதில்லை.

20. அ. குற்றியோ, மகனோ தோன்றுகின்ற உரு
ஆ. அங்கே தெரிவது பாம்போ, கயிறோ

இவை ஐயப்பொருள்களே ஆகும். இவை முறையே குற்றியாகவும் பாம்பாகவும் இருக்கலாம். மகனாகவும் கயிறாகவும் இருக்கலாம். ஏதேனும் ஒரு பொருளாகத் தீர்மானிக்கப்பட்ட நிலையில் அது பிற பொருளாகவும் ஐயப்படுத்தப்படுமானால் அது படிமமாகிறது.

21. அ. நாயைக் கண்டால் கல்லைக் காணோம்
கல்லைக் கண்டால் நாயைக் காணோம்

ஆ. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு (குறள். 1081)

சிற்பம், பெண் என்ற இரண்டும் தீர்மானிக்கப்பட்ட நிலையில் நாய் என்றும், அணங்கு என்றும், மயில் என்றும் பிற பொருள்களாக அவற்றைக் காண்பது படிமமாகிறது.

தெய்வமும் பேயும் ஒரு தளத்திலும் கோடாங்கியும் பெண்ணும் வேறொரு தளத்திலும் இயங்குகிறவர்கள். பெண்ணுக்குப் பேய் பிடிக்கும்போது அப்பேயை விரட்டக் கோடாங்கி தெய்வம் என்ற தளத்திற்குச் செல்கிறார். பேய்விரட்டும் சூழலில் கோடாங்கியும் பெண்ணும் முறையே தெய்வத்தாலும் பேயாலும் பதிலீடு செய்யப்பட்டவர்களாக இருக்கிறார்கள். சில உயர் பண்புகளை உடைய ஒருவர் எல்லாப் பண்புகளிலும் தன்னை உயர்வானவராகக் கருதிக் கொண்டு மிகு மனப்பான்மைக்கு (Superiority Complex) உள்ளாகிறார். சில தாழ்வான பண்புகளை உடைய ஒருவர் எல்லாப் பண்புகளிலும் தன்னைத் தாழ்வாகக் கருதிக் கொண்டு தாழ்வு மனப்பான்மைக்கு (Inferiority Complex) ஆளாகிறார். இவ்விரு வகையினரும் தங்களை வேறு தளத்திற்கு மாற்றிக்கொண்டு இயல்பான தளத்திற்கு வர முடியாதவர்கள். மனநோய் பிடித்தவர்கள்கூட இவ்வாறு இயல்பான உணர்வுத் தளத்திற்கு மீள முடியாதவர்களாகவே இருக்கிறார்கள். தங்கள் உடலில் வேறு ஒரு உடலைப் பதிலீடு செய்துகொண்டவர்களாக இவர்கள் இருக்கிறார்கள்.

குழந்தை விளையாட்டுகளில் அவை தங்களை ஊர்தியாகவோ, விலங்காகவோ, ஒரு பாத்திரமாகவோ பதிலீடு செய்துகொள்கின்றன.

ஒரு பொருளின் உறுப்பு, பண்பு, செயல், உறவு, உடைமைகள் முதலானவற்றைக் கொண்டு அந்தப் பொருள் பற்றிய அருவ நிலையிலான கருத்தை உருவாக்கிக்கொள்வது படிமம் என்று விளக்கிவரப்பட்டுள்ளது. மொழி, பொருண்மை, பொருள் என்ற இந்த வேறுபட்ட தளங்கள் ஒன்று மற்றொன்றாக மாறுவது படிமம் என்று கொள்ளப்பட்டு வந்திருக்கிறது.

துணை நூல்கள்

1. சம்பத் இரா., *1992*, புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம், உமா பதிப்பகம், பாண்டிச்சேரி

2. தமிழண்ணல், *1986*, தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கை கள்: உள்ளுறை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

5

சிலப்பதிகாரத்தில் கூற்றும் உரையாடலும்

கதை இரண்டு பேருக்கு இடையிலான உரையாடலில்தான் தொடங்குகிறது. கேட்பவர் யாராவது இருந்தால்தான் கதையைக் கூறமுடிகிறது. ஆனால் கதையில் கேட்பவர் கூற்று நிகழ்த்த முடிவதில்லை. கதை, கவிதை, கட்டுரை முதலான எழுத்து வடிவங்கள் எல்லாம் ஒரு பக்கக் கூற்றுகளாக உள்ளன. இந்த ஒரு பக்கக் கூற்றுகளில் மாந்தர்கள் இடம்பெறும்போது அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ள முடியும். கதை மாந்தர்கள் கதை ஆசிரியருடனும் கதையைக் கேட்கும் அல்லது வாசிக்கும் வாசகருடனும் உரையாடுவது மரபு இல்லை. விதிவிலக்குகள் உள்ளன.

இலக்கியத்தின் சூழல்

ஒரு இலக்கியத்தில் இரு வகையான உரையாடல்கள் அல்லது கூற்றுகள் உள்ளன. ஆசிரியன் வாசகனிடம் பேசும் பேச்சு ஒன்று. இது இலக்கியத்தின் சூழல் (Context of literature) எனப்படும். கதை கூறுபவர், கேட்பவர், கதை கூறப்படும் முறை, அதன் இடம், காலம், மரபு முதலான கூறுகள் இலக்கியத்தின் சூழலில் அடங்கும். இலக்கியத்தின் பரவலுக்கு ஏற்ப விரிவடையவோ, குறைவுபடவோ செய்யும். சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்திற்கும் படிக்கத் தொடங்கப்பட்ட காலத்திற்கும் இடத்தொடர்பும், காலத் தொடர்பும் நெருக்கமாக இருக்கலாம். வரலாற்றில் வேற்று நிலப்பகுதிகளிலும் வேறு காலங்களிலும் ஒரு இலக்கியம் பரவும்போது ஒரு கூற்றுப் பரவுவதாகக் கொள்ளப்பட வேண்டும். சிலப்பதிகாரம் என்ற இளங்கோ அடிகளின் கூற்று இன்றும், உலகின் பல பகுதிகளிலும் படிக்கப்படும்படி பரவி நிற்கிறது. கூற்று

கூறப்படும் காலத்திற்கும் அது கேட்கப்படும் காலத்திற்கும் 2000 ஆண்டு கால இடைவெளிவரலாம். இரு மனிதர்களுக்கு இடையில் நிகழும் உரையாடலில் ஒரே ஒருவரின் ஒரு கூற்றை ஒத்து இலக்கியங்கள் அமைகின்றன. இலக்கியம் என்பது ஒருவரது கூற்றின் வளர்ச்சியடைந்த ஒரு மாற்று மொழி வடிவமாகும்.

இலக்கியத்தில் சூழல் (Context in literature) என்பதில் கதை மாந்தர்கள் அனைவரும் இடம் பெறுவர். பாத்திரங்கள் தங்களுக்குள் நிகழ்த்திக் கொள்ளும் உரையாடல், அவர்கள் செயல்படும் இடச்சூழல், காலச்சூழல், அவர்களது உடல் மொழி பற்றி ஆசிரியரின் வருணனை முதலானவை இலக்கியத்தில் (Context in literature) சூழலில் அடங்கும். பாத்திரங்கள் தங்களுக்குள் உரையாடிக் கொள்ளாதவாறு அவற்றின் செயல்களைத் தனது வருணனை மூலமே ஆசிரியன் விளக்கிச் சொல்லுமிடங்கள் உள்ளன. அரங்கேற்று காதை அவ்வாறு எழுதப்பட்டது ஆகும்.

இலக்கியம் என்பது பாத்திர உரையாடல்களைக் கொண்டும் ஆசிரியர் கூற்றாகவும் அமைவது பொதுமரபாக உள்ளது. கட்டுரை, ஆய்வுரைகள் முழுவதும் ஆசிரியர் கூற்றில் அமைவது பொதுமரபு. பாத்திரக் கூற்றுகளைத் தவிர்த்துவிட்டு ஆசிரியர் தனது கூற்றிலேயே கதையை நகர்த்திச் செல்வது என்பது, தொடர்ச்சியான ஒருவரது கூற்றிலேயே அமைந்துவிடும் என்பதால் அது சலிப்புக்குரியதாகிவிடும். ஒரு ஆசிரியன் மற்றவர்களைப் பற்றிப் பேசும்போது, அந்த மனிதர்களைத் தங்களுக்குள் உரையாடிக் கொள்பவர்களாகக் காட்ட வேண்டியுள்ளது. படிப்பவர்கள் யாரையெல்லாம் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறார்களோ அவர்களை நேரடியாக அறிமுகப்படுத்த வேண்டிய தேவை கதை ஆசிரியனுக்கு நேர்கிறது. கதையில் பாத்திரங்களுக்கு இடையில் உரையாடல் அமையும்போது கதை கூறும் வேலையிலிருந்து கதை ஆசிரியன் விலகிக்கொள்கிறான். பாத்திரங்கள் தங்கள் கதையைத் தாங்களே கூறுவதாக அமைந்து விடுகிறது. கதையின் நம்பகத்தன்மை இதனால் கூடுதலாகிறது. பாத்திரங்களுக்கு இடையில் நடைபெறும் உரையாடல் என்றாலும் அவற்றை ஆசிரியர்தான் எழுத வேண்டியுள்ளது. தான் கருதும் கருத்தைப் பாத்திரங்களின் விரிவான உரையாடல்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நிறைய முயற்சி கதை ஆசிரியனுக்குத் தேவைப்படுகிறது. முயற்சியைக் குறைத்துக் கொள்ள நினைக்கும்போது, முயற்சி குறையும்போது பாத்திரங்களுக்கு இடையிலான உரையாடல்கள் குறைந்து ஆசிரியரின் கூற்று மேலோங்கி விடுகிறது. கூறவந்த கருத்தை ஒரு ஆசிரியன் விரைவில் கூறி முடித்துவிடுவதில் ஆசிரியனின் ஆர்வமின்மையும் காரணமாகிவிடலாம்.

ஒரு ஆசிரியன் தன் மன உலகிலிருந்து கதையை எடுத்து மொழியாக்கம் செய்து வெளிப்படுத்தும்போது, இருவேறு சூழல்களுக்கு இடையில் அவன் ஊசலாடுகிறான். அவ்விரு சூழல்களும் இலக்கியத்தின் சூழல், இலக்கியத்தில் சூழல் என்ற இரண்டுமாகும். இலக்கியத்தின் சூழல் என்ற தனது இடத்திலிருந்தும் காலத்திலிருந்தும் இலக்கியத்தில் சூழல் என்ற பாத்திரங்களின் இடத்திலும், காலத்திலும் அவன் வழுக்கி விழ வேண்டியிருக்கிறது. பாத்திரங்களின் சூழலுக்குள் கதை ஆசிரியன் விழுந்து விடும்போது அவன் பாத்திரங்களாக மாறிக் கூற்று நிகழ்த்துகிறான்.

பாத்திரங்களுக்கும் கதை ஆசிரியனுக்கும் இடையில் ஒரு பக்குவப்பட்ட உறவு நிகழும்போதுதான் இலக்கியம் சிறப்பு அடைகிறது. பாத்திரங்களின் உரையாடலுக்கு முழுமையாக இடம் கொடுத்துக் கதையை நகர்த்த நினைப்பது கதையாசிரியனின் பலவீனமே ஆகும். பாத்திரங்களின் கூற்றுகள் மூலமாக வெளிப்படுத்த வேண்டியவற்றை ஆசிரியன் தனது கூற்றின் மூலமாகவே வெளிப்படுத்துவது என்பது கதையாசிரியரின் வன்செயல் ஆகும். பிடிவாதம் ஆகும். ஒரு ஆசிரியன் அவ்வாறு செய்வதைப் படிப்பவர்கள் விரும்பமாட்டார்கள், ஆசிரியன் எதன் மூலம் வெற்றிபெற நினைத்தானோ அதன் மூலம் தோல்வியையே அடைந்தவனாவான்.

ஒரு இலக்கியத்தில் இவ்விரு வகையான மொழிகளுக்கும் பிற கூறுகளுக்கும் இடையில் தொடர்பு உள்ளது. பாத்திரங்கள், நிகழ்ச்சிகள், காலம், இடம், கருப்பொருள்கள் இவற்றுடன் மொழியும் பாத்திரக் கூற்று என்ற அகநிலையிலும் ஆசிரியர் கூற்று என்ற புற நிலையிலும் தொடர்பு கொள்கிறது. ஆசிரியர் கூற்றுப் பாத்திரங்கள் தம் சூழலில் பேசும் மொழிக்கு மாறி அமைவதும் உண்டு. ஆசிரியன் சூழல் மொழியிலும் அமைவதுண்டு. இவ்விரண்டும் தவிர்த்து வேறு ஒரு மொழி வழக்கில் ஆசிரியர் கூற்றுத் தொடர்பில்லாமல் அமைவதில்லை. இலக்கியக் கூறுகளில் ஏதேனும் ஒன்று மையப்படுத்தப்படும்போது மற்றவை அவற்றின் இணைந்த உறுப்புக்களாகவே இடம்பெறும். குறிப்பிட்ட பாத்திரத்தையோ, இடத்தையோ, நிகழ்ச்சியையோ விளக்க நினைக்கும்போது தொடர்புடைய மொழியையும் சேர்த்துத் தர வேண்டும் என்பது ஒரு பொது நெறியாக இருந்துவருகிறது. மொழி நடத்தையை விளக்குவதற்காகக்கூட பாத்திரங்களும், சூழல்களும் எடுத்துக்கொள்ளப்படுவதுண்டு. புதினம், சிறுகதைகளில் வட்டார வழக்கு, பழமொழியைப் பயன்படுத்திப் பேசுதல், சாடைபேசுதல் முதலானவற்றிற்குச் சான்றுகளாக இருக்க ஏதாவது பாத்திரங்கள் உருவாக்கப்படுவதுண்டு.

ஊக்கக் கூற்றுகள்

சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்ட கருத்துக்களைக் கூறுவதற்காக என்றே உருவாக்கப்பட்ட பல பாத்திரங்கள் உள்ளன. சாரணர் என்ற பாத்திரம் சமணத் தத்துவம், ஊழ்வினை, பற்றறுத்து இருத்தல் முதலான கருத்துக்களைக் கூறுவதற்காகவே படைக்கப்பட்டுள்ளது. மாங்காட்டு மறையோன் என்ற பாத்திரம் கோவலனின் கொடை, வீரச் சிறப்புகளைச் சொல்வதற்காகவே படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பாத்திரங்களைக் கூற்றுப் பாத்திரங்கள் என்றே சொல்லலாம். கதை நிகழ்வுகளில் இவை நேரடியாகப் பங்கேற்பதில்லை. கதை நிகழ்வில் பங்கேற்கும் பாத்திரங்களும் வேறு பாத்திரங்களும் பொதுக்கருத்து பற்றி ஊக்கக் கூற்றுகளை நிகழ்த்துகின்றன. கவுந்தி அடிகள் கண்ண கியைப் புகழ்ந்து உரைப்பதும் வழிப்படுவோர் பாண்டியனைப் புகழ்ந்து உரைப்பதும் என்று வரும் கூற்றுகள் ஊக்கக் கூற்றுகளாகும். இவை பாத்திரங்களின் சிறப்பை மேன்மைப்படுத்துகின்றன. ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை முதலான காதைகளில் வரும் இசைப்பாடல்கள் அவை பதிவு செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே ஆயர்களும் குறவர்களும் பாத்திரங்களாக இணைக்கப்பட்டுள்ளனர். பொதுவாக ஊக்கக் கூற்றுகள் நிகழ்த்தப்படும் போதெல்லாம் ஊக்கப்படும் பாத்திரம் இழப்படைகிறது. கண்ணகியின் அழகு கோவலனால் புகழப்பட்ட பிறகு அவள் அவனாலேயே பிரியப்படுகிறாள். மாங்காட்டு மறையோனால் புகழப்பட்ட பிறகு கோவலன் கொல்லப்படுகிறான். பலராலும் தொடர்ந்து புகழப்படும் பாண்டியன் பிறகு நீதி தவறி உயிர் இழந்து, மதுரை எரிக்கப்படுகிறது. காப்பியப் போக்கில் ஊக்கக் ஊற்றுகளும் இழப்புகளும் முரண்களாக அமைகின்றன.

நீண்ட கூற்றுகள்

காப்பியங்களுக்குரிய ஒரு பொதுவான பண்பு நீண்ட கூற்றுகள் இடம் பெறுவதாகும். நீண்ட கூற்றுகள் இயல்பான உரையாடல் மரபில் அவ்வளவாக இல்லை. நடப்பியலில் இல்லாத ஒன்று இலக்கியத்தில் சிறப்பான, பொதுவான ஒரு மரபாகப் பின்பற்றப்பட்டுள்ளது. அழகியல், அறம், மதக்கருத்து, அரசநீதி என்று பொதுக் கருத்துகளை வெளிப்படுத்தப் பாத்திரங்கள் மிக நீண்ட கூற்றுகளை நிகழ்த்துகின்றன. கடந்தகால வாழ்வை, முற்பிறவியைப் பற்றிய பின்எடுப்புகளும் நீண்ட கூற்றுகளாக அமைகின்றன. பொதுக் கருத்துகளும் முன்கதை நினைவூட்டல்களும் கூறப்படும்போது கேட்பவர்கள் இடையில் கூற்று நிகழ்த்துமாறு எழுதுவது இயல்பாக இருக்கும் என்றாலும் காப்பிய மரபான இலக்கிய ஆக்க

முறையில் தேவையில்லாத இடையீடாகப் பார்க்கப்பட்டுள்ளது. கருத்துத் தெரிவிப்பு மட்டுமே முதன்மை கொடுத்துப் பார்க்கப்பட்டுள்ளது.

கடந்த கால வாழ்வைப் பின்பு எடுத்துக் கூறும்போது, கடந்த கால வாழ்வில் தொடர்புடைய ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்கள் நிகழ்வுகளில் இடம்பெறுவது தவிர்க்க முடியாதது. அதாவது பாத்திரங்கள் வேறுபல பாத்திரங்களைப் பற்றி நிகழ்த்தும் கூற்றாக அமையும். கொண்டெடுத்து மொழிதல் என்பது ஒருவர் கூற்றை மற்றொருவர் தன்கூற்றில் மேற்கோள் காட்டுவதாகும். இரண்டாமவர் நிகழ்த்தும் கூற்றாகும் அது. இவ்வாறு கொண்டெடுத்து மொழிதல் என்பது நான்காவதாக ஒருவரால் நிகழ்த்தப்படுவது சிலப்பதிகாரத்தில் உள்ளது. இப்பாத்திரங்கள் என்பதே ஆசிரியன் கூற்றுக்குள் கூற்று நிகழ்த்தும் பாத்திரமாகும். உள்பாத்திரங்கள் கூற்று நிகழ்த்துவதாகக் கதை எழுதப்படுவது என்பது ஆசிரியர் கூற்று - பாத்திரக் கூற்று - பாத்திரக் கூற்று என்று மூன்றாவது படிநிலையில் அமையும் கூற்றாகும். சான்றாக, மணிமேகலா தெய்வத்தின் கூற்று மூன்றாவது கூற்றுக்குள் நான்காவது அமையும் கூற்று என்ற படிநிலையில் அமைகிறது. மணிமேகலா தெய்வத்தின் கூற்று வருமாறு:

> இந்திரன் ஏவலின் இங்கு வாழ்வேன்.
> வந்தேன். அஞ்சல் மணிமேகலை. யான்
> உன்பெரும் தானத்து உறுதி ஒழியாது
> துன்பம் நீங்கித் துயர்க்கடல் ஒழிக
>
> (அடைக்கலக் காதை *32-35*)

மாங்காட்டு மறையோன் கோவலனின் அருமை, பெருமைகளைத் தொகுத்துக் கூறும் சூழலில் இந்தக் கூற்றுக் கொண்டெடுத்து மொழியப் படுகிறது. மணிமேகலா தெய்வம் இவ்வாறு தன் முன்னோன் ஒருவனைக் காப்பாற்றும்போது நிகழ்த்தியதாகக் கோவலன் மணிமேகலைக்குப் பெயரிடும் முதுபெண்களிடம் கூறுகிறான். முன்னோன் கூற்று மரபாகப் படிப்படியாக பல தலைமுறைகளைக் கடந்து வந்த, வழிமுறையில் பலரும் நிகழ்த்திய கூற்றுகள் ஆகும். இக்கூற்றுகள் இடையில் தவிர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு கோவலனிடம் வந்துசேரும் கூற்று கோவலனால் மீண்டும் முதுபெண்களிடம் நிகழ்த்தப்படுகிறது. அந்தக் கூற்றை மாங்காட்டு மறையோன் மீண்டும் கொண்டெடுத்து மொழிகிறான். ஒரு ஆசிரியன் பாத்திரத்தின் கூற்றில் கதையை நகர்த்திச் செல்வதற்கான காரணங்களே பாத்திரங்கள் வேறு பாத்திரக் கூற்றுகளின் மூலம் கதையை நிகழ்த்திச் செல்லக் காரணங்களாகின்றன.

பக்கக் கூற்றுகள்

உள்கதைகளில் பல பாத்திரங்களும் இடம்பெறும்போது அவை அனைத்தும் கூற்று நிகழ்த்தும் பாத்திரங்களாக அமைக்கப்படவில்லை. ஏதேனும் ஒரு பாத்திரம் மட்டும் கூற்று நிகழ்த்தும் பாத்திரமாக அமைகிறது. பிற பாத்திரங்களின் கருத்துகள் இலக்கிய ஆசிரியன் கூற்றிலேயே அயல் கூற்றுகளாக வெளிப்படுத்தப்படுகின்றன. பல பாத்திரங்களுக்கும் கூற்று நிகழ்த்தும் வாய்ப்பு தரப்படுமானால் கிளைக்கதை, உள்கதை, உள் கதைக்குள் உள்கதை, ஆசிரியர் கூறும் கதை என்ற கதை அடுக்குகளில் எந்த அடுக்கில் எந்தக் கூற்று நிகழ்த்தப்படுகிறது என்று ஒரு மயக்கம் வந்து விடலாம். இவ்வாறு ஒரு பாத்திரத்தை மட்டும் கூற்று நிகழ்த்த ஆசிரியன் அனுமதிக்கிறான். இவை எல்லாம் ஒரு பக்கக் கூற்றுகள் எனப்படும். பராசரன், நீலி என்ற பாத்திரங்கள் எல்லாம் ஒரு பக்கக் கூற்றுப் பாத்திரங்கள் ஆகும். உள்கதை அமைப்பில் அந்தப் பாத்திரங்களை இலக்கியம் படிப்பவர்களுக்கு நேரில் அறிமுகப்படுத்த வேண்டும் என்பது ஆசிரியன் கருத்து ஆகும்.

ஒரு கதை இலக்கியம் எந்த அளவு பாத்திரங்களின் கூற்றுகளைப் படிப்பவர்களுக்கு அப்படியே நேரில் அறிமுகப்படுத்துகிறதோ அந்த அளவு அது நடப்பியல் தன்மை கொண்டதாக அமையும். உள் கதைகளில் மட்டுமல்லாது ஆசிரியர் கூறிச்செல்லும் கதைப்போக்கிலும் ஒரு பக்கக் கூற்றுக்கள் உள்ளன. மாதவியும், கோவலனும் வசந்தமாலையிடம் நிகழ்த்தும் கூற்றுகள் கதையில் வெளிப்படுத்தப்படுகின்றன. வசந்தமாலை மாதவியிடமும், கோவலனிடமும் நிகழ்த்தியிருக்க வேண்டிய கூற்றுகள் முதல் தூதின்போது உரையாடலில் வெளிப்படுத்தப்படவில்லை. வசந்தமாலை துணைப்பாத்திரம் என்ற சிறப்பின்மை கருதி அவளுக்குக் கூற்று நிகழ்த்தும் உரிமை இலக்கியத்தில் வழங்கப்படவில்லை. அல்லது கதையின் அந்த இடத்தில் அந்தப் பாத்திரத்திற்குக் கூற்று நிகழ்த்தும் செயலைக் கொடுக்காமல் கதையை நகர்த்தமுடிந்திருக்கிறது.

கூற்றுத் தாவல் முறையில் இடையில் வரவேண்டிய பல கூற்றுகளைத் தவிர்த்து விட்டு கதையை நகர்த்திச் செல்வதன் நோக்கம் சுருக்கமாகவும் விரைவாகவும் கதை கூறவேண்டும் என்பதாகும். இவ்வாறு செல்லும் போது அடுத்தடுத்து ஒரே பாத்திரம் கூற்று நிகழ்த்துவதாக ஆசிரியன் கதையமைத்தலும் நிகழ்கிறது. பொற்கொல்லன் என்ற பாத்திரம் அடுத்தடுத்துத் தொடர்ந்து நான்கு கூற்றுகளை நிகழ்த்துகிறான். இடையில் வேறு பாத்திரங்களின் கூற்றுகள் அவனிடம் நிகழ்த்தியிருக்கப்பட வேண்டியன தவிர்க்கப்பட்டுள்ளன. பொற்கொல்லனின் அந்தச் சூழலின் முக்கியத்துவம் கருதி அவனுக்கு நான்கு கூற்றுகள் அடுத்தடுத்து

வழங்கப்பட்டுள்ளன. வேறு பாத்திரங்களுக்கு தொடர்ந்து நான்கு கூற்றுகள் வழங்கப்படவில்லை. ஒரு பாத்திரம் மற்றவர் கருத்தை மறுத்து மீண்டும் மீண்டும் கூற்றை நிகழத்தும்போது அந்தக் கருத்து வலுவடையதாகிறது. பொற்கொல்லனிடம் அரசுக் காவலர்கள் என்ன கூறினார்கள் என்பது பொருட்படுத்தப்படாமல் விடப்பட்டிருக்கிறது. இலக்கியத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மொழிச் சிக்கனம் கருதி இந்த எதிர்க்கூற்றுகள் விடப்பட்டன எனலாம்.

ஒரு உரையாடலில் குறைந்தது இருவர் இருக்க வேண்டும். பத்துப்பேர்கூட ஒரு உரையாடலில் கூற்று நிகழ்த்துபவர்களாக இருக்கலாம். அவ்வாறு இருக்கும்போது மூன்று பாத்திரங்கள் ஒரே நேரத்தில் பேசிக் கொண்டதாக எங்கும் சிலப்பதிகாரத்தில் உரையாடல் அமைக்கப்படவில்லை. சான்றாக வம்பப்பரத்தை, வறுமொழியாளன் கவுந்தி, கோவலன் ஆகியோரது கூற்றுகள் அடுத்தடுத்த அமையும் கூற்றுகளாக இருந்தாலும் அவை இருவர்க்கு இடையிலான உரையாடல் என்ற முறையிலேயே அமைந்துள்ளன. நாடுகாண் காதையில் *(219-245)* இந்த உரையாடல் இடம்பெறுகிறது.

வம்பப்பரத்தை, வறுமொழியாளன் : (காமனும் தேவியும் போலும் ஈங்கு இவர் ஆர் எனக் கேட்டு அறிவோம்) நோற்று உணல்யாக்கை நொசி தவத்தீர் உடன் ஆற்று வழிப்பட்டோர் யார்?

கவுந்தி: என் மக்கள் காணீர், மானிடயாக்கையர் பக்கம் நீங்குமின், பரிபுலம்பினர்.

வம்பப்பரத்தை, வறுமொழியாளன் : உடன் வயிற்றோர் ஒருங்குடன் வாழ்க்கை கடவதும் உண்டோ கற்றறிந்தீர்

கவுந்தி : (எள்ளுநர் போலும் என் பூங்கோதையை) முள்ளுடைக் காட்டின் முதுநரி ஆக

கோவலன், கண்ணகி : நெறியின் நீங்கியோர் நீர் அல கூறினும் அறியாமை என்று அறியல் வேண்டும். செய்தவத்தீர்! நும் திருமுன் பிழைத்தோர்க்கு உய்திக் காலம் உரையீரோ

கவுந்தி : அறியாமையின் இழிபிறப்பு உற்றோர் ...... உழந்தபின் முன்னை உருவம் பெருக ஈங்கு.

ஒரு நேரத்தில் இரண்டு பேர்க்கு இடையில் அமையும் உரையாடல் என்ற அமைப்பிலிருந்து காலத் தொடர்ச்சியின் காரணமாக இவை பிறழவில்லை. இவ்வாறு உரையாடல்கள் தீவிரமடையும் சூழலில்

தனிமனித வாழ்வியல் அனுபவங்கள் மிகுதியாக உள்ளன. மிக நீண்ட கூற்றுகள் சமூகத்தின் மொத்தக் கருத்தியலின் வெளிப்படாக அமைந்து விடுகின்றன. கண்ணகியின் அழகு பற்றிய கோவலனின் மிக நீண்ட கூற்றுப் பெண்களின் அழகு பற்றிய பொதுக்கருத்து ஆகும். செல்ல வேண்டிய வழி பற்றிய கவுந்தியின் நீண்ட கூற்று வழி நடப்பவர் பின்பற்ற வேண்டிய சமண மதத்தின் பொது அறமாகும். தனி உணர்வு, பொது உணர்வு என்ற முரண்பாடு குறுகிய கூற்றுகளைக் கொண்ட உரையாடல்களுக்கும் நீண்ட கூற்றுகளைக் கொண்ட உரையாடலற்ற இலக்கியம் எழுதிச் செல்லும் முறைக்கும் இடையில் முரண்பாடாக அமைகிறது.

ஆசிரியர் கூற்று, பாத்திரக் கூற்றுகளுக்கு இடையிலான கருத்து ஊடாட்டம் சிலப்பதிகாரக் கதை முழுவது நிரம்பி உள்ளது. “பதியெழு அறியாப் பழங்குடி கெழீஇய” என்று புகார் நகரம் மங்கல வாழ்த்துப் பாடலில் அறிமுகமாகிறது. மாங்காட்டு மறையோன் அடைக்கலக் காதையில் கோவலனிடம் வளமான செல்வக் குடும்பத்தைச் சேர்ந்த அவன் புகார் நகரைவிட்டு நீங்கியதற்கான காரணத்தைக் கேட்டு வினவுகிறான். மங்கல வாழ்த்துப் பாடலில் “காதலர்ப் பிரியாமல் கவவுக் கை நெகிழாமல்” வாழ கண்ணகி வாழ்த்தப்படுகிறாள். கானல் வரியில் ஆசிரியர் கூற்று மூலம் மாதவியுடன் கவவுக்கை நெகிழ்த்தனன் என்று கோவலன் கூறப்படுகிறான். மதுரைக்கு நுழையும் போது எயில் கொடி அசைவது கோவலன் கண்ணகியை வரவேண்டாம் என்று சொல்வது போல இருக்கிறது என்று ஆசிரியர் கூற்றின் மூலம் வெளிப்படுகிறது. இவை முரண் அணி என்றும் தற்குறிப்பேற்ற அணி என்றும் சொல்லப் படுகின்றன. இவ்வாறு கதையின் பின் நிகழ்வுகள் முன்பே கூறப்படுவது இலக்கிய அமைப்பில் உத்திகளாகக் கூறப்படுகிறது. ஆனால் இவற்றின் நோக்கம் ஊழ்வினை, விதிபற்றிய கருத்துக்களை வலியுறுத்துவது என்றுதான் கொள்ள வேண்டியுள்ளது.

முன்னைய இலக்கியக் கருத்துகளை எடுத்தாளுதல்

ஒரு இலக்கியம் என்பது கடந்த கால இலக்கியக் கருத்துக் கொண்டு அமைகிறது. பொதுவான கருத்துகளைச் சமூகத்திலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதும் ஒரு மரபாகும். சான்றுகளாக பழமொழி, புறநானூறிலிருந்து எடுத்தாளப்பட்ட கருத்துக்கள் வருமாறு:

1. முற்பகல் செய்தால் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் கண்குறூஉம் பெற்றியகாண் (வஞ்சினமாலை 3,4)

2. பார்ப்போர் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்
மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டு (வஞ்சினமாலை 53,54)

3. குடிபழி தூற்றும் கோலனும் அல்லன் (கட்டுரைக்காதை 34)

சங்க அக இலக்கிய, புற இலக்கிய மரபுகளை அடிப்படையாகக் கொண்ட கூற்றுகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன. வேட்டுவ வரியில் வெட்சித்திணைக் கூற்றுகளும் குன்றக் குரவையில் குறிஞ்சித்திணைக் கூற்றுகளும் ஆய்ச்சியர் குரவையில் முல்லைக் கலிக் கருத்துகளும் கானல் வரியில் நெய்தல் திணை, குறிஞ்சித்திணை, மருதத்திணைக் கருத்துகளும் இடம் பெறுகின்றன. ஆசிரியர் கூற்றாக அல்லாமல் பாத்திரக் கூற்றுகளாக அவை இடம் பெறுகின்றன.

இயற்கை பேசுவதாக அமைதல்

காப்பியத்திற்குரிய இலக்கணப்படி கூறாதன, கேளாதன கூற்று நிகழ்வுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. அந்தி மாலை சிறப்புச் செய்காதை(4)யில் நிலமகள் கூற்றாக,

"கதிரவனைக் காணேன். நிலவு யாண்டுளன்கொல்"

என்ற அடி இடம்பெறுகிறது. பூமி கூற்று நிகழ்த்தக் கூடியது அன்று. கணவன் கள்வனா என்பதைக் கதிரவனிடம் கேட்கிறாள் கண்ணகி.

கண்ணகி: பாய்திரை வேலிப் படுபொருள் நீ அறிதி.
காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்.
குரல் : கள்வனோ அல்லன்... கருங்கயல்கண் மாதராய்!
ஒள்ளெரி உண்ணும் இவ் ஊர்.

வானிலிருந்து குரல்மூலம் அவளுக்குப் பதில் கிடைக்கிறது. நிலவைச் சாட்சிக்கு வைத்துச் சாகிறவர்களும் அதனால் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுகிறவர்களும் நாட்டுப்புறக் கதைகளில் இருக்கிறார்கள். குருந்தொகையில் ஒரு தலைவி ஒரு குருகைச் சாட்சி யாகக் கொள்கிறாள்.

யாருமில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யான் எவன் செய்கோ
....
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே (குறுந்தொகை.25)

எல்லாம் அறிந்த கதிரவன், நிலவு, எதுவும் அறியாத குருகு என்ற இந்த முரண் கவனத்தில் கொள்ளத்தக்கது. சங்க இலக்கியத் தலைவிக்கு பதில் கிடைக்க வாய்ப்புச் சிறிதும் இல்லை. கண்ணகிக்கு முழு வாய்ப்பும் உள்ளது. எல்லாம் அறிந்தவை பஞ்ச பூதங்கள், கதிரவன், நிலவு முதலான இயற்கைக் கடவுளர்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்தக் கூற்றுகள் நிகழ்த்தப்படுகின்றன. நடக்கப் போகும் நிகழ்வுகள் நிமித்தம் மூலம் இயற்கையிலிருந்து வெளிப்படும் என்பதும் ஒரு பொது நம்பிக்கையாக இருந்துவருகிறது. சிலம்பில் கூற்றுகளையும், உரையாடல்களையும் பற்றி முனைவர் பட்ட ஆய்வு செய்யலாம்.

துணைநூல்

1. சரவணன், ப., சிலப்பதிகாரம் மூலமும் செவ்வுரையும், சந்தியா பதிப்பகம் சென்னை, *2008*.
2. இராகவையங்கார் ரா., குறுந்தொகை விளக்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், *1993*.
3. சாமிநாதையரவர்கள், உ.வே., சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும், தியாகராச விலாச வெளியீடு, சென்னை, *1955*.
4. நடராசன் தி.சு., திறனாய்வுக் கலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, *2003*.

6

தொல்காப்பியம்-சங்க இலக்கியம்: புணரியல் நோக்கு

மொழி புணரியல்பு என்பது செய்யுளில் சொல், தொடர், வாக்கியம் முதலான கூறுகள் பொருண்மை தருவதற்கு ஏற்பத் தொடர்ந்து நிற்கும் நிலைமை என்ற பொருண்மை உடையது. ஒரு செய்யுளில் உள்ள எல்லா மொழிக் கூறுகளும் நிறுத்த சொல்லாகவோ, குறித்து வரு கிளவியாகவோ அவற்றின் துணை உறுப்புகளாகவோ வருகின்றவைகளாகும். செய்யுளின் முதல்சொல், ஈற்றுச்சொல் இரண்டிற்கும் முறையே நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும் இல்லாதிருக்கும். விகாரவகை மொழிபுணரியல்பாலும், இயல்பான சொற்பொருள் மாற்றங்களாலும் அவ்விரு சொற்களும்கூடத் தொடர்மொழியின் இடையில் வரும் சொற்களாக மாறி நின்று புணர்கிறவைகளாக முடியும்.

ஒரு செய்யுளில் அடுத்தடுத்து இடம் பெறும் இரு சொற்கள் இரு வேறு மனிதர்களின் கூற்றுகளாகவும் ஆசிரியர் கூற்றாகவும் பாத்திரக் கூற்றாகவும்கூட அமைந்துவிட வாய்ப்புகள் உள்ளன. ஒரு மனிதரின் கூற்று என்றாலும் இரு வேறு வாக்கியங்களின் இறுதி, முதல் சொல்லாகக் கூட அவை அமைந்துவிடுகின்றன. மொழிக் கூறுகளின் புணர்ச்சி என்பதைப் பேரலகுகளின் தொடர்ச்சி என்பதிலிருந்து சிற்றலகுகளின் தொடர்ச்சி வரை வரிசைப்படுத்திக் காணமுடியும்.

தொல்காப்பியத்தில் பகுபத உறுப்புகளின் புணர்ச்சி இலக்கணம் பேசப்படவில்லை. நன்னூலில் அது பேசப்பட்டுள்ளது. அது வட மொழி இலக்கணத் தாக்கத்தால் பேசப்பட்டுள்ளது என்ற கருத்து முன் வைக்கப்படுகிறது தொல்காப்பியம் முதன்மையான உறுப்பின் துணை உறுப்புகளாகப் பிற பகுபத உறுப்புகளைக் கருதிக்கொண்டுள்ளது. பெயர், வினை என்ற இரு இலக்கணக் கூறுகளின் புணர்ச்சிகளாகப்

புணரியல்களைத் தொல்காப்பியம் விளக்குகிறது. புணரியலில் சாரியைப் புணர்ச்சியும் உருபியலில் வேற்றுமை உருபுப் புணர்ச்சியும் மையமாக அமைந்துள்ளன. இவை இரண்டும் பெயர்நிலை மொழியாக வரவந்த துணைக் கூறுகளாகும்.

ஒரு முதன்மையான இலக்கணக்கூறு நிலைமொழியாக இருக்கும் போது, அதனுடன் துணை உறுப்புகள் சேர்ந்து வந்தால் புணர்ச்சி விதிகள் ஒரு மாதிரியாகவும் சேர்ந்து வரவில்லை என்றால் புணர்ச்சி விதிகள் வேறு மாதிரியாகவும் அமைகின்றன. இவ்வாறான மாற்றம் இருப்பதைத் தொல்காப்பியம் தெளிவாக வேறுபடுத்தி அறிந்திருந்தபோதும், பல இடங்களில் விளக்கியபோதும் ஒட்டுகளுக்கு உரிய முக்கியத்துவத்தைத் தொல்காப்பியம் புணர்ச்சி இலக்கணத்தில் வழங்கவில்லை. நிறுத்த சொல்லாக இருக்கும்போது ஈறாகவோ, விகுதியாகவோ வைத்துப் பார்க்கப்படும் ஒட்டுகள் குறித்துவரு கிளவியாக இருக்கும்போது புணர்ச்சி இலக்கணம் கூறாமல் விட்டுவிடப்படுகின்றன. குறித்துவரு கிளவியின் வேர்ச் சொல்லின் இலக்கணக் கூறு பெயர், வினை என்றிருப்பது போதுமானதாகிவிடுகிறது.

ஆல், ஐ வேற்றுமைகளின் புணர்ச்சிகள் சிறப்பாகத் தனித்து விளக்கப்படும்போது, அந்த உருபுகள், இடையில் மறைந்து வந்தாலும், வெளிப்பட்டு வந்தாலும் இரு சொற்களுக்கு இடையில் நிகழும் புணர்ச்சிகள் வேற்றுமைப் புணர்ச்சிகள் என்று கொள்ளப்படுகின்றன. உருபியலில் வருமொழிகளாக வேற்றுமை உருபுகளே உள்ளன. உருபியலை அடிப்படையாக வைத்துப் புணர்ச்சியை வகைப்படுத்த வேண்டுமானால் உருபு புணர்ச்சி, உருபு அல்லாத புணர்ச்சி என்றுதான் வகைப்படுத்த வேண்டியிருக்கும். வேற்றுமைப்புணர்ச்சி என்பதை வேற்றுமை உருபு இடையில் மறைந்து வர நிகழும் புணர்ச்சி என்று வரையறுத்துக் கொள்ளலாம். உருபு அல்லாத புணர்ச்சியின் மற்றொரு வகை அல்வழிப் புணர்ச்சியாகும். ஏ, ஓ என்ற இடைச் சொற்கள் நிலைமொழி ஈறுகளாக நின்று அவை வருமொழியோடு கொள்ளும் புணர்ச்சியும் தொல்காப்பியத்தில் பேசப்பட்டுள்ளது. மகர ஈறு, உம் ஈறு என்ற இரு வகை ஈறுகளுக்கும் ஒரே வகைப் புணர்ச்சி என்று வரையறுக்க முடியாது. வேறுபட்ட வேற்றுமை ஈறு, கு ஈறு, கு வேற்றுமை ஈறு என்று ஈறுகள் வேறுபடுவதைக் கருத்தில் கொண்டு புணர்ச்சி இலக்கணத்தையும் வேறுபடுத்தி விளக்கியிருக்க வேண்டும்.

மரம் + சட்டம் = மரச்சட்டம்
மரமும் + சட்டமும் = மரமுஞ் சட்டமும்

இவ்வாறாக இடைச் சொற்களையும் நிலைமொழி ஈறுகளாகக் கொண்டு விளக்கினால் தரவுகள் விரிவடையும். புணர்ச்சி இலக்கணமும் மிக விரிவாகப் போகும். அதைத் தவிர்க்கவே தொல்காப்பியம் இடைச் சொல் சேராத பெயர்ச் சொற்களை நிலைமொழிகளாக எடுத்துக் கொண்டு புணர்ச்சிகளை விளக்கியுள்ளது. தொல்காப்பியம் மற்றும் உரைகளின் கருத்துப்படி வேற்றுமைப் புணர்ச்சியை

மரத்தை
மரப்பெட்டி
மரம் வெட்டு
மரத்தை வெட்டு

என்ற நான்கு வேறு வகையான தொடர்களாகக் கொள்ள வேண்டியுள்ளது. வேற்றுமைத் தொடர் என்று ஒரு சொல்லால் மேற்கண்ட நான்கு தொடர்மொழிகளையும் உரைகளின் கருத்துப்படி கூறவேண்டியுள்ளது. அது பொருத்தமாகப் படவில்லை.

வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என்ற வகைப்பாடு தமிழ்மொழி அமைப்பின் எல்லாப் புணர்ச்சித் திரிபுகளையும் விளக்கப் போதுமானதாக இல்லை என்று ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடுகிறார். வேற்றுமைப் புணர்ச்சிக்கும் அல்வழிப் புணர்ச்சிக்கும் பொதுவான புணர்ச்சி, இரண்டும் அல்லாத புணர்ச்சி என்று மேலும் இரு வகைகளை இலக்கணக் கொத்து தருகிறது. வேற்றுமைப் புணர்ச்சியில் நான்கு தொடர்மொழி அமைப்புகள் பேசப்படுகின்றன. எழுவாய், விளி வேற்றுமைத் தொடர்களால் உருவாகும் தொடர்மொழிகளை அல்வழித் தொடர் என்ற பிரிவில் வைக்கின்றனர்.

அல்வழித் தொடர் என்பதற்கு அளிக்கப்பட்டு வரும் விளக்கங்கள் தொல்காப்பியத்திற்கு ஏற்றவைகளாக எந்த அளவு உள்ளன என்பது ஆராயப்பட வேண்டியுள்ளது. கீழ்க்காணும்

1. எழுவாய் - பயனிலை
2. விளி - ஏவல்
3. முற்று - முற்று
4. வினையெச்சம் - வினை
5. இடைச்சொல் - பெயர்/வினை
6. பயனிலை - எழுவாய்
7. ஏவல் - விளி
8. பெயரெச்சம் - பெயர்
9. தொகைமொழி - பெயர்வினை
10. உரிச்சொல் - பெயர்/வனை

என்ற தொடர்மொழிப் புணர்மொழிகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. தொல்காப்பியம் விளக்கியுள்ள புணர்ச்சிகளில் பெரும்பாலும் புணரும் இரு சொற்களுமான இலக்கணக் கூறுகள் முழுதாக விளக்கிக் கூறப்

படவில்லை. பெயர் என்றோ, வினையென்றோ நிலைமொழியோ, வருமொழியோ சிறப்பித்துக் கூறப்படவில்லை என்றால் அது பெயர், வினை என்ற இரண்டிற்கும் பொதுவான புணர்ச்சியாகும். உயிர் ஈறு என்றோ, மெய் ஈறு என்றோ பிரித்துக் கூறப்படவில்லை என்றால் அவ்விரு ஈறுகளுக்கும் பொதுவான புணர்ச்சி என்பது தொல்காப்பியத்தின் கருத்தாகும்.

நிலைமொழி ஈறு வருமொழியில் வினையுடன் புணர்தல், நிலைமொழியின் பெயர்ச்சொல் வருமொழி முதல் எழுத்துடன் புணர்தல் என்று வேறுபடலாம். ஒலியன், உருபன், அசை, சொல், தொடர், பொருண்மை உறவு, பேச்சு- செய்யுள் வேறுபாடு என்று நிலைமொழி, வருமொழிகள் வேறுபட்ட மொழிக் கூறுகளுடன் புணரலாம். அதாவது நிலைமொழி, வருமொழிகளுள் ஒன்று ஒலியனாகவும் மற்றொன்று சொல்லாகவோ, தொடராகவோகூட இருக்கலாம்.

உரையாசிரியர்களால் பட்டியலிடப்பட்ட அல்வழிப் புணர்ச்சி களின்படிதான் தொல்காப்பியம் மற்றும் சங்க நூல்களின் புணர்ச்சி விதிகளை விளக்க வேண்டுமானால் பெரும்பாலான புணர்ச்சி விதிகளை விளக்க முடியாது போகும். வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என்ற இரண்டிலும் நிலைமொழியாகவும் வருமொழியாகவும் வரும் சொற்கள் முடிக்கப்படும் சொல்லாகவும் முடிக்கும் சொல்லாகவும் உள்ளன. சங்க இலக்கியத் தொடர்மொழி அமைப்பு எல்லாம் இவ்விரு சொற்களின் தொகுதியாகப் பெரும்பாலும் இல்லை. எழுவாய் இருக்குமானால் அதை அடுத்து முற்று வந்துவிட வேண்டும். இடையில் வேற்றுமை ஏற்ற பெயர்கள் வந்துவிடக் கூடாது. பெயரெச்சம் இருக்குமானால் அடுத்து வேறு பெயரடைகள் வந்துவிடக் கூடாது. கீழ்க்காணும் சான்றுகளில்

ராமன் காட்டுக்குச் சீதையோடு போனான்.
சென்ற பெரிய பசுங்காடு

ராமன் - காட்டுக்கு, காட்டுக்கு - சீதையோடு, சென்ற - பெரிய, பெரிய - பசும் என்ற இரு சொற்களுக்கு இடையில் புணர்ச்சிகள் நிகழ்ந் துள்ளன. இவ்வாறான புணர்ச்சிகளை உரையாசிரியர்கள் வேற்றுமைப் புணர்ச்சியிலும் அல்வழிப் புணர்ச்சியிலும் வைக்கவில்லை. இவற்றை தொல்காப்பியம் அல்வழிப் புணர்ச்சி என்றே கருதியுள்ளது. உரைகளின் கருத்துப்படி ராமன்-போனான் என்ற ஒரு புணர்ச்சி மட்டும் புணர்ச்சி இலக்கணத்திற்குரியதாகக் கொள்ளவேண்டும். காட்டுக்கு-போனான், சீதையோடு-போனான் என்று இடையில் உருபு வெளிப்பட வரும் புணர்ச்சிகளைப் புணர்ச்சி இலக்கணத்தில் கொள்ளமுடியாது.

செய என்ற வினையெச்ச வாய்ப்பாட்டை அடுத்து ஒற்று மிகும் என்று தொல்காப்பியம் கூறுகிறது. செய என்ற வினையெச்சத்தை அடுத்து வினைமுற்று வந்தாக வேண்டும் என்று தொல்காப்பியம் கூறவில்லை.

முனை முருங்கத் தலைச் சென்றவர் (புறம் .16)
பசுந்தடி தடுப்பப் பகைப்புலம் மரீஇய (புறம். 61)
பிணன் அழுங்கக் கழன் உழக்கி (புறம். 98)

செய என்ற வாய்ப்பாட்டை அடுத்துப் பெயரடை வேற்றுமைப் பொருண்மையில் வரும். வேறு பெயர், மற்றொரு துணை வாக்கியத்தின் எழுவாய் என்ற வேறு இலக்கியச் சொற்களின் வருகைக்கு ஏற்பவும் செய என்ற வாய்ப்பாடு புணர்கிறது. காடு சென்றான், காட்டுக்குச் சென்றான் என்ற புணர்ச்சிச் சொற்களையே தொல்காப்பியம் பேசிய தாக உரையாசிரியர்கள் எடுத்துக் கொள்கின்றனர். எழுவாய்ச்சொல் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு ஏற்ற பெயர்களுடன் புணர்வதையும் ஒரு வினையெச்சம் அடுத்து வரும் வேறு துணை வாக்கியத்தின் பெயர்களுடன், ஒரு பெயரடை தன்னை அடுத்து வரும் பெயரடைகளுடன் புணரும் புணர்ச்சியை அல்வழிப் புணர்ச்சி என்றே கொள்ள வேண்டும். தொல்காப்பியம் அவ்வாறு கருதியதாகவே கொள்ள வேண்டும்.

செய்யுள், வழக்கு இரண்டுக்கும் பொது என்றும் புணர்ச்சித் தொல்காப்பியத்தில் வகைப்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. வழக்கு என்பது உயர் தகுதி வழக்காகும். ஆதன், தந்தை என்ற இரு சொற்களும் புணர்ந்தால் ஆந்தை என்ற சொல் கிடைக்கும். இது போன்ற மரூஉப் புணர்ச்சிகள் சங்க இலக்கியத்தில் இல்லை. யாப்புக்காகவும் இசைக் காகவும் வரும் சொல் வேறுபாடுகள் செய்யுளுக்குரிய புணர்ச்சியாகக் கொள்ளத்தக்கனவாகின்றன. பொன், தென் என்ற சொற்கள் ஓரசைச் சொற்களாகும். பொலம் என்ற சொல் பொன் என்ற சொல்லின் மாற்று வடிவமாகச் சங்க இலக்கியத்தில் பல இடங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளது. பொன் என்ற சொல் ஒளி பொருந்திய என்ற பொருண்மையில் இடம் பெறுகிறது. பொன் தேர், பொன்பூந்தும்பை முதலான சான்றுகளில் அது தங்கம் என்ற பொருண்மையில் வரவில்லை. பொன்னாடை என்ற சொல்லில் தங்கம் இல்லை. பொலம் என்ற சொல்லில் உள்ளது அம் சாரியை ஆகும். பொன் - பொ - பொல - பொலம் என்ற சொல் திரிவதாகத் தொல்காப்பியம் பிறழ்வாக விளக்கியுள்ளது. தென்னம் என்ற சொல் ஈரசைச் சொல்லாகும். தெற்கு என்ற பெயர்ப் பொருண்மையில் அச்சொல் சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தென்னம் பொருப்ப (புறம். *33-7*)
தென்னங் குமரி

யாப்புக்காக அம் என்ற விகுதி தென் உடன் சேர்க்கப்பட்டுள்ளது. தெற்கு என்ற சொல்லிற்குத் தென்னம் என்ற சொல் மாற்று வடிவமாகக் கொள்ளப்படவில்லை. அம் திரிவொட்டு என்று கொண்டால் தென்னம் என்பது மாற்று வடிவம் என்றே கொள்ளலாம். ன்ம், ண்ம் என்ற மகரக் குறுக்கங்கள் செய்யுளில் வரும் என்று தொல்காப்பியம் கூறியுள்ள போதிலும் அது பேச்சு வழக்கிற்குரியது என்று விளக்கலாம். சிலம்புள கொண்ம் - என்ற தொடர் பேச்சுதான். போன்ம், மருண்ம் என்ற சொற்கள் மாற்று வடிவங்கள் ஆகும். சொல்லின் மாற்று வடிவங்களைத் தொல்காப்பியம் புணர்ச்சித் திரிபுகளாக விளக்கியுள்ளது என்கிறார் செ. வை. சண்முகம்.

தெனாஅது என்ற சொல் தெற்கு என்ற சொல்லின் மாற்று வடிவமாக அது என்ற உருபீற்று வடிவத்திற்கும் மாற்றுவடிவமாகப் பொதுவாக உள்ளது. அது விகுதி ஏற்ற பெயரடி வடிவங்கள் முற்றுச் சொல், வினையாலணையும் பெயர், பெயரடை என்ற வேறுபட்ட இலக்கண வடிவில் வருகின்றன. கீழ்க்காணும்

பாணனது யாழே (ஐங். *410-5*)
பாணரது கரும்பு (புறம். *264-7*)

என்ற தொடர்களில் உள்ள பாணனது, பாணரது என்ற சொல்வடிவங் களை அது உருபேற்ற பெயர்கள் என்று கொள்வது ஒருமுறை. பெயரடை வடிவம் என்று கொண்டால் அது என்ற வேற்றுமை உருபு தமிழில் இல்லை என்றாகும். தெனாஅது என்ற சொல் வடிவம் தெற்கு என்ற சொல்லின் மாற்று வடிவமாகத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட வில்லை. வடக்கு, கிழக்கு, குடக்கு ஆகிய திசைப்பெயர்களும்

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும் (புறம். *6*)

என்று அடிச்சொற்களாக நின்று அது உருபேற்று வந்துள்ளன. வடாஅது, தெனாஅது, குணாஅது, குடாஅது என்ற சொற்கள் பெயரடை வடிவங்களாக வந்துள்ளன. சங்க இலக்கியச் சொல்லடைவு களில் (பெ. மாதையன் *2007*, Thomas Lehman and Thomas Maltan, *1993*) பெயர்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. வினையாலணையும் பெயர்களும் பெயரடைகளாக வரலாம். வட- அது என்று பிரித்துப்

பெயரடி பெயரடையாகவும் அது உருபேற்று வந்துள்ளதாகவும் கொள்ள வேண்டும். பெயரடி- விகுதி என்று கொண்டால் அது என்ற வேற்றுமையை வேற்றுமை இலக்கணத்திலிருந்து நீக்க வேண்டும்.

பிறழ்பிரிப்பு முறைகளால் புணர்ச்சி இலக்கணம் விரிவடைந்துள்ளது. ஒன் சாரியை என்பதை அளபெடையுடன் தொடர்புபடுத்தும்போது நீக்கப்பட வேண்டியதாகிறது. கோ-ஒன்-ஐ என்று ஒன் சாரியை வரும் என்று தொல்காப்பியம் விளக்குகிறது. கோ, கோன் என்ற இரண்டையும் மாற்று வடிவங்களாகக் கொண்டு கோஒன் என்பதை அளபெடையாக விளக்கிவிடலாம். ஆ, ஆன் என்றும் ஊ, ஊன் என்றும் மாற்று வடிவங்கள் தொல்காப்பியத்தில் பேசப்பட்டுள்ளன. அக்குச் சாரியையை அ என்ற எழுத்துப்பேறுடன் இணைத்து விளக்க முடியும்.

தமிழ் + கூத்து, தமிழ் - அ - கூத்து
மேல் + தெரு, மேல்-அ- தெரு

புணர்ச்சியில் எழுத்துப்பேறு, உடம்படுமெய், சாரியை, அளபெடை முதலானவை தோன்றுகின்றன. பொருண்மை அற்றவை அவை. அத்து, இக்கு, அன், அம் என்று அவை சொல் வடிவங்களாகத் தமிழ் இலக்கண மரபில் ஆக்கப்பட்டுவிட்டன.

ஒரு சொல் தனது பொருண்மை மாறுபாடுகளுக்கு ஏற்ப வேறு வேறு புணர்ச்சி விதிகளைப் பெறும் என்பது சிறுபான்மையாகும். சிறப்புக் கருதி அவ்வாறான புணர்ச்சிகள் தொல்காப்பியத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. எல்லாம் என்ற சொல், தன்மை, முன்னிலை, படர்கை உயர்திணை, படர்க்கை அஃறிணை என்று வேறுபட்ட இலக்கணப் பொருண்மைகளில் வரும்போது

எல்லா - நம் - ஐ - உம் (தன்மை)
எல் - ஈர் - நும் - ஐ- உம் (முன்னிலை)
எல் - ஆர் - தம் - ஐ - உம் (உயர்திணை)
எல்லாம் - வற்று - ஐ - உம் (அஃறிணை)

என்று வேறுபட்ட தொடர்மொழிக் கூறுகளைப் பெற்று வருவதாக விளக்கப்படுகிறது.

ஒரு சொல்லின் வேறு வேறு பொருண்மைகளைத் தொடர்மொழியில் உருவாக்கப்படும் பிற சொற்களாவது இரண்டாவது நிலையில் வேறு படுத்துவதாக இருக்க வேண்டும் என்பது இலக்கணம் எழுதுகிறவரின் நோக்கமாகிறது. மொழியைப் பேசுகிறவரின் நோக்கம் ஒவ்வொரு சொல்லும் வேறு வேறு பொருண்மைகளை உணர்த்துவனவாக

உருவாக்கப்பட வேண்டும் என்பதாகும். அதை இலக்கண நூலும் கருத்தில் எடுத்துக்கொண்டு விதிக்கிறது.

ஒரு சொல் வடிவத்தில் பெயர், வினை என்ற வேறுபட்ட செயல்பாடுகளின் புணர்ச்சிகள் தொல்காப்பியத்தில் பேசப்பட்டுள்ளன. ஒரு சொல்லை எடுத்துக் கொண்டு முழுமையாக அதன் செயல்பாடு களைப் புணர்ச்சி இலக்கண அடிப்படையில் பார்க்க வேண்டி யுள்ளது. ஐ என்ற ஒரு சொல் வடிவம் பல பொருண்மை தரும் பெயர், வியப்பு இடைச்சொல், வேற்றுமை உருபு, எழுத்துப்பேறு, ஈறு, பெயரடி, முன்னிலை விகுதி என்று பல இலக்கணக் கூறுகளாக வரத்தக்கது. நிலைமொழி, வருமொழி, அவற்றின் துணை உறுப்புகள் என்ற புணர்ச்சி அலகுகளின் நிலையிலும் வேறுபட வைத்து அது விளக்கப்பட வேண்டியுள்ளதாகிறது. சங்க இலக்கியத்திற்கான புணர்ச்சி இலக்கணத்தைத் தனியே எழுதவேண்டும். அது தொல்காப்பியத்திலிருந்து ஒன்றுபடவும் வேறுபடவும் செய்யும்.

நாடுரி என்ற புணர்மொழியாக்கத்தைத் தொல்காப்பியம் குறிப் பிடுகிறது. அவ்வாறான தொடர் சங்க இலக்கியத்தில் இல்லை. நாழி என்ற சொல்லில் உள்ள ழகரம் டகரமாகத் திரிந்துள்ளது. தமிழில் இந்தத் திரிபு இயல்பில்லை. தெலுங்கு மொழியில் இயல்பானது. உந்து என்ற சொல் புறநானூற்றில் வந்துள்ளது. தொல்காப்பியம் உம்மின் திரிபு உந்து என்கிறது. தெலுங்கில் இருத்தல் என்ற பொருண்மையில் அது வருகிறது. திசைப்பெயர்கள் புணரும்போது இடையில் ஏ வரும் என்கிறது தொல்காப்பியம். மேற்கே கிழக்கு, கிழக்கே மேற்கு என்று உரைகள் தரும் எடுத்துக்காட்டுகள் இலக்கியம், வழக்கு என்ற இரண்டிலும் இருப்பதாகத் தெரியவில்லை. அவற்றின் சூழலும் புரியவில்லை. கிழக்கே கோட்டை, மேற்கே கோட்டை என்ற தொடர்கள் திருவனந்தபுரத்தில் இடப்பெயர்களாக இன்றும் வழங்கி வருகின்றன. திசைப்பெயரை அடுத்து ஏ வருகின்ற மரபு மலையாளத்தில் இன்றும் பாதுகாக்கப்படுகிறது. பன்னிரண்டு என்ற தொடர்மொழி ஆக்கப் புணர்ச்சித் தொல்காப்பியத்தில் பிறழ்வாக விளக்கப்பட்டுள்ளது. பத்து - இரண்டு, ப - ன் - இரண்டு, பன்னிரண்டு என்று அந்தப் புணர்ச்சி களைத் தொல்காப்பியம் விளக்கியுள்ளது. மலையாளத்தில் பந்துரண்டு என்று 12 என்ற எண்ணுப் பெயர் சொல்லப்படுகிறது. பத்து - இரண்டு, பத் - இரண்டு, பந் - இரண்டு, பன் - இரண்டு, பன்னிரண்டு என்று மலையாள முறைப்படி விளக்குவது பொருத்தமானது. தொல்காப்பியப் புணர்ச்சி இலக்கணத்தைப் பிற திராவிட மொழிகளைக் கொண்டு விளக்க வேண்டிய தேவை இருந்து வருகிறது.

எண்ணுப் பெயர்ப் புணர்ச்சியில் **9, 90, 900,** என்ற எண்களின் பெயராக்கப் புணர்ச்சிகள் தொல்காப்பியத்தில் பிறழ்வாக விளக்கப் பட்டுள்ளன. பெருக்கல், கூட்டல் கணக்கின் விடைகளுக்கும் எண்ணுப் பெயர்களின் புணர்ச்சிக்கும் தொடர்பு இல்லை. நான்கு - ஐந்து என்ற இரு சொற்கள் புணர்ந்தால் நாலைந்து, நான்கைந்து என்றுதான் தொடர்மொழி உருவாக வேண்டும். ஒன்பது, இருபது என்ற தொடர்மொழிகள் உருவாகாது. ஒன்பது, பத்து என்ற இரு சொற்களும் புணர்ந்தால் பெருக்கல் கணக்கின் விடையான தொண்ணூறு உருவாகும் என்றும் ஒன்பது - நூறு என்ற இரு சொற்களும் புணர்ந்தால் பெருக்கல் கணக்கின் விடையான தொள்ளாயிரம் உருவாகும் என்றும் புணர்ச்சி இலக்கணத்தில் விளக்கப்பட்டுள்ளன. பத்து என்ற சொல்லின் மாற்று வடிவம் நூறு, நூறு என்ற சொல்லின் மாற்று வடிவம் ஆயிரம் என்று இருக்க முடியாது. **9, 10, 0** என்ற எண்கள் கண்டு பிடிக்கப்பட்டதற்கும் எண்ணுப்பெயர்களுக்கும் இடையில் உள்ள வரலாற்று உறவு இந்தப் புணர்ச்சி விளக்கங்களில் மேலும் மயக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

தோன்றல், திரிதல், கெடுதல் என்று விகாரப் புணர்ச்சி மூன்றாக வகுக்கப்பட்டுள்ளது. தோன்றல் என்பது ஒற்றுக்கள் இடையில் மிகுதலாகும். இது இரட்டித்தல் என்பதிலிருந்து வேறானது. மரூஉப் புணர்ச்சிகளும் தருக்க நெறிக்கு உட்பட்டோ, உட்படாதோ வரும் விகாரங்களாகும். நாடுரி என்பது தமிழில் மரூஉப் புணர்ச்சியாக இருக்கலாம். தெலுங்கில் அது திரிபுப் புணர்ச்சியே ஆகும். செய்யுள் விகாரங்கள் சிறப்புக் கருதி எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பேச்சு மொழியில் மிகுதியான விகாரங்கள் உள்ளன. செய்யுள் விகாரங்களும் புணர்ச்சி விகாரங்களும் பொதுவாகவும் அமையலாம். அளபெடை, வலித்தல், மெலித்தல், மறைத்தல் முதலானவை செய்யுள் விகாரங்களில் மட்டுமின்றிப் புணர்ச்சியிலும் விளக்கப்பட்டுள்ளன. தலைக்குறை, இடைக்குறை, கடைக்குறை என்று வரும் சொல் வடிவங்கள் அந்தச் சொல்லின் மாற்று வடிவங்களாகவே வரத்தக்கனவாகும்.

குறுக்கங்களும் சார்பெழுத்துகளும் சொற்களுக்கு இடையிலான புணர்ச்சிகளில் விளக்கப்பட்டுள்ளன. ஒரு சொல்லுக்குள் ஒலி களுக்கு இடையிலான தொடர்ச்சியாலும் இவை தோன்றுவதாகத் தொல்காப்பியம் விளக்குகிறது. புணர்ச்சி என்பதைத் தொல்காப்பியம் எழுத்துக்களின் தொடர்ச்சி என்பதிலிருந்துதான் தொடங்குகிறது. மெய்ம்மயக்கம், முதல் எழுத்து, ஈற்றெழுத்து முதலானவற்றையும் ஒலியன்களின் தனித்த பண்புகளும் பிற ஒலியன்களோடு அவை

தொடரும்போது அவற்றின் பண்புகளும் எவ்வாறு ஒன்றுபடு கின்றன, வேறுபடுகின்றன என்பனவற்றையும் நூன்மரபு, மொழி மரபு களில் தொல்காப்பியம் விளக்குகிறது. புணர்மொழிகளில் உயிர்கள் மயங்கி வருவதைத் தொல்காப்பியம் பேசுகிறது. சங்க இலக்கியத்தில் தனிச் சொல்லுக்குள் உயிர்கள் மயங்கி வந்துள்ளன. நாஇ, ஆடூஉ முதலான தனிச்சொல் உயிர்மயக்கங்கள் தொல்காப்பியத்திலும் உள்ளன. உடம்படுமெய்களால் இவை பிறகு மறைந்துவிட்டன. எழுத்துக்கள் தொடர்வதன் நோக்கம் சொல்லாக்கம் செய்ய வேண்டும் என்பதால் ஆகும். எழுத்துக்களின் தொடர்ச்சி புணர்ச்சி இலக்கணத்தில் முதன்மையாக இருப்பதால் புணர்ச்சி இலக்கணம் மாற்றிலக்கணத் துடன் பெரிதும் ஒத்துள்ளது என்கின்றார் க. பாலசுப்பிரமணியன். எழுத்துகளே சொல்லாகி விடும்போது எழுத்துகளின் தொடர்ச்சிக்கும் புணர்ச்சிக்கும் முன்பே அவை பேசப்படவேண்டியவைகளாகின்றன. பகுபத உறுப்புகளின் புணர்ச்சி என்பது ஒலியன்களின் தொடர்ச்சிக்கும் அடுத்து வரவேண்டியது. ஒலியன்களின் இயைபுகள் என்பது ஒலியன் களின் புணர்ச்சி, உருபன்களின் புணர்ச்சி, சொற்களின் புணர்ச்சி, தொடர்களின் புணர்ச்சி என்று அளவுகள் வேறுபடும்போதும் நிலைத்து நிற்பவைகளாகின்றன.

துணைநூல்கள்

1. சண்முகம் செ.வை., 2001, எழுத்திலக்கணக் கோட்பாடு, உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
2. சுந்தரமூர்த்தி இ., 1979, தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.
3. மாதையன் பெ, 2007, சங்க இலக்கியச் சொல்லடைவு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
4. வேலுப்பிள்ளை ஆ., 2007, தமிழ் வரலாற்றிலக்கணம், குமரன் புத்தக இல்லம், சென்னை.
5. Balasubramanian K., 2001, Studies in Tholkappiyam, Annamalai University, Chidhambaram.
6. Thomas Lehman and Thomas Maltan, 1993, A Word Index For Sankam Litreature, Institue of Asian Studies, Chennai.

7

பழந்தமிழில் தொடரமைப்பு விரிவாக்க, குறுக்க உத்திகள்

ஒரு முழு வாக்கியத்தில் எழுவாய்ச் சொல், முற்றுச் சொல் என்ற இரு அலகுகள் குறைந்தது இருக்கவேண்டும். வேற்றுமை உருபு ஏற்ற பெயர்களையும் எடுத்துக்கொண்டால் -ஐ, -ஆல், -ஒடு, -கு -இல்லிருந்து, -இல் முதலான வேற்றுமை உருபுகளைக் கொண்ட பெயர்களும் ஒரு வாக்கியத்திற்குள் இடம்பெறலாம். அதாவது ஒரு எளிய, கலப்பற்ற வாக்கியத்தில் இவ்வாறான வேற்றுமை உருபுகள் ஏற்ற பெயர்கள் வரலாம். இவ்வாறான எளிய வாக்கியத்தில் பெயரடைகளும் வினையடைகளும் வந்திருக்கக்கூடா. பெயரடைகளும் வினையடைகளும் வந்த வாக்கியங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்களின் பிணைப்புகளாகும். தொடரமைப்பு விரிவாக்கம் என்பது எளிய வாக்கியங்களை ஒன்றை அடுத்து ஒன்றாக வைத்துக் கருத்தை விளக்கிச் செல்வதன்று. ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்களாக இடம்பெறவேண்டியவற்றை ஒரு வாக்கியமாகச் சுருக்கித் தருவது தொடரமைப்பு விரிவாக்கமாகும். பெயரெச்சம், வினையெச்சம், பெயரடை, வினையடை, உம்மைத் தொடர்கள் முதலானவை தொடரமைப்பு விரிவாக்கத்தில் உறுப்புகளாக இடம்பெறுவனவாகும். இயல்பாக ஒரு வாக்கியத்தில் இடம்பெறவேண்டிய சொல்லோ, தொடரோ குறைவுபட்டுவிடுமானால் அந்த வாக்கியம் தொடரமைப்புக் குறுக்க வாக்கியமாகும். சான்றாக

வட சொல் கிளவி வட எழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல் ஆகும்மே (தொல். எச். 5)

என்ற நூற்பாவில் தொடரமைப்புக் குறுக்கம் உள்ளது. எந்த எழுத்தோடு புணர்ந்த சொல் என்ற கேள்விக்குரிய பதில் நூற்பாவில் இல்லை. இளம்பூரணரும் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் "ஆரியம்,

தமிழ் இரண்டுக்கும் பொதுவான எழுத்தோடு பொருந்திவரும் சொல்'' என்றும் தெய்வச்சிலையார் ''தமிழ் மொழிக்குரிய எழுத்தொடு புணர்ந்த சொல்'' என்றும் வேறுபட சொற்பெய்து உரை எழுதிச் செல் கின்றனர். நூற்பா என்பது செய்யுள் அமைப்புடையது. இந்த நூற்பாவை மூன்று அடிகளில் எழுதிச்செல்லப் போதுமான சொற்கள் இல்லை. ''தமிழ், பொது'' என்ற இருசொற்களுள் ஒன்று ''எழுத்தொடு'' என்ற சொல்லுக்கு அடையாக நூற்பாவில் சேர்த்திருந்தாலும் தொடரமைப்பில் குறுக்கம் ஏற்பட்டிருக்காது. உருபு ஏற்ற பெயர்கள் எல்லாம் ஒரு எளிய வாக்கியத்தில் வெளிப்படாதபோது அவை தொடரமைப்புக் குறுக்கமாக வந்தன எனப்பட வேண்டியதில்லை. பேச்சு மரபிலும் எல்லா வேற்றுமைப் பெயர்களையும் யாரும் வெளிப்படுத்திப் பேசிவிடவேண்டும் என்று யாரும் கருதுவதில்லை. இந்த நூற்பாவை இரு அடிகளுக்குள் குறுக்கி அமைக்கவேண்டும் என்பதற்காக உரிய, கட்டாயமாக இடம்பெற்றிருக்க வேண்டிய சொல் இடம்பெறவில்லை. எனவே, இந்த நூற்பாவில் மொழிக் குறுக்கம் அமைந்துள்ளது என்று கூறலாம்.

கூறிய பிறகும் கூறப்பட்ட கருத்து முழுமையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. கூறிய பிறகு கூறப்பட்ட கருத்து தேவையில்லாத விரிவானவைகளையும் கொண்டிருக்கிறது. சுருங்கச் சொல்லல் என்பது குன்றக் கூறலாகவும் விரித்துக்கூறல் மிகுதிபடக் கூறலாகவும் ஆகிவிடுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இது மொழியாக்குபவர், பொருண்மையாக்குபவர், இடம், காலம் என்ற சூழல்களைச் சார்ந் திருக்கிறது. யாப்பு அமைப்பு, தொடை அமைப்பு, உவமை முதலான அணிச் சேர்க்கைகள் காரணமாக நீக்கல், சேர்த்தல் உத்திகள் ஒரு தொடர்மொழி அமைப்பில் மாறுதல்களை ஏற்படுத்தலாம்.

அகப்பாடல்களுள் நற்றிணை அளவான அடிகளைக் கொண்டது என்று கருதப்பட்டுள்ளது பெயர்க்காரணத்தில் தெரியவருகிறது. குறுந்தொகை, ஐங்குறுநூறு இரண்டும் குறு என்ற அடையைப் பெற்றுள்ளன. அகநானூறு விரிவான அடிகளைப் பெற்றுள்ளது. கருத்தில் வேறுபாடு இல்லாது அடிகளின் எண்ணிக்கையில் வேறுபட்டு அமைந்துள்ள இவற்றில், அந்த வேறுபாடுகளுக்கான காரணங்கள் வெளிப்படையாகவே உள்ளன. அகநானூற்றில் 288 அரசியல் குறிப்புகளும் (கா.சிவத்தம்பி, 2009, 36) மக்களின் இல்லறம், மணம், உணவு, உடை, விளையாட்டு, தொழில், நம்பிக்கை, இசை, விழா முதலான சமூக கலை பண்பாட்டுக் குறிப்புகளும் காணப்படுகின்றன என்று விளக்குகின்றனர். கருப்பொருள், முதற்பொருள் என்ற இயற்கைக் காட்சிகளைச் சங்கப் புலவர்கள் மனிதர்களின் உணர்ச்சிகளையும் உண்மைகளையும் வெளிப்படுத்தக்

கருவிகளாகப் பயன்படுத்தியுள்ளனர் (மு. வரதராசன், 2006, 46-47) என்றும் விளக்கப்படுகின்றது. உள்ளடக்கம் விரிவுபெறும்போது அடிகள் மற்றும் வாக்கியங்களின் எண்ணிக்கைகளும் கூடுதலாகின்றன.

உள்ளடக்கம் விரிவடையும்போது தனக்கென உத்திகளை அது கொண்டுள்ளது. அரசியல் குறிப்புகளைச் சூழலாகவும் உவமைகளாகவும் தான் தரமுடியும். அரசியல் குறிப்புகள் இடம்பெறும்போது இருவேறு தலைவர்கள் காதல் தலைவன், பாட்டுடைத் தலைவன் என்ற வேறுபாடு தோன்றிவிடுகிறது. காதல் தலைவன் முதன்மை இழந்து அரசியல் தலைவன் பாடப்படுவதால் சிறப்பிக்கப்பட்டவன் ஆகின்றான். அரசியல் செய்திகளை நீக்கிவிட்டாலும் அகப்பாடல் பாதிக்கப்படுவதில்லை. பட்டினப்பாலை, நெடுநல்வாடை முதலான செய்யுள்களில் அடி வரையறைகள் நீட்டப்பட்டுள்ளன. பல வாக்கியங்களை ஒரே வாக்கியமாகத் திரிவுபடுத்துவதற்கு மொழிச் சிக்கனம், மொழித் திறன், ஆவணப்படுத்தும் முயற்சிகள் முதலானவை காரணங்களாக இருக்கலாம். ஒரே வாக்கியமாகத் தொடரமைப்பை உருவாக்கும்போது, இடைச்செருகல்களைத் தவிர்த்துவிடமுடியும். திரிபு இல்லாமல் மூலத்தைப் பாதுகாக்க முடியும்.

ஒரு பொருளும் ஒரு செயலும் மையக்கருத்தாக இருந்து, உட்பொருள்களாலும், உட்செயல்களாலும் அவை சிறப்பிக்கப்படுவது ஒரு முறை. இது முதல்-சினை என்ற உறவின் அடிப்படையில் அமையும் விரிவாக்க முறை ஆகும். மரம்-கிளை-கொம்பு-பூ-இதழ் என்று அடுத்தடுத்து உள்ளுக்குள் செல்லக்கூடியதாக இந்த முறை அமையும். உட்செல்லுதல் என்பது அடைமொழித் தொடர்களால் நிறைவு செய்யப்படுவதாக இருக்கும். உடன்போதல் என்ற ஒரு செயல் அதனுள் அடங்கும் உள்செயல்களால் வெளிப்படுத்திக் கூறப்படும்போது அச்செயல் விரிவடையும். அந்தச் செயல்கள் எல்லாம் வினையெச்சம், பெயரெச்சம் என்று முன் அடைகளாக வரும்.

மற்றொரு விரிவாக்க முறை பட்டியலிடுதலின் அடிப்படையில் அமையும். பட்டியலிடப்படும் செயலும் பொருள்களும் தம்முள் வரிசை மாறியும் அமையலாம். சான்றாக,

முலைமுகம் செய்தன; முள்எயிறு இலங்கின;
தலைமுடி சான்ற தண்தழை உடையை (அகம். 7; 1-2)

என்ற எடுத்துக்காட்டில் இளமையின் முதிர்ச்சி ஒவ்வொரு உறுப்பிலும் வெளிப்படுவது பட்டியலிடப்படுவது தெரிகிறது. மேலும், பிற உறுப்புகளில் பல், மூக்கு, இடை, விரல் என்று அது வெளிப்படுவதைப்

பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். முற்று வாக்கியங்களாக இவை உள்ளன. முலைமுகம் செய்ய, முள் எயிறு இலங்க, தலைமுடி சால என்று எச்சத் தொடர்களாகவும் மாற்ற முடியும். இவ்வாறான ஒரு விரிவாக்கம்

முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ
இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின்
பரல்அவல் அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்பு புறங்கொடுப்ப
கருவி வானம் கதழ் உறை சிதறி
கார்... செய்தன்றே *(அகம்.4; 1-7)*

என்ற அடிகளிலும் உள்ளது. மழை பெய்தலால் ஏற்படும் விளைவுகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இவற்றுள் சிலவற்றை நீக்கிவிட்டாலும் இலக்கியத்தின் மையக்கருத்து வெளிப்படுவதில் பாதிப்பு இல்லை. நீக்கல், சேர்த்தல், விரித்தல், தொகுத்தல் என்றவாறான பல உத்திகளைக் கொண்டே இவ்விரிவாக்கம் நிகழ்ந்துள்ளது.

விரிவுபடுத்துதல் என்பது அடுத்தடுத்துக் கால நிகழ்வுகளைத் தொகுப்பதன் அடிப்படையிலும் நிகழ்கிறது. ஒரே பாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட நிலமும் உரிப்பொருளும்கூடக் கூடுதலாகச் சேர்ந்து வருவது நிகழ்ந்து விடுகிறது. நெடுநல்வாடை இவ்வாறானது. அது வினையெச்சம், பெயரெச்சம் கொண்டு ஒரே தொடரினால் ஆக்கப்பட்டுள்ளது. *(இரா. சாந்தி, 2006, 290)*. விளித்தொடரையும் சேர்த்தால் நெடுநல்வாடையின் தொடர்களின் எண்ணிக்கை இரு முற்று வாக்கியங்கள் எனலாம். ஒரே வாக்கியமாகத் தரும் முயற்சி சங்க இலக்கியங்கள் எல்லாவற்றுள்ளும் பொதுவாகக் காணப்படுகிறது. வாக்கியத்தை விரிவுபடுத்துதல் என்பது ஒரு வினை ஏற்க முடிந்த எல்லா வேற்றுமைகளையும் வெளிப்படுத்திக் கூறுதல் என்ற அடிப்படையிலும் நிகழலாம். வினையெச்சங்களாலும், பெயரெச்சங்களாலும் ஏற்கப்படுகின்ற பெயர்கள் அல்லது வினை யாலணையும் பெயர்கள் ஒவ்வொன்றும் பெயர் எச்சங்களால் ஏற்கப் படுவனவாகின்றன. "உண்டு வந்த" என்று வினை எச்சம் பெயரெச்சத் தால் முடிக்கப்படுகிற மற்றொரு விரிவாக்கம் உள்ளது. சான்றாக திருமுருகாற்றுப்படையில் பழமுதிர் சோலையில் பின்வருமாறு முருகன் வழிபடப்படுவது வருணிக்கப்படுகிறது.

மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர,
நெய்யோடு ஐயவி அப்பி, ஐது உரைத்து,

குடந்தம்பட்டு, கொழுமலர் சிதறி,
முரண்கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ,
செந்நூல் யாத்து, வெண்பொரி சிதறி,
மதவலி நிலைஇய மாத்தாட் கொழு விடைக்
குருதியொடு விரைஇய தூ வெள்ளரிசி
சில்பலிச் செய்து, பல் பிரப்பு இரீஇ,
....
முருகு இயம் நிறுத்து, முரணினர் உட்க,
முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு வியல் நகர் (திருமுருகு. 227- 244)

17 அடிகளும் ஒரே வாக்கியமாக அமைய வினையெச்சங்களும் பெயரெச்சங்களும் பெயரடைகளும் காரணங்களாக உள்ளன. நிலைஇய, விரைஇய, ஆற்றுப்படுத்த என்று வருவன பெயரெச்சங்களாகும். அமைவர, அப்பி, உரைத்து, சிதறி என்றவாறு வருவன செய, செய்து என்ற வாய்பாட்டு வினையெச்சங்களாகும்.

பதினெண் கீழ்க்கணக்குச் செய்யுள்கள் கதை, நிகழ்வு தழுவியவை அல்ல. அவை அறக்கருத்துகளையும் பொதுக்கருத்துகளையும் கூறிச் செல்வன. சொல் தேர்வுகளிலும் சுருக்கம் இருக்கும். மலர் என்ற சொல்லைவிடப் பூ என்ற சொல் வெண்பா யாப்பின் இறுக்கமான கட்டமைப்பிற்குத் தேவை. இருந்தாலும் தொடரமைப்புகள் அடிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப விரிவுபடுத்தப்பட்டுள்ளது நடந்துள்ளது. நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது முதலான இலக்கியங்களில் ஒவ்வொரு செய்யுளிலும் நான்கு, மூன்று என்று கூறப்படவேண்டிய கருத்துகள் வரையறுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதனால் அந்தக் கருத்துகளின் எண்ணிக்கை செய்யுளில் அமையும் அடிகளின் எண்ணிக்கையுடன் இயைந்து செல்லவேண்டியுள்ளது. சான்றாக

மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மை; தான்செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்பாழ்
கற்றறிவு இல்லா உடம்பு -(நான்மணி. 22)

என்ற செய்யுளில் சீர், சொல், அடி முதலானவற்றின் உறவுகள் தொடர்புபடுத்திப் பார்க்கப்பட வேண்டியவை. நான்கு கருத்துகளை நான்கு அடிகளுக்குள் செறிவாக்கிச் சொல்லவேண்டியிருப்பதால் அடைமொழிகளின் தேவை குறைவு. வாள்நுதல் என்ற ஆகுபெயர் மட்டும் அடையோடு வந்துள்ளது. ஈரசைச் சீராக்கவேண்டும் என்ற

நோக்கில் வந்துள்ளது. மூன்றாவது சீரில் அந்தந்த வாக்கியத்தின் முடிவு இருக்கிறது. இன்மை என்ற ஒரே சொல் திரும்பத் திரும்ப வருவதன் மூலம் தொடை, ஓசை நயம் கிடைக்கிறது. கடைசி வாக்கியத்தில் இன்மை என்ற சொல் முடிவாக வரவில்லை. பிறப்பு என்ற வாய்பாடு கொடுத்து முடிக்கவேண்டியிருப்பதால் இன்மை என்ற சொல் இல்லா என்று அடையாகத் திரிக்கப்பட்டுவிட்டது. ஒவொரு வாக்கியமும் நான்கு சீர்களைக் கொண்டு முடிந்திருக்கிறது. முதல் வாக்கியம் மட்டும் மூன்று சீர்களில் ஆக்கப்பட்டிருக்கிறது. மற்ற அடிகளில் நான்காவது சீராக உள்ள வாக்கியம் அதற்கு முதல் அடியில் முதல் சொல்லைக் கொண்டிருக்கிறது. முதன் முதலாக அமையும் அடிக்கு முன்னதாக எந்த அடியும் இருக்கமுடியாததால் அந்த முதல் அடி மூன்று சீர்களைக் கொண்டதாக இருக்கிறது. செய்யுளில் இடம்பெற்ற நான்கு கருத்துகளும் தமக்குள் தொடர்பு இல்லாதவை. எந்தக் கருத்துகளையும் நான்கு என்ற எண்ணிக்கையில் யாப்புக்குப் பொருந்தும் வகையில் இட்டு நிரப்பும் வசதி ஆசிரியருக்கு இருக்கிறது. ஒரு செய்யுளில் ஒரு கருத்துப் பேசப்படவேண்டும் என்ற வரையறை தவிர்க்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அடியும் ஒரு வாக்கியமாக அமையும்போது *15* சீர்கள் *4+4+4+3* என்ற பிரிப்பு முறையில் நான்கு வாக்கியங்களாக *(3+4+4+4)* அமைகின்றன. இவ்வாறு வாக்கியம், அடி, சீர், சொல் முதலானவற்றுக்கு இடையில் பல்வேறு வகையான உறவுகள் நாலடியாரில் உள்ளன.

பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம் முதலான இலக்கியங்களில் ஒரு கருத்து நான்கு அடிகளில் பேசப்படுகிறது. திரிகடுகத்தில் மூன்று கருத்துகள் இருக்கும். நான்கு அடிகளால் அது ஆக்கப்பட்டிருக்கிறது. சான்றாக

> கணக்காயர் இல்லா ஊரும், பிணக்கறுக்கும்
> மூத்தோரை இல்லா அவைக்களனும்- பாத்துண்ணும்
> தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
> நன்மை பயத்தல் இல - (திரிகடுகம். *10*)

என்ற திரிகடுகச் செய்யுளின் நான்கு வாக்கியங்களும் *3+4+4+4* என்ற சீர்க்கணக்கில் அமையுமாறு முறையே ஆக்கப்பட்டிருக்கின்றன. முதல் மூன்று வாக்கியங்களும் மூன்று கருத்துகளைச் சொல்கின்றன. நான்காவது வாக்கியம் தொகுத்துச் சொல்லும் முறையில் எல்லாச் செய்யுள்களிலும் ஆக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வாக்கியத்தின் முதல்சீரும் தனக்கு முதலில் உள்ள அடியின் இறுதிச் சீரில் தொடங்குமாறு ஆக்கப்பட்டிருக்கிறது. இம்மூன்று, அயலிருப்பு என்ற அடைமொழிச் சீர்களில் உள்ள அடைகளை நீக்கமுடியாது. இவை யாப்புக்காகச்

சேர்க்கப்பட்டனவல்ல. "தன்மையி லாளர்" என்ற சீர்ப்பகுப்பு வகையுளியாக அமைந்துள்ளது. ஒரு கருத்தைப் பேசும் நான்கடிச் செய்யுள்களில் உவமை, எதிர்மறை-உடன்பாடு முறையில் கருத்துகளும் அடிகளும் கட்டமைக்கப்படுகின்றன. சான்றாக

பூத்தாலும் காயா மரமுள; நன்றறியார்
மூத்தாலும் மூவர்நூல் தோற்றாதார்- பாத்திப்
புதைத்தாலும் நாறாத வித்துள; பேதைக்கு
உரைத்தாலும் செல்லாது உணர்வு (*சிறுபஞ்சமூலம். 23)*

என்ற செய்யுள் அறிவுக்கும் வயதுக்கும் இடையில் உள்ள உறவைத் தாவரத்துடன் தொடர்புபடுத்திப் பேசுகிறது. நான்கு கருத்துகள் இருப்பது போல் தோன்றினாலும் இரு கருத்துகளும் அவற்றிற்கான உவமைகளும் உள்ளன. இரு கருத்துகளும் வயது, அறிவு என்ற உறவின் அடிப்படையில் ஒரு கருத்தாக உள்ளன. இந்தக் கருத்துகள் நான்கு வாக்கியங்களில் *3+4+4+4* என்ற சீர் எண்ணிக்கை உறவில் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு தொடர்மொழி அமைப்பு அடிப்படையில் பதினெண் கீழ்க்கணக்குப் படைப்பாக்க முறைகளை விளங்கிக்கொள்ளமுடியும். ஒவ்வொரு அடியின் மூன்றாம் சீர் வாக்கிய முடிவாக இருக்கவேண்டும் என்பது ஒரு யாப்பியல் கட்டுப்பாடாக இருக்கிறது. எல்லாச் செய்யுள் களையும் எடுத்துக்கொண்டு இவ்வாறு வகைப்படுத்தி விளக்க வேண்டியிருக்கிறது.

சிறுபஞ்சமூலத்தில் ஒரு கருத்து, மூன்று கருத்து, நான்கு கருத்து என்று வரையறுத்துக்கொண்டு சொல்லப்படவில்லை. பல கருத்துகளும் சொல்லப்படாலாம் என்ற நெகிழ்ச்சியும் உள்ளது. சான்றாக

பெருங்குணத்தார் சேர்மின்; பிறன்பொருள் வெளவன்மின்;
கருங்குணத்தார் கேண்மை ஒழிமின்;- ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின்; வருங்காலன் திண்ணியதே;
வாய்ச்சொல்லே அன்று வழக்கு -(சிறுபஞ்சமூலம். *26)*

என்ற செய்யுளில் ஆறு வாக்கியங்களும் ஆறு கருத்துகளும் உள்ளன. இவை முறையே *2+2+3+3+2+3* என்ற சீர்ப்பிரிப்பு முறையில் ஆக்கப்பட்டிருக்கின்றன. அறங்களாக நான்கு வாக்கியங்களும் அறத் திற்குக் காரணமாக ஐந்தாவது வாக்கியமும் அறத்தின் அல்லது மறத்தின் விளைவாக ஆறாவது வாக்கியமும் அமைந்துள்ளன. கருத்துகளின் எண்ணிக்கைக் கூடும்போது வாக்கியங்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே வருகிறது. நிகழ்வின் தொடர்ச்சியைச் சொல்வதற்கும் கருத்துகளின் பட்டியலைத் தருவதற்கும் வேறுபாடுகள் உள்ளன.

பெருங்குணம், கருங்குணம், தீச்சொல், வாய்ச்சொல் என்று வரும் அடைகள் அழகியல் நோக்கில் கொடுத்து விரிக்கப்பட்டனவல்ல. நீக்கிவிட்டால் பாடலின் பொருள் இருக்காது. அழகியல் நோக்கில் வந்த அடைகள் நீக்கப்பட்டாலும் பாடல் பொருண்மை பாதிக்கப் படுவதில்லை.

கருத்துகளை உடன்பாடு, எதிர்மறை என்ற இரு முறைகளில் கூறும்போது, யாப்புக்கான சீர், அடிகளில் நிறைவு கிடைக்கிறது. உடன்பாடும் எதிர்மறையும் ஒரே வாக்கியங்களின் உறுப்புகள் அல்ல என்றபோதும் அவை தொடர்புடையன. சான்றாக

கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு- மெல்ல
இருப்பினும் நாயிருந் தற்றே; இராது
உரைப்பினும் நாய்குரைத் தற்று

- (நாலடியார். 254)

வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா; தம்மர பினவே

- (தொல். கிளவி. 11)

என்ற இரு செய்யுள்களில் "இராது உரைப்பினும் நாய்குரைத் தற்று", "தம்மர பினவே" என்ற எதிர்மறைக் கருத்துகள் யாப்புக்காக, அடிகளை நிறைவு செய்வதற்காகச் சேர்க்கப்பட்டவை என்று சொல்லலாம். உடன்பாட்டில் சொல்லும்போது எதிர்மறையிலும் எதிர்மறையில் சொல்லும்போது உடன்பாட்டிலும் ஆக எதிர்மறைக் கருத்துகள் விரிவுபடுத்தப்பட வேண்டியிருக்கின்றன.

அடிகளை விரிவுபடுத்துதல் என்பதைச் சீர்களை விரிவுபடுத்தாமலும் செய்யமுடிகிறது. "சங்க இலக்கியங்களில் 90 விழுக்காடு சீர்கள் ஈரசைச் சீர்கள்" (ப.பாண்டியராஜா, *1998, 330*) என்பதால் அடிகள் எண்ணிக்கை கூடும்போது பாடலில் காய்ச்சீர்களும் கனிச்சீர்களும் வரும் என்று கொள்ள முடியவில்லை. மாறாக வஞ்சிப் பாட்டில் குறளடி, சிந்தடிகளில் மூவசைச்சீர்கள் மிகுதியாக இடம் பெறுகின்றன. குற்றியலுகரம் மெய்யெழுத்துப் போல நீக்கப்படவில்லை என்றால் அவ்வாறுதான் கொள்ள முடியும்.

வாய்மொழி மரபும் எழுத்து மரபும் ஒன்றை ஒன்று பாதிக்கக் கூடியன. வாய்மொழி மரபில் சொல் சீர்களும் செய்யுள் மரபில் பிணை, வகையுளிகளைக் கொண்ட சீர்களும் வரும் என்று பொதுமைப்படுத்த

முடியாது. சங்க இலக்கியத்தின் வாக்கிய அமைப்பு, ஓசை மற்றும் பொருள் அமைப்புகள் வாய்மொழி மரபை, பதிலீட்டு மரபை அடிப்படையாகக் கொண்டவை (க. கைலாசபதி, 2006, 238)என்றும் எழுத்து இலக்கிய மரபுகளை அடிப்படையாகக் கொண்டவை என்றும் இருவேறு கருத்துக்கள் உள்ளன. புலவர், பாணர் என்று பாடுபவர்களையும் அரசர், மறவர், வள்ளல் என்று பாடப்பட்டோரையும் கொண்டு பாடலின் மொழி அமைப்பில் வேறுபாடுகள் காண முடியவில்லை (அம்மன்கிளி முருகதாஸ், 2006, 213-15). மொழி என்பதே தொடரியல் உறவுகளாலும் அடுக்கியல் உறவுகளாலும் கட்டமைக்கப்படுவதால் அது எல்லாருக்கும், எல்லாக் காலத்திற்குமான பொதுவான அமைப்பு உத்திகளையே கொண்டுள்ளது. விரிவாக்க உத்திகளையும் கொண்டுள்ளது. குறுந்தொகையும் நற்றிணையும் அகநானூற்றுக்கு முன்பு எழுதப்பட்டவை (கா.சிவத்தம்பி, 2009, 36) என்று கூறுவது போல அவை தமக்குச் சமகாலத்திலும் எழுதப்பட்டவை என்றும் கூறலாம்.

தொடர்மொழி அமைப்பு பத்துப்பாட்டிலோ, அகநானூற்றிலோ, ஒத்த பிற இலக்கியங்களிலோ கட்டமைக்கப்பட்டதற்கான இலக்கணப் பின்னணி தொல்காப்பியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கூறக் கருதும் கருத்தை உரிய சொற்களால் வெளிப்படுத்திக் கூறிவிட வேண்டும்(தொல். கிளவி. 56). ஒரு வாக்கியத்தின் இரு சொற்களுக்கு இடையில் பொருத்தம் உடைய சொற்கள் வெளிப்படலாம் (தொல். வினை. 40). வினையெச்சம், பெயரெச்சம் பற்றிய விரிவான இலக்கண விளக்கங்கள் தமிழ் மரபிலக்கணத்தில் இடம்பெற்றுள்ளன. இவை மொழியாக்க நிலையில் நிகழ்வனவாகும். பொருண்மையாக்க நிலையில் மொழிமாற்று, கொண்டுகூட்டு, மாட்டு (தொல். எச். 8, செய்யுளியல். 203) முதலான பொருள் விளக்கங்கள் விரிவாக்கம் செய்யப்பட்ட இலக்கியப் பாடல்களைப் பொருள் கொள்ளத் துணைபுரிகின்றன. அகநானூற்றுப் பாடல் விரிவாக்க உத்திகள் எல்லாக் காலத்திற்கும் பொதுவானவை. சிறுகதை, கட்டுரை முதலான உரைநடைகளுக்கும் பொருந்திவரக் கூடியவை. பயன்படுத்தப்பட்டு வரப்படுபவை.

துணை நூல்கள்

1. அம்மன் கிளி முருகதாஸ், 2006, சங்க இலக்கியக் கவிதையாக்கமும் மரபும் மாற்றமும், குமரன் புத்தக இல்லம், சென்னை
2. கைலாசபதி, க., 2006, வீரநிலைக் கவிதை, குமரன் புத்தக இல்லம், சென்னை

3. சாந்தி, இரா., *2006,* பத்துப்பாட்டுத் தொடரனியல், பார்க்கர், சென்னை

4. சிவத்தம்பி, கா., *2009,* இலக்கியம் கவிதையும் கருத்தும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

5 சிவலிங்கனார், ஆ., *1988,* தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-எச்ச வியல்; உரைவளம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

6 பதிப்புக் குழு, *1981,* தொல்காப்பியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், சென்னை

7 பதிப்புக் குழு, *1981,* பத்துப்பாட்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், சென்னை

8 பதிப்புக் குழு, *2006,* பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும், தொகுதி: *1-3,* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை

9 வரதராசன், மு., *2006,* பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பாரி நிலையம், சென்னை

8

திணையியல் கூற்று மரபும் சிலப்பதிகாரக் கதையாக்கமும்

திணையியல் கூற்று மரபு என்பது சங்க இலக்கியக் கூற்றுகளில் பொதுத்தன்மைகளைக் குறித்து நிற்கிறது. அகப்பாடல்களையும் புறப்பாடல்களையும் துறை அடிப்படையில் தொல்காப்பியம் பட்டியலிட்டு விளக்கியுள்ளது. அகப்பாடல்களை மட்டும் மேலும் கூற்றுகளாகப் பட்டியலிட்டுள்ளது. அகப்பாடல்களில் கூற்றுகளுடன் உடல்மொழியும் நிகழ்வும்கூட அரிதாக இணைத்துக் கூறப்பட்டுள்ளன. புறப்பாடல்களுக்கான துறைகளுடன் சில கூற்றுகள் இணைத்துக் கூறப்பட்டுள்ளன. அகப்பொருளையும் புறப்பொருளையும் விளக்கு வதற்குக் கூற்றுகள் அடிப்படையாக உள்ளன. புறப்பாடல்கள் ஆசிரியர் கூற்றுகளாகப் பெரும்பாலும் உள்ளன. புறப்பாடல்களையும் கூற்றுகளின் அடிப்படையில் வகுத்துப் பட்டியலிட்டுத் தொல்காப்பியம் விளக்காததற்குரிய காரணங்கள் ஆராயப்படவேண்டும். அகப்பொருள் பாடுபொருள் பரப்புக் குறைந்த பரப்புக்குரியதாகவும் புறப்பொருள் பாடுபொருள் பரப்புப் பரந்தும் இருக்கிறபோது, அகப்பாடல்கள் மிகுதியாகவும் புறப்பாடல்கள் குறைவாகவும் தொகுக்கப்பட்டிருக்கிற அல்லது பாடப்பட்டிருக்கிற முரண்பாடு இதற்கான காரணங்களுள் ஒன்றாக இருக்கலாம்.

திணையியல் கூற்று மரபைப் பாடல்களின் உள்ளடக்க மரபு மற்றும் பாடல் அமைப்பு மரபு என்ற இரண்டு வகையாகப் பிரித்து விளக்கலாம். இரண்டையும் பிரிக்க முடியாது என்றாலும் திணை இலக்கியத்தை விளக்கும்போது இரு துருவங்களாக இவை பொருந்தி அமைகின்றன. கூறுபவர், கேட்பவர் இருவரின் கால, இட வெளிகள், பிற சூழல்கள் எல்லாம் இணைந்துக் கூறப்படும் கூற்றின் உள்ளடக் கத்தை வரையறுக்கின்றன. இலக்கியத்திற்குள்ளும் இலக்கியத்திற்கு வெளியிலும் உள்ள சூழல்கள் உள்ளடக்கம் என்பதாகவும் அமைகின்றன.

புறப்பாடல்களிலும்கூடச் சூழல்கள் பாடலிலிருந்து பிரிக்கமுடியாதபடி அமைந்துள்ளன. அவை இலக்கிய அமைப்பின் கூறுகள் என்பதாகவும் அமைகின்றன. மனிதர்கள், அவர்களது நடத்தைகளோடு பிற உயிரினங் களும் உயிரற்றனவும் உள்ளடக்கக் கூறுகளேயாகும். மொழியும் கூட மாந்தர்களிடமிருந்து பிரிக்க முடியாதபடி உள்ளது. புறப்பாடல்களின் புலவர்கள் பாத்திரக்கூற்றில் அல்லாமல் தம் கூற்றில் வைத்துக் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

பாடல் அமைப்போடு தொடர்புபடுத்தப்படாமல் தனியே பிரித்து விளக்குவதற்குரிய உள்ளடக்கக் கூறுகள் சமூகவியல், அறவியல் நோக்கு களில் விளக்கப்படத் தக்க கருத்துகளேயாகும். திணை இலக்கியங்களில் புலப்படும் ஒழுக்கவியல் என்று இவற்றைப் பொதுவாகச் சொல்லலாம். அறக்கழிவுடையனவற்றை இலக்கிய உள்ளடக்கமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று தொல்காப்பியமும் (தொல். பொருளியல். 22) வரையறுத்துள்ளது. அதாவது உயர்ந்த மாந்தர்களாக இருந்தாலும் அவர்கள் நடத்தை உயர்வற்றதாக இருக்குமானால் அதை உள்ளடக்கமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. உழவரும் மீனவரும் தலைமை மாந்தர்களாக வர முடியாது. இழிவான ஒழுக்கத்தைப் பாடுபொருளாகக் கொண்ட திணைகளில் ஆயர், வேட்டுவர் மாந்தர்களாக வரலாம்(தொல். அகத்திணையியல். 23). அடியவரும் வினைவலரும் (தொல். அகத் திணையியல். 25) தலைமை மாந்தர்களாக வந்த அகப்பாடல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறான வரையறைகள் தமிழ் இலக்கண மரபில் நிறைய உள்ளன. இலக்கணத்தில் அளிக்கப்பட்ட விதிவிலக்குகளைக்கூட இலக்கிய மரபில் எடுத்துக்கொள்ளாமல் விதியின் பிடியில் நெகிழ்வுத் தன்மை இல்லாமல் இருந்துவந்திருக்கிறார்கள்.

தமிழ் எழுத்துச் சூழலில் திணை இலக்கிய மரபு என்பதற்குள் காப்பிய இலக்கிய மரபும் உள்ளடங்கும். இரண்டிற்கும் பொதுவான பண்புகளும் வேறுபட்ட பண்புகளும் உள்ளன. திணை இலக்கிய மரபு என்பது கூறுபவர், கேட்பவர், கூறப்படும் கருத்து இந்த மூன்றின் சூழல்கள் ஆகியவற்றுக்கிடையிலான கட்டமைப்பாக உள்ளது. இது கதை மரபு சார்ந்தது அன்று. கருத்தையோ, உணர்வையோ விளக்கும் நோக்கில் தனிப்பாடலாகத் திணை இலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன. காப்பியம் என்பது கதை மரபு சார்ந்தது. கதைக்கேற்ப நிகழ்வுகளும் மாந்தர்களும் அமைய அதை ஒட்டிச் சூழல்களும் கூற்றுகளும் காப்பியங்களில் அமையும். ஒன்றுக்குள் ஒன்றாக இவை உள்ளடங்கி அமையும். திணை இலக்கியக் கூறு என்பது ஏற்கனவே செய்துவைக்கப்பட்ட ஒரு அமைப்பு; முன்னம். அது இலக்கியத்தின் அடிப்படைக் கூறு அன்று. இலக்கியத்தின்

பல்வேறு கூறுகளின் ஒருங்கிணைப்பு. வளர்ந்த ஒரு இலக்கிய அமைப்பு. காப்பியம் மிகப்பெரிய இலக்கிய அமைப்பாக இருந்தபோதும் திணை இலக்கிய மரபை அப்படியே எடுத்துப் பயன்படுத்த முடியாததற்கான காரணம் இது. திணை இலக்கிய அமைப்பின் உட்கூறுகள் காப்பிய இலக்கியத்திற்குள் இணைக்கப்பட்டுள்ள முறையை ஆராய்வது பயனுள்ளதாக இருக்கும்.

சிற்றிலக்கியங்களில் காப்பியக் கூறுகளைத் தேடும்போதும் காப்பியக் கூறுகளை அப்படியே கண்டடைய முடியாமல் போகலாம். கூறு என்பது எந்த அளவு நுண் அலகாகப் பகுத்துக்கொள்ளப்பட்டுள்ளது என்பதைப் பொருத்தும் இது வேறுபடும். முழுமையான கூறு என்பது மேலும் பல உட்கூறுகளாகப் பகுத்துக்கொள்ள இடம் தருவதாக உள்ளது. தொகுதி, அதன் பகுதிகள் என்ற படிநிலை வரிசையில் படிநிலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அவை ஒப்புமைப்படுத்தியோ, அவற்றுள் உள்ள தாக்கமோ பார்க்கப்படுகிறது என்பதைப் பொருத்தும் இது வேறுபடும். திணையியல் கூற்று மரபு சிலப்பதிகாரத்தில் பார்க்கப்படுவது என்பது திணையியல் மரபைப் பார்ப்பதிலிருந்து மேலும் நுண்மையானது. திணையியல் மரபைக் காண்பதில் ஒரு உட்கூறுதான் திணையியல் கூற்று மரபு.

திணை என்ற ஒன்றை அடிப்படையாகக்கொண்டு பழந்தமிழ் இலக்கணங்களும் இலக்கியங்களும் தம்மோடு தாமும் பிறவற்றோடு சம கால நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் ஒப்பிட்டு விளக்கி வரப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் திணையியல் அடிப்படையிலான ஆய்வுக்குக் குறிப்பிடத்தக்க களமாக இருந்துவருகிறது. சிலப்பதிகாரத்தில் காணப்படும் அகச்செய்திகளும் புறச்செய்திகளும் பட்டியலிட்டு விளக்கப்பட்டுள்ளன (க.சுந்தரபாண்டியன், **2010: 184, 297**). சங்க இலக்கியத்தில் உரையாடல் என்பது கொண்டெடுத்து மொழிதலில் அமைந்த தனிநிலைச் செய்யுள்களுக்கும் கலித்தொகை, பரிபாடலில் உள்ள உரையாடல் வகைச் செய்யுள்களுக்கும் பொருந்தும். மற்ற செய்யுள்கள் எல்லாம் கூற்று என்ற வகையில் சேர்வன.

சிலப்பதிகாரம் கைகோளுள் கற்புப் பற்றியது. கிழவன், கிழத்தி, காமக்கிழத்தி (அ) பரத்தை என்ற முக்கோண உறவையே சிலப்பதிகாரம் விளக்குவதாக உள்ளது. கிழவித் தலைவன், கிளவித் தலைவன் என்ற இரு தலைவர் மரபு பட்டினப்பாலை முதலான தனிப்பாடல்களில் இருப்பது போலவே சிலப்பதிகாரத்திலும் இருக்கிறது. மூவேந்தர்களும் நிலத்தெய்வங்களும் பெருந்தெய்வங்களும் தலைமையில் வைத்துப் பேசப்படுகிறார்கள். தமிழகத்தின் புவியியல், அரசியல், சமயவியல்,

மக்கள் வாழ்வியல் முதலான பலவற்றையும் பதிவு செய்துவிட வேண்டும் என்ற இலக்கிய நோக்கம் சிலப்பதிகாரத்தில் வலுவானது. முதல், கரு, உரி என்பனவற்றுள் ஏதேனும் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு திணையை அதாவது புவிப்பிரிவை அல்லது மக்களில் ஒரு பிரிவினரின் வாழ்வியலைப் பதிவுசெய்ய முடிகிறது. இந்த நோக்கங்களுக்கு ஏற்பச் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் மாந்தர்களின் கூற்றுகளும் அவற்றின் சூழல்களும் உள்ளடக்கங்களும் அமைகின்றன. அக மாந்தராகக் கற்பித்துக் கொண்ட தலைமை மாந்தர்கள் தம்மைத் தலைவனாகவும், தலைவியாகவும், பாங்கனாகவும், பாங்கியாகவும் நின்று கூற்றுகளை நிகழ்த்துகின்றனர். முன்னிலைப் புறமொழி, நெஞ்சுக்குச் சொல்வது, தூது விடுவது முதலான கூற்று மரபுகளைக் கானல் வரியில் காணலாம். உள்ளுறையும் குறிப்புப்பொருளும் திணை இலக்கியத்தில் கூற்றுடன் இணைத்துப் பார்க்கப்பட்ட வேண்டியவையாகும்.

மருதம், நெய்தல் நிலப்பிரிவுகளுக்குரிய உழவர், மீனவர்கள் சிலப்பதிகாரத்தில் இடம்பெறவில்லை. ஆயர், வேட்டுவர், குறவர் முதலான நில மாந்தர்கள் பேசும் மாந்தர்களாக இடம்பெற்றுள்ளனர். நெய்தல் நிலப்பின்புலம் கானல் வரியில் தலைமை மாந்தர்களின் வாழ்வியல் சூழலாக மையக்கதையிலிருந்து பிரிக்க முடியாதவாறு அமைந்துள்ளது. மருத நிலம்கூடத் தலைமை மாந்தர்களின் பயண வழியாக நாடுகாண் காதையில் பேசப்பட்டுள்ளது. பேசும் மாந்தர்களாக நிலமக்கள் இணைத்துப் பேசப்படாத மருதநிலம் சார்பாக ஒரு கூற்று இடம் பெற்றுள்ளது. மருத நிலத்திற்குரிய குறியீடான பரத்தை ஒழுக்க த்தைப் பதிவு செய்துள்ளது. கோவலன்-கண்ணகி உறவு குறித்துக் கவுந்தியடிகளிடம் வம்பப்பரத்தையும், வறுமொழியாளனும் உரையாடு கின்றனர். தம் மக்கள் என்று அவர்கள் இருவரையும் குறிப்பிட்ட கவுந்தியிடம் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் கணவன் மனைவியாக வாழ்வதைக் கேள்விப்பட்டதில்லை என்று கேலிபேசுகின்றனர்.

> உடன் வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை
> கடவதும் உண்டோ கற்றறிந்தீர் *(சிலப் - 10:227-28)*

இந்தக் கூற்று மருத நில அகவாழ்வியலின் இழிவான ஒழுக்கத்தை அறவியல் நோக்கில் பதிவுசெய்கிறது. நிலம் சார்ந்த மக்களைப் பற்றிப் பேசும்போது அவர்களைக் காப்பிய மையக் கதை மாந்தரான கோவலன் கண்ணகியுடன் இணைக்க வேண்டியுள்ளது.

குன்றக் குரவையில் அமைந்துள்ள கூற்றுகள் பல்வேறு இணைப்பு களைப் புலப்படுத்துகின்றன. மையக் கதையின் தொடர்ச்சியைச் சேர

மன்னனுக்கும் சேர நாட்டுக்கும் எடுத்துச் செல்லும் இணைப்பைக் குறவர்கள் செய்கின்றனர். மேலும், குன்றத்தின் கடவுளான செவ்வேள், புணர்தலும் புணர்தல் நிமித்தமும், வேலன் வெறியாட்டு, கண்ணகி தெய்வம் போற்றுதல், களவு, கைகூடல் என்று காதையின் உள்ளடக்கம் விரிவடைகிறது. தலைவி வெறியாட வரும் வேலனை எள்ளிப்பேசு கிறாள்.

> நேரிழை நல்லாய்! நகையாம் மலை நாடன்
> மார்பு தரு வெந்நோய் தீர்க்க வரும் வேலன்
> தீர்க்க வரும் வேலன் தன்னினும் தான் மடவன்
> கார்க் கடப்பம் தார் எம் கடவுள் வருமாயின் (சிலப். *24:2:13*)

இக்கூற்றுத் திணை இலக்கிய மரபுப்படி அமைந்துள்ளது. குறிஞ்சித் திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களுடன் கூற்றும் பொருந்து கின்றது. தலைவனின் மலை அருவியில் பிற பெண்கள் நீராடுவதைத் தலைவி வெறுத்துப்பேசுவது வேறுபட்டது. காதையின் இறுதியில் கண்ணகியையும் சேரனையும் குறமகளிர் வாழ்த்திப் பாடுகின்றனர். மங்கல வாழ்த்துப் பாடலில் மணமக்களுடன் சோழன் வாழ்த்திப் பாடப்பட்டான். காடுகாண் காதையில் பாண்டியன் வாழ்த்தப் படுகிறான். அகப்பாடல்களில் வரும் இரு தலைவர் மரபின் போக்கில் சிலப்பதிகாரம் அமைந்துள்ளது.

பாலைத்திணைக்குரிய அக ஒழுக்கம் பிரிதல். இது வேட்டுவ வரியில் பேசப்பட்டுள்ளது.வேட்டுவர்களின் புற ஒழுக்கமான ஆநிரை கவர்தல் இதில் பேசப்படுகிறது. முல்லைத் திணைக்குரிய அக ஒழுக்கம் இருத்தல். ஆனால், ஆய்ச்சியர் குரவையில் பேசப்பட்டுள்ளவை அகத்திணையில் கருப்பொருள்களுள் ஒன்றான ஆயர்களின் வாழ்வியலும் மற்றொரு கருப்பொருளான தெய்வ வழிபாடும். கலித்தொகையில் பேசப்படும் செய்திகளோடு ஆய்ச்சியர் குரவை ஒத்துப்போகிறது. பரிபாடலில் செவ்வேள் பற்றிய பாடல்களுடன் குன்றக்குரவைக் கருத்துக்கள் பொதுத் தன்மைகள் கொண்டுள்ளன. கானல் வரி மருதத் திணையின் உரிப்பொருளுடன் ஒத்துப்போகிறது. ஆனால் கூற்றுகளின் பொருத்தம் அப்படியே இல்லை.

தஞ்சைவாணன் கோவை முதலான நூல்கள் இலக்கணத்திற்கு அமைய வேண்டிய இலக்கியங்கள் என்ற எடுத்துக்காட்டுத் தரும் நோக்கில் எழுதப்பட்டவை. அவற்றுள் தொல்காப்பியத்திலும் நம்பியகப்பொருளிலும் உள்ள துறைகளுக்கும் கூற்றுகளுக்கும் உரிய எடுத்துக்காட்டுகளாகப் பாடல்கள் எழுதப்பட்டிருக்கும். சிலப்பதிகாரம் பெரிதும் வேறுபாடுடைய தனிக்கதையை அடிப்படையாகக் கொண்டு

எழுந்த இலக்கியமாகும். மாந்தர்களின் கூற்றுகளைத் தொல்காப்பியம் கால வரிசைமுறைப்படி அமைத்திருப்பது ஒருவரது அகவாழ்வில் அடுத்தடுத்த நிகழ்வுகள் நடப்பது போல இருக்கிறது. புறத்திணைத் துறைகள் கால வரிசையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு போர்ச்செயலில் அடுத்தடுத்து அமையும் செயல்போல அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், சங்க இலக்கியங்கள் தனிப்பாடல்களின் தொகுதியாகும். கதை வடிவில் அமைந்தவை அல்ல. அப்படி அமைந்திருந்தால் திணை இலக்கியக் கூற்று மரபுக்கும் சிலப்பதிகாரக் கதையாக்கத்திற்கும் ஒற்றுமைகள் நிறைய இருந்திருக்கும்.

மாங்காட்டு மறையோன் மதுரைக்குச் செல்லும் வழிகுறித்தும் பாண்டியன் குறித்தும் கூறும் செய்திகள் ஆற்றுப்படை இலக்கியத் துடனும் இலக்கணத்துடனும் ஒத்துப்போகின்றன. ஆனால் ஊர் ஆற்றுப்படுத்தப்படும் இலக்காகிறது. வழியும் ஆற்றுப்படுத்தப் பட்டு வேறு முறையில் விரித்துப் பேசப்படுகிறது. மாங்காட்டு மறையோன் கூற்றை ஆற்றுப்படையுடனும் கண்டோர் கூற்றுடனும் பொருத்திப் பார்க்க முடிகிறது. சேரன் செங்குட்டுவன் வஞ்சினம் கூறுவது:

இமையத் தாபதர் எமக்கு ஈங்கு உணர்த்திய
அமையா வாழ்க்கை அரைசர் வாய்மொழி...
கடவுள் எழுத ஓர் கற்கொண்டு அல்லது
வறிது மீளும் என்வாய்வாள் ஆகில்
செறிகழல் புனைந்த செரு வெம் கோலத்துப்
பகை அரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்
குடி நடுக்குறூஉம் கோலேன் ஆக *(சிலப். 26;9-18)*

இது புறநானூற்றில் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறும் வஞ்சினத்தை ஒத்துள்ளது. புணர்ச்சிக்குப் பிறகு கோவலன் கண்ணகியை நலம்பாராட்டிக்கூறுவது அகப்பாடல்களின் நலம் பாராட்டலிலிருந்து வேறுபட்டது. புறத்திணைத் துறைகளின் பட்டியல் தொல்காப்பியத்தில் உள்ளபடி காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் என்று நிகழ்வுகளாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. காப்பியக் கதை மாந்தர்கள் பேசப்படும் மாந்தர்களாகப் படைக்கப்படும்போது அவர்கள் கூற்று இடம்பெற வாய்ப்புஇல்லை. நாடுகாண் காதையில் உழவர் செயல்கள் விரிவாக ஆசிரியரால் பேசப்படுகின்றன. அவர்கள் பேசும் மாந்தராக இடம்பெற வில்லை.

செப்பு-வினா மரபு, வணிக மரபு, இரவின் கிளவி மரபு என்று பல கூற்று மரபுகளைத் தொல்காப்பியம் பேசியுள்ளது. கூறா மரபின, கேளா மரபினவும் குறிப்பிடப்படுகின்றன. மந்திர மரபு தொல்காப்பியத்தால்

குறிப்பிடப்பட்டுள்ளது. தெய்வம் பல இடங்களில் தொல்காப்பியத்தில் பேசப்பட்டுள்ளது. ஞாயிறு பேசுவதாகச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. இவ்வாறான கூற்று மரபுகளை எல்லாம் தொகுத்துத் திணையியல் கூற்றுமரபு என்று வகைப்படுத்த முடியாது. பாட்டிடை வைத்த குறிப்பு என்று சிலப்பதிகாரத்தைக் குறிப்பிடுவது தொல்காப்பியம் செய்யுளியிலில் பேசப்படும் கூற்று மரபாகும்.

மரபை எடுத்தாளுதல் என்பது படைப்பாளுமையோடு தொடர்புடையது. படைப்பின் சுயம் அல்லது தனித்தன்மை என்பது நவீன இலக்கியத்தைப் பொருத்தவரையில் மரபைப் பின்பற்றாதிருத்தல் என்பதாகும். பொதுத்தன்மையிலிருந்து விலகிச் செல்லுதல் என்பதாகும். மரபிலக்கியங்களைப் பொருத்தவரையில் மரபை ஒரு படைப்பு எவ்வளவு திறம்படப் பயன்படுத்திக் கொண்டுள்ளது என்பதைப் பொருத்து அதன் சிறப்பு மதிப்பிடப்படும். திணை இலக்கியக் கூற்று மரபைப் பின்பற்ற வேண்டிய கட்டாயம் காப்பிய இலக்கிய ஆக்கத்தில் இல்லை. சொல், தொடர், கூற்று என்பன மொழியில் இருக்கும் பொதுவழக்கு என்றபோதும் இலக்கியச் சூழலில் தனித்த பொருண்மையை உணர்த்துவனவாக உள்ளன. வாய்மொழி இலக்கிய மரபில் மீண்டு வருதல் உண்டு. செய்யுள் மரபிலும் அடிகள் அவ்வாறே ஒற்றுமையுடன் அமைந்துள்ளன. வழி நூல், சார்பு நூல், எதிர் நூல் எல்லாம் முதல் நூலை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவைகளாகும். முதல் நூல் கருத்துக்களை எடுத்தாள வேண்டும் என்பது இலக்கண நூலின் நூலாக்க விதியாக உள்ளது. தமிழ் மரபில் இலக்கியத்திற்கு அந்த விதி பொருந்துமா எனில் அது இலக்கிய வகைமைக்குள் அமையும் இலக்கியங்களுக்குப் பொருந்தி அமைகின்றது.

துணைநூல்கள்

1. அமிர்தகௌரி ஆ., 1989, சங்க இலக்கியத்தில் உரையாடல், பாரிநிலையம், சென்னை,
2. சுந்தரபாண்டியன் க., 2010, தமிழில் பொருளிலக்கண வளர்ச்சி, அய்யனார் பதிப்பகம், சென்னை
3. பதிப்புக் குழு, 1981, புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
4. மாணிக்கவாசகன் ஞா., 2005, சிலப்பதிகாரம் தெளிவுரை, உமா பதிப்பகம், சென்னை.
5. வசந்தாள் த., 1990, தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

9

இலக்கிய மொழியில் மகளிர் மெய்ப்பாடுகள்

மெய் என்றால் உடல். உடலில் நிகழும், உடல் நிகழ்த்தும் எந்த ஒரு நிகழ்வும் மெய்ப்பாடு ஆகும். உடல் நிகழ்த்தாத போதும் அந்த உடலை மையமாகக் கொண்டு புறத்தே நிகழும், நிகழ்த்தப்படும் நிகழ்வுகளும் அந்த உடலுக்கான மெய்ப்பாடுகள் என்றே கொள்ளவேண்டும். அந்த உடல் அறிந்திருந்தாலும் அறியாவிட்டாலும் புற நிகழ்வுகள் அந்த உடலுக்கான மெய்ப்பாடுகள் என்றே எடுத்துக்கொள்ளப்படவேண்டும். அந்த உடலை மையமாகக் கொண்டு புற நிகழ்வுகள் நிகழாத போதும், நிகழ்த்தப்படாதபோதும் அவற்றை அந்த உடல் தனக்கானதாக எடுத்துக் கொண்டால், அல்லது தனது உணர்வில் கொண்டுவருமானால் அந்த நிகழ்வுகளும் அந்த உடலின் மெய்ப்பாடுகள் என்றே எடுத்துக் கொள்ளப்படவேண்டும். ஒரு மெய்ப்பாடு என்பது ஒரு நிகழ்வு. அதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட சூழல் காரணிகள் இருக்கின்றன. ஆனால், அது சூழலில் நிகழ்வதில்லை. அந்த உடலில்தான் நிகழ்கிறது என்று மையப்படுத்த வேண்டியிருக்கும். மெய்ப்பாடு என்பது ஒரு சிக்கலான அமைப்பு என்று சொல்வதை விடப் பிரித்தறியப்படவேண்டிய பல்வேறு இழைகளால் ஆனது என்று சொல்லலாம். மெய்ப்பாடு என்பது ஒரு நிகழ்வாக இருக்கும்போது அது தனக்குள் மேலும் பல உள் நிகழ்வுகளைக் கொண்டிருக்கிறது. அதே போல ஒரு மெய்ப்பாடு என்பது வேறு ஒரு நிகழ்வின் பல நிகழ்வுகளுள் ஒரு உள் நிகழ்வாக இருக்கிறது. மெய்ப்பாடு என்பது ஒரு தொடர் நிகழ்வுதான். தானே தொடங்கித் தனக்குள் முடிவதில்லை. பல்வேறு இழைகளின் சேர்க்கையும் பிரிவும் சந்திக்கும் ஒரு முடிச்சில் மெய்ப்பாடு இருக்கிறது. மெய்ப்பாடு தோன்றுவதாகப் பொருண்மைப்படுத்திக்கொள்ளப்படுகிறது.

உணர்தல், உணராதிருத்தல், உணர்த்தல், உணர்த்தாதிருத்தல் என்று நான்கு வகைகளாக மெய்ப்பாடுகளைப் பிரிக்கலாம். உணர்தல்,

உணர்த்தல் என்று இரு வகைகளுக்குள் மெய்ப்பாட்டை அடக்கமுடியும். மெய்ப்பாடு என்பது இரு முனைகளுக்கு இடையில் நிகழ்கிறது. எந்த முனை எடுத்துக்கொள்ளப்படுகிறதோ, அந்த முனையின் மெய்ப் பாடாக ஒரு நிகழ்வு அமைந்துவிடும். மற்றொரு முனை காரணியாகவும் சூழலாகவும் அமையும். மெய்ப்பாட்டுக்கான நிலைக்களன் என்று மற்றொரு முனையைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நிலைக்களன் என்பது சூழல்தான்.

தொல்காப்பியம், சங்க இலக்கியம் மற்றும் பிற செம்மொழித் தமிழ்ப் படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு இயற்கையின் பாதிப்புக்கு ஆண்களைவிடப் பெண்களே அதிகமாக உள்ளாகிறார்கள் என்றும், ஆண்கள் இயற்கையின் பாதிப்பைவிடச் சமூகத்தின் பாதிப்புக்கு அதிகமாக உள்ளாகிறார்கள் என்றும் பொதுமைப்படுத்தலாம். ஆதிக்கம் நிறைந்தவர்களைவிட ஆதிக்கம் குறைந்தவர்கள் இயற்கைப் பாதிப்புக்கும் சமூகப் பாதிப்புக்கும் உள்ளாகிறார்கள் என்றும் பொதுமைப்படுத்தலாம். இயற்கைக்கும் சமூகத்தின் ஆதிக்க மையத்திற்கும் இடையில் ஆதிக்கம் குறைந்த குழுக்கள் வினை ஊக்கிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. போரில் மறவர்கள் விழுப்புண்பட்டு இறப்பதற்கும் பெண்கள் கூதிர்காலத்தில் துன்புறுவதற்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள் அதிகாரத்தி லிருந்து தப்பிச்செல்ல முடியாதவர்கள். காமத்தால் துன்புறுகிற தலைவி தலைவனால் தழுவப்படவேண்டும் என்பதே சமூக விதி. வீரத்தால் புகழடைய வேண்டிய மறவன் போரில் தலைவனுக்காக உயிரை விடவேண்டியது என்பது அரசியல் விதி. வீரம், கற்பு என்ற வேறுபாடு இருந்தபோதும் சமூக மதிப்புகளால் கட்டுண்ட நிலையில் இருவரும் இருக்கிறார்கள். நெடுநல்வாடையின் தலைவியும் போர் மறவர் களும் இவ்வாறுதான் காட்டப்படுகிறார்கள். புறநானூற்றில் மூதின் முல்லைத் துறையிலும் உவகைக் கலுழ்ச்சித் துறையிலும் முதுமகளிர் தங்கள் மகன்கள் இறந்துவிட்டதற்காக மகிழ்ச்சி அடைவதாகக் காட்டப்படுகிறார்கள்.

போர் வரும்போது “போகாதே போகாதே என் கணவா” என்று பாடுகிற மனைவியர் மரபு நாட்டுப்புறத்துக்குரியது. அல்லது இயல் பானது. இது செவ்வியலுக்குப் பொருந்தாது. புலவர்கள் இவ்வாறான பெண் மாந்தர்களைப் படைப்பது அரசியல் சார்பானது. அரசர்களைச் சார்ந்து இருக்கும் புலவர்கள் அரசு அதிகாரத்தைக் கட்டமைக்கிற நோக்கில் இவ்வாறான முதுமகளிரைப் படைத்து முன்மாதிரிகளாக உலவவிடுகிறார்கள் என்று கூறலாம். எந்த அளவுக்குக் கற்பு அதிகமாக

இருக்கிறதோ அந்த அளவுக்குக் கணவனைப் போரில் ஈடுபடுத்துவதற்குப் பெருமைப்படுகிறவர்களாக மகளிர் காட்டப்படுகின்றனர்.

....

தண்துறை ஊரன் பெண்டினை ஆயின்

பல ஆகுக நின் நெஞ்சின் படரே

....

கொன்முனை இரவூர் போலச்

சிலவாகுக நீ துஞ்சும் நாளே (குறுந். 91)

தலைவனின் வீரச் சிறப்பை உயர்த்திக் காட்டத் தலைவியின் துயர்கூட வேண்டும் என்றும், அவள் தூங்காமல் போகட்டும் என்றும் அவ்வையார் புனைந்து கூறியுள்ளார். அரசியல், அரசு, அரசன், குடும்பம், கணவன், கற்பு முதலான பல உட்கூறுகள் இந்த மெய்ப்பாட்டில் உறவுடையனவாக உள்ளன. வினை ஆடவர்க்கு உயிர் என்றும், ஆடவர் மனைவிக்கு உயிர் என்றும் வலியுறுத்தும் வேலையை அக இலக்கியம் செய்கிறது. புற இலக்கியம் பொருள், அரசன் முதலானவை தலைவனுக்கு உயிர் என்று உணர்த்துகிறது.

ஒரு பெண் கணவன் இல்லாமல் வாழ்வது நுகர்வுகள் அற்ற வாழ்வாகவும் இருக்கிறது. கைம்பெண் நெய் கலவாத நீர்ச் சோற்றினையும் எள் துவையலையும் புளி சேர்த்த வேளைக் கீரையையும் உண்ணவேண்டும். பருக்கைக் கல்மேல் படுத்துத் துயில வேண்டும். இந்த நுகர்வுகள் அற்ற வாழ்வைவிட ஈமத்தீயில் கணவன் உடலுடன் உடன்கட்டை ஏறிவிடுவது மேலானது என்று பூதப்பாண்டியன் தேவி கூறுகிறாள் (புறம். 246). கணவன் வேற்று ஊருக்குப் பிரிந்து சென் றிருக்கும்போதும் ஒரு பெண் தன்னை ஒப்பனைப்படுத்திக் கொள்ள முடியாதவளாக இருக்கின்றாள். ஆண் துணை இல்லை என்றால் நுகர்வுகளை விட்டுவிட வேண்டும் என்ற மரபு இருந்து வருகிறது. எல்லாப் பெண்களுக்கும் உரியதாக இது இருந்தது என்றில்லை. தமிழ் மக்கள் வழக்கில் மறுமணம்கூட இருந்து வந்திருக்கிறது. தீர்த்துக் கட்டும் வழக்கும் இருந்துவருகிறது. கணவன், மனைவி இருவரில் ஒருவர் இறந்து மற்றவர் வாழ்ந்து வருந்தும் தாபத நிலை, தபுதார நிலைகள் தொல்காப்பியத்தில் விவரிக்கப்படுகின்றன. இலக்கியத்தில் அவை பாடுபொருளாக எடுத்துக் கொள்ளப்படவில்லை.

தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமையும் புறப்பாடல்களும் தன்னுணர்ச்சிப் பாடல்களாகக் கருதப்படும் சில அகப்பாடல்களும் மெய்ப்பாட்டு நோக்கில் கவனத்திற்குரியவை. வெள்ளிவீதியார், அவ்வையார், ஆதிமந்தியார் காதல் பாடல்கள் பெண்ணின் உணர்வு,

எண்ணங்களை முன்வைக்கும் உடல்மொழியாக இருந்துவருகின்றன. புறப்பாடல்கள் உண்மைத் தன்மையும் அகப்பாடல்கள் கற்பனையும் கொண்டு படைக்கப்பட்டனவாகும். நக்கண்ணையார், பேகன்-கண்ணகி உறவு குறித்த பாடல்கள் குறிப்பிடத்தக்க அக உறவுகளைப் பற்றிப் பேசுகின்றனவாக இருக்கின்றன. அவ்வை, பாரிமகளிர் முதலானவர்களின் கையறு நிலைப் பாடல்கள் இறப்பின் பின் உரிய மாந்தரின் அவலத்தைப் புலப்படுத்துவனவாக உள்ளன.

மெய்ப்பாடுகளை பல்வேறு பகுப்புகளின் அடிப்படையில் பார்க்க வேண்டும். பால், வயது, சாதி, மதம், குடும்பம், அரசு, கலை, தொழில், சமூகம், நம்பிக்கை, சடங்கு, இலக்கிய மரபு, வாழ்வியல் இயல்பு, இலக்கண மரபு, மாந்தர் வகை, வெளி, காலம், மனிதச் சூழல், இயற்கைச் சூழல் என்று அடிப்படைகள் பலவாகும். மொழி, மொழி அல்லாத செயல் என்றும் மெய்ப்பாடு பிரித்து அறியப்படவேண்டும்.

ஆண், பெண் என்ற பால் வேறுபாட்டுக்கு ஏற்ப மெய்ப்பாடுகளும் வேறுபடுகின்றன. பெருமையும் உரனும் ஆணுக்கும் அச்சமும் மடனும் நாணும் முந்துறுத்தலும் பெண்ணுக்கும் உரிய மெய்ப்பாடுகளாகத் தொல்காப்பியத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. பேதைமை, அறியாமை பெண்ணுக்குரிய இலக்கணமாகிறது. அறிவில் தோழி தலைவியைவிடச் சிறந்தவளாக இலக்கண, இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கிறாள். மாந்தரின் வகையில் கிழத்தி, பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தி, காமக் கிழத்தி, காமப்பரத்தை, காதல் பரத்தை என்றும் களவுத் தலைவி, கற்புத் தலைவி, முது தலைவி என்றும் செவிலி, நற்றாய், தோழி, ஊர்ப்பெண்டிர் என்றும் விறலி என்றும் பெண் பிரித்துக் கொள்ளப்பட்டு அவளின் மெய்ப்பாடுகள் பார்க்கப்படவேண்டும். ஆனால் தலைவி, தோழி முதலானவர்களை மையமிட்டு இலக்கிய உருவாக்கம் நிகழ்ந்திருப்பதால் அதுவும் வரையறுக்கப்பட்டு உரிப்பொருளைவிட்டு விலகிச் செல்லாமல் இலக்கியப் பொருள் இருப்பதால் பலதரப்பட்ட மனிதப் பெண்களின் மெய்ப்பாடுகளை ஆராய்வதற்குரிய தரவுகள் திணை இலக்கியங்களிலும் மரபு இலக்கியங்களிலும் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. முதுபெண்ணும் சிறுமியும் அகப்பொருளில் நேரடியாக வருவதில்லை. களவு, கற்பு வாழ்வியல் ஒப்பீடுகளில் தலைவி சிறு பருவத்தவளாக இருந்ததுவும் முதிய பருவத்தாளாக இருக்கப்போவதும் ஒப்பிட்டுப் பேசப்படுகின்றன. பேதைமை நிலையிலிருந்து கற்புக்கு வரும்போது தலைவி அறிவு பெற்றவளாக மாறுகிறாள். வரைவுப் பருவ நிலையில் முதுமை நிலையிலும் கணவனால் கைவிடப்படாத வாழ்வைப் பெறவேண்டியவளாக வலியுறுத்தப்படுகிறாள்.

நம்பிக்கை சார்ந்தும் மெய்ப்பாடுகள் பேசப்படவேண்டியனவாக உள்ளன. தோள், கண் முதலான உறுப்புகளில் வலமும் இடமும் பெறும் துடிப்புகள் நன்மை, தீமையின் அறிகுறிகளாகப் பார்க்கப்படுகின்றன. மனிதரின் கருத்து இன்றி அந்த மனிதரின் உடலில் நிகழும் மெய்ப்பாடுகள் இயற்கையின் அல்லது விதியின் உந்துதலால் நிகழ்கின்றன என்றாகிறது. இயங்கு தசையும் இயக்கு தசையும் எண்ணமின்றியும் எண்ணத்தோடும் செய்யும் செயல்களும் பிரித்து அறியப்படவேண்டியவைகளாகின்றன. தெய்வம் ஏறப்பெற்றுப் பெண்கள் ஊடகமாக இருப்பது, மாறுவேடம் கொள்வது, இயற்கை இகந்த ஆற்றல்களைப் பெறுவது என்பனவும் பேசப்படவேண்டும். இலக்கியத்தில் கதை மாந்தராக வருவதோடு, சிற்பம், ஓவியம் முதலானவற்றில் பதிவு பெற்றுள்ளது என்ற வேறு வகையிலான வடிவங்களிலும் பெண்கள் மெய்ப்பாடுகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். கூத்து, நாடகம் முதலான வடிவங்கள் தரவுக் களங்களாக அமையும். இலக்கண நூல்களில் பேசப்பட்டுள்ள அளவு இலக்கியங்களில் பெண்களின் மெய்ப்பாடு கட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை. வாழ்வில் உள்ள பெண்களின் மெய்ப்பாடுகள் எல்லாம் இலக்கியத்தின் பாடுபொருளாக எடுத்துக்கொள்ளப்படவுமில்லை. குறிக்கோள் மாந்தர்கள்தான் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் தரவுக்களங்களாகக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு பெண்ணின் இயல்பு நிலை அவளின் மெய்ப்பாடாகுமா என்ற கேள்விக்குப் பதில் ஆம் என்பதே. ஒரு பொருள் இருப்பது அந்தப் பொருளின் மெய்ப்பாடாகவே கொள்ளப்படவேண்டும். இன்மையும்கூட ஒரு பொருளின் மெய்ப்பாடாகும்போது இருப்பது மெய்ப்பாடாகவே இருக்கமுடியும். திரிபு நிலைதான் வழக்கமாக மெய்ப்பாடாகக் கொள்ளப்படும். அதுவும் செயலின்றி இருக்கும் பொருள் பயன்படுத்தப்படுவதற்கு எளிதானதாக இருந்துவிடுகிறது. பெண் ஆணைவிடச் செயலின்றி இருப்பவளாக அறியப்படுபவள். கற்பு என்றதன் வரையறைக்குள் ஒன்று அவள் எந்த ஆணின் உள்ளத்திலும் இடம்பெறாதவளாக இருக்கவேண்டும் என்பது. ஒரு பெண் இருந்துவிடும் போது அவளை யாராவது காதலிக்கவோ, வல்லுறவுக் கொள்ளவோ நேரிடுகிறது. மடல் ஏறுவதன் மூலம் தன் காதலைத் தலைவன் ஊருக்கு வெளிப்படுத்துவது தலைவிக்கு இழிவைத் தருவதாகும் என்று தலைவன் கூறுகிறான்:

மா என மடலொடு மறுகில் தோன்றித்
தெற்றெனத் தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிவு தலைவரினே (குறுந். 32)

ஒரு பெண்ணை விரும்புவதாக ஒரு ஆண் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்போது அவள் கற்பிழந்தவளாக ஆவதில்லை. ஆனால் பிற ஆண்களால், சமூகத்தால் அவள் எச்சில் வைக்கப்பட்ட பொருளாகப் பார்க்கப்படுகிறாள் என்பதாகும். உறவுக்குரியவர்களாக இருந்தால் வல்லுறவுக் கொள்ளப்பட்டவள் வல்லுறவுக் கொண்டவனுக்கு மணமுடிக்கப்படும் மரபு தமிழ் மரபு.

ஆனால், ஒரு பெண் தன் காதலை அவ்வாறு வெளிப்படுத்த முடியாது. மண் பானையில் வைக்கப்பட்ட நீர் போல அவள் காதல் உணர்வு அவள் அறியாமல் கசிந்து வெளிப்படவேண்டும் என்று தொல்காப்பியம் கூறுகிறது. நக்கண்ணையார் தன் காதலை,

அடிபுனை தொடுகழல் மைஅணல் காளைக்கு என்
தொடி கழித்திடுதல் யான் யாய் அஞ்சுவலே
அடுதோள் முயங்கல் அவை நாணுவலே - *(புறம். 83)*

என்று வெளிப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் முடியாத நிலையில் இருப்பதாகக் கூறுகிறார். உடல் பாதிக்கப்படாதவாறு கட்டுப் படுத்தப்பட முடியாத காதல் வெளிப்படுத்தப்படவும் முடியாமல் கட்டுப்படுத்தப்படவேண்டியதாக இருக்கிறது. அகப்பாடல் தலைவிக்கு இது பொருந்தும்.

கட்டுப்படுத்துவது, மறைப்பது, வெளிப்படுத்துவது, மற்றொன்றாக வெளிப்படுத்துவது என்று பல முறைகளுடன் மெய்ப்பாட்டுக்கு உறவு உள்ளது. உண்மைக்கும் பொய்க்கும் உள்ள உறவும் மெய்ப்பாட்டுடன் தொடர்புபடுத்தப்பட வேண்டும். உண்மையின் அளவும் மெய்ப்பாட்டின் அளவும் தொடர்புபடுத்தப்பட வேண்டும். மிகையும் குறையும் இருக்கலாம்.

இயற்கையின் மெய்ப்பாடு, சமூகத்தின் மெய்ப்பாடு, சாதி, வருணங்களின் மெய்ப்பாடு என்று அமைப்புகளின் மெய்ப்பாடுகளைப் பற்றியும் பேசவேண்டியுள்ளது. கார்காலத்தின் மெய்ப்பாடு, அலர் மெய்ப்பாடு என்று மெய்ப்பாட்டை விரிவுபடுத்திப் பெண்களின் மெய்ப்பாட்டுடன் தொடர்புபடுத்த வேண்டியுள்ளது.

துணைநூல்கள்

1. பசுபதி ம.வே., 2010, *செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள்,* தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
2. முருகேச பாண்டியன் ந., 2005, *சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகள்,* மருதா, சென்னை.

10

அல்ல கூற்றுமொழியும் அல்ல பொருள்மொழியும்

தலைவனைத் காதல் தலைவி கண்டு நாணி இருக்கும்போது, கூற்று நிகழ்த்தவும் உரையாடவும் இயலாமல் நிற்பாள் என்றும் அப்போது அவளிடத்தில் அல்லகூற்று மொழி நிகழும் என்றும் தொல்காப்பியம் (தொல். பொருள். களவு. 20) குறிப்பிடுகிறது. அல்லகூற்றுமொழி என்ற விரிந்த வடிவத்தின் தொகைமொழி "அல்கூற்றுமொழி" ஆகும். அல்கூற்று மொழி என்பது மெய்ப்பாடுதான். ஆனால் மெய்ப்பாடுகள் எல்லாம் அல்கூற்றுமொழிகள் அல்ல. அல்கூற்றுமொழிகள் எல்லாம் மெய்ப்பாடுகள் ஆகும். ஒருவர் மொழி பேச முடியாத நிலையில் மொழி பேச நினைக்கும் நிலையில் அவர் உடல் வழி வெளிப்படும் மொழிப் பொருண்மைக்கும் இயல்பாக உடலிலிருந்து வெளிப்படும் பொருண்மைக்கும் வேறுபாடுகள் உள்ளன. இயல்பாக உடல் தூண்டுதலின்படி வெளிப்படும் பொருண்மைக்கும் மனதில் எண்ணத் தில் தோன்றி வெளிப்படும் பொருண்மைக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. உடலிலிருந்து புலப்பட்டுக்கொண்டிருக்கும் மெய்ப்பாடுகள் எல்லாம் மனதில் தோன்றிப் பிறகு உடல் வழி வெளிப்படுகிறது என்பது பொருத்தமானதன்று. உடலின் அனுபவங்களைத்தான் மனம் உணர்கிறது. உடலின் அனுபவம் உள்நோக்கிச் சென்று மனதையும் வெளி நோக்கிச் சென்று புற உலகையும் மெய்ப்பாடாக அடைகிறது. அந்த உணர்வுகளை மனம் எவ்வாறு உணர்கிறதோ அதுபோலப் புற உலகும் அறிகிறது. இனிப்பு, புளிப்பு, கரிப்பு முதலான உணர்வுகள் பொருள்களை உடல் உணரும்போதே தோன்றிவிடுகின்றன. மனதிற்கும் மூளைக்கும் சென்று பிறகு அவை மெய்ப்பாடாக வெளியேறுகின்றன என்பதில்லை. உடலின் உணர்வு மனதிற்குச் செல்லவேண்டும் என்பது கட்டாயமில்லை. மனம் உடலைத் தோற்றுவிக்கவில்லை. உடல்தான் மனதைத் தோற்றுவிக்கிறது. மெய்ப்பாடு உடலிலிருந்து மூளையை

நோக்கி, உள்நோக்கிச் செல்லும் எந்த ஒரு படிநிலையிலும் தோன்றி, எதிரொளித்து வெளிப்படுவதாக இருக்கலாம்.

மொழி என்பது ஒலி வடிவில் இருந்தாலும் வரி வடிவில் இருந்தாலும் அது மனதாலும் அறிவாலும் தோற்றுவிக்கப்படுகிறது. அறிவு மனதில் மெய்ப்பாடுகளுள் ஒன்று. பொருண்மையும் மொழியும் மனதில் இருந்து கொண்டிருக்கும்போது, மொழி பொருண்மையாகவும் பொருண்மை மொழியாகவும் மாறிக்கொள்ளமுடிகிறது. ஒன்றை மற்றொரு வடிவில் வெளியிடமுடியும். மெய்ப்பாடுகள், உணர்வுகள், புரிதல்கள், அனுபவங்கள் தோன்றும்போது அவை பொருண்மைகளாக்கப்பட்டு உடல்வழி மொழியாக வெளிப்படவேண்டுமானால் மொழி என்ற ஒன்று கட்டாயமாக இருந்தாகவேண்டும். மொழி வெளிப்படும்போது, தனக்கான உணர்வு, மெய்ப்பாடுகளுடன் சேர்த்து வெளியிடப்படலாம். வளர்ந்த நாகரிகமுடைய மனிதன் மொழியில் வெளிப்படுத்தும் கருத்துக்கும் உணரும் உணர்வு, மெய்ப்பாட்டுக்கும் இடையில் உண்மைத் தன்மையைப் புலப்படுத்தாமல் இருக்கலாம். பொய்யானவைகளாக மெய்ப்பாடு இருக்கலாம். மொழி மெய்யாக இருக்கலாம். மொழி பொய்யாக இருக்கலாம். மெய்ப்பாடு உண்மையாக இருக்கலாம். ஒரு விலங்குக்கு அப்படிப் பொய்யான ஒரு மெய்ப்பாட்டை வெளிப்படுத்திக் காட்டமுடியாமல் இருக்கலாம். ஒரு விலங்கின் உணர்வும் அனுபவமும் மெய்ப்பாடாக வெளிப்படும்போது, அந்த மெய்ப்பாடு அல்கூற்றுமொழி எனப்படுவதில்லை.

அல்கூற்றுமொழி என்பது மொழி வழியே வெளிப்படுத்தப்பட வேண்டிய பொருண்மை மொழி வழியே வெளிப்படுத்தப்படாமல் மெய்ப்பாட்டு வழியே மட்டும் வெளிப்படுத்தப்படுவதைக் குறிக்கும்.



இரண்டுக்கும் இடையில் பதிலீட்டு உறவு இருக்கும். ஒரு விலங்குக்கு மொழி என்பது இல்லாததால்அதன் மெய்ப்பாட்டு வெளிப்பாட்டில் பதிலீட்டு உறவு இருக்காது. மனித உணர்வும் மொழியும் ஒன்றை ஒன்று சார்ந்து வெளிப்படும்போது அந்த இரண்டுக்கும் இடையில் பதிலீட்டு உறவு இருக்காது. தொடரியல் உறவுதான் இருக்கும். மொழிக்கும் மொழி அல்லாத மெய்ப்பாட்டுக்கும் இடையிலான தொடரியல் உறவாக இது இருக்கும்.

மனம், மொழி, எண்ணம் முதலானவை தானே இயங்கும் நிலைக்கு வந்துவிட்டபிறகு மனம் என்ற எல்லைக்குள் நிகழும் நிகழ்வுகள் உடல் வழியே வெளியே புற உலகுக்கு மெய்ப்பாடாக வெளிப்படலாம். மனம், உடல், புற உலகு என்ற மூன்று தளங்களிலும் செயல்கள் தனித்து நிகழ்ந்து அவை மற்ற இரண்டின் வழியாகவும் செல்லக்கூடியதாக இருக்கலாம். உடலும் ஒரு தளமாக இருக்கிறது. புற உலகும் மன உலகும் தொடர்பு படாமல் உடல் என்ற எல்லைக்குள் நிகழும் நிகழ்வுகள் இரு புறமும் அகமாகச் சென்று மனதையும் புறமாகச் சென்று உலகையும் அடையலாம். மொழி என்பது மனதுடன் தொடர்புடையது என்பதால் அது உடல் அளவில் நிகழக்கூடியது அன்று. ஆனால் சாரியை, குற்றியலுகரம், எழுத்துப்பேறு முதலான மொழிக் கூறுகள் தோன்றுவதற்கு உடல்கூறு காரணமாக இருக்கிறது. அதாவது பேச்சுறுப்புகளின் செயல்பாடுகள் காரணமாக இருக்கின்றன. மனதில் அவை பொருண்மையற்றவை என்பதால் மனதிலிருந்து பிறப்பதில்லை. பொருண்மையுள்ள மொழிக் கூறுகளைப் பிறப்பிக்கும்போது, இடையிலோ, இறுதியிலோ இந்த ஒலிக்கூறுகள் பிறந்துவிடுகின்றன.

மெய்ப்பாடு என்பது உள்ளத்தில் தொடங்கிப் புலன், உடல் வழி வெளிப்படுவது என்ற கருத்து மரபாக இருந்துவருகிறது. பேராசிரியர் கூறுவது: "மெய்ப்பாடு என்பது பொருள்பாடு. அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல்" (*தொல்.பொருள். செய். பேரா. 1*). சமஸ்கிருத மரபில் ரசம், அபிநயம், பாவம் என்ற மூன்றும் உள்ளிருந்து புறத்தே அடுத்தடுத்துத் தோன்றும் உடல் நிகழ்வுகளாகப் பேசப்படுகின்றன. ரசம் என்பது சுவைக்கு இணையானது. இது உள்ளத்தில் நிகழ்வது. இளம்பூரணர் கருத்துப் பின்வரும் படத்தின்வழி விளக்கப்படுகிறது.

சுவை மனதிற்குள் நிகழ்வதாகக் கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பு மனதிற்கு வெளியே நிகழ்வதாகக் கொள்ளப்பட்டுள்ளது. மனம் என்பது வெற்று இடம். உடல் இல்லை என்றால் சுவை, உணர்வு எதுவுமில்லை. பரதர் அபிநயத்தை நான்கு வகைகளாகப் பகுத்துள்ளார்.



1. சாத்துவிகம்- மெய்ப்பாடுகளால் கருத்து உணர்த்துவது. *2.* ஆங்கிகம்- உடல் உறுப்புகளை அசைத்து அபிநயம் செய்வது. *3.* ஆஹார்யம்- வேடம், உடை முதலியவற்றால் கருத்து உணர்த்துவது. *4.* வாசி கம்- உரையாடலால் கருத்து உணர்த்துவது. மொழி வழியே கருத்து உணர்த்துவது இறுதியாக வைக்கப்பட்டுள்ளது. இது நாடகக் கலைக்கான விளக்கம் என்றபோதும் பொதுவாகவும் கொள்ளத்தக்கது. இறுதி நிலையில் உள்ள மொழி வெளிப்படுத்தப்படாதபோது, அல்ல கூற்றுமொழி தோன்றும் எனலாம். சமஸ்கிருத மரபில் ரசம் என்பதன் தோற்றுவாயாகச் சுவை குறிக்கப்படுகிறது. சுவை என்பது உடல் வழியே உள் நுழையும் பொருள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய புலன் உணர்வு என்று வரையறுத்துக்கொண்டால் சரியாக இருக்கும். உடல் வழியே உள்ளே நுழையாத எதுவும் மெய்ப்பாடாக வெளிவரப் போவதில்லை. பொருள், நிகழ்வுகள் பற்றிய நினைவு, எண்ணம், கற்பனைகள் காரணமாகவும் ரசம் அல்லது மெய்ப்பாடு உடல்வழி வெளிப்படலாம்.

நோயுற்றுப் பேச வலிமையில்லாதபோதும் சைகை அல்லது மெய்ப்பாடு மூலம் கருத்தை உணர்த்த வலிமை உள்ளதாகிறது. சைகை அல்லது மெய்ப்பாடு மூலம் கருத்தை உணர்த்தமுடியாதபோது, பேச்சின் மூலம் கருத்தை உணர்த்த வலிமை உள்ளதாகிறது. இரண்டும் முடியாமல் போகும் நேரங்கள் உள்ளன. காமம் கிளர்ந்து எழுவதற்கும் பேச்சுச் செயலுக்கும் உள்ள தொடர்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறு வேறாக உள்ளது. பெண் பேச்சுச் செயலை இழந்துபோவது என்பது அவள் எல்லாச் செயல்களையும் இழந்துபோவதன் ஒரு கூறாக இருக்கலாம். ஒரு பெண் கொள்ளும் காம உறவு என்பது அவள் ஆணுடனான உறவை ஏற்றுக்கொள்வதில் இருக்கிறது. ஏற்றுக்கொள்ளுதல் என்பது ஒரு வினையாக இருந்தபோதும் பெண்ணைப் பொருத்தவரையில் தன்

உடலைக் கைவிட்டுவிடுவதாக இருக்கிறது. இது எந்த ஒரு செயலையும் செய்யாமல் இருந்துவிடுவது. தன்னை எவ்வாறு வேண்டுமானாலும் கையாள இடம்கொடுப்பதாக இது இருக்கிறது. உடல் அங்கங்களும் அணிகளும் ஆடைகளும் தளர்ந்து போவதாக மெய்ப்பாட்டியலில் களவு, கற்பு மெய்ப்பாடுகளுக்கான விளக்கங்கள் உணர்த்துகின்றன. இவை காம உணர்வுக்கு உள்ளான ஒரு பெண் தன் உடலைக் கைவிடும் நிலையில் உள்ள மெய்ப்பாடுகளாகும்.

அச்சம், மடன், நாண், முந்துறுத்தல் முதலான மெய்ப்பாடுகள் பெண்ணுக்குரியனவாகத் தொல்காப்பியம் பட்டியலிடுகிறது. இவை பெண்ணின் உணர்வு உந்துதல் பெற்று, வலுவான நிலையிலிருப்பதைப் புலப்படுத்துகின்றன. வலுவான நிலையில் தன் காமத்தைத் தீர்த்து நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியில் ஒரு பெண் ஈடுபடுவதற்குத் தடைகள் உள்ளன. ஒரு பெண்ணின் அதிகாரம் குறைவாக இருப்பது காரணமாகும். வர்க்க வேறுபாட்டிலும் வயது வேறுபாட்டிலும் அறிவு வேறுபாட்டிலும் வலுவானவரிடம் வலுவற்றவர் வெளிப்படையான கோரிக்கையை வைக்கமுடியாது. தீர்மானிக்கும் பொறுப்பு வலுவானவரிடம் எப்போதும் இருக்கிறது. கூடுதல் கூலியை ஒரு உழப்பாளி, ஏழை கேட்டுப்பெற முடியாது. கொடுக்கப்படுவதைக் கொடுக்கப்படுகிற அளவில் முரண்பாடு இன்றி வலுவில்லாதவர் ஏற்றுக்கொள்ள வேண்டியது என்பது அறமாக இருக்கிறது. போதாமையை வெளிக்காட்டிக்கொள்ள முடியாது. உணவாக இருந்தாலும் காம உறவாக இருந்தாலும் கற்பித்தலாக இருந்தாலும் கொடுக்கப்படுகிற அளவு நிறைவுதரக்கூடியதாக இருந்தாகவேண்டியுள்ளது. ஒரு மாணவன் ஆசிரியர் கற்பித்த அளவு, தரம் குறித்து வேறுபட்ட கருத்தை வெளிப்படுத்திக்காட்ட முடியாது.

ஒரு ஆணுக்குரிய மொழி பெண்ணுக்குரிய மொழியிலிருந்து வேறுபடுகிறது. கைக்கிளைக்கு இலக்கணம் தொல்காப்பியத்தில் பேசப் படுகிறது: காம உணர்வு கொள்ளும் பருவ வயது அடையாத இளம் பெண் ஒருத்தியைப் பார்த்துக் காத்துக்கொள்ள முடியாத காம உணர்வு கொண்ட ஆண் தன்னையும் அவளையும் பாலியல் உறவில் வைத்து இணைத்துப் பேசிக்கொள்வது கைக்கிளையாகும்(தொல். பொருள். அகத்.53). மனதில் பொருண்மை இருக்கும். அதை மொழி வடிவில் வெளிப்படுத்திக்கொள்ள முடியாத நிலையில் பெண் இருக்கிறாள். ஆனால் ஆண் அந்தப் பெண்ணின் மனதில் இல்லாததையும் அவள் உடலில் இல்லாததையும் இருப்பதாகப் புனைந்து உரைத்துக்கொள்வது நிகழ்கிறது. ஆணின் கூற்றில் பொருண்மை இல்லை. மொழி மட்டும் இருக்கிறது. பெண் கூற்றில் பொருண்மை இருக்கிறது. மொழி

இல்லை. இந்த ஆணின் கருத்துப் புலப்பாட்டை அல்பொருள் மொழி எனலாம். இது அல்கூற்று மொழிக்கு எதிரானது. அல் பொருள்மொழி என்று தொல்காப்பியத்தில் கலைச்சொல் இல்லை என்றாலும் கருத்து இருக்கிறது.

பொருளொடு புணர்ந்த நகைமொழி, பொருளொடு புணராப் பொய்மொழி என்ற இரு வகை உரை வகைமைகள் தொல்காப்பியத்தில் பேசப்படுகின்றன. கானம் மலர்ந்து கார் காலம் என்று உணர்த்தினாலும் தலைவி நம்ப மறுக்கிறாள். அது கார்காலம் இல்லை என்று கருதுகிறாள். மடம் என்ற பண்பின் காரணமாக இது நிகழ்கிறது. இயற்கையின் மெய்ப்பாட்டை அதன் பொருண்மையில் எடுத்துக்கொள்ளாமல் இருப்பதாக இது இருக்கிறது. உண்மையை உண்மை இல்லை என்றும் பொய்யை உண்மை என்றும் எடுத்துக்கொள்வது அல்லகூற்றுமொழியுடன் தொடர்புடையதாக இருக்கிறது. இயற்கைக்கு மனமும் மொழியும் இல்லை. அதைப் பார்த்துப் பொருண்மைப்படுத்திக்கொள்வது அல்கூற்று மொழி, அல்பொருள்மொழி என்று எடுத்துக்கொள்ளப்படலாமா என்ற கேள்வி எழுகிறது. காயா, கனியா என்றும் பூவா, அரும்பா என்றும் பொருண்மைப்படுத்திக்கொள்ளக் காரணமான கூறுகள், பண்புகள் மொழியாவதற்கில்லை. ஆனால் உலகப் பொருண்மை என்பது மொழிப் பொருண்மையினால்தான் கட்டமைக்கப்படுகிறது.

அல்கூற்றுமொழி ஒரு பெண்ணின் உடல் வலுவிழக்கும்போதும் நிகழ்கிறது. வலுவடையும் போதும் நிகழ்கிறது. இரண்டுக்கும் காரணமாக இருப்பது காமம் என்ற ஒரு உணர்வுதான். அதைப்போல ஆணுக்கும் நேர்கிறது. பரத்தையர் பிரிவு காரணமாகத் தலைவன் இல்லம் திரும்பும்போது, மொழி ஒழிந்து நிற்கிறான்.

அல்கூற்றுமொழி, அல்பொருள்மொழி என்ற வேறுபட்ட கலைச் சொற்கள் மெய்ப்பாட்டுடன் தொடர்புடையவை என்றாலும் மொழி பேசுகின்ற மனித இனத்துக்கு மட்டும் பொருந்துவதாகக்கொள்ள வேண்டும். மீண்டும் வலியுறுத்திக்கூற வேண்டியது அல்கூற்றுமொழிகள் எல்லாம் மெய்ப்பாடுகள் ஆகும். ஆனால் மெய்ப்பாடுகள் எல்லாம் அல்கூற்றுமொழிகள் ஆகா. இந்த வேறுபாட்டைத் தொல்காப்பியம் ஏதோ ஒரு உள்ளுணர்வில் அல்லகூற்றுமொழி என்ற தொடரில் பதிவு செய்துவிட்டுச் சென்றுள்ளது.

துணைநூல்கள்

1. பதிப்புக் குழு, *1981*, தொல்காப்பியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை

2. பதிப்புக் குழு, *1981*, குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை

3. வெள்ளை வாரணன் க.(உரைவளம்), *1989*, தொல்காப்பியம் செய்யுளியல், பதிப்புத் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை

4. ஸ்ரீராம தேசிகன் எஸ். என்.(தமிழாக்கம்), *2008*, பரதநாட்டிய சாஸ்திரம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,

11

இலக்கிய மையப்பொருளும் இலக்கியக் கூறுகளும்

ஏதேனும் ஒரு பாத்திரத்தை மையமாக வைத்து எழுதப்படும் இலக்கியங்களில் இடம்பெறும் இடம், காலம், பொருள்கள், உயிரிகள், பிற மனிதர்கள் எல்லாம் அந்த மையப் பாத்திரத்தைச் சிறப்பித்து வந்தனவாக அமைவது இலக்கிய மரபாக இருந்து வருகிறது. தேவாரப் பாடல்களில் சிவபெருமான் மையமாக இருப்பார். கம்பராமாயணத்தில் ராமன் மையமாக இருப்பான். மையத்தை நோக்கிப் பிற கூறுகள் இடம்பெறுவதில் ஒரு படிநிலையைக் காணமுடியும். மையப்பாத்திரத்தின் மனம், எண்ணம், உணர்வு, உடல் அமைப்பு, அணிகள், உடைகள், உடைமைகள், மனித உறவுகள், மையப்பாத்திரத்தின் செயல்கள் என்று படிப்படியே அவற்றை விரித்து வகைப்படுத்தலாம். இவற்றுள் எந்தக் கூறு விரிவாகவும் மிகுதியாகவும் மீண்டும் மீண்டும் பேசப்பட்டுள்ளது என்பதை எண்ணிக்கை முறையில் கண்டறிய முடியும்.



இலக்கிய மையப்பொருளும் பிற பொருள் உறவுகளும்

குறிப்பிட்ட காலமோ, குறிப்பிட்ட இடமோகூட மையப்பாத்திரத்தை உயர்த்தும் நோக்கில் இலக்கியப் படைப்பாளியால் தேர்ந்தெடுக்கப் பட்டதாக இருக்கும். கருப்பொருள்கள், உடைமைப் பொருள்கள், மனித மற்றும் இயற்கை உறவுகள், உடல், உணர்வு, எண்ணம், மனம், அணி, ஆடை வழியே ஒரு பாத்திரம் மையப்படுத்திப் பேசப்படும்போது, அதற்கான காரணங்கள் விளங்கிக்கொள்ளப்பட வேண்டுமானால் அவற்றை அடைவுகளுக்கு உட்படுத்துவது சரியாக இருக்கும்.

இலக்கியக் கூறுகளுக்கும் மொழிக்கூறுகளுக்கும் உள்ள உறவும் இந்த விளக்கத்தில் தொடர்புடையன. மொழிப் பொருண்மை இலக்கியப் பொருண்மையைவிட நுணுக்கமானது. மொழிப்பொருண்மை இலக்கியப் பொருண்மையாவதும் மொழிக்கூறுகள் இலக்கியக் கூறுகளாவதும் விளக்கப்படவேண்டியனவாகும். இலக்கியத்தை ஆராய எடுத்துக் கொள்ளும்போது, அந்த இலக்கியத்தின் சொல்லடைவை உருவாக்கிக்கொள்வது துல்லியமான ஆய்வுக்கு வழி வகுக்கும். மொழிக் கூறுகள் பெயர், பெயரடை, வினை, வினையடை, இடைச் சொற்கள் என்று வகைப்படுவன. இந்த ஒவ்வொரு கூறும் இலக்கியத்தில் மையப்பொருளான பாத்திரத்துடன் நேரடியாகவோ, அடுக்கடுக்கான படிநிலைகளிலோ தொடர்புபடுத்தப்படவேண்டியனவாக அமையும். அவ்வாறு தொடர்புபடும்போதுதான் இலக்கியத்தின் பொருள் கட்டமைப்புப் புரிந்துகொள்ளப்படும். வினைச்சொற்களை எல்லாம் தொகுத்து அவை மையப்பாத்திரத்தின் வினைகள், துணைப்பாத்திரத்தின் வினைகள், பிற பாத்திரத்தின் வினைகள், பிற உயிரிகளின் வினைகள், உயிரற்ற பொருள்களின் வினைகள், இடம், காலம் சார்ந்த வினைகள் என்று பட்டியலிட்டுக்கொண்டு மைய வினையுடன் மற்ற எல்லா வினைகளையும் படிப்படியாகத் தொடர்புபடுத்தி அடுக்கடுக்கான உறவுகளைக் கட்டமைக்க முடியும். இவ்வாறு கட்டமைக்கும்போதுதான் அந்த இலக்கியத்தின் அமைப்புத் தெளிவான வரையறைக்குள் வந்தமையும். இலக்கியத்தின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிய, தொடர்புபடுத்திய நிலையில் முழுமையான புரிதல் கிடைக்கும்.

அவ்வையார் அதியமானைப் பற்றித் தனித்தனிதப் புறநானூற்றுப் பாடல்களில் பாடியுள்ளார். ஒரே பாடலில், ஒரே இலக்கியத்தில் ஒருவரைப் பற்றிய மொழி, இலக்கியக் கூறுகளைப் பகுத்து ஆராய்வதற்கும் தனித்தனிப் பாடல்களில் இடம்பெற்றுள்ள மொழி, இலக்கியக் கூறுகளைப் பகுத்து ஆராய்வதற்கும் வேறுபாடுகள் உள்ளன. எத்தனை அடிகளில் குறைந்து வந்தாலும் விரிந்து வந்தாலும் ஒட்டுமொத்தக் கருத்துகளும் படவிளக்கத்தில் கண்ட எட்டு வகையான

உள்ளடக்கத்திற்குள் அடங்குவனவாக இருக்கும். சான்றாக

ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்,
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும! எமக்கே; மற்று அதன்
துண் அருங் கடாஅம்போல
இன்னாய், பெரும! நின் ஒன்னா தோர்க்கே (புறம். 94)

என்ற செய்யுளில் உள்ள சொற்களை மேற்கண்ட எட்டுவகைக்குள் அடக்கலாம். குடிகள் (எமக்கு), பகைவர் (ஒன்னாதோர்), ஊர்ச் சிறுவர்கள், நின், பெரும (அதியமான்) என்று மனித வகைகள் இப்பாடலில் பேசப்படுகின்றன. களிறு என்ற அஃறிணைப் பொருள் பேசப்படுகிறது. நீர்த்துறை என்ற இடம் பேசப்படுகிறது. யானை என்பதன் உறுப்பு வெண்கோடு, அதன் பண்புகள் படிதல், இனிதாக இருத்தல், அரிதாக இருத்தல் என்ற பண்புகள் பேசப்படுகின்றன. யானை என்பதன் உடல், உறுப்பு, பண்புகள், செயல்கள் இந்தச் செய்யுளில் பேசப்படுகின்றன. அதியமான் மையமாக உள்ள ஒரு செய்யுளில் விரிவாக அதியமானைவிட யானை பேசப்படுகிறது. உவமை, உடைமை என்ற இரு உறவுகளின் அடிப்படையிலும் யானை இச்செய்யுளில் இடம்பெற்று அதியமான் என்ற மையப்பாத்திரத் தைச் சிறப்பித்து வரப்பயன்படுத்தப்பட்டுள்ளது. யானை என்பது அதியமானின் பட்டத்து யானை என்ற உடைமை உறவுக்குரியது. கால இடைநிலை, விகுதி, வேற்றுமை உருபு, அடைகள், உவம உருபு முதலான மொழிக்கூறுகளையும் மையப்பாத்திரத்துடன் தொடர்புபடுத்தி விளக்கவேண்டிய தேவை இருக்கிறது. போர்க்காலம், அமைதிக் காலம் என்றும் போர்க்களம், ஊர்க்களம் என்றும் கால, வெளி உறவுகள் இந்தச் செய்யுளில் ஒப்பிட்டுப் பேசப்பட்டுள்ளன. கூற்றுச் சூழலில் உள்ள புலவரும் அதியமானும் மக்களும் பகைவரும் தொடர்பு படுத்தப்படுகிறவர்களாக வந்திருக்கிறார்கள்.எல்லாவற்றிற்கும் மையமாக இருப்பது அதியமான் என்ற கருத்தாக்கமாகும்.

எந்த ஒரு இலக்கிய வகைக்கும் இந்தப் பொருள்பாகுபாட்டுக் கூறுகளும் மைய உறவும் பொருந்தி அமையும். புதுக் கவிதை, சிறுகதை, புதினம் என்ற வேறு இலக்கிய வகைகள் வரும்போது அவை மையப் பாத்திரத்தைச் சிறப்பித்து வராதனவாக இருந்தாலும் மையக் கருத்தைச் சிறப்பித்து வந்தனவாக இருக்கும். தேவாரம், பிரபந்தம் முதலான இலக்கியங்கள் தொகை இலக்கியங்களாகும். சான்றாக

தோடுடைய செவியன், விடை ஏறி, ஓர் தூ வெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளங் கவர் கள்வன்

ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே - (தேவாரம். 1)

என்ற செய்யுளில் வந்துள்ள சொற்களை

1. பெம்மான்(சிவன்), இவன், செவியன், விடை ஏறி, மதிசூடி, பூசி
2. செவி
3. தோடு, தூவெண்மதி, சுடலைப் பொடி, ஏடுடைய மலர்
4. உள்ளம் கவர் கள்வன்,
5. விடை
6. காடுடைய சுடலை, பிரமாபுரம்
7. ஏறு, சூடு, அருள் செய், மேவு
8. பணியப்படுதல், ஏத்தப்படுதல்

என்ற பொருண்மைப் பாகுபாட்டுக்கு உட்படுத்திப்பார்க்கும்போது மையப் பாத்திரமான சிவபெருமானுடன் பேசப்படும் பொருள்கள் எவ்வாறு உறவுபடுகின்றன என்று தெரியவரும். ஏறி, சூடி, பூசி என்ற சொற்கள் தொழில்பெயர்கள் ஆகும். உறுப்பு, அணி, செயல், பண்பு முலானவற்றின் அடிப்படையில் கடவுள் விளக்கப்படுதல் என்ற பண்புத் திரும்பத் திரும்ப வருவது தெரிகிறது. விடை என்ற உடைமைப் பொருளும் ஊர்தி என்ற முறையில் பேசப்படுகிறது. அடியவருடனான உறவை உள்ளம் கவர் கள்வன் என்ற உறவுச் சொல்லும் குறித்துவந்துள்ளன. ஒரு இலக்கியப் படைப்பை உருவாக்கும்போது மேற்கண்ட எட்டு வகையான கூறுகளுள் எந்தக் கூறுகள் எந்தக் காரணத்திற்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்று தெரியவரும்.

நன்னன் புகழ்பேசும் மலைபடுகடாமில் வரும் பெயர்ச்சொல் வினைச்சொற்களை எல்லாம் தொகுத்து ஆராய்ந்தால், அவை நன்னனைச் சிறப்பிக்கும் நோக்கில் அமைந்திருப்பதைக் காணலாம். ஒரு மையப் பாத்திரத்தைப் படைக்கும்போது, புலவன் தன் கூற்றில் அந்த மையப்பாத்திரம் நிகழ்வுகளை நடத்துவதாகக் கூறிச்செல்வது பொது மரபு. ஆற்றுப்படை இலக்கியங்கள் பாணர்களின் கூற்றுகளாக அமைகின்றதால் மையப்பாத்திரம் பேசப்படும் பாத்திரமாக அமைந்து வருகிறது. அந்தப் பாத்திரத்தின் கடந்த கால, எதிர்கால நிகழ்வுகள் பரிசில் பெற்ற பாணனால் நிறைவுபடுத்தப்படும். பரிசில் பெறப்போகிற பாணனின் நிகழ்கால நிகழ்வுகளாகவும், ஆற்றுப்படையில் நிகழ்வுகள் அமைவதில்லை. பாணன் செல்ல உள்ள வழி, பெற உள்ள சிறப்புகள் என்ற எதிர்கால நிகழ்வுகள் பரிசில்பெற்ற பாணனால் சொல்லப் படுபவைகளாக உள்ளன.

செல்லும் வழியில் உள்ளவற்றைப் பேசுவது ஆற்றுப்படை இலக்கிய மரபாக இருக்கின்றது. செல்லும் வழியில் உள்ளவற்றைச் சிறந்தவை என்று பேசுவதன் மூலம் மையப்பாத்திரத்தின் சிறப்புக்களை வெளிப்படுத்த வேண்டும் என்பது புலவனின் நோக்கமாகும். செல்லும் வழியைப் பற்றிப் பேசுவதன் மூலம் ஒரு நாட்டின் எல்லைப் பரப்பை, உள்ளடங்கியுள்ள பகுதிகளைச் சொல்லி விளக்கமுடிந்ததாக இருக்கும். நாட்டு இயற்கை வளத்தைப் பேசுவதும் ஆற்றுப்படை இலக்கியத்தின் நோக்கமாக இருக்கிறது. நாட்டில் வாழும் பல வகைப்பட்ட மக்களைப் பற்றிப் பேசவேண்டும் என்பதும் ஆற்றுப்படை இலக்கியத்தின் நோக்கமாகும். புரவலரின் கொடைச் சிறப்பைப் பற்றிப் பேசவேண்டும் என்பது மட்டும் நோக்கமன்று. ஒரு படைமறவனோ, குடிமகனோ, காதலுக்கு ஏங்கும் மகளோ மையப்பாத்திரத்தைப் பற்றிப் பேசும் கூற்றில் இலக்கியத்தை ஆக்கியிருந்தால் அந்த இலக்கியத்தின் உள்ளடக்கங்கள் ஆற்றுப்படை இலக்கியத்தின் உள்ளடக்கத்திலிருந்து பெரிதும் வேறானவைகளாக இருந்திருக்கும். எனவேதான் பாணனின் கூற்றில் வைத்து மையப்பாத்திரத்தைப் புகழவேண்டும் என்ற நோக்குநிலை ஆற்றுப்படை இலக்கியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இலக்கியத்தின் வடிவம் எவ்வளவுதான் பெரிதாக இருந்தாலும் அவற்றின் உள்ளடக்கக் கூறுகளை மையப்பாத்திரத்தை அடிப்படையாக வைத்து, மனம், எண்ணம் சார்ந்த கூறுகள், உடல், உணர்வு சார்ந்த கூறுகள், அணிகள், ஆடைகள் சார்ந்த கூறுகள், உடைமை சார்ந்த கூறுகள், மனித உறவுகள் சார்ந்த கூறுகள, செயல்கள் சார்ந்த கூறுகள், கருப்பொருள் சார்ந்த கூறுகள், இடம் சார்ந்த கூறுகள், காலம் சார்ந்த கூறுகள் என்று ஏற்கனவே கூறியுள்ளபடி வகைப்படுத்திக்கொள்ள முடியும். மலைபடுகடாஅம் இலக்கியத்தின் தலைவனான நன்னனைப் பற்றிய செய்திகளையும் இந்தக் கூறுகளுக்குள் அடக்கிவிடலாம். ஒரு அரசனுக்குரிய சிறப்புக்களாக, அடையாளங்களாக படை, கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், தார், முடி(மகுடம்), குடி, கூழ்(பொருள்), அமைச்சு, நட்பு, அரண் (*தொல். மரபு. 72, குறள். 381*) முதலானவை பட்டியலிடப்படுகின்றன. இவ்வாறாக அரசனுக்குரிய இலக்கணங்களை நன்னன் சிறப்பாகக் கொண்டுள்ளான் என்று மலைபடுகடாம் பதிவுகளைக் கொண்டுள்ளது.

நன்னனின் உள்ளம், உடல், அணி, ஆடை என்று தொடங்கி விரிந்து செல்லும் பொருள் எல்லைகள் பாடுபொருளின் எல்லைக் களம் விரிவடையும்போது, உறவுகள், இயற்கை, நாடு, நகரம் மக்கள் என்று இலக்கியப் பொருளும் விரிவடைகிறது. ஒவ்வொரு பொருளும் காலமும் இடமும் நன்னன் சிறப்பை உணர்த்துவதற்காகவே மலைபடுகடாமில்

படைக்கப்பட்டுள்ளன. சான்றாக மலைபடுகடாமிலிருந்து கொள்ள வேண்டிய யானை பற்றிய கருத்தாக்கங்கள் வருமாறு:

நன்னனின் மறவர் பகைவரது யானைப்படையை அழித்தனர்.
பாகர்கள் குழிக்குள் விழுந்த யானைக்கு மொழிகற்றுக் கொடுக்கும் ஓசை வரும் (மலை. 324-27).
யானையை விழுங்கி வலிமை அழிக்கும் அளவு விழுந்து கிடக்கும் மரம்போன்ற பாம்பு பாணர் செல்லும் வழியில் உள்ளது (மலை. 211-12).
வழியில் அழைத்துச் செல்லப்படும்போது பாயும் புலிக்கு அஞ்சி கருவுற்ற பெண்யானை பிளிறும் (மலை. 306-310).
யானை, பாணர்க்குப் பரிசிலாகக் கொடுக்கப்படும்.
யானைத் தந்தங்களை வேடர்கள் ஊன்றி வைத்திருப்பர் (மலை. 154).
தொலைதூரத்தில் உள்ள பகைவரது யானைப்படையை நன்னனின் மறவர் வெல்வர்(மலை. 86-88).
தம்முள் போரிட்டு இறந்த யானைக் கொம்புகளைக் காவு மரமாகக் கானவர் பயன்படுத்துகின்றனர்(மலை. 154).
அகழிகளில் வலிய யானைகளை விழுங்கும் முதலைகள் உள்ளன (மலை. 211).
குறவர் பரண் யானைக்கு எட்டாத உயரத்தில் அமைக்கப் பட்டிருக்கும்.

நன்னனின் யானைப்படை, பகைவனின் யானைப்படை, பாணர் வரும் வழியில் யானையினால் தீங்கு அச்சம், நாட்டு மக்கள் வாழிடத்தில் யானையுடன் அவர்களுக்குள்ள முரண்பாடு என்று நேரடியாகவும், அடுத்த நிலையிலும் யானை நன்னனுடன் தொடர்புபடுகிறது. இயற்கை வளம் நிறைந்த நாடு நன்னனுடையது என்று விளக்குவதற்காக யானைகளும் புலிகளும் முதலைகளும் பாம்புகளும் அவற்றிற்கு இடையிலான முரண்களும் பேசப்படுகின்றன. விலங்கு, பறவை, மனிதர்கள், பிற இயற்கை நிகழ்வுகள் பல்வகையான ஒலிகளை எழுப்புவதாகத் தொகுத்துக் கூறப்படுகின்றன. பரிபாடல், சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களில் பல காரணங்களால் எழுந்து வரும் மணங்களும், ஒலிகளும் தொகுத்துக் கூறும் மரபு உள்ளது. ஒரு காடு என்பது ஐந்து வகை நிலங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பது இலக்கிய மரபாக உள்ளது. எயினர்களும் ஆயர்களும்

"கூப்பிடு கடக்கும் கூர்நல் அம்பின்
கொடுவில் கூளியர்...." (மலை. 421-22)

"துய்ம் மயிர் அடக்கிய சேக்கை அன்ன
மெய் உரித்து இயற்றிய மிதிஅதள் பள்ளி
தீத்துணை ஆகச் சேந்தனிர் கழிமின்" (மலை. 418-20)

என்று பாணர்களோடு தொடர்புபடுத்தப்படுகின்றனர். எயினர் கொடியவர்களாக இருந்தாலும் நன்னனைக் காணச்செல்லும் பாணர்கள் என்று அறிந்த பின்பு விருந்தோம்புகிறவர்களாகிவிடுகிறார்கள். கருப்பொருள்கள், காலம், இடம் முதலான தனித்தனிக் கருத்துக்கள் நன்னன் என்ற மையக்கருத்தைச் சிறப்பிக்கும் நோக்கத்திலேயே படைக்கப்பட்டுள்ளன.

நன்னனின் அதிகாரமும் நல்லுறவும் நன்னனின் நாடு முழுவதும் பரவிக் கிடக்கின்றன. அவன் புகழ் அவனது நாட்டுக்கு அப்பாலும் பரவிக்கிடக்கிறது என்ற கருத்துகள் மலைபடுகடாம் இலக்கியத்தில் எல்லாச் சொற்களிலும் பரவி நிற்கின்றன. கீழ்க்கண்ட மூன்று கூறுகள் வழி நன்னனைப் பற்றிய படிமம் தோற்றுவிக்கப்படுகிறது.

1. மனித சமூகங்கள்(திணை வாரியாக)
2. மனிதர்க்கு மேலான தெய்வ ஆற்றல்கள்
3. இயற்கைப்பொருள்கள்
   3.1. விலங்குகள், பறவைகள்
   3.2. தாவரங்கள்

நன்னன் நாட்டிற்குள் எயினர், ஆயர், கானவர் முதலான நிலம் சார்ந்த மக்கள் அனைவரும் நன்னனின் பாணர்களைத் தம் விருந்தினர்களாக ஏற்று ஓம்பி வழி அனுப்புகிறவர்களாக வருகிறார்கள். சிற்றூர்களுக்குச் செல்லும்போது,

"நும்மில் போல நில்லாது புக்கு
கிழவர் போல கேளாது கெழீ
சேட்புலம்பு அகல இனிய கூறிப்
பரூஉக்குறைப் பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்" (மலை.165-69)

என்று நடந்துகொள்ள வழிகாட்டப்படுகின்றனர். எயினர், ஆயர், கானவர்களைவிடச் சிற்றூர் மக்கள் அரசுடன் மேலும் நெருக்கமுடையவர்களாக இருப்பது இயல்பு.

பாணர்கள் செல்லும் வழியில் நடுகற்கள் காணப்படும் இடங்களை ஒட்டி நன்னனின் பகைவர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் நன்னனால் வெல்லப்பட்டவர்கள். கொல்லப்பட்டவர்களின் உறவினர்களாகவும் இருப்பதால் நன்னனைக் காணச்செல்லும் பாணர்களை அவர்கள்

தொந்தரவு செய்வதில்லை. மனிதர்கள் மீதான நன்னனின் ஆளுமை நட்பு, பகை என்ற இரு முறைகளில் இவ்வாறு மலைபடுகடாமில் வெளிப்படுத்தப்படுகிறது. பகைவர் என்பவர் வேற்றுநாட்டு எல்லைக்குள் இருக்கவேண்டியவர். இது உள்பகையாகும்.

மனிதர்களுக்கும் மேலான ஆற்றல் உடைய வானரமகளிர், வரை உறை தெய்வங்கள் பாணர் செல்லும் வழியில் இருப்பதாகச் சொல்லப் படுகின்றன. வானர மகளிர் விரும்பி முக்குளித்து நீராடும் அருவி, வரை உறை தெய்வங்கள் விரும்பும் கனி, மலர்கள் ஆகியவற்றை நெருங்காமல் செல்லவேண்டும் என்று பாணர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். பாணர்கள் அஞ்சவேண்டிய சூழல் நன்னனின் நாட்டிற்குள் இருந்தாலும் தெய்வத்தின் காரணமாக அது நிகழ்வதால் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று கருதப்படுகிறது. தெய்வத்தைத் தவிர வேறு யாரும் நன்னனைவிட ஆற்றல் வாய்ந்தவர்களாக அவன் நாட்டில் இல்லை. நவிர மலையில் இருக்கும் காரியுண்டிக் கடவுள் சிவன், வழியில் உள்ள மறவரது நடுகற்கள் பாணர்களால் வணங்கிச் செல்லப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டாலும், அவற்றால் பாணர்களுக்குத் தீங்கு இல்லை. மறவர்கள் போரில் இறந்துபட்டவர்களாதலால் நன்னனைவிட உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டவர்களாகிறார்கள். சாதாரணமாக இறந்தவர்கள் உயிருள்ள உயர்வானவர்களைவிட மேலானவர்களாகிறார்கள். மேல் உலகில் இருப்பவர்கள் வானுலகில் இருப்பவர்களாகிறார்கள்.

இயற்கைப் பொருள்களில் தாவரங்கள் பெரும்பாலும் பாணர்களுக்கு நன்மை தருவனவாகக் கூறப்பட்டுள்ளன. விலங்குகள் பெரும்பாலும் அஞ்சத் தக்கனவாகக் கூறப்பட்டுள்ளன. இறைச்சி என்ற முறையில் விலங்குகள் பாணர்களுக்கும் வாழிட மக்களுக்கும் உணவாகின்றன. புலி, யானை, பாம்பு, குரங்கு, முதலை முதலானவை தீங்கு தரும் விலங்குகளாகப் பட்டியலிடப்படுகின்றன. கருப்பொருள்களுள் விலங்குகள் பாணர்களுக்கு அச்சம் தருவன என்பது இயல்பானது. புலியும் மானும் ஒரே நீர் நிலையில் அருந்தும் என்றும் பாம்பும் கீரியும் அருகருகே விளையாடும் என்றும் வேறு இலக்கியங்களில் அவை மென்மைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு ஆட்சி சிறப்பானது என்றால் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள் முரண்பாடுகள் எதுவுமில்லாதிருப்பது இலக்கணமாகிறது. மனிதர்களுக்கு இடையில் உள் முரண்பாடு இல்லாமலிருப்பதும், அவர்கள் மைய ஆட்சியின் நல்லுறவை ஏற்றுக்கொண்டிருப்பதும் பாத்திரப்படைப்புகளில் வெளிப்படும். விலங்குகள், தாவரங்கள் மேலும் அவ்வாறு ஒரு மென்மைப்படுத்தலைப் புலவர்கள் தமிழ் இலக்கிய மரபில் திணித்து வந்திருக்கின்றனர்.

அதுபோன்ற ஒரு மரபு மலைபடுகடாமில் இடம்பெறவில்லை. ஆனால், தாவரங்களைப் பொருத்தவரையில் அந்த மென்மைப்படுத்தல் நிகழ்ந்திருக்கிறது. செடி, கொடி, மரங்கள், காய், கனி, மலர்களைத் தந்துத் தாவரங்கள் பாணர்களின் பசியைப் போக்குகின்றன. அவர்கள் தங்களை அழகுபடுத்திக்கொள்ள அவை உதவுகின்றன.

தாவரங்களில் பயிர்த்தொழில் சார்ந்தவை, பயிர்த்தொழில் சாராதவை என்று இரு வகைகள் பேசப்படுகின்றன. பாணர்கள் விரும்பியும் நெருங்கக் கூடாதனவாக தெய்வம் விரும்பும் குவளை மலரும் ஒருமுறை முகர்ந்தால் முகராதிருக்க முடியாத ஈர்ப்புடைய கனிகளும் மலர்களும் வழியில் (மலை. *261-64*) இருக்கின்றன. அவற்றைக் கடந்தவுடன் பாணர்கள் தம் நிறைவேறாத ஆசையைக் கானவர்களின் கனி, மலர் விருந்தோம்பலால் ஈடு செய்துகொள்கின்றனர்(மலை. *281-82*) நிறைவேறாத ஆசையுடையவர்களாகப் பாணர்கள் நீண்ட நேரம் இருக்கக்கூடாது என்பது நாட்டின் இலக்கணமாகிறது. அது மன்னனுக்கு இழிவைத் தரும்.

வன வளம் மிகுந்த நாடு என்று நன்னன் நாட்டை விளக்க வேண்டும் என்று புலவர் கருதியுள்ளார். வானர மகளிர் விரும்பு நீராடும் அருவியுள்ள நாடு, அருவியில் மூழ்கி அவர்களால் எடுக்க விரும்பத்தக்க வனப்பொருள்கள் உள்ள நாடு அது. அச்சம் தரத்தக்க மனிதர், தெய்வம், தாவரம், விலங்குகள் இருந்தபோதும் அவற்றிலிருந்து தம்மைப் பாது காத்துக் கொள்வதற்கான தீர்வுகளையும் கொண்டது அந்த நாடு. மனிதர்களே இல்லாத வனப்பகுதியில்கூடக் குகைகள் இரவில் தங்க இடம் கொடுக்கும். பரிசில் பெற்ற பாணன்,

> "அதற்கிடை கழிதல் ஓம்பி ஆற்றுதும்
> இல்புக்கு அன்ன கல்அளை வதிமின்" (மலை. *254-55*)

என்று பரிசில் பெறப்போகும் பாணனுக்கு அறிவுறுத்துகிறான்.

மனித இனங்களாலும் இயற்கையாலும் பாணர்கள் வழிதோறும் தொடர்ந்து விருந்தோம்பப்படுகிறார்கள். நன்னனிடம் பரிசில் பெறுவதையே மறக்கச் செய்யும் அளவுக்கு அவற்றின் விருந்தோம்பல் மிகச்சிறந்ததாக அமைந்துவிடக்கூடியது. மயில் ஆடுதல், குரங்கு பாய்தல் முதலானவை கலை நிகழ்ச்சிகளை ஒத்துப் பாணர்களை மயக்கி அங்கேயே இருக்கச் செய்துவிடுவனவாகும். அழகியல் அடிப்படையில் உயர்வான நாடாகிறது. ஆற்றுப்படை இலக்கியங்களுக்குரிய பொதுவான பண்பு நாட்டின் வளம், அழகுகளைச் சொல்ல வேண்டும் என்பதாகும். அரச னின் வீரம் என்பது இடையில் பொதிந்து வைக்கப்படுகிறது.

அரசனின் விருந்தோம்பலும் நாட்டின் விருந்தோம்பலும் ஒப்பிட்டு இணையாக ஆற்றுப்படையில் விளக்கப்படுகின்றன. கால அடிப்படையில் விருந்தோம்பல் பண்பு சிறப்பிக்கப்படுகிறது. இரவலர் புரவலர் இருப்பிடத்தில் தங்கிச் செல்வது புரவலர்களுக்கு அளிக்கும் மதிப்பாகக் கருதப்பட்டுள்ளது. உடனே செல்லுதல் அவ்வளவு மதிப்பாகப் பார்க்கப்படவில்லை. உடனே செல்வது இருவரும் ஒருவரை ஒருவர் பொருட்படுத்தாததால் நிகழ்வது என்று கருதிக் கொள்ளப்படுகிறது. நாடு, நன்னன் என்ற இரு விருந்தோம்பல்களும்,

"பல்நாள் நிற்பினும் சேந்தனிர் செலினும்
நன்பல உடைத்து, அவன் தண்பணை நாடே" *(மலை. 452-53)*

"தலைநாள் அன்ன புகலொடு வழி சிறந்து
பலநாள் நிற்பினும் பெறுகுவிர் நில்லாது
செல்வேம் தில்ல எம் தொல் பதிப்பெயர்ந்து என
மெல் எனக்கூறி விடுப்பின்
....
மழை கரந்தன்ன ஈகை நல்கித்
தலைநாள் விடுக்கும் பரிசில்" *(மலை. 566-83)*

என்று பாணனால் ஒப்பிட்டுப் பேசப்படுகின்றன. அரசனை நோக்கி வரும் இரவலரை குடிமக்கள், மலை, கான் வாழ் மக்கள் தம் விருந்தினராக ஏற்கின்றனர் என்று விளக்குவதன் மூலம் மன்னனுக்கும் மக்களுக்கும் இருக்கும் ஆளுமை நெருக்கம் புலப்படுதல்படுகிறது. நாடு என்பது நாடாமல் வளந்தருவதாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் தாவர, விலங்கு உணவுகள் பாணர்களுக்கு எளிதாகக் கிடைக்கின்றன.

இடம், காலம் என்ற கூறுகளும் நன்னனின் சிறப்பை விளக்குவதற்கு ஏற்பவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பாணர் செல்ல வேண்டிய வழி அச்சம் தருவதற்கு உரியதாக இருக்கிறது என்று விரிவாக விளக்கப்படுகிறது. வழி செங்குத்தானது. மலைப்பாம்பு உள்ளது. நச்சுப் பூச்சிகள் உள்ளன. கடிக்கும் குரங்குகள் வரும். காட்டு யானை உள்ளது. நிலம் வழுக்கும். வழி தெரியாது மயக்கம் ஏற்படும். கொடிகள் பின்னிக்கிடக்கும். அரிய வழிகளைக் கடந்து பாணர்கள் நன்னனிடம் செல்கின்றனர் என்பதால் பாணர்களின் வறுமையும் நன்னனின் கொடைப்பெருமையும் புலப்படுகிறது. பாணர்கள் அருகிலிருந்து நன்னனைக் காண வரவில்லை. தொலைவிலிருந்து வருகிறார்கள் என்பதைப் பாணன்,

"புனிறு இல்காட்சி கலம்பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ"
(மலை. 49-50)

"கேள் இனி! வேளை நீ முன்னிய திசையே'' (மலை. 94)

என்று கூறுவதன் மூலம் தெரிகிறது. (புனிறு- அண்மை) தொலைவிலிருக்கும் பாணர்களுக்கும் நன்னனின் கொடைப்பெருமை தெரிந்திருக்கிறது. சிறு சிறு கொடைப் பொருள்களுக்காக அவர்கள் வரவில்லை. நெடுந்தொலைவிலிருந்து வந்தவர்களுக்கு மிகுதியான பொருள் கொடுப்பது பொருத்தமானதாகிறது. நன்னன் வீரம் தொலைவுகளைக் கடந்தது.

"இகந்தன ஆயினும் தெவ்வர் தேஎம்
நுகம்படக் கடந்து நூழிலாட்டி'' (மலை. 86-87)

அருகில் உள்ள பகுதிகளை வெல்வது எளிது. தொலைதூரத்திலும் ஒருவன் வெற்றி பெற வேண்டுமானால் படையானது வலிமை, பெருமை மிக்கதாக இருக்கவேண்டும். உணவு, கருவி முதலான துணைப் பொருட்களை எடுத்துச்செல்வது பெரும்பணியாகும். தொலைவில் அதுவும் வலிய யாணர் படைகளை வெல்லும் அளவு நன்னன் படை வலிமையுடன் இருந்தது. பாணர்கள் செல்லும் வழியில் வெயில், மழை இரண்டும் வேறு வேறு பகுதிகளில் நிகழ்வனவாகக் காட்டப்படுகின்றன.

"அயில் காய்ந்தன்ன கூர்ங்கல் பாறை
வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கத்து
கதிர் சினம் தணிந்த அமயத்துக் கழிமின்'' (மலை. 373-75)

"தளி பொழி கானம் தலை தவப்பலவே'' (மலை. 383)

பாலை நிலமும் முல்லை நிலமும் இவ்வாறு வருணிக்கப்படுகின்றன. ஐந்து வகை நிலமும் ஆறு பருவமும் உடையனவாக ஒரு நாட்டை வருணிப்பது முழுமை என்று கருதப்பட்டிருக்கிறது. வெளி, காலம் என்ற இரண்டின் அனைத்துப் பண்புகளையும் விளக்கிவிடவேண்டும் என்று கருதப்பட்டிருக்கிறது. அரசனை வன்மையும் மென்மையும் கொண்டனவாகக் கூறுவது மரபு. பகைவர்க்கு வலிமையும் மனைவிக்கு மென்மையும் காட்டுபவன் அவன் என்பது

"படியோர்த் தேய்த்த பணிவுஇல் ஆண்மை
கொடியோள் கணவன் படர்ந்திகும் எனினே'' (மலை. 423-24)

என்ற அடிகளில் கூறப்படுகிறது. கதிரவன், நிலவு என்ற இரு தன்மைகளும் கொண்டவர்களாக அரசர்கள் கூறப்படுகின்றனர். நன்னன் அவையில் இருப்பவர்கள் அறிவு சான்றவர்கள். அவர்களை நாடி வருகிறவர்கள் அறிவு நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். இல்லாதபோதும் குறைகளைச் சொல்லிக்காட்டமாட்டார்கள். உயர்வாகவே சொல்லிக் காட்டுவார்கள்.

"நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
வல்லார் ஆயினும் புறம் மறைத்து சென்றோரைச்
சொல்லிக்காட்டி, சோர்வு இன்றி விலக்கி
நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத்து ஒழுக்கமும்'' *(மலை. 77-80)*

பெருந்தன்மை கொண்டவர்களாக அரசனும் அரசனைச் சார்ந்தவர்களும் இருப்பதால் கொடைப்பொருள் உறுதியாகக் கிடைக்கும். தகுதி பார்க்காமல், அறிவுக் குறைபாடு இருந்தபோதும் புலவர்களுக்குக் கொடுக்கப் படும். நல்லாட்சியும் அமையும் என்ற கருத்துப் பெறப் படுகிறது.

ஒப்புமை மூலம் நன்னனின் சிறப்புகள் புலப்படுத்துவதில் சில உள் ஒழுங்குகள் உள்ளன. வனத்தில் உள்ள பொருட்களை விளக்க எல்லாரும் அறிந்த வானில் உள்ளனவற்றையும் நகரில் உள்ளனவற்றையும் உவமையாகக் கூறுவது ஒரு மரபாக இருக்கிறது. முசுண்டை மலர் கார்த்திகை மீன் போலப் பூத்திருந்தது *(மலை. 100)*. "யாறு மலைவளம் கொண்டு கடல் செல்வது போல யான் நன்னனிடமிருந்து கொடைப்பொருள் கொண்டு வருகிறேன்'' *(மலை. 53-54)*. பரந்த இருள் நீங்குமாறு ஞாயிறு போன்ற குற்றம் இல்லாத தலைமை செய்தது *(மலை. 84-85)*. நாயின் நாக்கு நடந்து களைத்த விறலியின் பாதம் போல இருந்தது *(மலை. 41-42)*. புறப்பொருளில் இறைச்சிப் பொருளும் உள்ளது.

"புலிஉற வெறுத்த தன் வீழ்பிணை உள்ளிக்
கலை நின்று விளிக்கும் கானம் ஊழ் இறந்து'' *(மலை. 404-5)*

ஆண்மான் புலியால் இறந்துபடப் பெண்மான் புலம்பும் வழி என்பது நன்னனுடன் ஏற்பட்ட போரால் பகைவர் இறந்துபட அவர் மனைவியரது நிலையை விளக்குவதாக உள்ளது.

கவிதையாக்கத்தின்போது கருத்துத்தேர்வு, கருத்து வரிசை, மொழி, யாப்பு, சூழல் முதலான கூறுகள் செல்வாக்குச் செலுத்தும். கவிதை என்பதில் இயல்பு, புனைவு இரண்டும் இருக்கும். எயில் வான் அளவு உயர்ந்தது என்று சொல்லப்படுகிறது.

"வரைபுரை நிவப்பின் வான்தோய் இஞ்சி'' *(மலை. 92)*

(இஞ்சி- எயில், நிவப்பு- உயர்வு, புரை- போன்ற). சங்க இலக்கியம் ஒரு அற்புத நவிற்சி ஆக இல்லை என்றாலும் சில புனைவுகள் கலந்து காணப்படுகின்றன. உண்மையைவிடப் படைப்புகள் திறமையானவர் களால் செய்யப்படுமானால் அழகும் சிறப்பும் கொண்டவைகளாகின்றன.

நன்னனின் மனைவியரின் உறுப்புகள் ஓவியத்தில் இருந்த பெண் உறுப்புகள் போல அழகாக இருந்தன.

"வனை புனை எழில்முலை வாங்கு அமைத்திரள்
தோள்மலர்போல் மழைக்கண் மங்கையர்'' *(மலை.56-59)*

(வனை-ஓவியம், வாங்கு-போன்று) ஓவியம், சிற்பம், இலக்கியம் முதலானவற்றில் பொருளின் குறை தெரியாமல் புனைவுகளை வேண்டிய அளவு செய்துகொள்ள முடிகிறது.

மொழி, யாப்பு சார்ந்த கூறுகளையும் படிம ஆக்கத்தின்போது கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. பொழி, வீசு போன்ற வினைச்சொற்களை ஈதல் என்ற வினைக்குப் பதிலாகப் பயன்படுத்தும்போது பொருண்மை வேறுபடுகிறது.

"தேம்பாய் கண்ணித் தேர் வீசு கவிதை
ஓம்பா வள்ளல் படர்ந்திகும் எனினே'' *(மலை. 399-400)*

வீசுதல் என்பது தேரை ஒரு பொருளாகப் பொருட்படுத்தாத நன்னனது குணத்தைக் குறிக்கிறது. ஓம்புதல் என்பது பொருளைப் பாதுகாத்து வைத்துக்கொள்வதைக் குறித்திருக்கிறது. ஓம்பாமை என்பது பொருளைப் பொருட்படுத்தாத நன்னனின் கொடைத் திறத்தைப் புலப்படுத்துகிறது. பொழிதல் என்ற வினை ஈதலைச் செய்பவன் மழை போன்றவன் என்ற படிமத்தை ஏற்படுத்துகிறது. யாப்பின் எதுகை, மோனை முதலானவை காரணமாகச் சேர்க்கப்படும் சொற்கள் பொருண்மைக்கு இடையூறாக அமைந்துவிட வாய்ப்புண்டு.

"படுத்து வைத்தன்ன பாறை மருங்கின்
எடுத்து நிறுத்தன்ன இட்டு அருஞ்சிறு நெறி'' *(மலை.16-17)*

''உயர்ந்தோங்கு பெருமலை ஊறு இன்று ஏறலின்'' *(மலை. 41)*

செங்குத்தாக உயரும் வழியில் ஊறு இல்லாமல் ஏறினார்கள் என்று சொல்ல வேண்டுமானால் விலங்கினால் வரும் துன்பம் இன்றி ஏறினார்கள் என்றுதான் விளக்க வேண்டும்.

வீட்டுக்கு வருவதற்கு முன்பே விருந்தினருக்கு உணவை ஏற்பாடாக வைத்திருப்பது இருவருக்கும் பெருமை. ஆயர்கள் வரப்போகிற பாணர்களுக்கு அவ்வாறு உணவிடுகிறார்கள்.

"கல்லென் கடத்திடைக் கடலின் இரைக்கும்
பல்யாட்டு இனநிரை எல்லினிர் புகினே
பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்'' *(மலை.416-19)*

பாலும், பண்ணாது என்ற சொற்கள் மோனைத் தொடையாக வந்துள்ளன. விருந்தினர் யாரேனும் வருவார்கள் என்ற நம்பிக்கையுடன்

நாள்தோறும் அவ்வாறு சமையல் பணி செய்கிறார்கள் என்ற கருத்து நன்னன் நாட்டின் ஆயர் குறித்துக் கிடைக்கிறது.

ஒரு நாட்டைப் பற்றியும் அரசனைப் பற்றியும் செய்திகளைக் கூறும்போது சிறந்தவைகளைத் தொகுத்துக் கூறுவது இலக்கிய மரபாக உள்ளது. வெவ்வேறு கால கட்டங்களில் நிகழ்வன ஒரே காலத்தில் நிகழ்வதாகவும் வெவ்வேறு இடங்களில் நிகழ்வன ஒரே இடத்தில் நிகழ்வதாகவும் வெவ்வேறு மனிதர்களிடம் நிகழ்வன ஒரே மனிதரிடத்தில் நிகழ்வனவாகவும் சிறந்தவைகளைத் தொகுத்துக் கூறும் முறை மலைபடுகடாமில் பின்பற்றப்பட்டுள்ளது. நன்னன் பாணர்க்குக் கொடுக்க உள்ள கொடைப்பொருள்களின் பட்டியல் உணவு, உடை, அணிகலன், விலங்கு, ஊர்தி என்று மிக நீண்டது. செங்கம் போன்ற வறண்ட பகுதிகளில் தாவரங்கள், உணவு வளம் புனைவுதான். வனம் குறித்த அறிவு அக்கால நகர மக்களுக்கும் புலவர்களுக்கும் முழுமையாக இருந்திருக்கும் என்று கருத வேண்டியதில்லை. புலிக்கு யானை தோற்றுவிடும் என்பதுகூட ஒரு புனைவு. அரசன் வாழிடமான ஊர், அவனது காட்டின் பிற பகுதிகள், இரண்டு வேறு பகுதிகளிலும் அவனது அரசுமுறைமை பருப்பொருள் நிலையிலும் கருத்தியல் நிலையிலும் சிறந்திருந்தது என்பதை விளக்குவது ஆற்றுப்படையின் நோக்கமாகும். நாடு, நகரம், இயற்கை, படை, மக்கள் என்று வரும் எல்லாம் மன்னனின் உடலின் மாற்று வடிவங்களாகும். மன்னனின் உள்ளமும் உடலும் இவ்வாறு அவனது அதிகாரத்தின் வழி வெளிப்படுகின்றன எனலாம். இவை எல்லாம் தமிழ் இலக்கண மரபு கூறும் தற்கிழமை, பிறிதின் கிழமை என்ற இரு பகுப்புகளுள் தொடர்புபட அமையும்.

துணைநூற்பட்டியல்

1. இராசமாணிக்கனார், மா., *1970*, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
2. இராமசுப்பிரமணிம், வ. த., (உரையாசிரியர்), *2009*, பன்னிரு திருமுறைகள் தொகுதி-*1*. மூலமும் உரையும், வர்த்தமானன் வெளியீடு, சென்னை
3. பதிப்புக் குழு, *1981*, தொல்காப்பியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், சென்னை
4. பதிப்புக் குழு, *1981*, புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், சென்னை
5. புலியூர்க் கேசிகன்(பதிப்பாசிரியர்), *2007*, திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார்ப் பதிப்பகம், சென்னை

12

செய்யுளில் முரணாகும் இசையும் யாப்பும்

கலியும் பரிபாடலும் நாடக வழக்காகவும் உலக வழக்காகவும் வரும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். அகத்திணையியல். 56). நாடக வழக்கு என்பதும் நிகழ்த்து கலை என்ற உலக வழக்கே ஆகும். அது செய்யுள் வழக்கு அன்று. நிகழ்த்து கலையோடும் இசைக் கருவிகளோடும் ஆடலோடும் கலி, பரி என்ற இவ்விரு பாடல்களும் பயன்படுத்தப்பட்டவைகளாகும். இவ்விரு பாடல்களும் தொடக்கத்தில் வாய்மொழி வடிவில் கல்வி அறிவில்லாதவர்களால் இயற்றப்பட்டவை. ஆசிரியப்பா, வெண்பா என்று யாப்புக்கள் உருவானபிறகு இசைப் பாடல்களை யாப்பு வகைக்குள் கொண்டு வரும் முயற்சி நடந்துள்ளது. பரிபாடலின் உறுப்புகளாக கொச்சகம், அராகம், எண், சுரிதகம், எருத்து என்பனவும் கலிப்பாவின் உறுப்புகளான தரவு, இடைநிலைப் பாட்டு, அடைநிலைக்கிளவி, தாழிசை, போக்கியல், எண், வாரம் (தொல். செய்யுளியல். 117, 128-148) என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் யாப்பின் தளை, சீர் அமைப்புகள் அடங்குவனவல்ல. எண் என்ற உறுப்பு இரு அடிகள் இரண்டு, ஒரு அடி நான்கு, இரு சீர் எட்டு, ஒரு சீர் 16 என்று அடுத்தடுத்து வருவதாகும்(தொல். செய்யுளியல். 140, 135).இடையில் எண்ணுக்குரிய சில படி நிலைகள் இல்லாமலும் இருக்கலாம். இசையைத் தவிர்த்துவிட்டு அமையும் அசை, சீர், தளை, அடி, தூக்கு என்பன இசைக்கு இடம் கொடுக்கப்படுமானால் சிதைவடையும்.

பரிபாடலில் சொற்சீரடியும் முடுகியலடியும் இடம்பெறும்(தொல். செய்யுளியல்.118) என்று தொல்காப்பியரால் குறிப்பிடப்படுகிறது. சொல்லே சீராக வருவது சொற்சீரடியாகும். 4 சீர்களுக்கு மேல் வருவது

முடுகியலடியாகும். சீர், அடி என்ற இரு ஒழுங்கமைப்புகளுக்காக சொல்லும், தொடர் மொழியும் சிதைக்கப்படமுடியாது என்ற நிலை பரிபாடலிலுள்ளது. ஆசிரியப்பாவிலும் வெண்பாவிலும் இவ்வாறு இல்லை. பரிபாடல் என்பதே பாவகையில் அடங்காது பொதுவாகவும் நிற்கும் (தொல். செய்யுளியல். *116*) என்று விளக்கப்படுவதற்குரியதாக இருக்கிறது. மேலும், அது அடியில் சீர்கள் எண்ணிக்கை குறைந்துக் கட்டுரையாகவும்கூட வரலாம். ஒரு அடியில் நிறுத்த சொல்லின் இறுதி அசை சீரின் இறுதி அசையாக இருக்க வேண்டியிருக்காது. குறித்து வரு கிளவியின் முதல் அசை அந்தச் சீருக்குரியதாகலாம். அதாவது, சொல்லே சீராக வரும் என்று மீண்டும் வலியுறுத்தப்படுகிறது(தொல். செய்யுளியல். *118, 119*)

மண்டிலம், குட்டம் (குறளாசிரியப்பா) என்று இரு வகைப்பாக் களும் செந்தூக்கு ஓசை இயல்பில் வரும் என்று தொல்காப்பியம் (தொல்.செய்.*133*) குறிப்பிடுகிறது. செந்தூக்கு என்பது செந்தொடை போல எந்த யாப்பின் ஓசையும் இல்லாமல் வருவதாகும். அகவல் ஓசையில் இவை வரவேண்டியதில்லை. ஒத்தாழிசை, மண்டிலம், குட்டம் என்ற மூன்றும் நேரடிக்குப் பொருந்தி வருவன என்று குறிப்பிடப்பட்டன. ஆனால், ஒத்தாழிசை செந்தூக்கில் வரும் என்று குறிப்பிடப்படவில்லை. அது இசைப்பாடல் என்பதால் அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் என்ற வகையில் வைக்கப்படவில்லை. யாப்புகள் அறிவார்ந்த புலவர்களால் இடுகுறித் தன்மையில் கட்டமைக்கப்பட்டதன் காரணமாக மருட்பாவை ஆசிரியப்பா மற்றும் வெண்பாக்களின் கலப்பு என்று எளிதாகக் கலந்தமைக்க முடிந்திருக்கிறது. இசைப்பாடல்களாகக் கலி, பரிபாடல்கள் இதில் சேர்க்கப்படவில்லை.

இலக்கியத்தில் இருவகையான ஓசைகள் உள்ளன. ஒலியன்களின் ஓசைத்தொடர்ச்சி அகவயமானது. அதை மொழியிலிருந்து நீக்க முடியாது. யாப்பிலக்கணம் இந்த ஓசைகளை மட்டுமே கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. தாளம், ராகம், பண் முதலான இசைகள் மொழிக்குப் புறவயமானவை. மொழியுடன் இவற்றை இணைத்தோ, விலக்கியோ வைக்க முடியும். வேறு ஒன்றை மாற்ற முடியும். வண்ணம், வனப்பு என்ற இரண்டையும் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. வண்ணங்களில் பெரும்பாலானவை எழுத்துக்களின் ஒலிப்பு வகைமையை அடிப்படையாகக் கொண்டவை. குறில், நெடில், ஆய்தம், அளபெடை, மெய் வகைகள், எழுத்துக்களின் கலப்பு இவற்றை உச்சரிக்கும் முறையில் உள்ள வேறுபாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் வண்ணங்கள்(தொல். செய்யுளியல். *204- 226*) வேறுபடும் என்று

தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. அதாவது இந்த இசைப்பண்புகள் யாப்புக்கு உட்பட்டவை. யாப்பைச் சிதைக்காதவை.

வனப்புகளுள் இயைபு (தொல். செய்யுளியல். 232) என்பது ஞ்-ன் ஈறுகள் இறுதியில் இயைபு பட அமைவதாகும். இழைபு (தொல். செய்யுளியல். 234) என்பது வன்தொடர்க் குற்றியலுகரம் வராது, 2-5 அடிகளில் ஓங்கிய மொழியால் வருவதாகும்(தொல்.செய்யுளியல். 234). யாப்புகள் வகைப்படுத்தப்படும்போது மொழியின் இவ்வாறான அக ஓசைப் பண்புகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. யாப்பின் வகைப்பாட்டுக்கு பொருட்படுத்தப்படாதவைகளாகின்றன.

வண்ணங்களுள் முதல் வண்ணம் பா வண்ணமாகும். இது சொல்லே சீராக வருவது (தொல். செய்யுளியல். 206) என்று குறிக்கப்படுகிறது. இசையை அடிப்படையாக வைத்து யாப்பை வகைப்படுத்தும்போது சொல்லும் சீரும் வேறுபடுவதில்லை என்று குறிப்பிடப்படுகிறது. வனப்புகளுள் அழகு என்பது செய்யுள் மொழி, சீர் என்ற இரு இலக்கணங்களுக்கு உட்பட்டது என்று விளக்கப்படுகிறது(தொல்.செய்யுளியல். 228). இசைப்பாடல்களைப் பொருத்தவரையில் சொற்களே சீராக இருந்துள்ளன என்று கலிப்பா, பரிபாடல், வண்ணம் முதலானவற்றைக் கொண்டு நோக்கும்போது புலனாகிறது. மாறாக யாப்புத் தன்மை எய்தும் போது சொற்கள் சீராக்கத்தில் பகுத்துச் சிதைவுபடுத்தப்படுகின்றன.

தொல்காப்பியம் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்ற நான்கு அசைகளைக் குறிப்பிடுகிறது. நேர்பு, நிரைபுகளாலும் சீர்கள் தொல்காப்பியத்தில் ஆக்கப்பட்டுள்ளன.

நேர்பு நிரை	-	யாற்று/படை
நிரைபுநிரை	-	குளத்து/மடை
நேர்புநேர்	-	யாற்றுக்/கால்
நிரைபு நேர்	-	குளத்துக்/கால்
நேர்புநேர்பு	-	ஆற்று/நோக்கு
நேர்புநிரைபு	-	ஆற்று/வரவு
நிரைபுநேர்பு	-	வரகு/சோறு
நிரைபுநிரைபு	-	வரகு/தவிடு

இவ்வாறான சீர்களில் குற்றியலுகரத்தையும் அசைக் கணக்கீட்டில் வைக்கும் முறை இருந்துள்ளது. பிறகு, மூன்று அசைகளாக ஆற்/றுநோக்/கு, வர/குசோ/று என்று இந்தச் சீர்கள் மாற்றப்பட்டுவிட்டன. குற்றியலுகரத்தை மெய்யெழுத்துப் போலத் தொல்காப்பியம் கருதியுள்ளது. அது அரை மாத்திரையில் உகரமாக ஒலிப்பதால் நேர்பு,

நிரைபு என்று கணக்கில் கொண்டுள்ளது. ஒலியனில் உள்ள நுட்பத்தைத் தொல்காப்பியம் கொண்டுள்ளது. பின்பு வந்த இலக்கண மரபுகளில் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

ஆசிரிய உரிச்சீர்(6), வெண்பா உரிச்சீர்(4), வஞ்சி உரிச்சீர்(60) என்ற மூன்று வகை உரிச்சீர்களைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இயற்சீர்கள்(10)-ஐயும் குறிப்பிடுகிறது. கலிச்சீர் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை. ஆனால், தளைகளுள் கலித்தளையைக் கூறுகிறது. வஞ்சித்தளையைக் குறிப்பிடவில்லை. ஒரு செய்யுளுக்குள் அந்த யாப்புவகைக்குரிய சீர் இருந்தால் அதற்குரிய தளை தேவையில்லை என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது(தொல். செய்யுளியல். 52) எனலாம்.

ஒரு யாப்பின் தூக்குச் சீரால் தீர்மானிக்கப்படும் என்றால் அதில் தளை தேவையில்லை. சீர் வகை இடம்பெற்றிருக்குமானால் அந்தச் செய்யுள் அந்தச் சீர்க்குரிய யாப்பு வகையுமாகும். இயற்சீர்கள்(10) தொல்காப்பியத்தில் பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. காய்ச்சீர் வெண்டளை, கலித்தளை இரண்டிற்கும் பொதுவாகக் கூறப்பட்டுள்ளது. இதனால் சீர் பொதுவாக இருந்தாலும் தளையால் யாப்பின் வகை வேறுபடும் என்றாகிறது. ஒரு கால கட்டத்தில் யாப்பு வரலாற்றில் சீர்களே யாப்பு வகையைத் தீர்மானிப்பவைகளாக இருந்து, பிறகு யாப்பு வகைகள் அதிகமாகும்போது வகைப்படுத்த அந்தச் சீர்வகைகள் உதவ முடியாமல் போயிருக்கின்றன. பிறகு சீர்களுக்கு இடையிலான தளை உறவு யாப்பு வகையைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தூக்கு என்பது சீரின் அக அசை அமைப்புகளால் தீர்மானிக்கப்பட்ட நிலை போய், சீர்களுக்கு இடையிலான தளை உறவால் தீர்மானிக்கப் பட்டுள்ளது. தூக்கு என்பது சீரின் அக உறவிலிருந்து புற உறவிற்கு நகர்ந்துள்ளது.

பிற பாக்களைவிட வஞ்சிப்பாவிற்கு 60 சீர்கள் மிகுதியாகத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் தொடக்கத்தில் வஞ்சிப் பாடல்கள் மிகுதியாக இருந்திருக்கலாம் என்று சோ.ந. கந்தசாமி (1989:138) குறிப்பிடுகிறார். பண்ணத்தியின் வகைகளுள் ஒன்றாக வஞ்சிப்பாட்டு பேராசிரியரால் (தொல்.செய்யுளியல். 173) குறிப்பிடப்படுகிறது. வண்ணங்களுள் ஒன்றாகத் தூங்கல் வண்ணம் குறிப்பிடப்படுகிறது. இது வஞ்சி பயிலும் என்றும் விளக்கப்படுகிறது(தொல். செய்யுளியல். 222). வஞ்சிப்பாடலைப் பொருத்தவரையில் தளையால் அன்றிச் சீராலேயே அதன் வகை தீர்மானிக்கப்பட்டுவிடும் என்றாகிறது.

இசைப்பாடல்களுடன் வஞ்சிப்பாவிற்கு நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. இசையாப்பு முறையிலிருந்து அசை யாப்பு முறைக்கு மாறும்போது சொற்சீர்களெல்லாம் அசை அமைப்புக்கு உள்ளாகிச் சிதைவுபடுகின்றன. ஒரு சொல் இருவேறு சீர்களின் உறுப்பாகவும் ஒரு சீர் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களாகவும் அல்லது அவற்றின் முழு அல்லது பகுதி உறுப்புகளாகவும் மாறி அமைகின்றன.

சொற்கள் யாப்பின் காரணமாகச் சிதைவுபடும்போது பொருண்மைப் புலப்பாட்டிலும் சிக்கல் நேர்கிறது. செய்யுள் என்பது உயர் வழக்கு என்பதால் புலன் போன்ற வனப்புகளில் இடம்பெறும் இயற்சொற்கள், பேச்சுவழக்குச் சொற்கள் அவ்வளவாக இடம்பெறுவதில்லை. திரிசொற்கள் செய்யுளுக்கு உரியவைகளாகின்றன. அவை ஒரு சொல் பலபொருள், பல சொல் ஒரு பொருள் என்ற பொருண்மைத் திரிபு உடையவைகளாகும். உரிச்சொற்களும் செய்யுளுக்கு உரியவைகளாகின்றன. யாப்பில் சொற்குறைகள் இருக்கலாம். முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை வடிவில் சொற்கள் இடம்பெறும்போது பொருண்மை மயக்கம் ஏற்படவே செய்யும். செய்யுள் விகாரங்கள் ஆறு தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படுகின்றன. விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல், வலித்தல், மெலித்தல் என்ற நிலையிலும் யாப்பில் சொற்கள் இயல்பிலிருந்து மாறுபடுகின்றன.

யாப்பு மொழியில் செறித்து உருவாக்கப்படும் புணர்ச்சித்திரிபுகள் பொருண்மையை எளிதாகப் புரிந்துகொள்ள இடம் கொடுப்பதில்லை. பொற்றேர், வாட்டடங்கண், கஃறீது என்ற புணர்ச்சித் திரிபுகள் யாப்பு மொழிக்குரியவை. வேறு வேறு சொற்களின் புணர்ச்சியின் காரணமாக குன்றேறாமா, தாமரைக்கணியார் முதலான பொருண்மை மயக்கமுடைய தொடர்மொழிகள் யாப்பில் அமைந்துவிடுகின்றன. செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை, சொற்பொருள் பின்வருநிலையணி என்று பல நுட்பங்களை நோக்கி யாப்பு மொழி நகர்த்திக் கட்டமைக்கப் படுகிறது.

யாப்பு மொழியில் மொழி அமைப்பு, சொல் வரிசை மயக்கங்களும் மொழி புணரியல்பு என்ற அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகின்றன. இசைப்பாடல்களில் கலி, பரி முதலான பாடல்களில் மொழிமாற்றுப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள் இடம்பெற வாய்ப்பு இல்லை. மடக்கு அணி இடம்பெற வாய்ப்பு இல்லை. சொற்களைச் சீர்களாக்குவதற்காகச் சிதைக்கும் முறை படிப்படியாக வளர்ந்து பொருள்கோள் சிதைவுகள்வரை வந்து நிற்கிறது. இந்தச் சிதைவுகளில் பயிற்சி உடையவர் மட்டுமே சிதைவு முறைகளில் எழுதப்பட்ட

இலக்கியங்களைப் படிக்கமுடியும். கற்க முடியும். புலவர்கள் செய்த ஒரு குழூச்செயல்பாடு இது. இசைப்பாடல்களுக்கு எதிராகத் தொடங்கிய செய்யுள் கட்டமைப்பால் யாப்புகள் தோன்றியுள்ளன. பிற்கால யாப்பிலக்கண நூல்கள் இசைப்பாடலுக்குரிய இடத்தை அளிக்கவில்லை. நடைமுறையில் உள்ளவற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்குடைய தொல்காப்பியம் இசைப்பாடல்களையும் பதிவு செய்துள்ளது. அதனால் கலிப்பா, பரிபாட்டு, வஞ்சிப்பா முதலான இசைப்பாடல் வடிவங்களை யாப்பு என்ற கட்டமைப்பிற்குள் கொண்டுவந்து விளக்கத் தொல்காப்பியம் முயன்றிருக்கிறது.

மொழியின் இலக்கணத்தை மாதிரியாகக்கொண்டு யாப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஒலியனுக்குரிய இடத்தை மாத்திரையும் எழுத்தும் பெறுகின்றன. அசையும் சீரும் உருபனுக்குரிய இடத்தைப் பெறுகின்றன. அசை கட்டுருபன் என்றால் சீர் தனி உருபனாகும். அசை தனிச்சீர் ஆவதில்லை. கட்டுருபன் தனிச்சொல் ஆவதில்லை. சொற்களுக்கு இடையிலான உறவு தொடர் இலக்கணம் ஆகும். சீர்களுக்கு இடையிலான உறவு தளை ஆகும். தளை தொடர் இலக்கணத்திற்குரிய இடத்தையும் செய்யுள் என்பது கூற்றுக்குரிய (Utterance) இடத்தையும் பெறுகின்றன. யாப்பு என்பது உரைநடையிலிருந்து ஒரு வேறுபட்ட ஒரு மொழி அமைப்பாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. உரைநடை என்பது வாய்மொழியைப் பொருத்தவரை பேச்சு மொழியை ஒத்தது. தகுதி வழக்கு என்ற அடிப்படையில் உரைநடையும் பேச்சு வழக்கின் ஒரு பகுதியும் ஒத்துப்போகும்.

உயர்ந்தோர் பேச்சு வழக்குத் தகுதி வழக்காக இருப்பதன் காரணமாக, செய்யுள் வழக்கும் உயர்ந்தோர் பேச்சு வழக்கைத் தழுவி அமையும் என்று தொல்காப்பியம் கூறியுள்ளது (தொல். மரபியல். **94**, தொல். பொருளியல். *21*). யாப்பின் அடிப்படைகளுள் ஒன்று தகுதியான பேச்சு மொழி, உரைநடை என்ற இரண்டுமாகும். அதாவது, அவற்றிலிருந்து யாப்பு வேறுபட்டது என்று விளக்க அவை தேவைகளாகும்.

பேச்சிலும் உரைநடையிலும் வரி என்பதற்கு நீட்சி வரையறை இல்லை. காலத் தொடர்ச்சி இருக்கும். மடக்கி எழுதப்பட்டாலும் இடக்கட்டுப்பாடு அதற்கு இல்லை. பொருண்மைத் தொடர்ச்சி இருந்துகொண்டுதான் இருக்கும். யாப்புக்கு அடி என்ற நீட்சி வரையறை உண்டு. இதனால் காலம், இடம் என்ற இரண்டிலும் வரையறை பெறும். வரியும், அடியும் ஒப்புமைத் தன்மையுடையன அல்ல. யாப்பு என்பது எழுத்து மொழியோடு தொடர்புடையது என்பதால் அதற்கு ஓசை வடிவத்தையும் பொருத்தி விளக்கவேண்டியுள்ளது.

அசையும் சீரும் இசையோடு சேர்த்து இயற்றப்பட வேண்டும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. (தொல். செய்யுளியல். 10). யாப்பின் இசைப்பண்பைப் பாதுகாப்பதற்காக பொருளற்ற அசைநிலைகளையும், தேவையற்ற சீர்களையும் சீர்களிலும் அடிகளிலும் சேர்க்கலாம் என்பது தொல்காப்பியத்தின் கருத்தாகும். தொல்காப்பியத்திலேயே இதற்கான சான்றுகள் உள்ளன.

1. எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும் (தொல். அகத்திணை யியல்.24)
2. எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும் (தொல். பெயரியல். 10)
3. வழக்கினாகிய உயர்சொற் கிளவி (தொல். கிளவியாக்கம். 27)

மேற்கண்ட அடிகளில் நிலை என்ற சீரும் கிளவி என்ற சீரும் யாப்பை நிறைப்பதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளன. பேய், கோன் என்ற ஓரசைகள் பேஎய், கோஒன் என்று அளபெடை மூலம் ஈரசையாக்கப்படுவதும் யாப்பில் நிகழ்கிறது. செய்யுளுக்குக் குறைந்தது இரு அசைகள் தேவை. உரைநடைக்கு ஒரு சொல் போதும். அது கூற்றாகலாம். யாப்புக்குக் குறைந்தது ஏழு சீர்கள் தேவை. குறள் வெண்பாவில் அவை வருவனவாக இருக்க வேண்டும்.

இவ்வாறு இயல்பான மொழியை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட யாப்பு அமைப்பு ஒரு கற்பித வடிவமாகும். ஒரு ஒலியன் என்பது மீண்டும் ஒலிக்கப்படும்போது வேறுபடவே செய்யும். வேறு ஒருவர் ஒலிக்கும்போதும் வேறுபடும். பலரும் பல நேரங்களில் ஒலிக்கும் பொதுத்தன்மை கருதி அது அதே ஒரு ஒலியனாகக் கணக்கிடப்படுகிறது. ஒலியன்கள் தத்தமளவில் திரிபுடையனவாகும் என்கிறது தொல்காப்பியம்(தொல். பிறப்பியல். 6). கற்பித வடிவம் என்பது சொல், தொடர், வாக்கியம் எல்லாவற்றிற்கும் பொருந்தும். இந்தக் கற்பித வடிவத்தை ஒட்டிப் பேசப்படும், எழுதப்படும் மொழி அந்தக் கற்பித வடிவத்துடன் இயைபுபடுத்தப்பட்டு, பொதுத்தன்மைகள் கண்டறியப்பட்டு அந்த வடிவமாக எடுத்துக்கொள்ளப்படும். அசையை அடிப்படையாகக் கொண்ட யாப்புக்கும் இது பொருந்தும். யாப்பு அமைப்புக்குப் பொருண்மை இல்லை. உரை நடை மொழிக்கும் பேச்சு மொழிக்கும் பொருண்மை இருக்கிறது. ஒரு யாப்பு அமைப்புக்குள் ஒரு வாக்கியமோ, ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்களோ இருக்கலாம். சொற்கள் பகுப்பு முறையும் சீர்ப் பகுப்பு முறையும் வேறுபடும்.

1. நிலமிசை நீடுவாழ் வார்
2. முலைமுகம் செய்தன; முள்ளெயிறு இலங்கின

தலைமுடி சான்ற தண்தழை உடையை (அகம். 7)

3. காலே பரிதப் பினவே; கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே (குறுந். 44)

என்ற அடிகளில் வாழ்/வார், முலைமுகம்/செய்தன, பரிதப்/பினவே, வாளிழந்/தனவே என்று ஒரே சொற்கள் வேறு சீர்களாகப் பிரிந்தும் வேறு சொற்கள் ஒரே சீராக இணைந்தும் வந்துள்ளன. வகையுளி, பிணை என்றும் இவை எடுத்து விளக்கப்படுகின்றன. உறழ் கலிப்பா உரையாடல் வடிவில் அமையும் என்று தொல்காப்பியம் கூறுகிறது(தொல். செய்யுளியல். 149). யாப்புக்கு தொடர், வாக்கியம், கூற்று என்ற அமைப்புகள் முக்கியமில்லை. அசை, சீர், அடி என்ற அலகுகளுக்கு இடையில் உள்ள வேறுபாடுகள்தான் பார்க்கப்படும். அதற்கு ஏற்ப அந்தச் செய்யுள் ஒலிக்கப்பட வேண்டும். ஒரே வாக்கியமாக இருந்தாலும் பல வாக்கியங்களாக, உரையாடல்களாக இருந்தாலும் அவற்றுக்குள் யாப்பு அமைப்பு வேறுபாடு கருத்தில் கொள்ளப்படுவதில்லை. கருத்தில் கொள்ளப்படுமானால் உரிய சீர், தளை, தூக்கு, ஓசை இயல்புகளில் சிதைவு ஏற்படும். எனவே யாப்பின் ஓசை என்பது ஒரு கற்பித வடிவம் எனக்கொள்ளலாம்.

மீபகுப்புக் கூறுகள் (supra segmental features) மற்றும் எழுத்தல்லாத ஓசைகளால் புலப்படும் பொருண்மைகளை விளங்கிக்கொள்ள யாப்பில் இடமில்லை. குரல் (pitch), குரல் அளவு (pitch range), குரலின் வலு (loudness), அழுத்தம் (accent), விரைவு (tempo), குரல் லயம் (rythm), காலம் (duration), விட்டிசை (pause), இறுதி முடிவு (terminal contour), ஆகிய ஓசைக்கூறுகள் தமிழ் மொழியில் கூடுதல் பொருண்மை உணர்த்துபவை (G. Ravisankar, 1994; 249).

தொல்காப்பியம் விட்டிசையைப் புணர்ச்சியில் பொருண்மையை வேறுபடுத்தும் அலகாகக் குறிப்பிடுகிறது. ஒழியிசைப் பொருண்மை, எச்சப்பொருண்மைகள் மொழியின் ஓசையியல்புகளோடு தொடர்புடையவை. சொற்களை உச்சரிப்பதில் வேறுபட்டாலும் பொருண்மை பொருந்திவரும். ஆனால், அசை அமைப்பில் யாப்பில் திரிபு வந்து விடக்கூடாது என்றே தொல்காப்பியம் வலியுறுத்துகிறது (தொல். பொருளியல். 1). பேச்சு ஒலி ஒத்திசைவை (speech rythm)விட யாப்பு ஒலி ஒத்திசைவு (prosody rythm) முதன்மையானதாக யாப்பில் கொள்ளப் படுகிறது.

யாப்பு விதிகள் என்பவை எப்பொழுதும் ஒரு குழுத்தன்மை வாய்ந்தவை. வேறு குழு விதிகள் மூலம் வேறு வகையான யாப்பை

ஒரு மொழியில் கட்டமைக்க முடியும். மெய் எழுத்து உடல் போன்றது என்ற தத்துவப்பின்னணி மொழிக்கும் இலக்கியத்திற்கும் இலக்கணம் வகுப்பதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. ஒற்றளபெடை ஒரு தனி அசையாகக் கொள்ளப்படுகிறது. ஆனால், இரு மெய்களும் மூன்று மெய்களும் மயங்கி வரும் மெய்ம்மயக்கங்களில் அவற்றிற்கு எந்த மதிப்பும் இருப்பதில்லை. யாப்பு இலக்கணம் கட்டமைக்கப்பட்டதில் உள்ள உள் முரண்பாடு இது. எழுத்துக்களின் எண்ணிக்கையில் சீர்களையும் அடிகளையும் தொல்காப்பியர் வரையறை செய்யும்போது மெய் எழுத்துக்கள் எண்ணப்படுவதில்லை. படா, பட, படாம், படம் என்ற நான்கும் ஒரே அசையாகக் கொள்ளப்படுவதில் அசைக்குள் அமையும் ஒலியன் எண்ணிக்கை, தொடர்ச்சி வேறுபாடுகள் கணக்கில் கொள்ளப்படவில்லை. மெய்யை அடிப்படையாக வைத்துக் கூட அசைகளைக் கட்டமைக்க முடியும். சான்றாக உயிர்மெய், தனி உயிர்(மெய்யற்றது), தனிமெய், இருமெய் என்ற நான்கு அசைகளை உருவாக்கி ஒரு வகை யாப்பு வகைகளைக் கட்டமைக்கலாம். மேலும், நெடில்நெடில், குறில்குறில், குறில்நெடில், நெடில்குறில் என்ற நான்கு அலகுகளை அசைகளாகவோ, சீர்களாகவோ உருவாக்கி வேறு ஒரு வகையான யாப்பைக் கட்டமைக்கலாம். இவற்றில் மெய்யின் இடத்தை நீக்கிவிடலாம். சேர்த்துக் கொள்ளலாம். யாப்பு என்பது இடுகுறித் தன்மை வாய்ந்ததாக உள்ளது. ஓரெழுத்து ஒருமொழி, ஈரெழுத்து ஒருமொழி, மூன்றெழுத்து ஒருமொழி என்று எழுத்துக்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் யாப்பைக் கட்டமைக்கலாம். ஒரே எழுத்து எண்ணிக்கையில் சீர்கள் அமைய வேண்டும். கூடிக்கொண்டும், குறைந்து கொண்டும் எழுத்துக்கள் எண்ணிக்கை அமையலாம் என்று வழி வகுக்கலாம். யாப்பு என்பது ஒரு மொழி விளையாட்டுப் போல உள்ளது. மேலும் உயிர், மெய், தனிமெய், இருமெய், உயிர்மெய் என்று மூன்று வகை எழுத்துக்களின் அடிப்படையில்கூட அசையைக் கட்டமைக்கலாம். ஏனெனில், அசை அமைப்பு என்பது உருபன்களை அடிப்படையாகக் கொண்டவைகள் அல்ல.

பேச்சுமொழியிலிருந்து, உரை மொழியிலிருந்து ஒரு புறம் இசை மொழியும் மற்றொரு புறம் யாப்பு மொழியும் கட்டமைக்கப் பட்டுள்ளன. இசைமொழியை யாப்பு மொழிக்குள் உள்ளடக்கும் முயற்சிகள் நடந்துள்ளது தொல்காப்பியச் செய்யுளியல் இலக்கணத்தில் பதிவாகியுள்ளது. இசைக்குள்ள தனித்தன்மையைக் குறைத்து, விலக்கி அதை யாப்புக்குள் கொண்டு அடக்கும் முயற்சித் தொல்காப்பியத்தில் உள்ளது. இசைப்பண்பு கூடும்பொது சொல்லே சீராக இருப்பதும் தளை பார்க்காமையும் கூடுதலாகின்றன. யாப்புப் பண்பு கூடும்போது சீர்க்

கணக்கீட்டு முறையும் தளைக் கணக்கீட்டு முறையும் பார்க்கப்படுவதும் இசைப் பண்பு குறைவதும் நிகழ்ந்துள்ளன.

துணைநூல்கள்

1. பதிப்புக் குழு, *1981*, தொல்காப்பியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், சென்னை
2. கந்தசாமி, சோ. ந., *1989*, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்: பாகம்1-பகுதி1, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
3. Ravisankar, G., 1994, Intonation Pattern in Tamil, Pondicherry Institute of Linguistics and Culture, Pondicherry

13

இலக்கிய ஆய்வில் மொழிக் கூறு அடைவுகள்

அடைவு என்பது அகராதியியல் துறையைச் சார்ந்தது. அகராதியியல் துறை என்பது மொழி, இலக்கியம், பிற சமூகவியல், அறிவியல் துறைகளுக்குரியது. ஆனாலும் மொழியினால் ஆன அடைவுகளை மையமாகக் கொண்டது. மொழிக் கூறு என்பது எழுத்து, உருபன், சொல், தொடர், வாக்கியம், கூற்று, உரையாடல், பத்தி முதலான அலகுகளை உடையது. யாப்பையும் கணக்கில் கொண்டால் மாத்திரை, அசை, சீர், தளை, அடி முதலான அலகுகளையும் கொண்டது. ஒலியியல் நிலையில் குவி, விரி, வருடு, ஒற்று முதலான வினை நிகழ்வுகளும் மொழியைப் பிறப்பிக்கும் உறுப்புகளும் கூட மொழிக் கூறுள் அடங்கும். கலைக் களஞ்சியம், பொருட் களஞ்சியம் முதலானவும் அடைவு வகையில் வரும். மொழிச் சூழலையும் கணக்கில் கொண்டால் பேசுபவர், எழுதுபவர், கேட்பவர், படிப்பவர், பேசும்-எழுதும் இடம்-நேரம், கேட்கும்-படிக்கும் இடம்-நேரம் முதலான சூழல்கள் உள்ளடங்கும். இவற்றை எல்லாம் கணினி அடைவுக்குள் கொண்டுவரமுடியும். கொண்டுவந்துகொண்டிருக்கிறார்கள். அடைவுபடுத்திப் பார்ப்பது என்பது அடுக்கியல் உறவுக்குரியனவற்றை ஒரு தொகுதியாகத் தொகுத்துப்பார்ப்பது ஆகும். அடுக்கியல் உறவுக்குரியனவற்றைத் தொகுத்துப்பார்க்கும் முயற்சியைத் தொடரியல் சூழலிருந்துதான் பிரித்து எடுத்து நிகழ்த்தமுடியும். தொடரியல் சூழல் என்பது எழுத்து களின் தொடர்ச்சி, அசைகளின் தொடர்ச்சி, சொற்களின் தொடர்ச்சி, வாக்கியங்களின் தொடர்ச்சி, கூற்றுகளின் தொடர்ச்சி என்று எதுவுமாக இருக்கலாம்.

அடைவுகளை வடிவம், பொருண்மை என்ற இரு வகைகளுக்குள் அடக்கமுடியும். சொல்லடைவு, அகராதி, கலைக்களஞ்சியம் முதலானவை வடிவ ஒழுங்கு சார்ந்தவை. அகர வரிசைப்படுத்தல் என்பது வடிவ ஒழுங்கு

சார்ந்தது. கலைக் களஞ்சியம், பொருள் களஞ்சியம் முதலானவை பொருண்மை சார்ந்தவை என்றாலும் அகர வரிசை என்ற வடிவ ஒழுங்கில் தரப்படுகின்றன. தொகுத்து, வகுத்து, விரித்து எழுதப்படும் கருத்துகள் பொருண்மை ஒழுங்கு சார்ந்தவை. ஒரு பொருண்மை தரும் பல சொற்களும் ஒரு இடத்தில் தொகுத்துக் கொடுப்பது என்பது பொருண்மை ஒழுங்கு சார்ந்தது. நிகண்டுகள் பொதுவாகப் பொருண்மை ஒழுங்கில் அமைந்தவை. அகராதிகள் வடிவ ஒழுங்கில் அமைந்தவை.

அடைவுபடுத்தும்போது குறைந்தது இரு கூறுகளாவது இருக்க வேண்டும். பொருண்மை ஒழுங்குகள் பொது-சிறப்பு, தொகுதி-பகுதி, முதல்-சினை, விதி-விதிவிலக்கு, பெரும்பான்மை-சிறுபான்மை என்று பல வகைகளில் அமையும். காலம், சிறப்பு, மரபு, மதிப்பு, இடம் முதலான முறைகளிலும் அடைவுகள் தமிழ்ச் சிந்தனை மரபில் செய்யப் பட்டுள்ளன. தொடக்கம் முதல் இறுதி, இறுதி முதல் தொடக்கம், சம காலம், கால மயக்கம் முதலான கூறுகள் கால வரிசை அடைவுகளில் உள்ளன. அடி முதல் தலை, தலை முதல் அடி என்றும் அங்கங்கள் அடைவில் வரிசைப்படுத்தப்படலாம். அ, ஆ, இ என்ற முறை நிறுத்த முறை அடைவு என்றும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற முறை சிறப்பு முறை அடைவு என்றும் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறான வடிவ ஒழுங்குக்கு உட்படாத பொருண்மைக் கூறுகளைக் கணினியில் குறிகளிட்டு முன்பு அடையாளப்படுத்துவதன் மூலம் அடைவுகளாகத் தொகுக்கலாம்.

அடைவுகள் தயாரிப்பதற்கான மென்பொருள்கள் உருவாக்கிப் பயன்படுத்திவரப்பட்டுள்ளன. எல்லா வகையான அடைவுகளுக்கும் தமிழில் மென்பொருள் இல்லை. கணினியைப் பயன்படுத்தி அகராதி தயாரிக்கும் முயற்சிகள் நடந்துள்ளன. க்ரியா முதன்முதலில் கணனித் தரவுகள் மூலம் அகராதியை உருவாக்கியுள்ளது. செம்மையாக்கம் செய்யப்பட்ட பிரதி இருக்குமானால். மென்பொருள் இருந்தால் ஒரு சில நிமிடங்களில் கணினியில் பேரிலக்கியமான கம்பராமாயணத்திற்குச் சொல்லடைவைத் தயாரித்து வழங்க முடியும். தமிழ் மொழி வரலாறு தொ.பொ.மீ., சு. சக்திவேல் முதலானவர்களால் எழுதப்பட்டுள்ளது. தமிழ் மொழி குறித்த மொழி அடைவுகளை உருவாக்கிய பிறகு எழுதும் மொழி வரலாறு உரிய சான்றுகளோடு அமையும் என்பதால் அந்த மொழி வரலாறு துல்லியமாக, எல்லாத் தரவுகளையும் உள்ளடக்கியதாக இருக்கும். ஒரு இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்து களின் எண்ணிக்கை, சொற்களின் எண்ணிக்கை, தொடர்களின் எண்ணிக்கை என்று எல்லாவற்றின் தரவுகளும் அடைவுகளுக்குள்

கொண்டுவரமுடியும். மெய்ம் மயக்கங்களின் வகைகள், அவற்றின் பட்டியல், எண்ணிக்கை, மொழி முதல், இடை, இறுதி வருகை, உருபன்களின் அமைப்பு என்று எல்லாத் தரவுகளையும் அடைவுபடுத்த முடியும். பெயர், வினை, வேற்றுமை உருபு, இடைச்சொற்கள் என்று ஒவ்வொரு இலக்கணக் கூறின் அடைவும் இருந்தால்தான் துல்லியமான மொழி வரலாற்றை எழுதமுடியும். இலக்கியம், உரை முதலானவற்றின் மொழி அடைவுகளை பல்வேறு முறைகளில் உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. கால இடைநிலை, விகுதி முதலானவற்றின் அடைவுகளை எல்லாம் கால வாரியாக உருவாக்கும் ஒரு கணினிப் பணி தேவையானதாக இருந்துகொண்டிருக்கிறது. தற்போது இருக்கும் அடைவுகள் பொதுவான சொல்லடைவுகளாக உள்ளன. அதுவும் எல்லா இலக்கியங்களுக்கும் இல்லை. இலக்கியங்கள் மட்டுமின்றி, கல்வெட்டு, செப்பேடு, நாள்குறிப்பு முதலான பழம் பிரதிகளும் சொல்லடைவு தயாரிக்கக் காத்துக்கொண்டிருக்கின்றன. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தேசிய அளவில் உள்ள இந்தியத் தொழில் நுட்பக் கல்லூரிகள் முதலானவை பெற்றிருக்கும் நிதி ஒதுக்கீடுகள் அடைவுகள் சார்ந்த பணிகளுக்குத் திருப்பிவிடப்படவேண்டும். கணினி தகவல் தொடர்புக் கருவியாகப் பயன்பட்ட அளவு தமிழ் மொழி, இலக்கிய ஆராய்ச்சிக்குப் பயன்படவில்லை.

மரபான மொழிக் கூறு அடைவுகள்: அட்டைகளில் சொற்களை எழுதிச் செய்யப்படும் சொல்லடைவாகப் புதுச்சேரி பிரெஞ்சிந்திய நிறுவனம் மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ள பழந்தமிழ் நூல் சொல்லடைவு உள்ளது. இதில் முத்தொள்ளாயிரம் வரை உள்ள பழந்தமிழ் நூல்கள் தரவாகக் கொள்ளப்பட்டுள்ளன. பெ. மாதையன் செய்த, தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள சங்க இலக்கியச் சொல்லடைவு கணினித் துணையின்றிச் செய்யப்பட்ட சொல்லடை வாகும். திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள புறநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலான நூல்களுக்கான அகராதிகள் சொல்லடைவுகளுடன் தொகுக்கப்பட்டவைகளாகும். இவை ஒவ்வொரு முனைவர் பட்ட ஆய்வாக அமைந்தனவாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம் முதலான நூல்களுக்கான சொல்லடைவுகள் முனைவர் பட்ட ஆய்வு முயற்சியில் ஒரு பகுதியாக பின்னிணைப்பில் தரப்படுவதற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் செய்யப்பட்டனவாகும். வேற்றுமை உருபுகளையும் ஒட்டு களையும் பன்மை விகுதிகளையும் தனியே பிரித்து மொழிக் கூறு அடைவுகளில் பொதுவாக வரிசைப்படுத்தியுள்ளனர். தொல்காப்பியச் சிறப்பகராதி, தொல்காப்பிய அகராதி என்பனவும் அட்டைகளில்

எழுதிச் செய்யப்பட்ட அடைவுகளாகும். சங்க இலக்கியப் பொருள் களஞ்சியம், தமிழ் இலக்கணக் கலைச் சொல்லகராதி முதலானவை யும் குறிப்பிடத்தக்க அடைவுகளாகும். புலவர் மணியன் சங்க இலக்கியத்தில் உள்ள வினைச் சொல் வடிவங்களைத் தொகுத்து அடைவுபடுத்தியுள்ளார்.

மொழிக் கூறு அடைவுகள்: சென்னை ஆசியவியல் நிறுவனம் வெளியிட்டுள்ள தாமஸ் மால்டன் செய்த சங்க இலக்கியச் சொல்லடைவு கணினியில் செய்யப்பட்ட சொல்லடைவாகும். தமிழ் எழுத்துருக் களை ரோமன் வடிவிற்கு மாற்றிச் செய்யும் முறையில் கணினிக்குள் இவரது சொல்லடைவு அமைகிறது. சொல்லடைவு உருவாக்கப்பட்ட பிறகு தமிழ் எழுத்துருக்களுக்கு இது மாற்றித் தரப்பட்டதாகும். Kedit என்ற மென்பொருளை அவர் பயன்படுத்தி வந்தார். வ. ஜெயதேவன் வெளியிட்டுள்ள நிகண்டுகளின் அடைவுகள் கணினி வழியில் செய்யப்பட்டனவாகும். மதுரை அமெரிக்கன் கல்லூரிக் கணிதவியல் துறைத் தலைவர் பாண்டியராஜன் செம்மொழிச் சொல்லடைவைத் தன் இணையத் தளத்தில் கொடுத்துள்ளார்.

எச்ச விகுதி, வினா உருபு, சாரியை, ஒற்றுமிகுதி, உடம்படுமெய், பன்மை விகுதி, ஒட்டுகள், கிளைமொழி வழக்கு, பேச்சுத் திரிபு முதலான மொழிக் கூறுகளை அடைவுக்குள் கொண்டுவரலாம். சூழல் சொல்லடைவு முறையிலும் தனித்தும் இந்த மொழிக்கூறுகளை அடைவு செய்யமுடியும். அடைத்தொடர், வாக்கியம் முதலானவற்றையும் அடைவுபடுத்தமுடியும். புறநானூற்றுச் செய்யுள் அடிகளை வாக்கிய வரிகளாக மாற்றி அடைவுபடுத்தவேண்டும். புறநானூற்று வாக்கிய அமைப்புகளைப் புரிந்துகொள்ள அவை பயன்படும். எந்த ஒரு செய்யுள் இலக்கியத்தையும் வாக்கியங்களாக மாற்று அடைவுபடுத்தமுடியும். பாடல் எண்ணிக்கைக்கும் வாக்கிய எண்ணிக்கைக்கும் உள்ள விகித உறவு மூலம் இலக்கிய வகை, புலவர், பாடுபொருள் அடிப்படையிலான நடை வேறுபாடுகளை விளக்கமுடியும். ஒரு வாக்கியத்தில் ஒரு வினை முடிவைக் கொண்டுள்ள வேற்றுமைகளை வினைத் தொகுதியாக்கிப் பட்டியலிடலாம். வாக்கிய அமைப்புகளையும் வினைக்கும் வினையால் உறவுபடும் பொருள்களுக்கும் இடையில் உள்ள உறவுகளைப் புரிந்துகொள்ள இது பயன்படும்.

தமிழ் ஒரு ஒட்டுமொழி. எனவே பின்புறச் சொல் அடைவுகள் தமிழ்மொழி அமைப்பை விளக்கத் தேவையான தரவுகளைத் தரும். தொல்காப்பியம் புணர்ச்சி விதிகளையும் விளி வேற்றுமையையும் பின்புறச் சொல் அடைவுமூலம் விளக்கியுள்ளது. வாக்கிய அமைப்புகள்

சொல் அமைப்புகளைத் தழுவி அமைகின்றன. பின்புறச் சொல் அடைவுகள் சூழல் சொல் அடைவாகவும் இருந்துவிடுமானால் மொழி ஆய்வுக்கு அவை பயன்படும். ஒவ்வொரு மொழிக் கூறையும் எடுத்துக் கொண்டு பின்புறச் சொல் அடைவை உருவாக்கினால் குறிப்பிட்ட ஒரு இலக்கணக் கூறுபற்றி புரிதலை உருவாக்க முடியும். விரிதரவுகளை எடுத்துக்கொண்டு அவ்வாறான சொல் அடைவுகள் உருவாக்கப்பட வேண்டும். சொல்பிரிப்பு (hyphenation) அடைவுகளை உருவாக்கினால் நூல், இதழ் பதிப்புகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஏற்கனவே செய்யப்பட்டுவரும் சொல் பிரிப்பு முறைகளைப் பட்டியலிட்டால் மேலும் சொற்பகுப்புக்கான வாய்ப்புகளைக் கண்டறிந்து மென்பொருள் எழுதலாம். வந்-து-கொண்-டி-ருக்-கி-றார்-களா? என்று எட்டு அலகு களாக வந்துகொண்டிருக்கிறார்களா என்ற சொல்லைப் பகுக்க முடியும்.

தமிழ் யாப்பிலக்கண அசை அமைப்பும் உருபன் அமைப்பும் இணைந்து சொல்பிரிப்பு இலக்கணத்தை உருவாக்குகின்றன. சீர் அடைவுகள், தளை அடைவுகள், அடி அடைவுகள், செய்யுள் திரிபு அடைவுகள் முதலானவை யாப்பிலக்கண உருவாக்கதையும் வரலாற்றையும் புரிந்துகொள்ளப் பயன்படும். செய்யுளுக்குரிய விதிகளையும் இயல்பான மொழி செய்யுள் மொழியாகும்போது ஏற்படும் மாறுதல்களையும் அடைவுகள் மூலம் தரவு திரட்டி ஆராயமுடியும். யாப்பு வகைகளுக்கு இடையிலான உறவும், தாக்கமும் இவ்வாறு ஆராயப்பட முடியும்.

தமிழ் மொழியின் ஒலியன் இயைபை அல்லது அமைப்பைப் புரிந்துகொள்ள ஒவ்வொரு எழுத்தையும் சூழலுடன் தொடர்புபடுத்தி அடைவுபடுத்தவேண்டும். உயிர்-மெய் என்ற இரு எழுத்துகளின் தொடர்ச்சியாக மட்டும் பார்ப்பது பயன்படாது. இருகுறில் இணைந்து வர அடுத்துவரும் ணகர ஒற்று என்ற அமைப்பில் உருண்டை, பரண், முரண், பிரண்டை, வறண்டு, சுரண்டு முதலான பல சொற்கள் வரும். சொற்களின் இலக்கணக் கூறுக்கும் ஒலியன் இயைபுக்கும் அமைப்புக்கும் உள்ள உறவு காணப்பட அடைவுகள் பயன்படும். சொற்கள் இடைவெளியின்றியும் இடைவெளியோடும் மீண்டு வரும் தொடர்கள் என்று வகைப்படுத்திக்கொண்டு அடைவுபடுத்தலாம். படைப்பாக்க நெறியிலும் புலமைச் சூழலிலும் இருந்த பொதுத் தன்மைகள், தொடர்புகள் இதன் மூலம் வெளிப்படலாம்.

இலக்கியத்தில் குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தின் கூற்றுகளை எல்லாம், மெய்ப்பாடுகளை எல்லாம், அந்தப் பாத்திரம் தொடர்பான கருத்துகளை எல்லாம் அடைவு மூலம் பெற்றுப் பாத்திரப் படைப்பு ஆய்வுக்கோ, வேறு ஆய்வுகளுக்கோ பயன்படுத்தமுடியும். இடப்பெயர்,

பொருள்பெயர் முதலானவற்றில் தேர்ந்தெடுத்த அடைவுகளை உருவாக்கிப் பொருளடைவுகளை உருவாக்கமுடியும்.

யாப்பியல் அடைவுகள்: சீர், தளை அடைவுகள் தேர்ந்தெடுத்த சில செம்மொழிச் செய்யுள் பகுதிகளிலிருந்து செய்யப்பட்டுள்ளன. ஒரு பா வகையில் வந்துள்ள சீர்கள், தளைகள் பற்றிய புள்ளிவிவரங் களையும் இதன் மூலம் விளங்கிக்கொள்ளலாம். யாப்பின் உறுப்புகள் எத்தனையோ அத்தனை வகை அடைவுகளையும் தரமுடியும். அசை அமைப்பு அடிப்படையில் சீர்களை அடைவுபடுத்தும்போது, தளைகளை உருவாக்குவது எளிதாகும். ஆசுகவிகளிடம் இந்தப் பண்பு இயல்பாகவே அமைந்ததாக இருக்கும். சொல் சீராக இருக்கும் போது அசை அடிப்படையிலான அடைவு தேவையான சொல்லைப் பெறத்துணையாக இருக்கும். மலை, கிரி என்பன நிரையசைகள். குன்று, கோடு என்பன தேமா அல்லது நேர்பு வகையில் வரும். குன்றம் என்பது தேமா. சிலம்பு என்பது நிரைபு அல்லது புளிமா. இந்தச் சொற்களை யாப்பு உருவாக்கத்தின்போது தேவையான அசைக்கு ஏற்ப எடுத்துப் பயன்படுத்தலாம். அடைகளையோ, ஒட்டுக்களையோ சேர்த்துக்கொண்டால் ஈரசை, மூவசைச் சீர்களாகும். நிகண்டுகளின் பெரும் பகுதிகளும் முதன்மைப் பகுதிகளும் ஒரு பொருண்மையில் வரும் பல சொற்களைப் பட்டியலிடுவனவாகும். ஒரு பொருண்மையில் வரும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆனால் அசை அமைப்பில் வேறுபட்ட சொற்களின் பட்டியலிலிருந்து ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கில் நிகண்டுகள் எழுதப்பட்டுள்ளன. நிகண்டுகளுக்கும் செய்யுள் படைப்பாக்க முயற்சிகளுக்கும் உள்ள உறவு இதில் புலப்படுகிறது. செய்யுள் படைப்பாக்கத்திற்கு கணினி வழியிலான சொல் தேர்வு முயற்சியில் அசை அடைவுகள் பயனுள்ளவை. ஒரு வகைப் பாவில் பிற தளைகள் விரவியும் விரவாமலும் வரும் அளவுகளைத் தளை அடைவுகள் வழி விளங்கிக்கொள்ளலாம். புறநானூறு முதலான இலக்கியங்களில் குறளடி, சிந்தடி, அளவடி, கழிநெடிலடி முதலானவற்றின் எண்ணிக்கையை அடைவு மூலம் அறிந்து கொள்ளலாம். செய்யுளில் இடம்பெற்ற அடிகளின் எண்ணிக்கை அடிப்படையில் எல்லாச் செய்யுள்களையும் பிரித்து அறியலாம். இலக்கியங்களின் யாப்பு இலக்கணத்தை அறிய இந்த அடைவுகள் பயன்படும்.

யாப்பில் பிணை, வகையுளி என்ற இரண்டும் உள்ளன. பிணை என்பது ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களை ஒரு சீருக்குள் முழுமையாகவோ, பகுதிகளாகவோ இணைப்பது. வகையுளி என்பது ஒரு சொல்லை ஒன்றுக்கு மேற்பட்ட சீர்களுக்குள் பிரித்து இணைப்பது. வகையுளியும்

பிணையும் வாய்பாட்டுத் தன்மையில் நிகழுமானால் ஒரு யாப்பில் எழுதப்பட்ட செய்யுளை வேறு ஒரு யாப்புக்கு மாற்றமுடியலாம். சுவடிகளில் சீர், அடிப் பகுப்பு இன்றி எழுத்துகள் சேர்த்து எழுதப் பட்டிருக்கும். பதிப்பிக்கும்போது, அவ்வாறு எழுதப்பட்ட வரிகளை எந்த யாப்புக்குரியவை என்று கண்டு பிரிக்கவேண்டியிருக்கும். அடைவுகள் இருக்குமானால் கணினியே குறிப்பிட்ட வரிகளில் உள்ள எழுத்துகளை உரிய யாப்பு அமைப்புக்குப் பிரித்து அமைக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட யாப்பு அமைப்புக்கு உரியதாக ஒரு செய்யுள் அமையலாம்.

தொடைகள், வண்ணங்கள் முதலானவை மொழியின் இசைப்பண்பு சார்ந்தவை. தனித்த பண், தாளம், ராகம் முதலானவற்றிலிருந்து வேறானவை. தொடைகள் எழுத்துகள் இடம்பெறும் சொற்களின் இடத்தைப் பொருத்து அமைவன. சீர்களுக்கு இடையிலும் அடிகளுக்கு இடையிலும் அமைவன. இரண்டாவது எழுத்து ஒன்றி வரும் சொற் களின் பட்டியல் கணினியில் பெறுவது. இது எதுகைத் தொடை. இறுதி எழுத்து ஒன்றிவரும் சொற்களின் பட்டியலில் இயைபுத் தொடை கிடைக்கும். வண்ணங்கள் ஒரு சொற்களுக்குள் அமையும் எழுத்து களின் தொடர்ச்சியைப் பொருத்து அமைபவை. ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களில் ஒரு வகையான எழுத்துகளின் தொடர்ச்சி அமையுமானால் செய்யுள் அந்த எழுத்து வகையின் வண்ணமாகும். எழுத்துகளின் கலப்பு அடிப்படையில் சொல்லடைவுகளைப் பெறமுடியும். கௌட நெறி, வைதர்ப்ப நெறி முதலான படைப்பாக்க முறைகள் கணினியில் உருவாக்க முடிந்தவை. வண்ணங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, அதற்கேற்ற பொருண்மை உறவுகளையும் தொடர்மொழி அமைப்புகளையும் உருவாக்கிக் கொள்ளவேண்டும். தனிப்பாடல் திரட்டு, தொகைச் செய்யுள் முதலானவற்றில் வடிவ ஒழுங்குகள் தீர்மானிக்கப்பட்டுப் பிறகு பொருண்மை ஒழுங்குகளும் மொழி ஒழுங்குகளும் உருவாக்கப் பட்டுள்ளன. சிலேடைப் பாடல்களில் பலபொருள் ஒரு சொற்கள் இவ்வாறான காரணங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இயல்பான வழக்குச் சொல்லின் பட்டியலை ஒப்பிட்டுச் செய்யுளில் இடம்பெறும் சொற்களை மட்டும் அடைவுக்குள் கொண்டுவரலாம். செய்யுள் வழக்குப் பற்றிய புரிதல் கிடைக்கும். செய்யுள் விகாரங்கள் செய்யுள் வழக்குகளிலிருந்து மேலும் திரிந்தவை. இலக்கணத் தேவை, அழகியல் தேவை, பொருண்மைப் புலப்பாட்டுத் தேவை என்று செய்யுள் திரிபுகளைப் பிரித்து அறியலாம். அளபெடைகளைத் தொகுக்கும்போது, இசையியல், யாப்பியல் தேவைகள் தெளிவாகும். போஒர், வேஎள், கோஒன் முதலான சொற்கள் ஓரசைச் சொற்களை ஈரசையாக்க வேண்டும் என்ற திரிபுக்காக எழுந்தவை. செய்யுளுக்குரிய புணர்ச்சி

கள் இவ்வாறு தேவை கருதிச் செய்யப்படுகிறதா என்று தெரிய வரும். புணர்ச்சி அடைவுகள் சொல்லின் மாற்று வடிவங்களை விளக்குவதற்குப் பயன்படும்.

தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் பெரும்பாலானவை அடைவுபடுத்த முடிந்தவை. வனப்பில்கூட இயைபு, அம்மை, அழகு, புலன் முதலான வகைமைகளை அடைவுகளில் கொண்டுவரமுடியும். முன்னம், மெய்ப்பாடு, களம், காலம், பொருள், கூறுவோர், கேட்போர் முதலான பல்வேறு செய்யுள் உறுப்புகளையும் தொகுத்து எடுக்கமுடியும்.

பொருளடைவு வகைகள்: சொற்களின் பொருண்மை அடிப்படையிலான அடைவுகளில் பூதப்பொருள், உயிர் உள்ள- இல்லாத பொருள், தாவரம்-விலங்கு-பறவை-மனிதர் என்ற பொருள், உயர்திணை-அஃறிணைப் பொருள், பெயர்ப்பொருள், வினைப் பொருண்மை என்று பட்டியலில் பலவற்றையும் நீட்டிக்கொண்டு செல்லலாம். அணிகலன், உணவுப்பொருள், புழங்கு பொருள், கருவிப் பொருள் என்று தேர்ந்தெடுத்துக்கொண்டு செய்யும் அடைவுகள் உரிய பொருள் குறித்த ஆய்வுக்குப் பயன்படும். மனித அங்கங்களை மட்டும் அடைவுபடுத்திப் பார்க்கலாம். பால், அதிகாரம், உடலியல், உடல்மொழி-மொழி முதலான பொருள் குறித்த ஆய்வுகளுக்கு இது போன்ற அடைவுகள் பயன்படும். வினைப் பொருண்மையிலும் விலங்குக்கு உரியவை, ஆணுக்குரியவை, பெண்ணுக்குரியவை, உயிரற்ற பொருள்களுக்குரியவை என்று வேறுபாட்டை ஏற்படுத்திக்கொண்டு அடைவைத் தயாரிக்கமுடியும். பொருண்மை அடைவு என்பதை ஒரு சொல்லுக்குச் சொல்லப்பட்டுள்ள பொருண்மை வரையறை, விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கமுடியும். எந்தச் சொற்கள் எல்லாம் ஒரு சொல்லின் பொருண்மை விளக்கத்தில் இடம்பெறுகின்றனவோ அந்தச் சொற்களை எல்லாம் அடைவுபடுத்தி, மூலச் சொல்லுடன் தொடர்புபடுத்தவேண்டும். சொல்வலை போன்ற நவீன அடைவுகளுக்கு இது பயனுள்ளதாக இருக்கும். கருத்தியல் அடைவுகள் வெளிப்படையான சொற்களால் ஆனதாக இல்லாமல் இருக்கும். மாற்றுப் பொருண்மை அடைவுகளாக இவை அமையலாம். கட்டுடைப்பு, குறியியல் முதலான நவீனப் பொருள்கோள் முறைகளுக்கு இந்தப் பொருண்மை அடைவுகள் பயன்படும். குறிப்புப் பொருண்மைகளைத் தனி அடைவாக்கலாம். பக்கக் கிளவி, தகுதி வழக்குகள், மங்கல வழங்குகள், அவையல் கிளவிகள் முதலானவற்றை அடைவுபடுத்தமுடியும்.

அகராதி அடைவுகள்: அகராதிகளை எல்லாம் தொகுத்து ஒரு அகராதியாகத் தரும் முயற்சி காப்புரிமைச் சிக்கல் இல்லை என்றால்

செய்யப்படலாம். காப்புரிமைச் சிக்கல் இல்லாத அகராதிகளைத் தொகுத்துத் தரலாம். தற்கால அகராதிகளை எடுத்து இணைக்கும்போது பதிப்புரிமைச் சிக்கல் எழுகிறது. நிகண்டுகளைத் தொகுத்து மரபான அடைவுகள் வெளிவந்துள்ளன. பழமொழிகள், மரபுத் தொடர்கள் முதலானவை அடைவுகளாகத் தமிழில் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன.

துணை நூல்கள்

1. சாரங்கபாணி இரா., முதலானவர்கள், 2001-2013, சங்க இலக்கியப் பொருள் களஞ்சியம்: தொகுதிகள்:1-6, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
2. சுப்பிரமணியன் பா. ரா., முதன்மை ஆசிரியர், 2004, தற்காலத் தமிழ் மரபுத் தொடர் அகராதி, அடையாளம், புத்தா நத்தம்
3. நாகராசன் ப. வே., விஷ்ணுகுமாரன் த., தொகுப்பாசிரியர், 2000, தொல்காப்பியச் சிறப்பகராதி, பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனம், திருவனந்த புரம்
4. பதிப்புக் குழு, 1967, பழந்தமிழ் நூல் சொல்லடைவு: பகுதிகள்: 1-3, பிரஞ்சு இந்தியக் கலைக் கழகம், பாண்டிச்சேரி
5. பதிப்புக்குழு, 2001, வரலாற்றுமுறை தமிழ் இலக்கியப் பேரகராதி, தொகுதிகள்: 1-5, சாந்தி சாதனா, சென்னை
6. புலவர் மணியன், 2007, சங்க இலக்கிய வினை வடிவங்கள், பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனம், திருவனந்த புரம்
7. மாதையன் பெ., 2007, சங்க இலக்கியச் சொல்லடைவு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
8. ஜகந்நாதன் கி. வா., தொகுப்பாசிரியர், 2006, தமிழ்ப் பழமொழிகள்: தொகுதிகள்: 1-5, ஜெனரல் பப்ளிஷர்ஸ், சென்னை
9. ஜெயதேவன் வ., பதிப்பாசிரியர், 2004, தொல்காப்பிய அகராதி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை
10. Murugan V., Editor, 1999, A Dictionary of Tamil Literary and Critical Terms, Institute of Asian Studies, Chennai
11. Subramanian S. V., 1972, Grammar of Akananuru with Index, University of Kerala, Trivandrum
12. Subramoniam V. I., 1962, Index of Purananuru, University of Kerala, Trivandrum
13. Thomas Lehmann, Thomas Malten, 1993, A Word Index for Cankam literature, Institute of Asian Studies, Chennai

மற்றும் பல...

தொல்காப்பியர் ஆய்வு இருக்கை வெளியீடு: 9

ஒரு இலக்கியத்தின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கும் ஒரு அணுகுமுறை தேவையாக இருக்கிறது. தொல்காப்பிய, தமிழ் இலக்கண மரபிலிருந்து உருவாக்கப்பட்ட சூழல் முறை ஒரு பொருத்தமான ஆய்வுமுறையாகத் தெரிகிறது. இலக்கியத்தின் சூழல், இலக்கியத்தில் சூழல் என்ற இருவகைமையில் அது பிரிகிறது. புறச்சூழல், அகச்சூழல் என்று ஒரு இலக்கியத்தை இரண்டாகப் பகுத்துக் கொண்டு விளக்கும் முறையாகும் இது. இது வேற்றுமை இலக்கணத்திலிருந்து வருவிக்கப்பட்ட ஒன்று. முன்னம் முதலான மரபிலக்கண விளக்கங்கள் மேலும் இதன் அடிப்படையாகும். பேச்சுச் செயல்சூழல், பேசப்படும் செயல்சூழல் என்ற வகைப்பாட்டின் விரிவாக்கம்தான் இலக்கியத்தின்சூழல், இலக்கியத்தில் சூழல் என்ற இரண்டுமாகும். ஒரு இலக்கியத்திற்குத் தற்கிழமை என்ற அக உறவுகளும் பிறிதின் கிழமை என்ற புற உறவுகளும் உள்ளன.

ISBN: 978-93-851651-9-1

9 789385 165191

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பேராசிரியர் ரா. செயராமன் அவர்கள்
திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில்
தமிழ்த்துறை தலைவராகப்
பணியாற்றி வருகிறார்.
மரபிலக்கணம், மொழியியல் ஆகிய
இரு துறைகளிலும் ஆழமான
ஆய்வுகளைச் செய்து வருகிறார்.
தமிழுக்கான கோட்பாட்டு
உருவாக்கத்தில் இவரது பங்களிப்பு
தவிர்க்கவியலாத அளவு
முதன்மை பெறுகிறது.